[ISSUED 7—5—1984

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 29th OCTOBER 1983

Volume 201 (No. 4)

GOVERNMENT OF TAMIL NADU
1984

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price: 2.75 *Paise*]

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

சனிக்கிழமை, 1983 அக்டோபர் 29.

ஐப்பசி 12, ருத்ரோத்காரி 2014—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்** : உறுப்பினர்கள் கவனத்திற்கு. இன்று ஸ்ரீலங்கா பற்றிய தீர்மானத்தின் மீது கட்சித் தலைவர்களும் உறுப்பினர்களும் பேச வேண்டியிருப்பதாலும், துணை மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடைபெற இருப்பதாலும், கேள்வி நேரத்தில் துணைக் கேள்விகளைக் குறைத்துக்கொண்டு, நேரத்தைச் சுருக்கி விவாதத்திற்கு அதிக நேரம் கிடைக்க ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### ஆசிரியர்கட்கு மதிப்பூதியம் வழங்கப்படாதிருத்தல்.

* 21. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம்** : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகம் முழுவதும் குடும்ப அட்டை வழங்கும் பொருட்டு, பணியில் ஈடுபடுத்தப்பட்ட ஆசிரியர்களுக்கு, வழங்கப்பட வேண்டிய மதிப்பூதியம் முழுவதும் வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) இது குறித்து புகார்கள் ஏதும் அரசுக்கு வந்துள்ளனவா ?

(உ) ஆம் எனில், அதன்மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தமிழ் நாடு முழுவதும் 1983 ஆம் ஆண்டில் வீடுதோறும் சென்று கணக்கெடுத்து குடும்ப அட்டைகள் வழங்கும் பணியில் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் ஈடுபட்டனர். இந்த செலவிற்காக ரூபாய் 36.13 இலட்சம் ஒதுக்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்ததை விட அதிக அளவில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டதால், நிர்ணயிக்கப்பட்ட அளவை விட கூடுதல் செலவு ரூபாய் 3.14 இலட்சம் ஏற்பட்டுள்ளது. கூடுதல் செலவாகிய ரூபாய் 3.14 இலட்சத்தை ஒதுக்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, இந்தக் குடும்ப அட்டைகள் கணக்கெடுத்ததற்கு மற்றும் குடும்ப அட்டைகள் வழங்கியதற்கு வழங்கப்பட வேண்டிய மதிப்பூதியத் தொகையை மாநிலத்தின் சில பகுதிகளிலே, குறிப்பாக திருப்பூர் ஒன்றியத்திலே உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் போன்ற பகுதிகளிலே இன்னும் வழங்கவில்லை. குடும்ப அட்டை வழங்கியதற்குத் தரப்பட வேண்டிய மதிப்பூதியம் திருச்சியிலே பல பகுதிகளிலே தரப்படவில்லை. இப்படி அவர்கள் செய்த பணிக்குத் தரப்பட வேண்டிய மதிப்பூதியம் இவ்வளவு நாள் ஆகியும் தரப்படாததால், இந்த ஆசிரியர்கள் இதுபோன்ற பணிகளை இனிமேல் ஏற்பதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதைத் தவிர்க்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியது போல, இந்தப் பணியில் ஈடுபட்டவர்களுக்காக உத்தேசமாகச் செலவாகுமென்று எதிர்பார்த்து ஒதுக்கப்பட்ட தொகை 36 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய். ஆனால் மேற்கொண்டு 3 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் பற்றாக்குறை வருகிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும், ஆணையர்களிடமிருந்தும் கடிதம் வந்தது. அதாவது ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்ட தொகையை விட இன்னும் 3 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குத் தேவைப்பட்டது. இந்தத் தொகையும் அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டு, 7—9—1983 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, வழங்கலாமென்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே, அது விரைவில் வழங்கப்பட்டு விடும். ஆசிரியர்கள் இந்த விஷயத்தில் சந்தேகிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு தாளைப் பார்த்து எந்த சந்தர்ப்பத்திலும் ஆசிரியர்களோ, மற்றவர்களோ ஐயப்பாடு கொள்ள வேண்டிய





அவசியமே இல்லை. ஏற்கெனவே செய்த பணிக்குக் கிடைக்கவில்லை, ஆகவே இனிமேல் பணி செய்தால் வருமா என்று ஆசிரியர்கள் ஐயப்பாடு கொள்ளத் தேவையோ இல்லை. அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்த தொகை போதாமல் மேற்கொண்டும் தேவைப்பட்டாலும், அதற்கான விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்தும், ஆணையர்களிடமிருந்தும் எந்தெந்த இடத்திற்குக் கூடுதலாகத் தேவை இருக்கிறது என்கிற கணக்கை அரசுக்குத் தர வேண்டியிருந்தாலும், ஒட்டுமொத்தமாக விவரங்கள் வந்த பிறகு, அரசு அதைப் பரிசீலிக்க வேண்டியிருந்தது. அரசு அதைப் பரிசீலித்து 7—9—1983 அன்று ஒப்புதல் அளித்து விட்டது. இந்நேரம் அநேகமாகப் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கும். பட்டுவாடா செய்யப்படாமல் இன்னும் இருக்குமேயானால், அதுபற்றி விவரம் தந்தால், அதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசை ஆசிரியர்கள் சந்தேகப்படவில்லை. என்றாலும் செய்த வேலைக்கு நீண்ட நாட்களாகப் பணம் தரப்படாததால், ஆசிரியர்கள் அதிருப்தியடைகிறார்கள். அந்த வகையில் அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். குடும்ப அட்டைகள் குறித்து கணக்கெடுத்தல் மற்றும் குடும்ப அட்டைகள் வழங்குவது போன்ற பணிகளுக்காக ஆசிரியர்களைப் பயன்படுத்துகின்ற அரசு, தேர்தல் காலப் பணியை மட்டும் ஆசிரியர்களுக்குத் தருவதில்லை. இப்படி நல்ல ரெம்யூனரேஷன் வருகின்ற தேர்தல் காலப் பணி அவர்களுக்கு வழங்கப்படாததால், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் இந்தப் பணியைச் செய்ய மறுக்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் தேர்தல் காலப் பணியைத் தருவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றித் தனியாக ஆராய்ந்து பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** இத்தகைய பணிகளுக்கு மதிப்பூதியம் வழங்குவது குறித்து எல்லா அலுவலகங்களுக்கும் அரசு உத்தரவு அனுப்புகிறது. சில அலுவலகங்களில் மட்டும் அதிகாரிகள் கடைப்பிடிக்கும் தவறான போக்கின் காரணமாக ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் இம்மாதிரி வழங்கப்படவில்லை. உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் போன்ற இடங்களில் இம்மாதிரி நிலைமை இருந்து வருகிறது. இப்படித் தவறான போக்கில் செயல்படும் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கிற காரணத்தால்தான், நாட்டில் போராட்டம் எல்லாம் உருவாக வழி உண்டாகிறது. இத்தகைய நிலைமை இனிமேலாவது தவிர்க்கப்படுமா ?

குடும்ப அட்டை வழங்குகின்ற பணி ஆசிரியர்களுக்கும், ஆனால் நல்லமாதிரி யாக செய்யப்படுவதேயன்றி வருகின்ற தேர்தல் காலப் பணி ஆசிரியர்களுக்கும் என்று இருக்கின்ற இரட்டை ஆளுமுறை இனிமேலாவது இந்த அரசால் ஒழிக்கப்படுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் எற்கெனவே கேட்டுக் கொண்ட தற்கிணங்க உறுப்பினர்கள் துணைக் கேள்விகளைக் குறைத்து ஒத்துழைக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்ன படி, அரசால் பணம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. அதைப் பட்டுவாடா செய்வதில் யாராவது தவறாக நடந்துகொண்டால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். பொதுவாக இம்மாதிரி வேலைகளுக்கு அரசால் முதலில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, பெற்றுக்கொண்டு பற்றாக்குறை ஏற்படுகின்ற சூழ்நிலை வருகின்றபோது, பற்றாக்குறை எவ்வளவு என்பது போன்ற விவரங்களை அரசுக்கு எழுதி அனுமதி பெற வேண்டுமென்ற நடைமுறை இருக்கிறது. அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், ஆணை யாளர்களும் கணக்கெடுத்து அரசுக்குத் தெரிவித்தார்கள். அதன் அடிப் படையில் 3,14,000 ரூபாய் ஒதுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதையும் 7—9—1983-லேயே அரசு வழங்க உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆகவே இதற்கு உள்ளே போக வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். தேர்தல் பணியில் ஆசிரியர்களை ஏன் ஈடுபடுத்தவில்லை, அவர்களை ஈடுபடுத்த வேண்டுமென்றெல்லாம் இங்கே சொன்னார்கள். அதை எல்லாம் தனியாக ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டும்.

### மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

*22. வினா—**டாக்டர் இரா. சனார்த்தனம்** மற்றும் **திரு. க. மீனாட்சி சுந்தரம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 171-ன்படி, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 63-லிருந்து 78 ஆக உயர்த்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) வினா எழுவதற்கு இடமில்லை.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இப்போது இருக்கக்கூடிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியது மிக அவசியம். இப்போது சமூக சேவை செய்பவர்கள், கலைஞர்கள், சமுதாயத்தில் பாடுபட்டவர்கள் போன்றவர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்கள். அதுபோல் இப்போது இருக்கின்ற எண்ணிக்கையை அதிகப்படுத்தினால், சமுதாயத் திலுள்ள நலிந்த பிற்பட்ட வகுப்பினரான முடி திருத்துவோர், ஆடை அலங்காரம் செய்வோர், படுகர் இன்னும் என்.ஜி.ஜி.ஓ போன்றவர்களின் பிரதிநிதிகள் இடம் பெற்று அவர்களுக்குள்ள பிரச்சினைகளைச் சொல்ல வாய்ப்பாக இருக்கும் அல்லவா ? இதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 171 ஆவது பிரிவின்படி, மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப் பினர்களின் எண்ணிக்கை 40-க்குக் குறையாமல் இருக்க வேண்டும். அல்லது மொத்த சட்டமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு மேற் படாமல் இருக்க வேண்டும். அந்த வகையில் இப்போதுள்ள எண்ணிக்கை என்னவென்றால் 63. தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில் 234 உறுப் பினர்கள் இருக்கிறார்கள். இந்தக் கணக்கின்படி நமது சட்டமன்ற மேலவையில் மூன்றில் ஒரு பங்கு என்று பார்த்தால், 78 பேர் இருக்கலாம். 78 பேருக்கு மேல் போகக் கூடாது. இப்போது இருப்பது 63 பேர். ஆக, 78-க்கு எண்ணிக்கையை உயர்த்தலாமென்று இந்த அவையினுடைய உறுப் பினர்கள் பல பேர், பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அப்போது தலைவருக்கு அவையை நடத்துவதற்கு ரொம்ப கஷ்டமாக இருக்கும். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த வகையில் இதற்கு அனுமதி அளிக்க வேண்டிய பொறுப்பு, சட்டத்தைத் திருத்த வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இதுகுறித்து இந்த மாநில அரசு மத்திய அரசுக்கு பல தடவைகள் 63 என்கிற எண்ணிக்கையை 78 ஆக உயர்த்தலாமென்றும், அப்போது சிலபல துறைகளை விரிவுபடுத்தலா மென்றும் எழுதினோம். இந்த மாநில அரசைப் போல வேறு பல மாநிலங் களும் மத்திய அரசுக்கு எழுதியுள்ளன. அதன் பிறகு நாங்கள் கேட்டுக்கொண்டபடி, சட்டத் திருத்தங்களை இப்போது கொண்டுவர வேண்டாம் என்று மத்திய அரசு எங்களைக் கேட்டுக்கொண்டது. அதற்குப்

பதிலாக ஒரே நேரத்தில், எல்லா மாநிலங்களையும் சேர்த்து இதைக் கொண்டு வரலாமென்றும், அந்த நேரத்தில் நம்முடைய வேண்டுகோளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாமென்றும் மத்திய அரசு எண்ணியிருக்கிறது. நாங்கள் இதை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வருகிறோம். ஆசிரியர்கள், பட்டதாரிகள் தொகுதிகளையெல்லாம் வேண்டுமானால் பாகுபடுத்திக் கொள்ளலாம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 63ஐ வைத்துக் கொண்டு, இதையும் மீண்டும் பாகுபடுத்துவது என்றால், இருந்ததை எடுத்துவிட்டார்கள் என்று கோபப்படக் கூடிய நிலைமை வரலாம். அது போல் இருப்பதை எடுத்துவிட்ட பிறகு, அதை வேறு யாருக்குக் கொடுப்பது என்பதிலும் சச்சரவுகள் வரலாம்.

(முற்பகல் 9-40)

இந்த 63-ஐ 78 ஆக்கவும், அப்படிப் பிரிவு படுத்தவும்தான் நாம் மீண்டும் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். அப்படி அவர்களிடமிருந்து விரிவு படுத்திக்கொள்ள அனுமதி கிடைத்த பிறகு, அதுபற்றிய நடவடிக்கையை நாம் மேற்கொள்ள முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, இப்போது உள்ள நிலைப்படி, 78 உறுப்பினர்கள் வரை உயர்த்தலாம். அதனால் 15 பேர்கள் அதிகமாக வருவார்கள். அதிலிருந்து என்.ஜி.ஓ.க்கள் மற்றும் நலிந்த பிரிவினர் இங்கே வர வாய்ப்பு ஏற்படும். இதை நமது அரசு ஏற்கெனவே ஏற்றுக் கொண்டு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே இதை விரைவு படுத்த, மீண்டும் ரிமைண்டர் போட்டு அதைப் பெறச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலேயே நான் சொன்னபடி, அதைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு தான் வருகிறோம். அந்த யோசனையில் சிலபல மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு சொன்னது. நாமும் " 63 என்பது சரிப்பட்டு வராது, 78 என்று மாற்றிக் கொள்ள அனுமதி தாருங்கள் " என்று கேட்டிருக்கிறோம். இந்த அனுமதி கிடைத்து, அதற்குப் பிறகுதான் யார் யாருக்குத் தருவது, எந்தெந்த வகையில் தருவது என்பது தனியாக முடிவு செய்யப்



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இந்த இடங்களை எப்படி உயர்த்துவது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அதில் மாற்றங்கள் செய்து அனுப்புங்கள் என்று மத்திய அரசு சொல்லியிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நீலகிரி மாவட்டத்தில் படுகர்கள் 3 இலட்சத்திற்கு அதிகமாக இருக்கிறார்கள். அவர்களின் பிரதிநிதிகள் மாநிலச் சட்டமன்றப் பேரவையிலோ, மேலவையிலோ, பாராளுமன்றத்திலோ இடம் பெறவில்லை. ஆகவே, சட்டமன்றப் பேரவையில் இருப்பது போல், ஆங்கிலோ-இந்தியர் பிரதிநிதி ஒருவரை கவர்னர் நியமிப்பது போல் அல்லது வேறு எந்த முறையிலாவது படுகர் இனப் பிரதிநிதி ஒருவருக்கும் இதைப் போல பிரதிநிதித்துவம் அளிக்க வகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்படியே ஒவ்வொரு பட்டியலாக நீட்டிக்கொண்டு போனால் எப்படி ?

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மறுபடியும் நான் எப்படி அவர்களைப் போய்க் காண்பது ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஓகோ, சீசன் அப்படியா ? அப்படியானால், நானும் கூட அதற்கு உதவி செய்ய முடியும்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** அப்படிப்பட்ட ஒரு புதிய சிந்தனையை இந்த அரசு பரிசீலிக்குமா ? அரசியல் சட்டத்தின் அடிப்படையில் எப்படி முடிவெடுக்க முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அரசியல் சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு நாம் பரிந்துரை செய்ய முடியுமா ? குறிப்பாக, படுகர் இன மக்கள் நீலகிரியில் அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த வாய்ப்பும் வழங்கப்படவில்லை. ஊட்டி-குன்னூர் ஏற்கெனவே ஆதித் திராவிடர் சமுதாயத்திற்குச் சென்றுவிட்டது. இனி படகர்கள் சட்டமன்றத்திற்கு வர முடியாத நிலை. அவர்கள் அதை யூனியன் பிரதேசமாகவாவது மாற்றி விடுங்கள் என்று கேட்கிறார்கள். சட்டமன்றத்திற்கு ஆங்கிலோ-இந்தியப் பிரதிநிதியை கவர்னர் நியமிக்கிறார். அதுபோல் இந்தப் புதிய சிந்தனையை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசியல் சட்டம் 171-வது பிரிவில் மாற்றம் செய்ய வேண்டுமென்ற நிலை இல்லை. 176-வது பிரிவு அப்படியே இருக்கிறது. அந்தப் பிரிவின்படி உறுப்பினர்கள் எண்ணிக்கை 78 வரை போவதற்கு உரிமை இருக்கிறது.

ஆகவே 78 வரையில் போவதற்கான தன்மையை மத்திய அரசுதான் செய்ய முடியும். இன்னமும் கூட உரிமை இருக்கிறது. மேலவையே வேண்டாம் என்று கூட தீர்மானம் போட்டு சில மாநிலங்கள் மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதையும் அவர்கள் தான் செய்ய வேண்டும். சில மாநிலங்களில் மேலவை இருக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் தமிழகம் தொடர்ந்து இருந்து வருகிறது. 63 ஆக இருப்பதை 78 ஆக மாற்ற இப்போதே நமக்கு உரிமை இருக்கிறது. அரசியல் சட்டத்தை இதற்காக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. மத்திய அரசுக்குத் திரும்பத் திரும்ப எழுதிக்கொண்டிருக்கிறோம். அப்படி மத்திய அரசு அனுமதி தந்தால், மாண்புமிகு உறுப்பினர்கள் விருப்பம் சொன்ன மாதிரி, இந்தப் பிரதிநிதித்துவத் துறையின் அளவை விரிவாக்க, அதிகமாக்க, வாய்ப்பு இருக்கும்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவர் அவர்களே, அப்படி விரிவுபடுத்துவதற்கு முன்பு, இப்போது காலியாக இருக்கிற இடத்தைப் பூர்த்தி செய்ய மாநில அரசுக்கே அதிகாரம் இருக்கிறதே, அதைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இருக்கிற காலி இடத்தைப் பூர்த்தி செய்வதென்றால், நகராட்சி மன்றங்களுக்கெல்லாம் தேர்தல்கள் ஏன் தள்ளிப் போடப்பட்டு வருகின்றன என்பதை அதற்குரிய துறை அமைச்சர் அவ்வப்போது தெளிவுபடுத்தி வருகிறார். தேர்தல்கள் நடந்த பிறகு, நகராட்சி மன்றப் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் இங்கே வந்தால் 63 ஆக உறுப்பினர்கள் தொகை மாறும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்கிறார்கள். கடிதம் எழுதுவதற்கு முன்பு, இந்திய அரசு 63 ஆக இருப்பதை 78 ஆக உயர்த்துவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுவது அவசியம் அல்லவா, அப்படித் தீர்மானம் நிறைவேற்றியபின் தானே மத்திய அரசை அணுக முடியும். அப்படிப்பட்ட தீர்மானம் நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதற்காக ஒரு தீர்மானம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. அரசின் சார்பாகவே கேட்டுக்கொள்ள உரிமை இருக்கிறது. அப்படி மத்திய அரசு அனுமதி கொடுத் ல், அதற்குப் பிறகு எந்தெந்த இடத்திற்கு ஒதுக்கித் தர முடியும்



என்று மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அதன் அடிப்படையில் தேர்தலை நடத்த வேண்டுமென்ற நேரத்தில், தேர்தல் கமிஷனுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு நமக்கிருக்கிறது. இதற்கு ஒரு சட்டமோ தீர்மானமோ வேண்டிய அவசியமில்லை. ஏற்கெனவே அரசியல் சட்டப்படி இந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

... *District Munsif, Ramanathapuram.*

* 23. *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Co-opertation and Law be pleased to state—

(*a*) the number of months during the last two years (i.e., from 1st June 1980 to 31st May 1982) during which the post of District Munsif, Ramanathapuram, was kept vacant; and

(*b*) whether any alternative arrangements had been made during that period for the disposal of emergent applications ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) 6—11—1981 முதல் 31—5—1982 வரை இராமநாதபுரம் மாவட்ட முன்சீப் நீதிமன்றம் பல இடைவேளையில் நடுவர் இல்லாமல் இருந்தது.

(இ) அந்த நீதிமன்றத்திற்கு நடுவர் இல்லாத காலங்களில், இராமநாதபுர துணைக்கோட்ட நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் கூடுதல் பொறுப்பு வகித்து மாவட்ட முன்சீப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

**திரு. த. சந்தோஷம் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் ஒன்றேகால் வருடத்திற்கு முன்பு கேட்டேன். இப்போது பதில் கிடைத்திருக்கிறது. தற்சமயம் சாத்தூர் கூடுதல் மாவட்ட நீதிபதி இல்லாத காரணத்தால், ஒரு ஆசிரியர் பணி நீக்கம் செய்யப்பட்டு, அதற்கு விரோதமாக இலாக்கா ஒரு உத்தரவைப் போட்டு, அதற்கு தடையுத்தரவைப் போட்டிருக்கிறது. அந்தத் தடை உத்தரவை நீக்க வேண்டுமென்று மனு போட்டால், அதை 'டிஸ்போஸ்' செய்ய நீதிபதி இல்லை. ஆகவே அந்த ஆசிரியருக்குப் பல மாதங்களாக நிவாரணம் இல்லாமல், அவர் பட்டினி கிடக்கிறார். ஆகவே இனிமேல் ஸ்தானம் காலியாக இருந்தால், ஒரு வாரத்திற்குள் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக இதுபோல சில நேரங்களில் நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாமல் இருப்பதன் காரணம், இருக்கிற நீதிபதிகள் விடுப்பில் செல்வது முக்கியமாக இருக்கிறது. ஒருவர் விடுப்பில் செல்கிறபோது, பக்கத்தில் இருக்கிற நீதிபதிகளைக் கூடுதல் நீதிபதியாகப் போடவேண்டிய பொறுப்பு உயர்நீதிமன்றத்தி

னுடையது. அரசே மக்களிடமிருந்து, மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து வருகிற ஆலோசனைகளை எல்லாம் உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி, தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையையும் உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. த. சந்தோஷம் :** தலைவர் அவர்களே, அப்படி அடிஷனல் இன்சார்ஜ் நீதிபதிகள் இப்படிப்பட்ட அவசரமான மனுக்களில் பொறுப்பேற்று தீர்ப்புக் கூற முன்வருவதில்லை. இனிமேல் உயர்நீதி மன்றத்தைக் கலந்து அப்படிப்பட்ட அவசரமான பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று, இந்த அடிஷனல் சார்ஜ் எடுக்கும் நீதிபதிகளுக்கு அறிவுரை வழங்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை ஏற்புக்குரியது. இது குறித்து உயர் நீதி மன்றத்தோடு அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, பல நேரங்களில் நீதிபதிகள் விடுப்பு காலங்களில் நீதிமன்றம் காலியாக இருக்கிறது. இந்த நிலைமைகளைத் தவிர்க்க முடிவதில்லை. இந்த நேரத்தில் பொதுமக்களுக்கு மிகுந்த சங்கடங்கள் ஏற்படுகிற காரணத்தால், சட்டம் ஒருநாள் தாமதமாகச் செய்யப்பட்டாலும், அதன் விளைவுகள் சற்று அதிகத் தீவிர நிலைமையை உருவாக்குகிறது. ஆகவே அரசு "ரிசர்வ் லிஸ்ட்" வைத்துக்கொண்டு, இதுபோன்ற ஒரு வாரம், 10 நாள் அல்லது மாதக்கணக்கில் விடுப்பு எடுத்து அப்போது காலியாகும் இடங்களுக்கு அந்த ரிசர்வ் லிஸ்டிலிருந்து நீதிபதிகளைப் போட்டு, பின்னால் நிரந்தர ஸ்தானங்கள் வருகிறபோது, இவர்கள் "ரிசர்வ் பணியைக்" கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு நிரந்தரப் பணிகள் கொடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற ஆலோசனைதான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க தகுந்த வழியென்று அரசே ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதுபற்றி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-50)

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, தற்போது மாவட்ட முன்சீப்புகளும், இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளும் தற்காலிகமாகவே நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக, மாநில சர்வீஸ கமிஷன் மூலமாக நியமிப்பதற்கு அரசு முன்வருமா? அப்படியானால், அது எப்போது முதல் செய்யப்படும்?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளைப் பொறுத்தவரையில், சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் 1965 ஆம் ஆண்டிலிருந்தே அவர்கள் உயர்நீதி மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்காலிகமாக நியமிக்கப்பட்டு அந்த நிலைமையிலேயே தொடர்ந்து இருந்து வருகிறார்கள். அவர்களை நிரந்தரமாக ஆக்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டபோது, அதை எதிர்த்து சிலர் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். தற்போது தடை ஆணை நடைமுறையில் இருப்பதால், அது ஈடேறாமல் இருக்கிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, சிறுபான்மையோர் உரிமை என்ற அடிப்படையில் ஒரு நிர்வாகம் நீதிமன்றம் சென்று அந்த வழக்கு முடிவதற்கு முன்னதாகவே இடைக்காலத் தடையை—இஞ்சங்ஷன்—பெற்று, அதில் கல்வித் துறை தலையிடக் கூடாது என்று சொல்லி நிறுத்தி வைத்து, மூன்று ஆண்டுகளாகியும்கூட, ஒன்றும் செய்ய முடியாமல், அந்த ஆசிரியர் அல்லல்படுகிற நிலைமையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். எனவே இப்படி வாழ்க்கைப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு வருகிற வழக்குகளிலாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குமேல் இத்தகைய இஞ்சங்ஷன் செல்லுபடியாகாமல் செய்து, அத்தகைய வழக்குகளை அருகிலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றி, குறைந்தது ஓராண்டு காலத்திற்குள் தீர்ப்பு வழங்கப்படுகிற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன் சம்பந்தப்பட்ட வழக்கு என்று கருதுகிறேன். அதைப் பொறுத்த வரையில் the stay may not be a temporary stay. The stay would have been made absolute by the High Court. That is my feeling. காரணம், மைனாரிட்டி இன்ஸ்டிடியூஷன்களைப் பொறுத்த வரையில், அரசியல் சட்டத்திலேயே அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிற காரணத்தால், உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் இதுவரை அளித்துள்ள தீர்ப்புகள் அவர்களுக்குச் சாதகமாகவே இருக்கிற நிலையில், ஆசிரியர்கள், பணியாளர்கள் ஆகியோர் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்பது உண்மை. இதைக் குறித்து

உச்ச நீதிமன்றத்தின் 'லார்ஜர் பெஞ்சு'க்கு அப்பீல் சென்றிருக்கிறது. அது முடிவாகும் வரை இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத நிலையில் இருக்கி றோம். அந்த அப்பீல் முடிவடைந்த பிறகு அதற்கேற்றபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## நீதிபதிகளுக்கு பயிற்சியளிக்கும் திட்டம்

*24 **வினா.—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தீர்ப்புகளை விரைவில் வழங்கும் வகையிலும், நிர்வாகத்தைத் திறம்பட நடத்தும் வகையிலும், புதிதாக நியமிக்கப்படும் நீதிபதிகளுக்கும் பணியில் இருக்கும் நீதிபதிகளுக்கும் தகுந்த பயிற்சியளிக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) இல்லையெனில், இனியாவது இதை அரசு பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) பணியில் அமர்த்தப்படுமுன்பே, நேரடித் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதித்துறை அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு தகுந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. நீதித் துறை அதிகாரிகளாகப் பணியாற்றி வருகிறவர்களும் தகுந்த பயிற்சிக்காக அவ்வப் போது அனுப்பப்படுகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'தகுந்த பயிற்சி' என்று குறிப்பிட்டார்கள். அது என்ன பயிற்சி என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, அது ஒரு நெடிய பட்டியலாக இருக்கும் என்பதால், அதைப் படிக்க நேரமாகும் என் பதைக் கருத்தில் கொண்டு சுருக்கமாகச் சிலவற்றை மட்டும் படிக்க விரும்பு கிறேன்.



வருவாய்த் துறைப் பயிற்சி என்ற தலைப்பில் களப்பணி, கிராமக் கணக்கு களை வைத்து வருதல் உட்பட கிராமக் கர்ணம் மற்றும் மணியக்காரர்களின் அன்றாடப் பணிகள் பயிற்சி ;

வருவாய்த் துறை ஆய்வாளர்களுடன் பயிற்சி ;
பாசனத்தை முறைப்படுத்துதல் சம்பந்தப்பட்ட பயிற்சி ;
நிலப்பதிவேடுகள் சம்பந்தப்பட்ட பயிற்சி ;
கருவூலக் கணக்குத் துறையில் பலதரப்பட்ட இத்தகைய பயிற்சிகள் ;
நீதித் துறையில் இத்தகைய பலதரப்பட்ட பயிற்சிகள் ;
குற்ற வழக்குகளை விஞ்ஞான ரீதியில் புலனாய்வு செய்தல் ;
மருத்துவச் சட்டத்தில் பயிற்சி பெறுதல் ;

என்று இப்படிப்பட்ட தலைப்புகளின்கீழ் கிட்டத்தட்ட ஒரு இரண்டு மாத காலத்திற்குப் பலதரப்பட்ட பயிற்சிகள் தரப்படுகின்றன. இதுமட்டுமல்லாமல் காவல் துறையில் பயிற்சி, வனத் துறையில் பயிற்சி, வணிக வரித் துறையில் பயிற்சி, சிறை நிர்வாகத்தில் பயிற்சி என்று பலதரப்பட்ட பயிற்சிகளைப் பல வாரங்களுக்கு அளித்து வருகிறார்கள்.

**திரு. ஈ. எஸ். வெங்கடேசன் :** தலைவர் அவர்களே, மாஜிஸ்ட்ரேட்டுகளாக மாவட்ட முன்சீப்புகளாக இருப்பவர்கள் பல நேரங்களில் நீதிபதிகளாக, தற் காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றனவா ? அப்படிப்பட்ட பயிற்சி அளிக்காமல் அவர்களை நியமிப்பதால் கேடு விளையாதா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, தற்காலிகமாக நியமிக்கப்படுகிற நீதிபதிகளேகூட உயர்நீதி மன்றத்தின் 2 நீதிபதிகள் நடத் தும் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர் கள் நீதிபதிகளாக நியமிக்கப்படும்போதும் அவர்களுக்குக் குறுகிய காலப் பயிற்சியை, மாவட்ட நீதிபதிகள் மூலம், உயர்நீதிமன்றம் தருகிறது. அந்தப் பயிற்சி போதுமென்று அரசு கருதவில்லை. எனவேதான் சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையாக நியமிக்கப்படும்போது, முறைப்படியான பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்தது. தடை ஆணை காரணமாக அது தடைப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

[1983 அக்டோபர் 29

**திரு. க. சந்தோஷம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, பல்வேறு பட்ட பயிற்சிகள் அளிக்கப்படுவதைக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் குறிப்பிட விரும்பவில்லை. இராமக் கணக்குகளைப் பற்றியெல்லாம் நீதிபதிகள் அறிந்திருக்க வேண்டியது எவ்வளவு தேவை என்பதில் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. ஆனால் மாவட்ட நீதிபதிகளாக நேரடியாக நியமிக்கப்படுவதற்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களை 'டிரெயினி ஜட்ஜ்' என்று போட்டு ஓராண்டு காலத்தில் அவர்களுக்குச் சில வழக்குகளைக் கொடுத்து, அவர்கள் எப்படி தீர்ப்பு அளிக்கிறார்கள் என்று பார்த்து, அதன் பிறகே அவர்கள் நிரந்தரம் செய்யப்படுகிறார்கள். அதுபோல் நடுவர்களையும் மாவட்ட முன்சீப்புகளையும் பொறுத்த வரையிலும், அப்படிப்பட்ட பிராக்டிகல் டிரெயினிங் கொடுத்து, அதன் பிறகு அவர்களை நிரந்தரமாக அந்தத் துறையில் நியமிக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மாவட்ட முன்சீப்புகளைப் பொறுத்தவரையில் கூட, நீதித் துறையில் பதிவேடுகளை வைத்து வருதல், ஆய்வுக் குறிப்புகளைத் தயாரித்தல் ஆகியவை உட்பட பலதரப்பட்ட பயிற்சிகளை 13 வாரங்களுக்குத் தற்போதே கொடுத்து வருகிறார்கள். அது மட்டுமல்லாமல், மாஜிஸ்ட்ரேட்டாக விசாரணைப் பணிகளிலும், மாவட்ட நீதிபதிகளால் விசாரணைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட வழக்குகளிலும் முன்சீப்புகளுக்கும் 13 வார காலத்திற்குப் பயிற்சி தரப்பட்டு வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, புதிதாக நியமிக்கப்படும் நீதிபதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுவதைப்போல், ஏற்கெனவே உள்ள நீதிபதிகளுக்கும் சமூக நீதியை வழங்கக்கூடிய வகையில் அவர்களுக்குத் தற்கால மக்களுடைய மனோ நிலைக்கு ஏற்ப தீர்ப்பளிக்க பயிற்சி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU C. PONNAIYAN : The decided case-laws of various High Courts and the Supreme Court are taking care of the problems raised by the hon. Member.



1983 அக்டோபர் 29]

**சென்னை புள்ளியியல் துறையில் களவு**

*25 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ். வளைவில் உள்ள புள்ளி இயல் துறை அலுவலகத்தில் 1982 ஆம் ஆண்டு, சனவரி மாதத்திலிருந்து களவு போன பொருட்கள் யாவை ?

(இ) களவாடியவர்கள் காவலரால் பிடிக்கப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், அதன் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) 1982 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து புள்ளி இயல் துறையில் எப்பொருளும் களவு போனதாகத் தகவல் இல்லை.

(இ) எழவில்லை.

(உ) எழவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு ஜனவரி முதல் களவு ஏதும் போகவில்லை என்று குறிப்பிட்டார்கள். 1982 ஆம் ஆண்டில் நான் போட்ட வினாவிற்கு இப்போது தான் பதில் வந்திருக்கிறது. ஆனால் உண்மையில் இப்படிப்பட்ட களவுச் சம்பவம் ஒன்று 15—11—1981-ல் புள்ளியியல் துறையில் பகல் 2 மணி அளவில் நான் இங்கே வைத்துக் கொண்டிருக்கிற ஐ.பி.எம். கார்டு போன்றவைகளை ஒரு ஆட்டோ ரிக்ஷாவில்—அதன் எண் டி.எம்.ஆர். 1679—அங்குள்ள காவலாளி திரு. சின்னத்தம்பி என்பவர் எடுத்துச் செல்ல முயன்றபோது பிடிக்கப்பட்டு, காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார். அவர்மீது இதுகாறும் எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. '1981-ம் ஆண்டில்' என்று கேள்வி போட்டதாக எனக்கு நினைவு. ஆனால் இங்கே 1982 ஆம் ஆண்டில் என்றிருப்பதால், இப்படி பதிலளித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே இப்போது இங்கே நான் தந்துள்ள குறிப்புகளை வைத்தாவது களவாடியவர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்ட கேள்வி, '1982 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து களவு போன பொருட்கள் யாவை?' என்பதாகும். எனவே நான் சரியான பதிலைத்தான் இங்கே சொன்னேன். அதாவது அதற்குப் பின்னால் களவு போகவில்லை என்று சொன்னேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இடைக் காலத்தில் சில தகவல்களைத் தெரிந்துகொண்டு வந்து 15–11–1981-ல் அந்தச் சம்பவம் நடைபெற்றதாகவும் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குறிப்பிடுகிறார். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழக்கு தொடரப்பட்டது. திருட்டுப் போன சொத்தின் மதிப்பு ரூ. 60, அதில் ஈடுபட்ட குற்றவாளிகள் இரண்டு தொழிலாளர்கள். ஆனால் இரண்டு பேருமே வழக்கு மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அலுவலகங்களில் பணி புரிகிறவர்களே அங்குள்ள பொருள்களை—டைப் மெஷின்கள், பேப்பர்கள், மற்றுமுள்ள சாமான்களைத் தொடர்ந்து களவாடி வருவதுபற்றி, இலாக்காவில் புகார் செய்யப்பட்டு அதன் பின்னரும் அவர்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பது, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அப்படிப்பட்ட திருட்டுப் பொருள்களை வாங்குகிறவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக இரண்டு பேர்கள் மீது குற்றஞ் சாட்டினார்கள். இரண்டு பேர்களையும் கோர்ட் விடுதலை செய்துவிட்ட காரணத்தால்,—we should not be casting aspersion—அவர்கள் குற்றவாளிகள் அல்ல.

**பழவேற்காடு ஏரியிலிருந்து சென்னை நகருக்கு தண்ணீர் கொண்டுவருதல்.**

*** 26 வினா.—திரு. வி. வி. வி. ஆனந்தம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகருக்கு பழவேற்காடு ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

(உ) இல்லையெனில், இனியாவது இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

(உ) இத்திட்டத்தை ஏற்கனவே அரசு பரிசீலித்து சாத்தியமில்லை என்று கைவிட்டுள்ளதால் இனிமேல் இத்திட்டத்தை அரசு பரிசீலிக்காது.

(முற்பகல் 10.00)

**திரு. வி. வி. வி. ஆனந்தம்:** வளர்ந்து வரும் சென்னை நகரத்தில் குடிநீரின் தேவை நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிறது. பழவேற்காடு சென்னை நகரத்திற்கு அண்மையில் இருப்பதால், இந்தத் திட்டத்தைக் குறைந்த செலவில் நிறைவேற்றலாம் என்றும், அப்படி நிறைவேற்றினால் சென்னை நகரின் குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்கலாம் என்றும் பொறியாளர்கள் தெரிவித்த கருத்துக்கள் செய்தித்தாள்களில் வந்திருக்கின்றன. ஆகவே இந்தத் திட்டம்பற்றி மறுபடியும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** அதைப்பற்றி என்னிடத்திலே நேரில் திரு. குமரி அனந்தன், எம்.எல்.ஏ. அவர்கள் பேசினார்கள். அவர்கள் கட்சியில்தான் மாண்புமிகு உறுப்பினரும் இருக்கிறார் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கட்சி என்றால் எது என்று விளக்கமாகச் சொல்ல வேண்டும். ஜனதா கட்சியில்தான் இரண்டு பேரும் இருக்கிறார்கள். அதுபற்றிய தகவலை எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** ஜனதா கட்சியில் உள்ள அவரை மறுபடியும் என்னுடைய அறைக்கு அழைத்து எப்படி சாத்தியக்கூறு இல்லையென்ற குறிப்பை எடுத்து அவரிடத்திலே கொடுத்து விட்டேன். மாண்புமிகு உறுப்பினருக்கும் அது கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன். சாத்தியக்கூறு இல்லையென்ற காரணத்தாலே, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும், இந்தப் பிரச்சினையைப் பற்றி யாரும் சிரமப்படக்கூடாது என்பதற்காக ஒன்றைத் தெரிவித்துவிடுகிறேன். அந்த ஏரி நீரின் தன்மையை ஆராய்ந்ததில் அதில் கலந்துள்ள உப்புகளின் விகிதம் ஒரு மில்லியனில் 41 ஆயிரம் பகுதி இருக்கிறது என்று தெரிகிறது. ஒரு மில்லியன் என்பது பத்து இலட்சம். இப்போது சென்னை நகருக்கு விடும் குடி தண்ணீரில் உள்ள உப்பின் அளவு ஒரு மில்லியனில் 130 பகுதியாகும். பொதுவாக குடிநீருக்கு உபயோகப்படுத்தும் நீரில் கரைந்துள்ள உப்பின் அளவு ஒரு மில்லியனில் 250 பகுதிக்கு மேல் இருக்கக் கூடாது என்பது விதிமுறை. இந்த ஏரி நீரில் ஒரு

மில்லியனில் 41 ஆயிரம் பகுதி இருக்கிறது. இந்த அளவிற்கு மேல் அதிகமாகக் கரைந்துள்ள உப்பை வெளியேற்றி சுத்தப்படுத்துவது இயலாத செயலாகும். எனவே பழவேற்காட்டு நீரை அப்படியேவோ அல்லது சுத்தப்படுத்தியோ குடிநீராகப் பயன்படுத்த இயலாது. ஆகவே இந்தப் பிரச்சினை இத்தோடு முடிவடைந்துவிடும் என்று நம்புகிறேன். மேலும் கிருஷ்ணா நதி நீர் வருகிற காரணத்தால், 12 டி.எம்.சி. கிடைக்கும் என்பதால் மாண்புமிகு உறுப்பினர் மகிழ்ச்சியோடு இருக்கலாம். இந்தப் பிரச்சினையை தயவு செய்து இத்தோடு விட்டுவிடுவது நல்லது.

**ரணச்சன்னி தடுப்பு ஊசி.**

*27. வினா—**திரு. ம. சங்கரலிங்கம்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1982 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில் தஞ்சாவூர் இராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் 'ரணச்சன்னி' (Tetanus Toxoid) தடுப்பு ஊசி போட்டுக்கொண்ட கர்ப்பிணிகளில் சிலர் இறந்து போனார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: (அ) தஞ்சாவூர் மிராசுதார் மருத்துவமனையில் 'டெட்டனஸ்', 'டாக்சாயிட்' ஊசி போட்டுக் கொண்டு மரியாயி என்ற ஒருவர் இறந்து போனது உண்மை.

(இ) ஊசி மருந்து கைப்பற்றப்பட்டு சென்னை கிண்டியிலுள்ள கிங் நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. ஊசி மருந்து தரமானது என்று கிங் நிலையத்தில் தற்பொழுது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**திரு. ம. சங்கரலிங்கம்**: 'டெட்டனஸ் டாக்சாயிட்' ஊசி டெட்டனசால் சாகாமல் இருக்க பாதுகாப்புக்குரிய மருந்து என்பதால்தான் போடப்படுகிறது. டெட்டனஸ் ஊசி போட்டதாலே இறந்து போனதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. ஒருவர் இதனால் இறந்தார் என்ற உண்மையை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். ஆகவே என்ன காரணத்தாலே அந்தப் பெண்மணி இறந்தார் என்பது ஆராயப்பட்டதா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: அந்தப் பெண்மணி டெட்டனஸ் என்ற வியாதியால் இறந்திருக்கிறார். அதற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. 'டெட்டனஸ் டாக்சாயிட்' என்பது அடிபடுவதற்கு முன்பே போட வேண்டிய ஊசி. அதற்குப் பிறகு போட்டால், ஓரளவிற்குப் பாதுகாப்பைக் கொடுக்கும். ஏ. டி. எஸ்ஸை காயத்திற்குப் பிறகு போட்டால், முழுவதுமாகப் பாதுகாப்பு கொடுக்கும். ஏ.டி.எஸ். அதிக டாக்சாயிடாக இருப்பதால், ஏ.டி.எஸ். போடும் பழக்கத்தைக் கைவிட்டிருக்கிறார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம்**: அந்தப் பெண்மணி டெட்டனஸ் நோயால் தாக்கப்பட்டு சிகிச்சைக்கு வந்த பிறகு, ஏ.டி.எஸ். கொடுக்காமல் டெட்டனஸ் டாக்சாய்ட் ஊசி கொடுக்கப்பட்டதற்கு காரணம் என்ன என்பது ஆராயப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: நான் சொன்னதை மாண்புமிகு உறுப்பினர் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையா அல்லது இன்னும் தெளிவாக நான் சொல்ல வேண்டுமா என்பது தெரியவில்லை. 'டெட்டனஸ் டாக்சாய்ட்' என்பதை உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். டெட்டனஸ் டாக்சாய்டால் சாதாரணமாக பாதிப்பு ஏற்படாது. ஆனால் 'ஆக்டிவ் இம்யூனைசேஷன்' ஏற்படுகிறது. ஒரு வருடம் அல்லது ஒன்பது பத்து மாதங்களுக்கு ஒருமுறை அத்தனை பேரும் அதைப் போட்டுக் கொள்ள வேண்டும். காயம் ஏற்படுகிறபோது இப்போது ஏ. டி. எஸ். போடுவது கிடையாது. ஏ.டி.எஸ். போட்டால் பயனுள்ளதாக இருக்கும். ஏ.டி.எஸ். போட்டால், ரியாக்ஷன் இருக்கும் என்பதால், ஏ.டி.எஸ். போடுவதை விட்டிருக்கிறார்கள். இந்த 'பர்டிகுலர்' கேசைப் பொறுத்த வரையில், 'டெட்டனஸ் டாக்சாய்ட்' போட்ட பிறகு வியாதி வந்திருக்கிறது. not because of tetanus; but inspite of tetanus toxoid.

**சிதம்பரம் பகுதியில் யானைக்கால் நோய்.**

*28. வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் பகுதியில் யானைக்கால் நோய் அதிகரித்து வருகின்றது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

[1983 அக்டோபர் 29

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை. இந்நோயின் பாதிப்பு இப்பகுதியில் குறைந்துள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** யானைக்கால் நோய் சிதம்பரம் மற்றும் கும்பகோணம் பகுதியில் முன்பு மிகத் தீவிரமாக இருந்தது. சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் காரணமாக, இந்த நோய் குறைந்திருப்பதாக அந்தத் துறையின் மூலமாக அவ்வப்போது அறிவிப்புகள் வருகின்றன என்றாலும், முழுவதுமாகக் குறைந்ததாகத் தெரியவில்லை. அந்தப் பகுதியைச் சார்ந்தவன் என்ற முறையில் இதை நான் சொல்லுகிறேன். என்னிடம் புள்ளிவிவரம் இல்லையென்றாலும்கூட, இந்த நோயின் தீவிரத் தன்மைக்கு மூலகாரணமாக உள்ள கொசுக்கள் அதன் மூலம் வருகின்ற விஷக் கிருமிகள் ஆகியவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், இதைக் குறைக்க வழியில்லை. ஆகவே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேலும் தீவிரப் படுத்தி இன்னும் தீவிரமாகக் குறைக்க, முற்றிலும் அழிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் என்று சொன்னார். என்னுடைய தந்தையார் அந்தப் பகுதியில் அங்குள்ள மருத்துவமனையில் 45 ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றினார். நானும் அந்தப் பகுதியில் சிறுவயதில் இருந்தவன்தான். ஒரு வீடுவிட்டு ஒரு வீட்டில் ஃபைலேரியா இருக்கக் கூடிய காட்சியை மாணவனாக இருக்கும்போது நான் பார்த்திருக்கிறேன். 'ஃபைலேரியா இன்ஃபெக்ஷன் ரேட்' 1980 ஆம் ஆண்டு 3.95 பர் செண்டு, 1982-ல் 1.3 பர் செண்டு. 'ஃபைலேரியல் என்டமிசிட்டி ரேட்' 1980-ல் 4.73 பர் செண்டு. இப்போது 1.86 பர்செண்ட் ஆக இருக்கிறது. நல்ல வகையில் வெகு வேகமாகக் குறைத்திருக்கிறோம். இன்னும் வேகமாகக் குறைக்க வேண்டும் என்ற கருத்தில் அரசாங்கத்திற்குக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** இது போன்ற தடுப்பு நடவடிக்கைகளை வீடு வீடாகச் சென்று எடுப்பது வரவேற்கத்தக்கது என்றாலும், கல்வி நிலையங்களில் குறிப்பாக சிறுவர்கள் படிக்கும் ஆரம்ப, நடுத்தர, பள்ளிகளில் ஆரம்பக் கட்டத்திலேயே இந்த நோய்த் தாக்குதலைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுத்தால், எதிர்காலத்திற்கு உதவும். ஆகவே கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில், இது குறித்து தீவிர நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?



1983 அக்டோபர் 29]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கல்வி நிலையங்கள் மட்டுமல்லாமல், எல்லா இடங்களிலும் 'ஃபைலேரியல் என்டெமிசிட்டி ரேட்' என்ற குறிப்பு இருக்கிறது. அதை நாம் குறைத்தாக வேண்டும். ஃபைலேரியா ரேட் '5 பர் செண்டு அண்டு மோர்' என்றால் it becomes endemic அந்த வகையிலே இல்லாமல் குட்டைகள் மற்றும் கொசு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் இருக்கின்றன என்பதைப் பார்த்துவிட்டு, உடனடியாக முனிசிபாலிட்டி மூலமாக மற்ற அதிகாரிகள் மூலமாகத் தொடர்பு கொண்டு நல்ல வகையில் சுத்தமாக வைக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய முயற்சி நல்ல வகையில் வெற்றி தந்திருக்கிறது. இன்னும் வேகமாகச் செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, வினா எண் 29, 30 ஆகிய இரண்டு கேள்விகளும் ஒரே மாதிரியாக இருப்பதால், இரண்டையும் சேர்த்தே எடுத்துக்கொள்ளலாமா ?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினா எண் 29, 30 ஆகிய இரண்டும் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

### பாலர் பள்ளிகளை நர்சரி பள்ளிகளாக மாற்றுதல்.

***29. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து பாலர் பள்ளிகளையும் நர்சரிப் பள்ளிகளாக மாற்றி, அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (அ) மற்றும் (இ) :** அரசே கிராமப்புறங்களில் நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை கொள்கையளவில் ஏற்று 1982-83 ஆம் ஆண்டில் ஏற்கெனவே சமூக நலத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 4,343 குழந்தைகள் காப்பகங்களில் நர்சரி பள்ளிகளைத் திறக்க 1982 ஆம் வருடம் அக்டோபர் திங்களில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[1983 அக்டோபர் 22

**நர்சரி பள்ளிகள்.**

*30. வினா—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் 1982-83-ஆம் கல்வி ஆண்டில், நர்சரி பள்ளிகளை அரசே துவக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (அ) மற்றும் (இ) :** அரசே கிராமப்புறங்களில் நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை கொள்கை அளவில் ஏற்று 1982-83-ம் ஆண்டில் ஏற்கெனவே சமூக நலத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 4,343 குழந்தைகள் காப்பகங்களில் நர்சரி பள்ளிகள் திறக்க ஆணை வெளியிட்டுள்ளது. இப்பள்ளிக்கான பாடத் திட்டத்தின்படி இங்கு தமிழ், ஆங்கிலம், எண் கணிதம் (Arithemetic) மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் கற்றுத் தரப்படும். கல்வி பயிற்றுவிக்க அமைப்பாளர்களுக்கு அணி அணியாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பள்ளிகளுக்கான பைண்டு மற்றும் பாடத்திட்டம் அச்சிடவும் விளையாட்டுப் பொருள்கள் புத்தகங்கள் மரச்சாமான்கள் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கவும் வழிவகை செய்யப் பட்டுள்ளது.

(முற்பகல் 10.10)

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக, சமூக நலத் துறையிலே உள்ள பள்ளிகளாக, மாற்ற அரசு உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே அந்த பாலர் பள்ளிகளிலே பணியாற்றக் கூடிய பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்போது புதிதாகப் பயிற்சி அளிக்கப்பட்டதே அந்தப் பயிற்சி அவர்களுக்கு அளிக்கப் பட்டதா? அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படாமல் வேலை இழக்கக் கூடிய சூழ்நிலை யாருக்கேனும் ஏற்பட்டிருக்கிறதா? அப்படிப் பயிற்சி அளித்திருந்தாலும்கூட, பயிற்சி பெற்ற அந்த ஆசிரியர்களுக்கு, தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளிலே, ரெகுலராக நடக்கின்ற பள்ளிகளிலே பயிற்சி பெற்று பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊதியம் வழங்கப்படுகிறதா?



1983-அக்டோபர் 29]

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, பாலர் பள்ளிகளில் பணிபுரிகின்ற அந்த மைய அமைப்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற முறையில் ஆதாரப் பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. இந்த ஆதாரப் பயிற்சியாளர்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டு பயிற்சி பெற்றிருக்கின்றார்கள் என்றால், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, பெண்கள் மேல் நிலைப் பள்ளி, எஸ்.சி.ஈ.ஆர்.டி., இந்தியக் குழந்தைகள் நலக் குழு போன்ற, 31 நிறுவனங்களிலிருந்து 46 நபர்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மூலமாக ஒரு மாதம் அந்த அமைப்பாளர் களுக்கு அந்தப் பயிற்சி அளித்ததன் மூலமாக அவர்கள் காப்பக மையங்களில் பணிபுரிந்து வருகிறார்கள். நடுநிலைப் பள்ளிகளில் கொடுக்கப்படும் ஊதியம் அவர்களுக்குக் கொடுக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியின்போது கேட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற எல்லா அமைப்பாளர்களுக்கும், 4,343 அமைப்பாளர் களுக்கும் சேர்த்து, ரூ. 175 இன்றைக்கு ஊதியமாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கு ரூ. 90, ரூ. 100 ஊதியம் என்பதை, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி வந்த பின்னர், மாற்றி எல்லா அமைப்பாளர்களுக்கும் ஒரே மாதிரி ரூ. 175 கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, இன்றைக்கு அமைப்பாளர்கள் எல்லோருக்கும் ரூ. 175 தான் கொடுக்கப்படுகிறது. ஊதியத்தை உயர்த்துவதுபற்றி நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 4,343 குழந்தைகள் காப்பகங்களில் நர்சரிப் பள்ளிகள் தொடங்க கொள்கை ரீதியாக முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்கள். அந்த 4,343 காப்பகங்களில் எத்தனை இடங்களில் நர்சரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன? தொடங்கப்பட்டவைகளில் இப்போது எத்தனை செயல்பட்டுக் கொண்டிருக் கின்றன? இப்போது பயிற்சி அளித்துவருவதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சில விவரங்களைக் குறிப்பிட்டார்கள். இது கல்வியின் அடிப் படையிலே மிக முக்கியமான கல்வி என்பதால், அந்த ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கின்ற பொறுப்பை ஆசிரியர் பயிற்சி நிலையங்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இவற்றிடம் மட்டுமே ஒப்படைப்பது என்பது குறித்து அமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்களா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகள் மூலமாகத்தான், அமைப்பாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில்தான்

எஸ்.சி.ஈ.ஆர்.டி., ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மூலமாக அதிகமாக அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகின்றது. 4,343 குழந்தைகள் காப்பக மையங்களில் இன்றைக்கு 4,140 மையங்களில் நர்சரிப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, அந்த அமைப்பாளர்களுக்கு ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளிகளிலே பயிற்சி அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆசிரியர் பயிற்சிக்காக என்னென்ன தகுதி உள்ளதோ அத்தனை தகுதிகளையும் பெற்றவர்களே அந்தப் பயிற்சி எடுக்கின்றபோது, அப்படி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வெளியிலே வந்து பணியாற்றினால் அவர்களுக்கு என்ன ஊதியம் கிடைக்குமோ அதே அளவுக்கு ஊதியம் கிடைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ? அவர்கள் அமைப்பாளர்கள் என்று இருப்பதை விட, அவர்களை நர்சரிப் பள்ளி ஆசிரியர்களாக நியமித்து, அந்தப் பணியையும் அவர்களிடம் ஒப்படைத்து, அவர்கள் அதை இன்னும் சிறப்பாகச் செய்ய தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, அந்த நர்சரி ஆசிரியர்கள் பயிற்சி என்பது பற்றியும், அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதிய உயர்வு பற்றியும், நிச்சயமாக அரசு பரிசீலனை செய்யும்.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 4,140 பள்ளிகளில் எத்தனை வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருக்கிறார்கள் ? எத்தனை பேர்கள் படிக்கிறார்கள் ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இந்த 4,140 நர்சரிப் பள்ளிகளில் முதல் கட்டமாக 2 வயதிலிருந்து 4 வயது வரைக்கும் உள்ள குழந்தைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். இரண்டாவது கட்டமாக 4 வயது முதல் 5 வயது வரைக்கும் உள்ளவர்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள். எவ்வளவு பேர்கள் படிக்கின்றார்கள் என்ற விவரம் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் நிச்சயமாக விவரம் கொடுக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. அரசின் தீர்மானம்.

### ஸ்ரீலங்கா வாழ் தமிழர்கள் பிரச்சினை குறித்து—தொடர்ச்சி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. சங்கரலிங்கம் மற்றும் திரு. ப. மாணிக்கம் ஆகியவர்கள் அவரவர்களுடைய திருத்தங்களை முன்மொழிவார்கள்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அரசின் தீர்மானத்திற்கு என் பெயரில் தரப்பட்டிருக்கின்ற கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன் :—

"1. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில் தீர்வு காண முடியாமல் தமிழகமே ஸ்தம்பித்து இருந்தபோது, ஏதாவது ஒரு தியாகத்தைச் செய்து வது உலக அரங்கின் கவனத்தை இலங்கைத் தமிழர்கள் பக்கம் ஈர்க்க வேண்டும் என நினைத்த தி.மு.க. தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகன் அவர்களும் தங்களது சட்டமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்ததற்கு இந்த மன்றம் அவர்களுக்குத் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தை முன்னிட்டு இன்றுள்ள சூழ்நிலையில் அங்குள்ள தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழ முடியாத காரணத்தால் இலங்கை வாழ் தமிழர்களுக்கு தனி ஈழம் அமைத்துத் தர உலக நாடுகள் முன் வரவேண்டுமென்று இந்த மன்றம் கேட்டுக்கொள்கிறது.

3. இன்றும் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் கலவரங்கள், கற்பழிப்புகள், இனக்கலவரங்கள் நடந்து கொண்டிருப்பதால் இலங்கைத் தமிழர்களின் உயிர்-உடமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்க உடனடியாக இலங்கைக்கு இராணுவத்தை அனுப்ப வேண்டும் என மத்திய அரசை இம் மேலவை கேட்டுக் கொள்கிறது.

4. முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவையொட்டி, முதலமைச்சர் தலைமையில் சென்ற தூதுக் குழுவினர் இந்தியப் பிரதமரை சந்தித்துக் கொடுத்த மனுவில் (மெமோரண்டம்) குறிப்பிடப்பட்ட கருத்துக்களை ஐ.நா. மன்றத்தில் இந்தியப் பிரதமர் குறிப்பிடாததை இந்த மன்றம் கண்டிக்கிறது.

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 அக்டோபர் 29

5. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென மதுரையிலிருந்து இலங்கை நோக்கி தியாகப் பயணம் நடத்திய காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன் அவர்களையும், அவரோடு சென்ற ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தியாக மறவர்களையும் இம்மன்றம் பாராட்டுகிறது.

6. இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட இலங்கை நாட்டுபிரிவினைச் சட்டத்தை கொளுத்தியும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வற்புறுத்தியும் ஆகஸ்டு திங்கள் 5 ஆம் நாள் தி.மு.க. அறிவித்த ரயில் நிறுத்த போராட்டத்தை ஒட்டி முன்கூட்டியே தி.மு.க. தொண்டர்களை கைது செய்த மாநில அரசின்போக்கை கண்டு இம்மன்றம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

7. ஐ.நா. மன்றத்தில் அரசியல் கமிட்டி கூட்டத்தில் பேசிய தமிழக மின்துறை அமைச்சர் இராமச்சந்திரன் "இலங்கையில் தமிழ் ஈழ பிரிவினையை நாம் ஆதரிக்கவில்லை என்றும், அங்கு நடைபெறும் சம்பவங்கள் உள்நாட்டுப் பிரச்சினைகள் என்றும் குறிப்பிட்டிருப்பது, இலங்கைத் தமிழர்களை உலக நாடுகளின் முன்னால் காட்டிக் கொடுக்கும் செயலாக இம்மன்றம் கருதுகிறது.

8. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐ.நா. மன்றம் தலையிட்டு ஆவன செய்யவேண்டுமென்று தி.மு.க. நடத்திய கையெழுத்து இயக்கத்தில் சுமார் ஒரு கோடி மக்கள் கையெழுத்திட்டதைப் பாராட்டி, அந்த மக்களுக்கு இந்த மன்றம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது."

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்.

"**பாரா (ஆ) :**

2-வது வரியில் 'இனவெறியர்களையும்' என்ற வார்த்தைக்கு அடுத்து "சமூக விரோதிகளையும்" என்ற வார்த்தைகளையும் சேர்க்கவும்.

**பாரா (ஏ) :**

இந்த பாரா முழுமையும் நீக்கவும்.



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

பாரா (ஐ) :

ஐந்தாவது வரியில் 'ஐக்கிய நாடுகள் அவைகள் மூலமோ அல்லது' என்ற வார்த்தைகளை நீக்கவும்.

**பாரா (ஒ) :**

இந்த பாராவில் ஐந்தாவது வரி துவக்கத்தில் 'இலங்கைவாழ்' என்ற வார்த்தைக்கு முன்னால் "இந்தியவம்சாவழித் தமிழர்கள்" என்ற வார்த்தைகளையும் சேர்க்கவும்.

**பாரா (ஔ) :**

ஐந்தாவது வரியில் "அளிக்க வேண்டும்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "அளிக்கவும் அவர்களின் புனர் வாழ்வுக்கு வகை செய்யவும் வேண்டும்" என்ற வார்த்தைகளைச் சேர்க்கவும்.

**பாரா (க) :**

முழுமையையும் நீக்கிவிடலாம்."

**திரு. ஆ. நல்லசிவன் :** நான் திருத்தங்களை வழிமொழிகிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு பெரிய கொந்தளிப்புக்குப் பின்னால் நடைபெறக்கூடிய இந்த மேலவைக் கூட்டத் தொடரில், உலக வரலாற்றிலேயே இல்லாத கொடுமை, அக்கிரமம் இவைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கக் கூடிய திரு. ஜெயவர்த்தனேயினுடைய ஆட்சியின் கொடுமைகளை இந்த அவையில் பேசுவதற்கான வாய்ப்பினைத் தந்திருக்கின்றார்கள். என்னைப் போன்ற உணர்வு படைத்தவர்கள் ஸ்ரீலங்காவிலே வாழ்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்குமானால், கையிலே குண்டுகளை ஏந்தி விடுதலைக்குப் போராடக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது இருந்திருக்க முடியும். ஆனால் இந்திய நாட்டிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய நாம் நம் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதன் மூலமும், நம்முடைய உணர்வுகளைத் தெரிவித்துக் கொள்வதன் மூலமும் காரியங்கள் செய்துகொண்டிருக்கிறோம். அதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். உலகத்திலே எங்கே அநியாயங்கள் நடைபெற்றாலும், அதை முதலிலே கண்டித்துக் கொண்டிருக்கக்கூடிய நாடு இந்திய நாடு என்று நாம் வரலாற்றிலே படித்திருக்கிறோம். ஸ்ரீலங்காவிலே தமிழர்கள் காலாகாலமாக அனுபவித்து வந்த உரிமைகள் பறிக்கப்பட்ட காரணத்தினாலே இன்று எழுந்திருக்கக் கூடிய

[திரு. செ. முத்துசாமி] [1983 அக்டோபர் 29

பிரச்சினைகள் வந்திருக்கின்றன. கடைசியிலே, நாடு ஒரு பகுதியாக விடுதலை பெற்றாலொழிய தம்முடைய உரிமைகள் பாதுகாக்கப்படாது என்ற நம்பிக்கையை இழந்த சூழ்நிலையில்தான் போராட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உலகமே அறியும். நம் தமிழுக்கு அங்கே மரியாதை இருக்கிறது. தமிழ் மக்களுக்கு அங்கே உத்தியோகத்திலே மரியாதை இருந்தது. ஆனால் தமிழர்கள் உத்தியோகத்திலேயிருந்து நீக்கப்படுகின்ற சூழ்நிலையில், அவர்கள் உரிமையற்று வெளியேற்றப்படுகின்ற சூழ்நிலையில் இருந்த காரணத்தினால்தான், அங்கே அந்தப் போராட்டங்கள் எழுந்தன. அதிகாரிகளுடைய துணையைக் கொண்டு, இராணுவத்தினருடைய துணையைக் கொண்டு மிக அக்கிரமமாக, உலக வரலாற்றிலேயே இல்லாத அடக்குமுறைகளைக் கையாண்டு, பறவைகளைப் போல தமிழ் மக்களைச் சுட்டு எரித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தன. பெருத்த துயரை உண்டுபண்ணக் கூடிய, சொல்ல முடியாத அளவுக்கு விம்மி அழக்கூடிய விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன. உலக வரலாற்றிலே நடைபெற்ற படுகொலைகளை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஸ்ரீலங்காவில் நடைபெற்ற படுகொலைகளை, ஆட்சி உரிமையை வைத்திருக்கக்கூடிய திரு. ஜெயவர்த்தனே ஒப்புதலோடு, இராணுவத்தின் துணையோடு நடந்திருக்கக்கூடிய அராஜகத்தை உலகத்திலேயுள்ள யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. யாருக்கும் இல்லாத உணர்ச்சி இந்திய நாட்டிலே உள்ள தமிழர்களுக்கு ஏன் வருகிறது? நேற்று நம்முடைய பெருமைக்குரிய தலைவர், ஆரம்ப காலத்திலேயிருந்து, சுயமரியாதை இயக்கம் வந்த காலத்திலேயிருந்தே நான் மனதிலே மதிப்பு வைத்திருக்கக்கூடிய பெரியவர் முத்தண்ணன் அவர்கள் இங்கே சொன்னபோது, நான் சற்று உணர்ச்சி வயப்பட்டேன். தமிழர்கள் ரத்தத்தால், இனத்தால் கொடுக்கல் வாங்கல் முதற்கொண்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில் பிழைக்கச் சென்றவர்கள் மட்டுமல்ல, அந்த நாட்டை வாழ்வித்தவர்கள். அவர்கள் இன்றைக்கு வாழ்வதற்கு வழியில்லாமல் துரத்தப்படும்போது, கண்டதுண்டமாக வெட்டப்படும்போது, பெண்கள் கணவன் முன்னால், பெண்கள் பெற்றவர்கள் முன்னால், சகோதரன் முன்னால் சண்டாளர்களால் கற்பழிக்கப்படக்கூடிய நிலைகள் ஏற்படும்போது, அதை யாராலும் தாங்க முடியாது. தாங்க முடியாத உணர்ச்சிதான் யாருக்கும் வர முடியும். அந்த உணர்வுதான் தமிழ் மக்களுக்கும் வந்திருக்கிறது. அந்த நேரத்தில் நான் சுற்றுப் பயணம் செய்தேன். தென்



1983 அக்டோபர் 29] [திரு. செ. முத்துசாமி]

(முற்பகல் 10-20)

பகுதிகளில் உள்ள உணர்வுகள் உச்ச கட்டத்தில் இருந்தன. அது மறுக்க முடியாத ஒன்றாகும். அந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய வகையிலே அரசாங்கத்திற்கும், மற்ற கட்சிகளுக்கும் வேறுபாடான நிலைமை இருக்கலாம். எல்லோரும் ஒரேவிதமான உணர்வுகளைப் பிரதிபலித்திருக்கிறார்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். இலங்கையிலே இராணுவம் ஒரு பக்கத்தில் ரவுடிகளை வைத்துக் கொண்டு நடத்திய கொடுமைகள் போல ஒரு பக்கத்தில் ரவுடிகளை வைத்துக் கொண்டு நடத்திய கொடுமைகள் எங்கும் நடந்ததில்லை. நாம் பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவு கொடுக்கிறோம். தென் ஆப்பிரிக்காவில் நடக்கும் கொடுமைகளைக் கண்டித்து, அவர்களுக்கு ஆதரவு கொடுக்கிறோம். ஆனால் ஸ்ரீலங்கா பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்று சொல்லுகிறோம். அதை நான் வேறுவிதமான முறையில் சொல்ல விரும்பவில்லை. தீர்மானத்திலே உள் நாட்டுப் பிரச்சினை என்று இருக்கிறது. ஆதிபத்திய உரிமையுள்ள திரு. ஜெயவர்த்தனே, அந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கக்கூடிய திரு. ஜெயவர்த்தனே, "என்னுடைய கட்டுப்பாட்டில் இராணுவம் இல்லை, மக்கள் எப்படி வேண்டுமானாலும் கொல்லப்படுவார்கள்" என்று அறிவித்த பிறகு அங்கே நம்முடைய இனத்தைப் படுகொலை செய்யும்போது, பூண்டோடு அவர்கள் அழியும்போது, எப்படி சும்மா இருக்க முடியும்? இந்தியாவின் மீது வெறுப்பைக் கொப்பளித்துக் கொண்டிருக்கும் பாலஸ்தீனத்தவர் சொல்லுகிறார்கள். கொழும்பில் டாக்சியில் செல்லும்போது, தமிழர்களை அழித்துவிட்டோம் என்று கூக்குரலிட்டுச் சென்றதைக் கேட்டோம் என்று சிங்கப்பூரில் அவர்கள் சொல்லுகிற ஸ்டேட்மென்டை பத்திரிகைகளில் படிக்கும்போது, நம்முடைய ரத்த நாளங்கள் கொதித்து எழுகின்றன. தமிழ் மக்கள், 20 மைல்கள் கடலால் சூழாமல் இருந்தால், பாரதப் பிரதமரல்ல, முதலமைச்சரல்ல, யார் தடுத்திருந்தாலும், இங்கே ஏற்படும் உணர்வுகளால் உந்தப்பட்டு கையில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு சென்று, தன்னுடைய வாழ்வைப் பற்றிக் கவலைப்படாமல் போர் புரிவார்கள். தாங்களும் ஏதாவது செய்ய வேண்டுமென்று எண்ணி, பேனாவால் எழுதக்கூடியவர்கள் காத்தில் எதையும் தாங்கி அவர்கள் விடுதலைக்காகப் போராடத் தயங்க மாட்டார்கள். பெண்கள் தங்கள் மானம் அழிக்கப்படுமென்று எண்ணும்போது 'எங்கள் கையிலே குண்டு ஏந்தி போராடுகிறோம், மானத்தோடு வாழ வேண்டுமென்று எண்ணி' என்று கடிதங்கள் வந்தபோது, அதைப் படித்தபோது வேறு எதுவும் செய்ய முடியாமல் கண்களில் உணர்வுகள் பீறிடப்பீறிட

[திரு. செ. முத்துசாமி] [1983 அக்டோபர் 29

கொந்தளிக்கிறோம் நான் எண்ணிப் பார்க்கிறேன். கோவையில்
துணைத் தலைவரவர்கள் பேசியதை எண்ணித் தடுமாறிப் போய்விட்டேன்.
மெய் சிலிர்த்தேன். இன்றைக்கு நிலைமை ஓரளவுக்குக் கட்டுக்குள்
அடங்கி இருக்கிறது. பாரதப் பிரதமர் இந்தப் பிரச்சினையை எடுத்துக்
கொண்டு சொன்ன பிறகுதான் திரு. ஜெயவர்த்தனே சொன்னார். இந்தியா
படையெடுத்து ஸ்ரீலங்காவை ஆதிக்கம் செய்தால், வெளி நாடுகளுக்கு ஓடி
விடுதலைக்காகப் போராடுவோம் என்று பயத்தில் உளறியதைப் பார்த்தேன்.
இதில் இன்றைக்குப் பாரதப் பிரதமர் அவர்கள் என்ன 'ஸ்டேட்டஜி' எடுத்
திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு
எம். பி. சுப்ரமணியம் அவர்கள் சில விஷயங்களைத் தெளிவாகச் சொல்லி
யிருக்கிறார்கள். அதற்குள் நான் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை.
எந்த நாட்டிலும் இல்லாத கொடுமைகள் அங்கே நடந்திருக்கின்றன. ஜாலியன்
வாலாபாக் படுகொலை என்னும்போது, அந்நிய நாட்டைச் சேர்ந்தவர்கள்
சுட்டார்கள். ஆனால் இங்கே இனக் கொலைகள், படுகொலைகள் நடக்
கின்றன. அரசாங்கத்தின் உதவியோடு, இராணுவத்தின் உதவியோடு

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

இத்தகைய அக்கிரமம் வேறு எங்கும் நடக்கவில்லை. அஸ்ஸாம் பற்றிச்
சொல்லுகிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மைனாரிட்டியினரைப்
பாதுகாக்க இந்திய இராணுவம் பாடுபடுகிறது. ஸ்ரீலங்கா அரசு
இராணுவத்தின் உதவியோடு ரவுடிகளை வைத்துக்கொண்டு மைனாரிட்டி
யினராக இருக்கும் தமிழர்களை, அந்த நாட்டுக் குடிமக்களாக இருந்து
வாக்களிக்கும் உரிமையுடைய தமிழர்களை ஆட்சி இயந்திரம் அழித்துக்
கொண்டிருக்கும் கொடுமை எந்த நாட்டிலும் நடக்கவில்லை. கிரெனடா
நாட்டில் இன்றைக்கு ஆயிரம் பேர் படிக்கிறார்கள் என்று காரணம் சொல்லி—
அந்த நாட்டினுடைய அதிபர் கேட்கவில்லை, சுற்றி பக்கத்தில் இருக்கும்
நாடுகள் எல்லாம் சென்று ஆட்சேபணை செய்ய வேண்டுமென்று
சொன்னார்கள் என்று—அமெரிக்கா, உலகப் போலீஸ்காரன் என்று தன்னைப்
பெயர் சூட்டிக் கொண்டிருக்கும் அந்த நாடு, சென்றிருக்கிறது என்பதை
உலக நாடுகள் கண்டிக்கத்தான் செய்கின்றன. அதைப் போல இந்தியா
செய்ய வேண்டுமென்று ஒரு பக்கத்தில் சொல்லுகிறீர்களா என்று கேள்வி
கேட்கலாம். ஆனால் கிரெனடா நாட்டில் நடந்தது வேறு. இங்கே
ஸ்ரீலங்காவில் நம்முடைய வம்சாவழியினர் கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.
'இராணுவம் என்னுடைய கையை விட்டுச் சென்றுவிட்டது' என்று சொன்ன
பிறகு, அங்கே இராணுவத்தின் துணைகொண்டு இந்திய வம்சாவழியினரை,



1983 அக்டோபர் 29] [திரு. செ. முத்துசாமி]

இந்தியாவிலிருந்து சென்று, ஸ்ரீலங்கா நாட்டு குடிமக்களா, இந்திய நாட்டு
குடி மக்களா என்று அறிவிக்கப்படாத நிலையில் அவர்கள் அழிக்கப்படு
வதை, அந்தத் தாங்கொணாத நிகழ்ச்சியை எண்ணித் துயரடைகிறோம்.
திரிகோணமலையிலிருந்து ரயில் ஏற்றி, 'பாதுகாப்பான இடத்திற்குச்
செல்லுங்கள்' என்று இராணுவம் அவர்களை வழி ஏற்றி அனுப்பி, வழியில்
தீ வைத்துக் கொளுத்திய கொடுமை வேறு எங்கே நடந்திருக்க முடியும்?
150 பேர்களை இஸ்ரேல் படைகள் கண்டதுண்டமாகக் கொலை
செய்தார்கள். அதை உலகமே கண்டித்தது. இங்கேகூட நான்
பார்க்கிறேன். இந்திய நாட்டு அரசியலில் இருக்கிறவர்கள் எப்படிப்பட்ட
உணர்வுகளை வைத்திருக்கிறார்கள் என்று பார்க்கிறேன். ஒரு பெரிய
தலைவர், முன்னாள் பிரதமர் சொல்கிறார். ஸ்ரீலங்காவிற்கு உதவி
செய்தால், தமிழ் நாட்டுக்காரனும் தனி நாடு கேட்பான் என்று அவர் சொல்லு
கிறார். என்ன கொடுமை? ஒரு மனிதாபிமானமான எண்ணம்
வேண்டாமா? இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டிலே
நடந்த கொடுமையைச் சொல்கிறேன். உத்திரப் பிரதேசத்திலும், மத்தியப்
பிரதேசத்திலும் ஏதும் அறியாத கிராம மக்களின் கண்ணை எல்லாம்
நோண்டி நோண்டி பிடுங்கி எடுத்தார்கள். மிகக் கேவலமாக கொள்ளைக்
காரனின் கண்கள் பறிக்கப்பட்டன சிறையிலே. அந்தக் கொடுமையைத்
தாங்க முடியாமல் பாராளுமன்றத்தில் எவ்வளவு பெரிய கூக்குரல் எழுப்பப்
பட்டது என்பதை எண்ணிப் பார்க்கிறேன். அப்படி கூக்குரல் எழுப்பிய
இந்திய நாட்டு எதிர்க் கட்சிக்காரர்கள், ஸ்ரீலங்காவில் குட்டிமணி, ஜெகன்
ஆகியோர் கண்கள் பிடுங்கப்பட்டபோது, அவர்கள் கண்டதுண்டமாக
வெட்டப்பட்டபோது, அந்தக் கொடுமையைப்பற்றிப் பேசவில்லையே?
இந்திய நாட்டு வம்சாவழியினருக்கு ஏற்பட்ட கொடுமைகளைப்பற்றி
மனிதாபிமான அடிப்படையில் பேசப்படவில்லையே. இந்தக் கொடுமையைக்
கண்டிக்க அவர்களுக்கு என்ன கட்டுப்பாடு இருக்கிறது என்று புரியவில்லை.
உலக வரலாற்றில் சிறையிலிருந்து வெளியே வந்தால், அவர்கள் விடுதலை
நோக்கி வந்திருக்கிறார்கள் என்றுதான் பார்க்கிறோம். ஆனால் ரவுடிகளை
அனுப்பி சிறையிலேயே வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். இத்தகைய
கொடுமைக்குப் பிறகும் நாம் அமைதியாக இருக்கிறோம். எந்த வகையி
லாவது உதவ வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கும் தமிழகத்தில்
பல்வேறு அரசியல் கட்சிகளும் தங்களால் முடிந்த அளவுக்கு எதையெதைச்
செய்ய வேண்டுமென்று கட்சித் தலைமை முடிவெடுக்கிறதோ, அதைச்
செய்திருக்கிறார்கள். இந்த மாநில முதலமைச்சர் நீண்ட கால
பொறுமைக்குப் பின்னர், அந்த விடுதலை இயக்கத் தலைவர்கள் இந்த

[திரு. செ. முத்துசாமி] [1983 அக்டோபர் 29

நாட்டுக்கு வந்து, தங்களுடைய இயக்கத்தை நடத்த உதவி கேட்டால், தமிழகம் அவர்களுக்குப் புகலிடம் அளிக்கும் என்று சொல்லியதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அந்த தைரியத்தைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அவர்களும், துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில், தாங்கள் வகிக்கும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பதவிகளைத் தூக்கி எறிந்தார்கள். அதைப் பாராட்டுகிறேன். இதே அவையில் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்கள் நீண்டகாலமாக ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தமிழர், சகோதரர். அவர் தான் வகித்து வந்த அரசாங்கப் பதவியை தூக்கி எறிந்துவிட்டார். இன்றைக்கு ஐ.நா. சபைக்கு இந்தியப் பிரதிநிதியாகச் சென்றுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பேச இருக்கிறார்கள். அங்கே பொதுச் சபையில் பேச, இந்தியப் பிரதிநிதியாகச் சென்றாலும், ஒரு தமிழருக்குத்தான் அந்த வாய்ப்பு இருக்கிறது. அவர் தமிழ்நாட்டு அமைச்சராக இருந்தாலும் இந்திய நாட்டுப் பிரதிநிதிதான். அவர் பாதுகாப்புக் கவுன்சில்வரை விஷயத்தை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கே இந்தப் பிரச்சினையை எழுப்பி முழுமையாக தன்னுடைய உணர்வுகளைப் பிரதிபலித்திருக்கிறார். அவரைப் பாராட்டுகிறேன். எல்லா உலக நாடுகளையும் அழைத்து, அவர்களுக்கு வருகிற 31 ஆம் தேதி இந்த அக்கிரமத்தைச் சொல்ல வேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முயற்சி வெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

இன்னொன்று. நெடும் பயணம் என்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் 5,000 பேர்களை அழைத்துக் கொண்டு, தங்களுடைய உணர்வுகளைக் காட்டினார்கள். அந்த உணர்வுகளை நான் மதிக்கிறேன். இங்கே கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் மற்ற கட்சிகள்

(முற்பகல் 10-30)

எல்லாம் நடைபெற்ற நிலவரத்தை அனுசரித்து தங்கள் தங்கள் உணர்வுகளைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும் ஸ்ரீலங்கா வாழ் மக்களுக்காக ஒன்றி இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியும் தன்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறது. ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு உணர்வில் ஒன்றி இப்பிரச்சினையில் ஈடுபட்டதை நான் பாராட்டுகிறேன். ஒருவேளை எல்லோரும் சேர்ந்து உணர்வுகளை வெளிப்படுத்தியிருந்தால், இன்னும் நல்லமுறையில் வழி பிறந்திருக்குமோ என்னவோ. ஆனால் ஒவ்வொரு கட்சியும் எடுத்துக்



1983 அக்டோபர் 29] [திரு. செ. முத்துசாமி]

கொண்டிருக்கக் கூடிய உணர்வுகள் மிகவும் மதிக்கக் கூடியவை. ஸ்ரீலங்காவிலிருந்து இங்கு வந்திருக்கக் கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களே மதிப்பீடு செய்கிறார்கள். உணர்ச்சி வசப்படுகிறார்கள். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய நடவடிக்கைகளை அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களே பெரிதும் பாராட்டியிருக்கிறார்கள். அதுவும் அவரைச் சந்தித்து. அவரோடு பேசிய பிறகு பாராட்டியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டிலும், தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டு, இராணுவம் தங்களுடைய கட்டுப்பாட்டில் இல்லையென்று ஸ்ரீலங்கா அரசு அறிவித்தபோதே, இந்திய ராணுவம் அங்கே சென்றிருக்க வேண்டும் என்று தான் சொல்வேன். அப்படியில்லையென்றாலும், இராணுவம் ஸ்ரீலங்காவுக்கு வரும் என்று சொல்லியிருந்தாலே போதும். அப்படிச் சொன்னாலே பயந்துவிடக் கூடியவர்கள் அவர்கள். இந்தியா எப்போதுமே ஆதிக்கம் செய்யக் கூடிய நாடல்ல. பங்களா தேஷில் நாம் பார்த்தோம். அங்கே பிரச்சினை ஏற்பட்ட உடனே, நம்முடைய இராணுவம் சென்று பிடித்த இடத்தைக் கூட, நிலைமை சீர்பட்டவுடன், அவர்களிடமே கொடுத்துவிட்டு வெளியேறிய பாரம்பரியம் இந்தியாவுக்கு மட்டும் தான் உண்டு. ஆக, பிறருடைய மண்ணைப் பிடிக்க வேண்டும், ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற எண்ணம் இந்தியாவுக்கு என்றைக்குமே இருந்ததில்லை. அப்படி நடைபெற்றதாக வரலாறும் இல்லை. நம்மைப் பொறுத்தவரையிலும், அப்படியே தவிர்க்க முடியாத நிலையில் பிடித்த பிறகு கூட, மீண்டும் அந்நாட்டிடமே கொடுத்துவிடக் கூடிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதே காரியத்தை இப்பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் செய்தால், மீண்டும் அங்கு சர்வநாசம் ஏற்படும் என்பதால்தான், நம்முடைய இந்தியப் பிரதமர் அவர்கள் தயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். மீண்டும் இந்தியாவிலிருந்து திரு. பார்த்தசாரதி அவர்கள் அங்கு செல்ல இருக்கிறார். தமிழகத்திலுள்ள கட்சித் தலைவர்களுடைய உணர்வுகளையும், சட்டமன்றத்தில் அரசால் கொண்டுவரப்பட்டிருக்கும் தீர்மானத்தையும் கேள்விப்பட்டதற்குப் பிறகு. முன்பு அழைத்துப் பேச முன் வராத ஸ்ரீலங்கா அதிபர் இன்றைக்கு தானாகவே திரு. பார்த்தசாரதியை அழைத்துப் பேசுகிறேன் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய வெளிவிவகார அமைச்சர் அவர்கள் ஸ்ரீலங்காவுக்குச் சென்றிருந்தபோது, திரு. அமிர்தலிங்கம் அவர்களைச் சென்று சந்திக்க பாதுகாப்பு தர முடியாது என்று சொன்னவர் இன்றைக்கு "அழைத்துப் பேசுகிறேன். இதுகுறித்து முடிவு செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார் என்றால், இது நம்முடைய உணர்வுக்குக் கிடைத்த வெற்றி என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க

[திரு. செ. முத்துசாமி] [1983 அக்டோபர் 29

முடியாது. ஸ்ரீலங்காவில் வாழ்கின்ற தமிழர்களுக்கு உரிமை தர வேண்டும். "பெடரல் செட்டப்" வேண்டுமென்று யாழ்ப்பாணத் தமிழர்கள் கேட்கிறார்கள். அது அவர்களுக்குக் கிடைக்க தமிழக அரசும், இந்திய அரசும், இந்தியாவில் இருக்கிற அனைத்துக் கட்சிகளும், மக்களும் என்ன முடிவை எடுக்கிறார்களோ அத்தனை முயற்சிகளுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியும் ஆசிரியர் சமுதாயமும் தன்னுடைய ஆதரவை நல்கும். அதோடு கூட அவர்கள் என்ன தியாகத்தை எங்களிடமிருந்து எதிர்பார்க்கிறார்களோ அந்தத் தியாகத்தையும் ஆசிரியர்கள் சார்பில் நாங்கள் செய்வோம். அதுபோல் சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில், என்னிடமிருந்து என்ன தியாகத்தை எதிர்பார்க்கிறார்களோ அதையும் செய்வேன் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுடைய முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். இனிமேல் அங்கே தமிழர்கள் கொல்லப் படுகின்ற நிலை வரக் கூடாது. தமிழர்களைக் கேவலப்படுத்துகின்ற நிலை வரக்கூடாது. அதற்கேற்ற வகையில் நாம் எச்சரிக்கையாகக் காரியங்களைச் செய்து அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் உணர்ச்சிப் பிழம்பாகவே காட்சியளிக்கும் நம்முடைய மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் இன்றைக்கு அவையைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருப்பது பெரும் பாக்கியம். அவர்கள் இன்றைக்கு அந்த இடத்தில் அமர்ந்திருப்பதால், சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா வாழ் தமிழர் பிரச்சினை பற்றிய அரசின் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் ஈழமே, உன்னுடைய விடுதலை இயக்கம் வளரட்டும். தியாகத்திலிருந்து தான் விடுதலை பிறக்கும். உலகத்தில் யாரும் விடுதலை கோருவதைத் தடுத்து விடவோ, அடக்கி விடவோ முடியாது. விரைவில் தமிழ் ஈழம் விடுதலை பெற்றுத் தீரும். விடுதலை பெற வேண்டும் என்ற என்னுடைய ஆசையைத் தெரிவித்து தனி ஈழம் ஸ்ரீலங்காவில் ஏற்பட வேண்டும் என்கிற என்னுடைய உணர்வை அவை நடவடிக்கைப் பதிவேட்டிலும் பதிவு செய்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

THIRU J. M. MIAKHAN: Mr. Deputy Chairman, Sir, I fully appreciate and I fully agree with the feelings and sentiments expressed in this House regarding the atrocities and genocide that have been committed in Sri Lanka. I also endorse the



1983 அக்டோபர் 29] [J. M. Mikhan]

Resolution, the main part of it, condemning the atrocities committed by the Sinhalese on the helpless minority people in Sri Lanka. Though different parties may have stressed their feelings in a different manner, one thing is common. We are not able to control our feelings and we are bursting with anger and we feel almost like invading that country. We know our restrictions and all of us know that even if we say the military intervention should be there, it is not possible at the moment and there are several draw-backs also. We have to look into all these things. We may say that it is a small country. Recently in Grenada where democracy was imperilled, the United States, one of the super powers, invaded that country and it is still there trying to bring about peace and order there. Here, in Sri Lanka, when 44 lakhs of people have been victimised, when their property has been destroyed, when there has been heavy loss of lives, our Government of India should have definitely taken a little more stern action and told them that India would not keep quiet. Sri Lanka is not a foreign country to India since it is a country where lakhs and lakhs of our own countrymen are living. Not only Tamilians but other Indians also live there. The Central Government should have taken stronger action. If the Hon. Prime Minister Thirumathi Indra Gandhi happens to know the feelings of all the people in the South, or even the feelings of the people belonging to her own party, Congress Party, she would appreciate the problem and would take some stern action. India is one of the biggest democracies in the world. We are having a large population and we are surviving as a democracy. We are in the neutral camp and we have not aligned ourselves either with the United States or with the Russian camp. It has been the biggest democracy in the world. They wonder how a poor country like India with several crores of people is able to remain independent. Some of them do not seem to relish the ides of various democratic institutions being put to practice in this country. Therefore, they want to bring about some confusion as in—I am sorry to say this—Pakistan and other adjoining countries. Though those countries are supposed to be free, actually they are ruled by military rulers or by a junta and every now and then have to face a *coup*. They are not under normal democratic rule. They would like to see our country also in such a turmoil. I am very much afraid of one thing. If India sends a force to Sri Lanka or even sends a to a

place in the periphery say to Kanniyakumari or to some other place in our border, then, these people who are there already in Trincomalle and other people will say. 'Oh, the independence of Sri Lanka is threatened and, therefore, we have to safeguard it.' They will come in there and they may even invade India. We cannot say what they may do or may not do. Therefore, we have to be littie careful. I think that the Prime Minister, Thirumathi Indira Gandhi, having this in view, condemns the atrocities committed in Sri Lanka while, at the same time, she does not say anything about sending the army there. We know the atrocities that have been committed there. The details have been mentioned by hon. Members here and I need not repeat them. The newspapers also carried detailed reports. Very many innocent people have been affected. It seems that the people who committed the atrocities went mad and berserk. Rape, plundering, killings and massacre have been committed. In the midst of our feelings and our anger, we must also think and say what is the practical thing to be done to restore normalcy there. We cannot bring all of them back to our country. It is an impracticable proposition. Many years ago, during the times of Pandit Jawaharlel Nehru and Shastriji, they agreed to take back some of the Stateless Tamils. It was only a temporary solution. They thought that, instead of landing all those people in difficulty, we could tack back at least some of them. But, in principle, it is not correct. We have always been very generous and we have been giving help wherever possible. We will do the same now also. But, it is impossible to take back 10 lakhs of people from Sri Lanka and rehabilitate them here. The number may be much more because these people fall under four

(முற்பகல் 10.40)

main categories which have been enumerated. Sri Lanka was part of the British Empire and it was a province. In 1935 it became a different country and then became independent. Like Burma it was a province and a part of the British Empire and was under one rule of the Viceroy of India. So people naturally went to that part just as we go about from one State to another State now. It was like one of our present States of U.P. and Bengal. The people who went there enriched the soil and now they have got flourishing tea gardens or plantations which earn



a lot of foreign exchange for tha contry. By their scrifice, they have made that country rich. They should not be made to undergo needless sufferings. For more than 200 years and for generations together; they have been there and they must be given citizenship right there. I fully appreciate the efforts of our Hon. Chief Minister and we should also appreciate our Hon. Ministers Thiru S. Ramachandran who has factfully used the opportunity to bring the subject before the world forum. There are others also who have expressed their strong feelings for the cause, in their own way, like Dr. Kalaignar Karunanidhi and our former Government Whip Dr. Janarthanam. There are several others who have, in their own way, exhibited their feelings and anguish and they are prepared to make sacrifices. The people in Sri Lanka cannot be called just foreigners, because most of them are our kith and kin and are our own people. They are Indians and they are of the same blood as we are. Therefore, our blood boils when they are subjected to sufferings. But the same intensity of feeling is not there in North India. It may be due to geographical reasons but it is not as if the Central Government do not feel in the way we feel. However, Thirumathi Indra Gandhi could have taken sterner action and stated in unequivocal terms that the people of Indian origin in Sri Lanka should not be treated in such a way. I am sure that Thiru G. Parthasarathy who is going there will be armed with all the cards. I am sure he will be given all facilities there. I hope that a round table conference will be arranged there. Recently, Thiru Jayewardene agreed to hold a round table conference. There is no use in calling just a few people to that conference, leaving others unrepresented. Even people having opposite views must be represented in that conference. All shades of opinion should emerge in that conference. It should be helder under a neutral agegies. Otherwise, a permanent solution could not be found for the problem in Sri Lanka. We must see that the people of Sri Lanka live in peace and amity again so that prosperity returns to that country. If there is peace and amity in that country, there will be long-standing peace and amity in the region and we will also be relieved of all these worries. With these words, I thank the Chairman for permitting me to speak on this occasion. I fully endorse the sentiments expressed in this Resolution. Several things have been enumerated in the Resolution. It is not a Resolution with just

one sentence. In fact, it looks like a small booklet. In that, Government could also have mentioned about the sacrifices made by other Parties to show the intensity of their feelings. Within the ruling Party itself, there was a slight drift in the degree of feeling. The hon. Member Thiru S. Muthu, ex-Mayor of Madurai, spoke yesterday. His approach was similar to the approach of the people of the D.M.K. here. There are others also like the Hon. Minister Dr. Kalimuthu, whose approach or views are similar to those of people on this side. It is quite natural. They are doing it in their own way. But the sincerity of their feelings is known to everybody. We should not do anything which would jeopardize the effort to bring normalcy in that island. We must try to help the people in that island. At the same time, we should try to do our bit to ameliorate their difficultities and see that things move properly. Of course, when those people come here, we must give them refuge and try to rehabilitate them. But, we cannot rehabilitate several lakhs of people immediately. Neither the Government of India nor the Government of Tamil Nadu can do it. I am very glad that the Hon. the Chief Minister has stated boldly yesterday that, whatever may happen, he, as Chief Minister, will give refuge to the people who come from there. I am sure that, subject to the provisions of the Constitution, our Hon. Chief Minister will do it. I make an appeal to Thirumathi Indira Gandhi that she may, in her speech in Parliament and other speeches, make it more emphatic that she is not lukewarm towards this problem, that she is not ignorant of the gravity of this problem and that she is not lacking in paying attention to this problem. Because such an impression has been created here, it should be removed. This problem is not a problem of Tamil Nadu alone. It is an Indian problem because Indian citizens are suffering there. A solution to this problem is not easy. Partition of that country will not be feasible. There are lakhs of people in Yazhppananm and they are one group. The Stateless people from another group. The state workers belong to yet another group. There are people of Indian origin and also Indian citizens who are working or doing business and are living with their families. They are one group. There is another group of people who call themselves Moores and their mother language also Tamil. They are numbering abount 10 lakhs and they are in the midst of Sinhala areas and their area is surrounded by Sinhala villages. They are not in any way



nearer to the Tamilian majority area. What will happen to these people ? They are also Tamil-speaking people. A solution should be found in such a way that it is not harmful to any group of our Tamil-speaking people. Each section will have to make some concession in favour of the other and Jayewardene Government must also bend. If it does not bend, I would like to say—though it may not be to the liking of the people of Sri Lanka—that there will not be peace in that island. I am very confident that unless normalcy is restored in Sri Lanka, we could not rest and we will have to agitate till then. They must take steps before it goes to unmanageable limits. I would request the Central Government to act swiftly and in a concrete way and show to them that we mean business and that we should be treated properly.

* **திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான்
கொடுத்துள்ள தீர்மானத்தில் உள்ள சில திருத்தங்களைப் பற்றியும், நான்
முதலிலேயே பேச விரும்புகிறேன். அதற்கு முன்னதாக இந்தத் தீர்மானத்தில்
உள்ள கருத்துக்களையும், அதையொட்டி வந்த சில கொள்கைப் பிரச்சி
னைகள் அல்லது வாதங்கள் என்பனவையும் நான் எடுத்துக்கொள்ள
விரும்புகிறேன். இறுதியாக, என்னுடைய திருத்தங்களில் அதை நான்
வலியுறுத்த விரும்புகிறேன் என்பதை முன் கூட்டியே தெரிவித்துக்கொள்
கிறேன்.

(முற்பகல் 10-50)

இந்தத் திருத்தங்களில் சில கருத்துக்களின் அடிப்படையில் ஒன்றைச்
சொன்ன போதிலும், பாரா 'எ' முழுவதையுமே நீக்கிவிட வேண்டும்.
அதிலே மிகப் பெரிய விவாதம் நடந்தது என்பது வாஸ்தவம். இந்தப்
பிரச்சினையில் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்பட்டது என்பது மட்டுமல்ல,
இனியும் ஏற்படும். காரணம், அங்கே திரும்பத் தாக்குதல்கள் நடந்தால்,
மீண்டும் கொந்தளிப்பு ஏற்படும். தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில்,
அது இந்த மாதிரி சில கொந்தளிப்புகளுக்கு ஆளாகிற இனம் என்று கூற
வில்லை. தமிழ் இனம் ஒரு பேரினம். இந்த உணர்வு தமிழ் இனத்திலே
பல்லாண்டுகளாக வேரூன்றி இருக்கிறது என்பது மட்டுமல்ல, இப்போதும்
அது விசிறி விடப்படுகிறது. அது எந்த அளவுக்கு நவீன வரலாற்றுக்
காலத்தில் நமக்குப் பயன்படும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.
தான் தொடக்கத்திலேயே இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்வதற்குத்

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

காரணம் நான் உணர்ச்சி வயப்படவில்லை. இங்கே கூட சில உறுப்பினர்கள் பினர்கள் பேசும்போது கம்யூனிஸ்டுகளுக்கு இன உணர்வு இல்லை என்றுகூட குறிப்பிட்டார்கள். அப்படி எங்களுக்கு இன உணர்வு இருக்கிறதா இல்லையா என்பதற்கெல்லாம் நான் இந்த விவாதத்தின்போதே பதில் சொல்ல விரும்பவில்லை. காரணம், நாங்கள் காலத்தாலே இதனை நிரூபித்துக்கொண்டு வருகிறோம்.

எனவே, இந்தப் பேரின உணர்வை இப்போது விசிறி விடுவது என்பது பலன் தராது என்பது மட்டுமல்ல, பல சிக்கல்களையும் உண்டாக்கிவிடும். தமிழ்ப் பேரினம், மலேசியா, சிங்கப்பூர், பர்மா போன்ற இடங்களிலெல்லாம் இருக்கிறது. மலேசியாவில் இந்தப் பிரச்சினை இன்னும் வராவிட்டாலும், ஏற்கெனவே பர்மாவில் இந்தப் பிரச்சினை வந்துவிட்டது. எனவே இன்னும் சிக்கல் வந்துவிடக்கூடாது என்ற வரலாற்று நோக்கோடு நான் இதனைச் சொல்லுகிறேன். பழைய வரலாற்றை மட்டுமே பார்ப்பது என்பது வரலாற்று நோக்கமல்ல. எதிர் காலத்தையும் நாம் பார்க்க வேண்டும். அதனால்தான் வரலாற்றைப்பற்றி ஒரு பழமொழியே சொல்லப்படுவதுண்டு. " "History is a tonic to the sick mind", அதாவது வரலாறு என்பது சிந்தனை நோய் உள்ளவர்களுக்கு ஒரு நோய் தீர்க்கும் மருந்து என்று சொல்லப்படுகிறது. எனவேதான் நாம் எதிர்காலத்தைப்பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது என்பது மிகவும் அவசியமாகும்..

அந்த முறையில் ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட பிரச்சினையைப் பார்க்கிற போது, அங்கே தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். குறிப்பாக, அங்குள்ள பூர்வீகத் தமிழர்கள் என்று சொல்லப்படுகிற யாழ்ப்பாணத் தமிழர்கள் தாக்கப் பட்டார்கள். அது அரசாங்கத்தின் ஒரு திட்டமிட்ட செயலாகும். 'எத்னிக் வயலன்ஸ்' என்று சொல்கிறார்கள், அதாவது இனக் கலவரம் என்று சொல் கிறார்கள். அது ஒரு நவீன இராஜதந்திர பாஷையாகச் சொல்லப்படுகிறது. இனவொழிப்பு, ஜெனோசைடு, என்றால் ஐ. நா. அவையோ, மனித உரிமைக் கமிஷனோ அதைப்பற்றி யார் கொண்டு வந்தாலும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது விதி. எனவே அதைச் சொல்வதற்கு, அரசாங்கங்கள் பெரும்பாலும் பயன்படுத்துகிற வார்த்தை 'எத்னிக் வயலன்ஸ்' என்பதாகும். ஸ்ரீலங்காவில் உண்மையிலேயே தமிழ் இனம் அழிக்கப்படுவது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அதாவது ஒரு ஆண்டு விட்டு மற்றொரு ஆண்டில் இத்தகைய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

அதுவும் திட்டமிட்டு அரசாங்கத்தாலே செய்யப்படுகிறது. ஆனால் எப்போதையும் விட இந்த முறை மிகவும் அதிகமாக அது நடந்திருக்கிறது. எனவே அதைச் சொல்லும் போது இங்கே உள்ளவர்கள் உணர்ச்சி வயப்படுவதிலே நியாயம் உண்டு. இத்தகைய உணர்வுகளைக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டிப்பாக மதிக்கிறது என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் நாட்டில் மட்டுமே இத்தகைய நிலையை எடுத்திருக்கிறது என்று யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது. காரணம் எங்களுக்கு வழிகாட்டியாக—இரண்டு கட்சியாக இல்லாதபோதே—எங்களுடைய கட்சியின் தலைவரான லெனின் தேசிய இனப் பிரச்சினை விஷயத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை எங்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார். " தேசிய இனப் பிரச்சினை என்பது சில நூற்றாண்டுகளுக்கு இருக்கும். எனவே இன உணர்வை மதித்து நடக்க வேண்டும். அதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் " என்று அவர் அப்போதே எச்சரித்திருக்கிறார்.

ரஷ்யப் புரட்சிக்குப் பிறகுகூட, அங்கேயுள்ள ஜார்ஜியா மாநிலத்தில் உள்ள தேசிய இனப் பிரச்சினையில் ஒரு தவறு நடந்தது. அப்போதைய இருந்த ஸ்டாலின், அவர் அந்த ஜார்ஜியன் இனத்தையே சார்ந்தவராக இருந்த போதிலும், லெனின் வழிகாட்டலுக்கு மாறாக, அங்குள்ள தேசிய இன மக்களுக்குக் கோபம் வரும் வகையில் நடந்து கொண்டபோது, அப்போது மத்திய கமிட்டியில் உறுப்பினராக இருந்த ஆர்ஜானி கிட்ஸே என்பவரைப் பார்த்து "நீங்கள் ஜார்ஜிய இனத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அங்கேயுள்ள மக்களுக்குக் கோபம் வரும்படியாக நடந்து கொண்டீர்கள், முரட்டுத்தனமாக நடந்து கொண்டீர்கள் " என்று குற்றஞ்சாட்டினார்கள்.

எனவே, எங்களுடைய கட்சியின் தத்துவத்தின் அடிப்படையில், கொள்கையின் அடிப்படையில், நாங்கள் இன உணர்வை மதிக்கிறோம். இங்கே பேசிய நண்பர்களில் சிலர் நாங்கள் அதிகமாகவே சர்வ தேச தேசியம் பேசுகின்றவர்கள் என்றும், சின்ன சின்ன தேசிய உணர்வுகளை மதிப்பதில்லை என்றும் பேசினார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். இதற்கு உரிய பதிலைக் காலம் கண்டிப்பாகச் சொல்லும். இருந்தாலும், எந்த தேசிய இனத்திற்கு ஆபத்து என்றாலும் கம்யூனிஸ்ட் கட்சி அதை எதிர்க்கும். இன்றைக்கல்ல, இந்தியாவில் விடுதலைப் போராட்டம் நடக்கும்போதே, அதாவது [illegible] காலம் முதற்[illegible],

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

இத்தகைய உணர்வுகளைக் கம்யூனிஸ்ட் கட்சி மதித்திருக்கிறது. அதனால் தான் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்திய சுதந்திரத்திற்கு எத்தகைய ஆபத்து வந்தாலும், எப்போதும் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தத் தயாராக இருக்கிறோம். இது தொடர்பாக சுதந்திரப் போராட்டம் நடந்த காலத்தில் கொடுத்த விலையை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதனால்தான் தமிழ் இனத்திற்கு ஆபத்து என்கிறபோது, அதைக் கண்டிக்க, எதிர்க்கத் தயங்க மாட்டோம். ஆனால் பிரச்சினையைக் கொண்டு செல்வதில் வேறுபாடு இருக்கலாம். ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ் இனம் அங்கே அழிக்கப்படுகிறது என்று சொல்லுகிற போது, அதில் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டுமா வேண்டாமா என்றால், வேண்டும். உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், அருகில் உள்ள கல்பாக்கம் அணு மின் நிலையம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே திறக்கப்பட்டது. அதாவது அங்கேயுள்ள விஞ்ஞானிகள் அதை டிசம்பர் மாதத்தில்தான் திறக்க வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் பிரதமர் அவர்களோ அதைச் சீக்கிரமாக ஆரம்பித்தால் நல்லது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இதன் காரணமாகவே அதன் திறப்பு விழா முன்கூட்டியே செய்யப்பட்டது. அதனால்தான் "மெத்தில் டிரபிள்" வந்தது. ஆக அந்த நிகழ்ச்சிக்காக பிரதமர் தமிழகத்திற்கு வந்திருந்தபோது, ஸ்ரீலங்காவில் உள்ள நிலைமை குறித்து, இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தக் கருத்தைச் சொன்னதற்குக் கூட அங்கே உள்ள ஜனாதிபதியும் அங்கே உள்ள அரசும் ஸ்ரீலங்கா விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது என்று குற்றஞ்சாட்டினார்கள். அரசாங்கம் என்று வருகிறபோது அப்படித் தான் ராஜ தந்திர நிலையைப் பயன்படுத்துகிறார்கள். அதைப் போலவே நேரடியாக பிரதமரைச் சந்தித்த போதும், அவர் சொன்னது கூட "மைல்ட் எக்ஸ்பிரஷன்" என்றுதான் குறிப்பிட்டார்கள். ஆக இப்படி இந்தகுறைந்த பட்ச வார்த்தையைச் சொன்னதற்கே அங்கேயுள்ள அரசு பதறி இருக்கிறது.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மூத்து அவர்கள் பேசும் போது, இந்திய அரசு ஒரு வலுவான எச்சரிக்கையை விட்டிருந்தால், ஸ்ரீலங்கா அரசு பிரண்டிருக்கும் என்று குறிப்பிட்டார்கள். இப்போது இருக்கிற நிலைமை என்பது தற்போது ஏற்பட்டதல்ல, ஸ்ரீலங்காவில் இருக்கிற இன்றைய ஜெயவர்த்தனே அரசு எடுத்திருக்கிற நிலைமை மட்டுமல்ல, சில ஆண்டுகளாகவே அந்த நாட்டு அரசு ஒரு நிலையை மேற்கொண்டிருக்கிறது. அதாவது, இந்தியா பலம் பொருந்திய நாடாக



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

இருப்பதால், அது தன்னை விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது. அது ஒரு 'எக்ஸ்பேன்ஷனிஸம்' கொள்கையை மேற்கொண்டிருக்கிறது என்று ஸ்ரீலங்கா அரசு கூறி வருகிறது. இதன் காரணமாக ஸ்ரீலங்கா நாட்டுக்கு ஆபத்து என்ற வகையில், அங்கே இன வெறியை—இன உணர்வை அல்ல—அங்குள்ள அரசு கிளப்பிவிட்டிருக்கிறது. இந்தியாவாலே என்றைக்கும் ஸ்ரீலங்காவிற்கு ஆபத்து என்ற உணர்வை அந்த அரசு உருவாக்கியிருக்கிறது. அது மட்டுமல்ல, அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு தூது கோஷ்டி ஸ்ரீலங்காவிற்குச் சென்றது. இப்படி அமெரிக்கக் குழுக்கள் பல நாடுகளுக்குச் சென்று அங்கேயுள்ள பலவிதமான முரண்பாடுகள் யாவை என்பதைத் தெரிந்து வருவதற்காக அனுப்பப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு தூதுக் குழு ஸ்ரீலங்காவிற்குச் சென்று வந்த பிறகு, ஒரு அறிக்கை கொடுத்தது. அதாவது தென் கிழக்கு ஆசியாவிலே ஒரு கோடி சிங்களவர்கள் ஸ்ரீலங்காவில் மட்டுமே இருக்கிறார்கள். ஆனால் தென் கிழக்கு ஆசியாவில் தமிழர்கள் ஆறு கோடி பேர் இருக்கிறார்கள். எனவே இந்த ஆறு கோடி தமிழர்கள் மத்தியிலே அந்த ஒரு கோடி சிங்களவர்கள் மிகவும் அஞ்சி வாழ வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், இப்படிச் சொல்லி அங்கே சிங்கள இன வெறியைக் கிளப்பியிருக்கிறார்கள். இது நாணயத்தின் இன்னொரு பக்கம். எனவே தான் நாம் இந்தப் பிரச்சினையில் உணர்ச்சிவசப்படுவதில் தவறில்லை என்று சொல்கிறேன். திரும்பவும் சொல்கிறேன், இந்தப் பிரச்சினையில் நாம் உணர்ச்சிவசப்படுவதில் தவறு ஏதுமில்லை. அதுவும் ஒரு கட்சியிலே உள்ளவர்களிடத்தில் கூட இதில் கருத்து வேறுபாடு இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையில் கருத்து வேறுபாடு வரலாம். இனப் பிரச்சினை என்று வருகிறபோது, இனப் பிரச்சினைக்காக, இன உணர்வுக்காக கருத்து வேறுபாடு ஒரு கட்சிக்குள் வரலாம். கொந்தளிப்பு வரலாம். அதைக் கூட நான் தவறு என்று சொல்லவில்லை, குற்றம் என்று சொல்லவில்லை. இதனால்தான் சோவியத் ரஷ்யாவில்கூட, ஜார்ஜிய தேசிய இன விஷயத்தில் தவறு நடந்தபோது, லெனினால் அனுப்பப்பட்ட இரண்டு மத்திய கமிட்டி உறுப்பினர்கள், அவர்கள் அந்த மாநிலத்தையே, அந்த இனத்தையே சேர்ந்தவர்களாக இருந்தபோதும், தவறாக நடந்து கொண்டார்கள் என்பதற்காக விமர்சிக்கப்பட்டார்கள். "நீங்கள் ஜார்ஜியராக இருந்தாலும், அந்த இன உணர்வை மதிக்க மறந்து விட்டீர்கள். முரட்டுத்தனமாக நடந்து கொண்டீர்கள்" என்று லெனின் விமரிசித்தார். ஆக, தேசிய இன உணர்ச்சி சம்பந்தமாக கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணோட்டம் இது.

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

எனவே, இன உணர்வு சம்பந்தமாக ஒரு கட்சிக்குள் கொந்தளிப்பு வந்தாலும் நான் அதைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. அரசு என்ற முறையில் தமிழக அரசும் அல்லது கட்சி என்ற முறையில் தமிழகக் கட்சிகளும் உணர்ச்சி வசப்படுவது என்பது ஒன்று. ஆனால் பிரச்சினைக்கு நாம் வழி கண்டாக வேண்டும் என்பது வேறு. கட்சிகள் என்பவை உணர்ச்சிகளை வெளிப்படுத்த இருக்கும் அமைப்புகள் மட்டுமல்ல. ஏற்படுகிற பிரச்சினைகளுக்கு நாம் வழி கண்டாக வேண்டும்.

1981 ஆம் ஆண்டு சென்சஸ்படி—அமைச்சர் அவர்களே அந்த விவரத்தையெல்லாம் இங்கே கொடுத்திருக்கிறார்கள்—இலங்கைத் தமிழர்கள் என்கிறபோது பூர்வீகத் தமிழர்கள் என்கிற யாழ்ப்பாணத் தமிழர்கள், இந்திய வம்சாவழியினர் ஆகியோர் எவ்வளவு என்ற விவரம் என்னிடம் இருக்கிறது. ஸ்ரீலங்கா அரசாங்கம் வெளியிட்டுள்ள டைரியிலிருந்து கிடைத்த தகவல் அது. அதைப் போலவே சமீபத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஸ்ரீலங்காவிலிருந்து வந்த என்னுடைய நண்பரும் கொடுத்திருக்கிறார். அந்தத் தகவல்கள் என்னிடத்தில் இருக்கின்றன. இந்தத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்காவில் உள்ள அரசு அங்குள்ள சிங்களர்களை ஏவி விடுகிறது. ஸ்ரீலங்கா அரசே இதைச் செய்கிறது. சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட 'எத்னிக் வயலன்ஸ்' அல்ல இது. தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை அங்கே உள்ள அரசாங்கமே மோத விடுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அங்கே இருக்கும் சிங்களவர்களும் ஏதோ உணர்ச்சிவசப்பட்டு கலவரத்தில் ஈடுபடவில்லை. அரசாங்கத்தாலேயே தூண்டிவிடப்படுகிறது. இதில் சமூக விரோதிகளும் கலந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தான் நான் என்னுடைய திருத்தத்தில் 'இனவெறியர்களையும்' என்ற வார்த்தையை அடுத்து 'சமூக விரோதிகளையும்' என்ற வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். இது ஒரு சாதாரண 'வெர்பல் அமென்ட்மெண்ட்'. அரசு கொடுத்துள்ள வார்த்தைகளோடு இதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரியிருக்கிறேன். காரணம் இந்தச் சந்தர்ப்பத்தை சமூக விரோத சக்திகளும் பயன்படுத்திக் கொண்டிருக்

(முற்பகல் 11-00)

கிறார்கள். ஆர்மி கண்ட்ரோலில் இல்லையென்று சொன்னார்கள். அது உண்மை. துணைத் தலைவர் அவர்களே, நேரம் எவ்வளவு இருக்கிறது என்று சொன்னால், அதற்குத் தகுந்த மாதிரி நான் பேசுகிறேன்.



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நான் பார்ப்பதற்கெல்லாம் பொருள் தேடிக் கொள்ள வேண்டாம். இதுவரையில் 12 மணித் துளிகள் ஆகியிருக்கின்றன. பேசலாம்.

**திரு. ப. மாணிக்கம் :** ஸ்ரீலங்கா அரசு மூன்று நாட்களுக்கு ஜனாதிபதியின் கையிலே இல்லை என்பது உண்மை. இதைப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மட்டும் சொல்லவில்லை. பல்வேறு விவரங்களை நாங்களும் சேகரித்தோம். 'அவுட் ஆஃப் கண்ட்ரோல்' என்பது உண்மை. இந்த நிலைமை அவருக்குத்தான் என்பதல்ல. திரு. ஜெயவர்த்தனேயின் வாதங்களை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. சிரிமாவோ அரசு இருந்தபோது கூட இது நடந்தது. அப்போது சிரிமாவோ இந்திய அரசிடம் உதவி கேட்டார். இன்னும் சொல்லப் போனால், சிரிமாவோ அரசு கொழும்புவில் இல்லாமல், கப்பலில் வெளியேறிச் செல்ல வேண்டியது ஏற்பட்டது. சர்வதேச விஷயங்களில் பல பேர் பங்களா தேஷையும், ஆப்கானிஸ்தானையும், ஹங்கேரியையும் பற்றியெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். அதற்குள் நான் போக விரும்பவில்லை. அதெல்லாம் சர்வதேசப் பிரச்சினை. ஒன்றை மட்டும் நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். சர்வதேச பிரச்சினைகள் எல்லாம் ஸ்தூலமானவை. The problem is concrete அது மாதிரி யாரும் காப்பி அடிக்க முடியாது. சிரிமாவோ அரசு இந்திய அரசை உதவி கேட்டது. அதைப் போலவே ஜெயவர்த்தனே அரசும் உதவி கேட்டால், நாமும் அனுப்பியிருக்கலாம். தமிழ் இனம் அழிகிறது என்ற பிரச்சினையில் இந்திய அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. பொறுப்பு இருக்கிற காரணத்தாலேதான், எப்படிச் செய்வது என்று இருக்கிறது. ஆனால் 'இந்தியன் எக்ஸ்பான்ஷனிசம்' என்று பிரச்சாரம் செய்து, குற்றம் சாட்டி, வெறி கிளப்பப்படும்போது, இந்திய அரசுக்குப் பிரச்சினை வேறு விதமாகப் படுகிறது. அந்த முறையில் தமிழ் இனம் அங்கே அழிக்கப்படுகிறது, அது காப்பாற்றப்படவில்லை என்ற எண்ணத்தை பரப்பவிடக் கூடாது. தமிழ் இனம் அங்கே பூர்வீகமாக இருப்பதால், தமிழ் இனத்திற்கு இடைஞ்சல், சங்கடம் வந்து கொண்டேயிருக்கிறது. பல இடங்களிலே இப்படி நடக்கிறது. நம்முடைய நாட்டிலே கூட பம்பாயில் சிவசேனா தமிழர்களை அடித்தது. தமிழர்கள் உதை வாங்கினார்கள். சிவசேனா அடித்தபோது, இங்குள்ள கட்சிகள் எல்லாம் அதைக் கண்டித்தன. எனவே வளர்ச்சியடைந்த இனமாக தமிழ் இனம் இருப்பதால், நாம் நம்முடைய பங்கைச் செலுத்துகிறோம். சில இடங்களில் உதை வாங்குகிறோம். ஸ்ரீலங்காவில் ஒரு மந்திரி ஒன்றைப் பேசினார். அவருடைய பெயர்

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

சரியாக நினைவுக்கு வரவில்லை. ஸ்ரீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நேராகச் சந்தித்தபோது, அவரே அதைக் குறிப்பிட்டார். அந்த நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. இந்தியா படையெடுப்பதாக இருந்தால், 14 மணி நேரமாகும். ஆனால் 14 நிமிடத்தில் தமிழர்களை அழித்துவிடுவோம் என்று அந்த மந்திரி பேசினாராம். அப்படி அழிக்க அவனாலும் முடியாது, யாராலும் முடியாது. இராணுவ விஷயங்களைப்பற்றிப் பேசக் கூடாது. கொச்சி துறைமுகத்திலேயிருந்து போக வேண்டும். விசாகப்பட்டினம் துறை முகத்திலேயிருந்து போக வேண்டும். தூத்துக்குடியிலிருந்து நேரிடையாகப் போக முடியாது, சுற்றிக்கொண்டுதான போக வேண்டும். நமக்கு சேதுசமுத்திரக் கால்வாய் இருந்திருந்தால், நம்முடைய கடற்படைக் கப்பல்கள் இரண்டு நின்றிருந்திருக்கலாம். அது நம்முடைய எல்லைக்குப் பாதுகாப்பாக இருக்கும். இன்றைக்குக் கூட தெற்கு எல்லை பலவீனமாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையை அணுகுவதில் சிக்கல் இருக்கிறது. ஆனால் இந்திய அரசு ஆரம்பத்திலே தயக்கம் காட்டியதாக நாங்கள் கருதுகிறோம். அதைப்பற்றி விமர்சிப்பது தப்பல்ல. காலம் கடந்து எடுத்திருக்கக் கூடிய நடவடிக்கைகள் தமிழர்களைக் காப்பாற்ற உதவுமென்றனவா என்று பார்க்க வேண்டும். இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்க்கப் போகிறோம் என்று பார்க்க வேண்டும். காரணம் நம்முடைய உணர்ச்சிகளையும், கொந்தளிப்புகளையும் காட்டிவிட்டு நாம் சும்மா இருக்க முடியாது. ஸ்ரீலங்காவில் உள்ள அரசு இனவெறி அரசு. அதற்குப் பின்னாலே உலகச் சக்தி உண்டு. இனவெறி அரசுக்குப் பின்னாலே அமர்ந்திருப்பது அமெரிக்கா. ஆகவே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில் இனம் தாழ்த்தப்படும்போது ஆவேசப்படுவோம். அது உண்மையான இனத்தின் ஆவேசம். ஆனால் திட்டமிட்டு தூண்டிவிடப்பட்ட வெறிக்குப் பின்னாலே இருந்தது அமெரிக்கா. 300 மைல்களுக்குள்ளே அமெரிக்காவின் இராணுவ தளம் இருக்கிறது. அதனுடைய சுற்றுவட்டாரத்தில் அமெரிக்க இராணுவ கடற்படைக்கு "டிராப்-இன்-போர்ட்ஸ்" தேவை. இராணுவ பாஷையில் "டிராப்-இன்-போர்ட்ஸ்" என்று சொல்லுவார்கள். கடலில் மிதக்கிறவர்கள் கரைக்கு வந்தாக வேண்டும். இது கடற்படைக்கு மட்டுமல்லாமல், மெர்ச்சென்ட் நேவி கப்பல்களுக்குக்கூட தெரிந்த உண்மை. இரண்டு மாதம் கப்பலில் சுற்றினால், ஐந்து நாள் தரையில் வந்து விளையாடியாக வேண்டும். அதற்கு பாகிஸ்தானைப் பயன்படுத்த முடியாது. அதை இதற்குப் பயன்படுத்த முடியாது. இந்தியத் துறைமுகத்தையும் பயன் படுத்த முடியாது. இருக்கக் கூடிய ஓரே துறைமுகம் கொழும்பு அல்லது



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

திரிகோணமலை. அதைத்தான் கேட்டிருக்கிறார்கள். அமெரிக்காவிற்கு இராணுவக் கடற்படைக்கு மட்டுமல்லாமல் இதற்கும் அது தேவைப்படுகிறது. முதலில் "டிராப்-இன்-போர்ட்ஸ்" என்று கேட்கிறார்கள். எண்ணெய் எடுக்க கேட்கிறார்கள். அந்த இடத்தில் பூர்வீகத் தமிழர்கள், இந்தியா வம்சாவழித் தமிழர்கள் இருந்தால், நிச்சயமாக அவர்கள் இந்தியாவிற்கு ஆதரவாக இருப்பார்கள் என்று கருதி, திட்டமிட்டு அந்த அரசு தமிழர்களை அழிக்க முயற்சிக்கிறது. ஆகவே இப்போது உணர்ச்சிவசப்படுவதால் மட்டும் போதாது. நாளையும் இது நடக்கும். ஆகவே உஷாராக இருக்க வேண்டும். இந்தப் பிரச்சினையிலே இந்திய அரசினுடைய குன்றபாட்டைச் சுட்டிக்காட்டும்போது உணர்ச்சிவசப்பட்டுப் பேசினால், அது பொருத்தமாக இருக்காது. அது மாதிரி இராணுவ முடிவுகளை எடுப்பதற்கு ஒரு அரசுக்கு உரிமையுண்டு. ஆனால் சில நேரங்களில் அந்த அரசு தயங்கினால், நிச்சயமாக நாம் கோரிக்கையை எழுப்பலாம். இந்திய அரசு தயங்குகிறது என்று சொன்னார்கள். பங்களா தேஷ் உதாரணம் சொல்லப்பட்டது. அதனாலே சொல்லுகிறேன். பங்களா தேஷில் நூற்றுக்கு 99 மெஜாரிட்டி பெற்றிருந்த ஷேக் முஜ்பூர் ரஹமான் அனுமதிக்கப்படவில்லை. பாகிஸ்தானில் உருது ஒன்றுதான் ஆட்சிமொழி. அவர் வங்காள மொழி கிழக்கு வங்காளத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று போராடினார். நம்முடைய நாட்டில் ஓரிரு மாநிலத்தில்தான் உருது அஃபிஷியல் லாங்குவேஜ், மற்ற இடத்திலே கிடையாது. அவரைச் சிறையில் வைத்து, சவக் குழிகூட தோண்டி வைத்திருந்தார்கள். அவருடைய கட்சி மெஜாரிட்டி பெற்றிருந்தது. உள்ளுக்குள்ளேயே முக்தி வாகினி போராட்டம் நடந்தது. ஒரு கோடி பேர் அகதிகளாக அப்போது இந்தியாவிற்கு வெளியேற்றப்பட்டார்கள். அந்த நிலையில் இந்தியா என்ன செய்ய முடியும்? அவர்களை விரட்டியடிக்க முடியாது. ஆகவே இந்தியா பல நாடுகளுக்கு இந்தியத் தூதுவர்களை அனுப்பியது. பிரதமர் அவர்களே நேராகச் சென்றார்கள். I went and knocked at the door of every nation. ஒவ்வொரு நாட்டினுடைய கதவைத் தட்டி உதவி கேட்டேன் யாரும் வரவில்லை. நீங்கள் உங்களுடைய பிரச்சினையைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்" என்று கூறினார்கள். அந்தக் கடைசி நேரத்தில்தான் இந்தியா நடவடிக்கை எடுத்தது என்று பிரதமர் சொல்லியிருக்கிறார்கள். வெளியே இருந்த அரசாங்கம் கூட கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசு. அது இந்தியாவினுடைய உதவி தேவையென்று கேட்டது. மேற்குப் பகுதியில் பாகிஸ்தான்

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

இராணுவம் இந்திய எல்லைக்குள் நுழைய ஏற்பாடு செய்தது. நாட்டினுடைய பாதுகாப்பிற்காகவும், அந்த அரசு கேட்டது என்பதற்காகவும் இந்தியா உதவிக்கு வந்தது. இதைச் சொல்லுவதற்குக் காரணம் சர்வதேசப் பிரச்சினை ஸ்தூலமானது என்பதற்காகத்தான். நாம் உணர்ச்சி வசப்பட்டு எந்த மத்திய அரசு காரியம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறோமோ அந்த மத்திய அரசை நாம் இந்த விஷயத்தில் தவறு என்று குற்றம் சாட்டுவதை விட அந்த அரசு காரியத்தை தெம்பாகச் செய்வதற்கு நாம் பின்பலமாக இருக்க வேண்டும். இதைத்தான் நான் சொல்ல விரும்பு

(முற்பகல் 11-10)

கிறேன். மற்றபடி இராணுவம் படையெடுப்பது என்பது அவசியம் என்று சொன்னால், இந்திய அரசு அதைச் செய்யும். நம்முடைய பாதுகாப்புக்காக, தெற்கு எல்லையிலே ஆபத்து என்று சொன்னால், நாம் கேட்காத நேரத்திலே செய்தாலும் செய்யலாம். ஏன் இதை நான் சொல்கிறேன் ? இதற்குள்ளே நான் மேலும் போக விரும்பவில்லை. நாம் எல்லாம் கேட்காத நேரத்திலே அவர்கள் அதைச் செய்தாலும் செய்யலாம். அது கேட்காத நேரத்திலே அதை நடந்தாலும் நடந்துவிடலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நாடு இருந்துகொண்டிருக்கிறது. அதனாலேதான், இந்தப் பிரச்சினையிலே ஏற்பட்ட கற்பழிப்பு, கொலை, கொள்ளை ஆகியவைப் பற்றி எல்லாம் நான் திரும்பத் திரும்ப சொல்ல விரும்பவில்லை. உண்மையிலேயே அங்கே நடந்தவைகள் எல்லாம் கொடுமையானவைதான். அதுவும் நம்முடைய தலைமுறைக் காலத்திலே இந்தியா விடுதலைப் பெற்ற பிறகு தமிழர்கள் இவ்வளவு படுகொலைக்கு ஆளானது இல்லை. இதை நான் நினைவுபடுத்துவதோடு, மற்ற ஒரு விஷயத்தையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள முனைகிறேன். இந்த தீர்மானத்திலே பொதுவிலே 'அணுகுமுறை' என்று இருக்க வேண்டும். இதன் நோக்கம் என்ன ? இந்த அவை, மேலவை, பேரவை கேட்க வேண்டும். மத்திய அரசு செய்ய வேண்டும். ஸ்ரீலங்கா அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும், இந்த பிரச்சினையை நாம் யூ.என்.ஓ.விற்கு எடுத்துச் செல்கின்றோம்.

என்னுடைய நேரம் முடிந்துவிட்டது. இன்னும் 5 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். தமிழர்களுடைய வரலாறு என்பது மட்டுமல்ல இந்தியர்களுக்கு உள்ள வரலாறுதான் அது. சிலர் காஷ்மீர் பிரச்சினையை யூ.என்.ஓ.விற்கு எடுத்துச் சென்றதைச் சொன்னார்கள். பாலஸ்தீனம் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிக் கூட நான் ஒரு கருத்தைச் சொல்



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

கிறேன். பாலஸ்தீன நிகழ்ச்சிகள் இதிலே வராது. ஒரு காலத்திலே செம்மையான நாகரீகம் படைத்த நாடாக எகிப்து நாடு இருந்தது. உலகத்திலேயே தொன்மையான நாடு. அதன் நாகரீகம் தான் பழமையானது. அப்படிப்பட்ட நாகரீகத்தைக் கொண்டிருந்த நாட்டிலே, அந்தக் காலத்தில் யூதர்கள் அடிமைகள். அந்த அடிமைகளைத்தான் மோசஸ் தலைமை தாங்கி எகிப்துக்கு வெளியே அழைத்து பாலஸ்தீனப் பகுதிக்குச் சென்றான். அந்த யூதர்கள் கோயில்களிலே வியாபாரம் செய்தார்கள். அவர்கள் வியாபார ஸ்தலமாக மாற்றினார்கள். பின்னாலே வந்த இயேசுவே சாட்டை எடுத்து அடித்தார்கள். கிறிஸ்தவர்கள் இன்றைக்கு அப்படி அடிப்பார்களா ? இப்போது நடந்திருக்கின்ற கொடுமைகளுக்கு, அராஜகக் காரியங்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் ? வரலாறுகளிலே இப்படி இருக்கின்றன என்று சொல்லலாம். வரலாற்றுக்கும் ஒரு நியதி உண்டு. அந்த அடிப்படையிலே பார்க்க வேண்டும். இன்றைக்கு அராபியர்கள் உரிமை பறிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் 1948-ல் யூ.என்.ஓ. தீர்மானத்தை நிறைவேற்றியது. மறு நாள் காலையிலே அந்த அரசு அமைய வேண்டும் என்று கருதியிருக்கிறார்கள். ஆனால் முதல் நாள் இரவே ஒரு அராபியர்கள் கிராமத்தையே அழித்தார்கள் யூதர்கள் பெகின் தலைமையில். அப்போது அராபியர்கள் ஓடினார்கள். அன்றைக்கு அதை ஒரு யூத அரசாங்கமாக மாற்றினார்கள். சிங்கள அரசும் கிட்டத்தட்ட இதைத்தான் செய்திருக்கிறது. இதை யூ.என்.ஓ.விற்கு எடுத்துச் சொல்வது என்று சொன்னால், லெபனான் நம் கண் முன்னால் வந்து நிற்கின்றது. இது பழைய வரலாறு என்பது அல்ல. நம்முடைய காலத்தினுடைய வரலாற்றையே எடுத்துக் கொள்ள வேண்டும். லெபனான், பாலஸ்தீனம் பற்றிய விஷயங்களை மட்டுமல்ல. காஷ்மீர் விஷயத்தில் நம்முடைய சொந்த அனுபவத்தையும் எடுத்துக்கொள்ளலாம். எனவே தான் யூ.என்.ஓ.விற்குப் பிரச்சினை போகக்கூடாது என்ற திருத்தத்தை நான் வலியுறுத்துகிறேன். இதிலே சில கட்சிகளுக்குள்ளே கொள்கை வேறுபாடுகள் இருக்கலாம். நான் கருதுவது, உலக கவனத்தை ஈர்க்க யூ.என்.ஓ.விற்குப் போகாமலே இருக்கலாம் என்பதுதான். அந்தக் கருத்திலேதான் நான் வலியுறுத்துகிறேன். வேண்டாம் என்று சொல்கிறேன். இந்தத் தீர்மானத்தின் கட்டுக்கோப்புக்கு எதிராக அரசியல் ரீதியாக முரண்பாடு உள்ளதாக இருக்கிறது என்று சொல்கிறேன். ஆகவேதான் நான் என் திருத்தத்தை வலியுறுத்துகிறேன். பிரதமர் நேரடியாகப் பேசும்போது, இதைக் குறிப்பிட்டிருப்பதை மட்டுமல்ல, நம்முடைய சொந்த அனுபவத்தை, நம்முடைய நாட்டினுடைய அனுபவத்தை நாம் நிராகரித்துவிடக் கூடாது. மற்ற நாட்டினுடைய மக்களுடைய அனுபவத்தையும் நாம் நினைவில்

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

வைத்துக்கொள்ள வேண்டும். நான் ஒரு யோசனையாகவே சொல்கிறேன்.
நான் இந்த இந்திய அரசுக்கும், இந்தப் பிரச்சினையிலே தமிழக அரசின்
நடவடிக்கைகளுக்கும், தமிழக அரசினுடைய பிரதிநிதியாக, மக்களுடைய
நம்பிக்கையைப் பெற்ற தமிழகத்தின், தமிழக முதல்வர் அவர்களின் பிரதி
நிதியாக சென்று இருக்கின்ற மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர்
அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசும் அதற்குத்
துணை நின்றதற்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்
பாராட்டுவது தப்பல்ல. இதிலே எல்லாக் கட்சிகளுக்கும் உடன்பாடு இருக்க
வேண்டும். ஸ்ரீலங்கா பிரச்சினையில் கட்சி அரசியல் பிரச்சினைகள் ஒரு
அம்சமாக வரவேண்டாம் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்
கேற்ற வகையில்தான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக
அரசுக்கும் இந்தப் பிரச்சினையில் எடுத்த நடவடிக்கைகளுக்குப் பாராட்டு
தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை எல்லோருமே
ஏகோபித்து நிறைவேற்றுவதன் மூலமாக எல்லோரும் ஒன்று சேர்ந்து இருக்
கிறோம் என்பதைக் காட்ட உதவிகரமாக இருக்கும். இந்தப் பிரச்சினையை
ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டு செல்வது என்று இருக்கின்றார்கள்.
அந்தக் கருத்தை நான் எடுத்துக்கொள்ளும்போது, அது நம் அணுகு
முறைக்கு விரோதமானதாக இருக்கிறது என்பதையும் நான் வலியுறுத்திக்
கூறிக்கொள்கிறேன். தமிழக அரசுக்கு மீண்டும் சொல்கிறேன். நாம்
வரக்கூடிய எதிர்காலத்தைப்பற்றி மிகவும் உஷாராக இருக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா பற்றி நான் இன்னொன்றும் சொல்கின்றேன். திரு. ஜெய
வர்த்தனே அவர்கள் ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின்
மூலதனத்தைக் கொண்டு தங்களுடைய நாட்டை சிங்கப்பூர் போன்று ஆக்கி
விடலாம் என்று நினைக்கின்றார்கள். சிங்கப்பூரைப் பார்த்து, அதன்
தற்காலிக வெற்றியைப் பார்த்து, அதில் அவர்களுக்கு ஒரு கவர்ச்சி
ஏற்பட்டிருக்கின்றது. அந்த சிங்கப்பூரைப் பார்த்து, அதன் வெற்றியைப்
பார்த்து, அமெரிக்கர்களை நம்பினால், சிங்களவர்கள் அடிமைகளாக ஆகக்
கூடிய நிலைமைகள் வரும். இன்றைக்கும் ஸ்ரீலங்கா பொருளாதாரம்
பற்றிச் சொல்லப்போனால், ஸ்ரீலங்காவிலே இப்போது பொருளாதாரம்
நொறுங்கிவிட்டது. அந்த ஆபத்தில் ஸ்ரீலங்கா சென்று கொண்டிருக்
கிறது. இன்னமும் புனரமைப்பு செய்ய முடியவில்லை. அங்கேயிருக்
கின்ற பொருளாதார நிபுணர்கள் மட்டுமல்ல, இண்டர் நேஷனல் மானிட்டரி
பண்ட் நிறுவன அதிகாரிகள்கூட அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள். "உங்கள் நாட்டினுடைய பொருளாதாரத்தை, சிறு தொழில்



1983 அக்டோபர் 29] [திரு. ப. மாணிக்கம்]

களை, வியாபாரத்தைப் புனரமைப்பு செய்ய வேண்டுமென்றால், தமிழர்கள்
பற்றிய பிரச்சினையில் உங்கள் கருத்துக்களை, நிலைமைகளை மாற்றிக்
கொள்ளுங்கள்" என்று சொல்லியிருக்கின்றார்கள். அவர்களின் பொருளாதாரத்
துறை அந்த மாதிரியான நிலைமையில் இருக்கின்றது. அந்த நாட்டில்
சிங்கள வெறி காட்டி, தமிழர்கள் இல்லாமல் காரியங்கள் ஆற்றினால், அதன்
பொருளாதாரத்தைப் புனரமைப்பு செய்துகொள்ள முடியாது என்று சொல்லி
யிருக்கின்றார்கள். அந்த அளவுக்குப் பல துறையிலே தமிழர்கள் செய்திருக்
கின்ற காணிக்கை இருக்கின்றது என்று சொல்லிக்கொள்கின்றேன்.

இன்னொன்றும் சொல்கிறேன். இங்கேயிருந்து ஸ்ரீலங்காவிற்கு
அன்றைக்குப் போனவர்கள் பல பேர்கள். நான் சொல்வதென்ன
வென்றால், நவீன காலத்திலே, தற்காலத்திலே சென்றவர்கள் வேண்டுமானால்,
வியாபாரம் செய்யச் சென்றவர்கள் நான்கு பேர் இருக்கலாம். ஆனால்
இன்றும் திருச்சி, இராமநாதபுரம் பகுதிகளிலிருந்து அங்கு போனதற்கான
அறிகுறிகள் இருக்கின்றன. அங்கே போர்டுகள்கூட வைக்கப்பட்டிருக்
கின்றன. திருச்சியிலே கன்டோன்மெண்ட் ஏரியாவிலே அந்த அலுவலகம்
இருந்த அடையாளங்கள் இருக்கின்றன. இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ்
ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலங்காவிற்கு, சில ஒப்பந்தங்களின் அடிப்படையில்,
எல்லாவிதமான பாதுகாப்பும் தருவதாகச் சொல்லி, அன்றையதினம் அனுப்பப்
பட்டிருக்கின்றார்கள். திருச்சியிலேகூட அதற்கான ரெக்ரூட்மெண்ட்
ஆபீஸ் என்று ஒன்று இருக்கின்றது. இன்று நம்முடைய காணிக்கை
என்ன? கடந்த காலத்திலே சிரிமாவோ ஒப்பந்தம் ஏற்பட்டது. திரும்பவும்.
அப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தத்திற்கு போகக் கூடாது என்று சொல்லிக்
கொள்கிறேன். இந்தத் தீர்மானத்திலே இல்லாவிட்டாலும், நேரடிப்
பேச்சு வார்த்தையிலேயாவது இதை நாம் சொல்ல வேண்டும். அந்த
நாட்டிற்குப் பிழைக்கச் சென்றவர்கள் என்று சொல்கின்றார்கள். அங்கே
அவர்களுக்குத் தனி நாடு வேண்டும் என்று கேட்டு இன்று பிரச்சினை
எழுந்திருக்கிறது. அந்தத் தனி நாடு பிரச்சினைக்குள் நான் அதிகமாகப்
போக விரும்பவில்லை. தனி நாடு பிரச்சினை தீராது. அது மட்டு
மல்ல, அந்த நாடு சமீப காலத்தில் ஏற்பட்ட சிறிய புதிய நாடு. ஜனதாவைச்
சேர்ந்த டாக்டர் சுப்பிரமணியசாமி, எம்.பி., ஒரு யோசனையாகச்
சொன்னார்கள். அவர்கள் "இந்தியாவிலே 22 மாநிலங்கள் இருக்கின்றன.
அத்துடன் 23-வது மாநிலமாக ஈழத்தைச் சேர்த்து விடலாம்" என்றார்கள்.
அப்படி ஒரு விபரீதமான யோசனையைச் சொன்னார்கள். நாம் அந்த
யோசனைக்குப் போகக்கூடாது. அந்தக் கதை இப்போது நடக்காது. அது

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 29

மட்டுமல்ல, நான் இதை சொல்லும்போது, எந்தக் கட்சியையும் குறிப்பிட வில்லை. நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், அங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு, அவர்களுக்கு உரிய குடியுரி மையைப் பெறுவதற்கு நம் தமிழக அரசும், இந்தியர்கள் அனைவரும் முயலலாம். அதற்கு வடக்கே கூட ஆதரவு இருக்கிறது. இப்படி இந்தியர்கள் எல்லோரையும் சேர்த்துக்கொண்டு தமிழர்கள் பெருமைப்படுத்திக் கொள்கின்ற நிலைமைகள் ஸ்ரீலங்கா பிரச்சினையில் இருக்கின்றன. அங்கே அவர்கள் தமிழர்களை எவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள்? அது ஒரு சின்ன நாடு. அங்கே தனி நாடு என்பதைப்பற்றிப் பேசி, ஒரு முடிவை எடுப்பதற்கு அங்கேயுள்ள தமிழர்களுக்கும் உரிமை இருக்கின்றது. நாம் எல்லோரும் இந்திய அரசை வலுப்படுத்த என்ன தியாகங்கள் வேண்டு மானாலும் செய்யலாம். ஸ்ரீலங்காவிலே அந்த நாட்டிலேயுள்ள தமிழர்கள் வாழும் உரிமையைப் பெறுவதில் உள்ள பிரச்சினைகள் தீர்வது குறித்து இந்தத் தீர்மானத்தில் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முரணாக இதை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று சொல்வது சரியல்ல. அந்தக் கருத்தை எடுத்துவிட வேண்டும். அது நம் கொள்கைக்கு, கருத்துக்கு முரணானதாக இருக்கிறது. எனவே அதை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றொரு முறை அரசு இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஸ்ரீலங்கா பிரச்சினையில் அரசு எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கும், நான் இந்த அமைச்சரவைக்கும், இந்திய அரசுக்கும், இந்திய பிரதமருக்கும், எல்லா அரசியல் கட்சிகளுக்கும், அந்தப் பிரச்சினைக்காகத் தியாகம் செய்தவர்களுக்கும், இதற்காகப் பாடு பட்டவர்களுக்கும்,—இதில் பலபேர்கள் தீக்குளித்திருக்கின்றார்கள்,—ஆக எல்லோருக்குமே பொதுவான முறையில் பாராட்டுக்களைத் தெரிவித்து தனித் தீர்மானமாகக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும் என்று கூறி அமைகிறேன்.

(முற்பகல் 11-20)

* திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நமது அவையில் கொண்டுவரப்பட்ட அரசுத் தீர்மானம்பற்றி, நான் அளித் திருக்கின்ற திருத்தங்களை ஒட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன். ஸ்ரீலங்காவிலே நடந்து விட்ட கொடுமை, இந்த அவையிலே பேசிய எல்லா சார்பு உடையவர்களும்;



1983 அக்டோபர் 29] [திரு. ம. சங்கரலிங்கம்]

ஒத்துக்கொண்
ஒரு இனப் படுகொலை என்பதை இரண்டு கருத்து இல்லாமல் ஜூலைத்
டார்கள். சில மாதங்களுக்கு முன்னால், அதாவது இந்த ஆண்டு நடந்தன.
திங்கள் 24, 25 தேதிகளில் உச்ச கட்டத்தில் அங்கே சம்பவங்கள் இனத்
சிறைச் சாலைக்குள்ளே அடைபட்டிருந்த தமிழ்த் தலைவர்கள், தமிழ் கொல்லப்
தலைவர்கள், தங்கத்துரை, யோகச்சந்திரன் போன்ற தலைவர்கள் 2, 3 தினங்
பட்டதோடு, சுமார் 2,800 க்குமேல் 3,000 க்கு உட்பட்டு தமிழர்கள் கற்பழிக்
களுக்குள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டு, தமிழ் பெண்கள் கற்பழிக்கப்
கப்பட்டு, தமிழ் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவியர்கள் நியதி ஏற்
பட்டு, தமிழன் என்று யார் சொன்னாலும் கொல்லப்படுவர் என்ற அவல
பட்டு, பஸ்ஸை நிறுத்தி, அதில் சென்ற தமிழர்களைச் சுட்டுக் கொன்ற இந்தச்
நிலை உச்ச நிலையில் இருந்ததை நாம் இன்று கண்டித்திருக்கிறோம். இது
செய்தி கிடைத்த மறுதினமே தந்தி மூலம் இந்த அவை கூட்டப்பட்டு அப்பால்
பற்றி ஆலோசித்திருக்க வேண்டிய நிலை மாறி, 3 மாதங்களுக்கு நடக்காமல்
சாதாரணமாக நடக்கிற கூட்டத் தொடரில், இந்தச் சம்பவம் அவல
இருந்தாலும் நடக்கிற கூட்டத்திலே இன்று சாதாரணமாகப் பேசும் முதலிலே
நிலை தமிழ் இனத்திற்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைத்து இரண்டு
என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று அவை
அவைகளும் இதை விவாதித்துக் கொண்டிருக்கின்றன. இரண்டு படுகொலை
களிலும் பேசிய எல்லா சார்பு உடையவர்களும் அது ஒரு இனப் என்னுடைய
என்பதை ஒருமித்த கருத்தில் சொல்லி யிருப்பது, உண்மையிலே வேறு
வருத்தத்தைச் சிறிதளவு தணிக்க ஆறுதலாக இருக்கிறதே தவிர, உணர்ந்த
ஒன்றுமில்லை, அந்த நிலைமையை உணர்ந்திருக்கிறார்களே; அதை இருக்கிறார்களே
பிறகும் முறையான செயல் என்ன என்பதைச் சிந்திக்காமல் அதிகப்
என்று அடுத்த கணம் சிந்திக்கும்போது, என் உள்ளத் துயரம் மேலும் இருந்திருக்
படுகிறது. ஒரு வேளை அந்தத் துன்பத்தின் இயல்பை அறியாமல் படு
கலாம், எத்தகைய துன்பம், எத்தகைய கொடுமை, எத்தகைய இனப் காணாமல்
கொலை என்பதை அறிந்தும், அதற்குக் காண வேண்டிய வழியைக் இருக்
இருக்கிறோமே, இந்தத் தமிழினம் இருக்கிறதே, இந்தத் தமிழ் நாடு மேலும்
கிறதே, என்று நான் எண்ணுகிறபோது, எனக்கு இருக்கிற துயரம் என்று
பன்மடங்கு பெருகுகிறது. இந்தப் பின்னணியில் இனப் படுகொலை திட்ட
எல்லோரும் ஒத்துக்கொண்டாலும், ஒரு அரசின், சிங்கள இனத்தின் தேதிய
மிட்ட செயலின் உச்சகட்ட நிலைதான் 1983 ஜூலை 24, 25 ஆம்
நிகழ்ச்சிகள். என்று ஸ்ரீலங்கா சுதந்திரம் அடைந்ததோ அன்றிலிருந்து
இதற்குத் திட்டமிடப்பட்டது. என்று விடுதலை அவர்களுக்கு வந்ததோ,
அன்றிலிருந்து திட்டமிடப்பட்டது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஸ்ரீலங்காவை வளப்படுத்திய, ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை சீரமைத்த பிறகு ஸ்ரீலங்காவின் இன்றைய பொருளாதாரம் சீர் குலைந்திருக்கிறது என்று சொன்னாலும், ஓரளவு சீராக இருக்கிறதென்றால், தமிழ் இன உழைப்பின் காரணமாக, தோட்டத் தொழிலாளிகளின் உழைப்பின் காரணமாகத்தான் என்று சொல்ல வேண்டும். இந்திய வம்சாவழியினரை அங்கேயிருந்து வெளியேற்றுவது என்ற திட்டம் 1948லே தொடங்கப்பட்டது. 1947லே அங்கே இருந்த 95 எம்.பி.க்களிலே யாழ்ப்பாணம் தவிர 7 எம்.பி.க்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருந்தார்கள். சுமார் 12 சதவிகிதம், 13 சதவிகிதம் தமிழ் பிரதிநிதிகள் இருக்கக்கூடிய அந்தப் பாராளுமன்றத்தைப் பார்த்த பிறகு, சிங்களவர்கள் திட்டமிட்டு குடி உரிமைச் சட்டம் நிறைவேற்றி, பல லட்சக் கணக்கான தமிழர்களுக்கு, இந்தியர்களுக்குக் குடி உரிமையை அகற்றினார்கள். தமிழர் வாழும் பகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றினார்கள். ஆட்சி மொழி தமிழ் அல்ல என்று அறிவித்தார்கள். 1946, 1947ல் ஆரம்பித்த செயல் 1956ல் இனக் கலவரமாக ஆக்கப்பட்டது. 1958 மே, ஜூன் திங்களில் மீண்டும் கலவரம். 1961லே ஆட்சி மொழியாக தமிழ் வேண்டுமென்று சாத்வீக முறையில் போராட்டம் துவங்கியவர்கள்மீது இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, கொடுமைப் படுத்தினார்கள். பிறகு திருமதி பண்டாரநாயகா தலைமையில் அந்த அட்டூழியம் நடைபெற்றது. 1974ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தாக்குதல் ஏற்படுத்தி, துப்பாக்கிப் பிரயோகமும் நடைபெற்றது. 1977 ஜூலை பொதுத் தேர்தலில் தனித் தமிழ் ஈழக்கோரிக்கையை வைத்து, அங்கே தமிழர்கள் பெருவாரியாக வெற்றி பெற்று, அது தமிழ் ஈழப் பகுதி என்று உலகுக்குக் காட்டிய பிறகு, 1977 ஆகஸ்ட் 18லே திரு. ஜெயவர்த்தனே நாடாளுமன்றத்திற்கு வந்து, தமிழர்களுக்கு எதிராக போர்க் குரல் எழுப்பினார். 1979 ஆகஸ்ட் 19 வன்முறை தோன்றுகிறது. 2 லட்சத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் குடி உரிமை இல்லாதவர்களாக ஆக்கப்பட்டார்கள். 100க்கு மேற்பட்ட இந்துக் கோவில்கள் இடிக்கப்பட்டன. 40,000 தமிழர்கள் துரத்தப்படும் அவல நிலைக்கு ஆக்கப்பட்டார்கள். 1979 ஜூலை 11-ல் வட பகுதியில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை முற்றிலும் நிறுத்த முயற்சி எடுக்கிறோம் என்று அங்கேயுள்ள தமிழ் இனத்தைப் பூண்டோடு அழிக்கும் முயற்சியில் ஜெயவர்த்தனே அரசு ஈடுபட்டது. 1981 மே, ஜூன் திங்களிலும், ஆகஸ்டிலும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கலவரம் தோற்றுவித்து, அங்கேயுள்ள தமிழ்ப் பொது நூலகத்தில் போய் ஒரு கோடிக்கு மேலே மதிப்புள்ள தமிழ்ப் புத்தகங்களை எரித்ததோடு நூற்றுக்கணக்கான இந்துக் கோவில்களும் இடிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள்





அகதிகள் ஆக்கப்பட்டார்கள். 1983 மே-ல் திரிகோண மலை மாவட்டத்தில் தமிழர்களைத் தாக்குகின்ற பணி மேற்கொள்ளப்பட்டு, அங்கே சிங்களவர்களைக் குடி புகுத்தும் பணி நடந்தது. 1983 ஜூன் திங்களில் காந்திய சங்கத்தைச் சேர்ந்த அனாதை இல்லத்தை தீ வைத்துக் கொளுத்தி, அதை நாசப்படுத்தினார்கள். ஜூலையில் யாழ்ப்பாணத்தில் 6 பெண்கள் இராணுவ வீரர்களாலும், போலீசாராலும் மாறி மாறி கற்பழிக்கப்பட்டு, மூவர் தற்கொலை செய்துகொண்டதும், அதைத் தாங்கிக்கொள்ள முடியாத தமிழ் இளைஞர்கள் இராணுவத்தைத் தாக்கும்போது, 13 சிங்கள இராணுவத்தினரும், ஒரு தமிழ் இளைஞரும் உயிர் இழந்தனர். இதைக் காரணமாக வைத்து ஜூலை 24, 25 தேதிகளில் அந்த நாட்டு சிறைச்சாலை உடைக்கப்பட்டு, இராணுவம் புகுந்து அங்கே இருந்த தமிழ்த் தலைவர்களை, 57 தமிழ் இளைஞர்களை சுட்டுக் கொன்றது. தமிழினம் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டது. தொடர்ந்து அங்கே 3, 4 நாட்கள் தமிழ் இனமே வேட்டையாடி கொல்லப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1947-லிருந்து நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து சுருக்கமாகச் சுட்டிக் காட்டக் காரணம் இது திட்டமிட்ட செயல் என்பதை விளக்குவதற்குத்தான். நேற்று, முந்தா நாள் திடீரென்று எழுந்ததனால் ஒரு 'ப்ரொவோகேஷன்' இருந்தது. தூண்டுதல் இருந்தது, நாமும் அந்தத் தூண்டுகிற உணர்ச்சியைக் கொண்டதன் காரணத்தால் இது எழுந்தது என்று மன்னிப்பு கொடுப்பதற்கு அல்லது அதில் நிதானத்தோடு சிந்திப்பதற்கு நமக்கு இடம் உண்டு. ஆனால் அப்படியல்ல. என்று ஸ்ரீலங்கா சுதந்திரம் பெற்றதோ, அன்றிலிருந்து, 1948-லிருந்து அங்கேயுள்ள தமிழ் இனத்தை அழித்து, தமிழ் இனம் இல்லாமல் ஆக்க வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் 1983 ஜூலை 24, 25 சம்பவங்கள் நடைபெற்ற தொடர்ச்சியான சம்பவங்களின் உச்சகட்டமே. இச்சம்பவங்கள் நடந்த பிறகு, அதை எல்லாச் சார்பில் இருக்கிறவர்களும் இனப் படுகொலை என்று சொன்ன பிறகு, அதற்குத் தீர்வு காணும் முறை என்ன என்பதில்தான் நமக்குள்ளே சில கருத்து வேறுபாடுகள் என்றுகூடச் சொல்லவில்லை, சிந்தனையில் தான் சில எண்ண மாற்றங்கள் ஏற்படலாம். அதற்குக்கூட அவரவர்கள் வழியில் சிந்திக்க உரிமை உண்டே தவிர, அடுத்தவர்கள் சிந்திப்பதைத் தவறு என்று சொல்ல உரிமையில்லை என்று சொல்வேன். தமிழ் இனத்தில் பிறந்த ஒவ்வொருவரும் அந்த இனப் படுகொலையைத் தடுக்க அவரவர்கள் வழியில் முயல்வதைத் தடுப்பதற்கோ, அவர்களுடைய சிந்தனை தவறு என்று சொல்லவோ, மற்றவர்களுக்கு உரிமையில்லை. இனம் பாதுகாக்கப்பட வேண்டும். இனப் படுகொலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதுகுறித்து

[திரு. ம. சங்கரலிங்கம்] [1983 அக்டோபர் 29

(மற்பகல் 11-30)

சர்வதேசச் சட்டம் என்ன சொல்கிறது? இனப் படுகொலை எந்த நாட்டிலாவது நடைபெற்றால், சர்வதேசச் சட்டம் 15-வது விதிப்படி எந்த நாடும் அதில் தலையிடலாம்; மனித உணர்வுகளை, மனித உயிர்களைக் காப்பாற்ற எந்த நாடும் அதில் ஈடுபடலாம் என்று இருக்கும்போது, ஒரு இனம் அழிக்கப்படுமானால், இந்திய இனம் அழிக்கப்படுமானால், அதுவும் தமிழ் இனம் அழிக்கப்படுமானால், இது குறித்து இந்திய அரசு தயங்குகிறதா இல்லையா என்பது மற்றவர்களைப் பொறுத்தவரை, விவாதத்திற்குரியது. ஆனால் இந்திய அரசு தயங்குகிறது என்பதுதான் எங்களுடைய கட்சியினுடைய முடிவு. இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஜூலை முதல் வாரத்தில் லண்டனில் திரு. ஜெயவர்த்தனே செய்தியாளர்களிடம் ஒன்றைச் சொல்கிறார். "எனக்குப் பாதுகாப்பிற்கு இங்கிலாந்திலிருந்து பந்தோபஸ்த் பெற்றுக்கொள்கிறேன்" என்று சொல்கிறார்கள். அதாவது சிங்கள இராணுவம் அவருடைய அனுமதியோடு வெறியாட்டம் ஆடப் போகிறது. அப்படி வெறியாட்டத்தில் அவர்கள் ஈடுபட்டால், இவரே நினைத்தால் கூட, இவருக்குப் பாதுகாப்புக்கு நம்பிக்கையாக இராணுவத்தை நிறுத்த முடியாது என்கிற நிலையில் இங்கிலாந்திலிருந்து இராணுவம் அழைக்கப்படுகிறது. மனித உரிமைக் கழகம் திரு. ஜெயவர்த்தனே அவர்களிடம் இது பற்றிக் கேட்டபோது "என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று உலக அரங்கிற்கு அவர் ஜூலை முதல் வாரத்திலேயே சொன்ன பதிலை நாம் பார்த்தோம். அதைப் பார்த்த உடனேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய கடிதத்தின் மூலம் ஜூன் 15ஆம் தேதியே அதை உணர்த்தி எழுதியிருக்கிறார்கள். தமிழ் இனம் தாக்கப்படப் போகிறது, அதற்குப் பின்னணி தயாராகிறது. இதுபற்றி இங்கிலாந்துக்குப் போய் திரு. ஜெயவர்த்தனே பேசியிருக்கிறார் என்கிற தகவல்கள் தன்னுடைய கடிதத்தின் மூலம் தமிழ் இனத்திற்கு, தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு அறிவித்தார்கள். ஜூலை 24, 25 நாட்களில் சம்பவம் நடைபெற்றது. தமிழ் நாட்டிலே இருக்கிற அத்தனை கட்சிக்காரர்களும்—நான் அதிலே யாரையும் குறை சொல்லவில்லை—அத்தனை கட்சிகளைச் சார்ந்தவர்களும் அவரவர்கள் சார்ந்திருக்கிற சித்தாந்தங்களுக்கே கூட அப்பாற்பட்டு இந்த விஷயத்தில் உணர்ச்சி வயப்பட்டார்கள். நான் யாரையும் குறை சொல்லவில்லை. அப்படி உணர்வுபூர்வமாக இந்த விஷயத்தில் ஒன்றி செயல்பட்ட அனைவரையும் நான் மதிக்கிறேன். ஆனால் அதே சமயத்தில் அதற்காக வேண்டி திராவிட முன்னேற்றக் கழகம் என்ன செய்தது என்பதை நான் அந்தக் கட்சியைச் சார்ந்தவனாக இந்த அவையில் இருப்பதால், சொல்லக் கடமைப்பட்டவனாவேன்.



1983 அக்டோபர் 29] [திரு. ம. சங்கரலிங்கம்]

ஜூலை 27-ம் தேதி சென்னையில் 7 இலட்சம் மக்களை ஒன்று திரட்டி பேரணி மூலம் தமிழ் மக்களுடைய உணர்வை ஸ்ரீலங்கா அரசுக்கும் மத்திய அரசுக்கும் தெரிவிக்க நாங்கள் முயன்றோம். ஜூலை 28 ஆம் தேதி மற்ற நகரங்களிலும், பேரூர்களிலும் சிற்றூர்களிலும் பேரணிகளை நடத்திக் காட்டி ஸ்ரீலங்கா அரசுக்கும், இந்திய அரசுக்கும், ஏன் உலகத்திற்கும் தமிழ் உணர்வை வெளிப்படுத்தி எடுத்துக்காட்டினோம். ஆகஸ்ட் 2 ஆம் தேதி தமிழக அரசு எல்லாக் கட்சிகளையும் ஒன்று திரட்டி—பொது விடுமுறை கொடுத்து—ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒன்றிய தமிழக உணர்வை மத்திய அரசுக்கு உணர்த்தினோம். ஆகஸ்ட் 2-ம் தேதிக்குப் பிறகு 4-ம் தேதி ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் பிரிவினைத் தடைச் சட்டம், அரசியல் சீர் திருத்தச் சட்டத்தின் ஆறாவது பிரிவிற்குத் திருத்தம் கொண்டு வந்து ஈழம் கேட்பது தவறு, தமிழ் ஈழம் கேட்பவர்களது குடியுரிமை அகற்றப்படும், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்கிற நிலையை ஏற்படுத்தினார்கள். அப்போது தான் நாங்கள் இதனைக் கண்டிப்பதோடு மத்திய அரசு தலையிட வேண்டி ஆகஸ்டு 5 ஆம் நாள் ரயில் நிறுத்தப் போராட்டத்தை அறிவித்தோம். வகுத்துக்கொண்ட போராட்டத்தைப் பார்த்து மற்றவர்கள் ஏன் தவறாக நினைக்க வேண்டும்? எல்லோரும் ஒன்றைச் சொல்கிறார்கள். இவர்கள் மட்டும் ஏன் தனியாகப் போராடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி ஏன் தனியாகப் போராடுகிறார்கள் என்று நினைக்க வேண்டும். ஸ்ரீலங்காவில் நடைபெறும் சம்பவங்களுக்கு ஏற்ப, நம்முடைய போராட்ட முறைகளை நாங்கள் வகுத்துக்கொண்ட போராட்டத்தைப் பார்த்து மற்றவர்கள் ஏன் தவறாக நினைக்க வேண்டும்? எல்லோரும் ஒன்றைச் சொல்கிறார்கள். இவர்கள் மட்டும் ஏன் தனியாகப் போராடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படி ஏன் தனியாகப் போராடுகிறார்கள் என்று நினைக்க வேண்டும். எங்களுடைய கடமைகளை உணர்ந்து செயல்பட்டோம். அந்த வகையில் முறைகளை வகுத்துக்கொள்ளவும், நம்முடைய எதிர்ப்பைக் காட்டவும், உணர்வைக் காட்டவும் நமக்கு உரிமை உண்டு. இதில் அவரவர்கள் இருக்கிற இடத்திற்கேற்ப, ஏற்றிருக்கிற பொறுப்புகளுக்கேற்ப—மேடையில் நான் பேசுகின்ற எல்லாவற்றையும் இந்த அவையிலே பேச முடியாது அதுபோல்—ஒவ்வொருவரும் தங்களுடைய கடமைகளை உணர்ந்து செயல்பட்டோம். அந்த வகையில் நாங்கள் யாரையும் குறை சொல்லவில்லை. இரண்டாம் தேதிக்குப் பிறகு 4-ம் தேதி ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா தமிழர்களுடைய குடியுரிமை அகற்றப்படும் என்கிற சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று தெரிந்தவுடன், நாங்கள் போராட்டத்தை அறிவித்தோம். இரண்டாம் தேதி போராட்டத்திற்கு ஆதரவாக மத்திய அரசு ரெயில்களை நிறுத்தியதற்கு மத்திய

[திரு. ம. சங்காலிங்கம்] [1983 அக்டோபர் 29

அரசுக்கு நன்றி. ஆனால் 5 ஆம் தேதி சம்பவம் நடைபெற இருக்கிறது என்கிற தகவல் வந்த உடனேயே, 4 ஆம் தேதியே 'கன்டம்னேஷன்' என்று சொல்லி ஸ்ரீலங்கா அரசின் செயலுக்குக் கண்டனம் என்று இந்தியப் பிரதமர் அவர்கள் தெரிவித்திருப்பார்களேயானால், நாங்கள் ரெயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. ஆனால் அவர்கள் சொன்னது வெறும் "கன்சர்ன்" என்கிற வார்த்தைதான். நீங்கள் கண்டிக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். தமிழகமும் இந்தியாவில் ஒரு அங்கம் தான். தமிழர்கள் இந்தியர்கள் இல்லையா ? ஸ்ரீலங்கா தமிழர்கள் தமிழகத்திலிருந்து சென்றவர்கள். இந்தியாவைச் சேர்ந்தவர்கள். இந்தியாவிலிருந்து, தமிழகத்திலிருந்து ஸ்ரீலங்காவிற்குச் சென்ற தமிழர்கள்தான் கொல்லப்படுகிறார்கள். பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். உலகத்தின் எந்த நாட்டிலேயும் நடைபெறாத அளவுக்கு, வரலாறு காணாத அளவுக்கு, தமிழர்கள் காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். 3 பேருக்கு ஆப்பிரிக்காவில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது, இந்தியா எத்தகைய உணர்வைக் காட்டியது என்பது எல்லோருக்கும் தெரியும். அது போல் பாலஸ்தீனத்தில் மக்கள் கொடுமைக்கு ஆளானபோது, இந்தியா எத்தகைய உணர்வை வெளிப்படுத்தியது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அதுபோல் சைப்ரஸ் பிரச்சினையில் கொடுமைகளைக் கண்டிக்கிற நிலைமை இந்தியாவுக்கு இருந்ததை நாம் பார்த்தோம். அதேசமயத்தில் ஸ்ரீலங்காவிலும் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டபோது, உடனேயே அதைக் கண்டித்திருக்க வேண்டாமா ? நான் இந்தியன் என்ற நம்பிக்கையில்தான் இன்றைக்கும் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறேன், என் கட்சியும் அப்படித்தான் நம்பிக்கொண்டிருக்கிறது. அதேபோல தமிழ் நாட்டிலுள்ள எல்லோருக்கும் அத்தகைய நம்பிக்கை உண்டு என்பதற்கு அறிகுறியாகத்தான் மாநில அரசிடம் நாங்கள் ரெயில் நிறுத்தப் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று அறிவித்த உடனேயே, மாநில அரசு மத்திய அரசிடம் சொல்லி ரெயில்களை நிறுத்த ஏற்பாடு செய்ய மத்திய அரசும் அதை ஏற்றுக்கொண்டது. நாங்கள் கேட்டுக்கொண்டது ரெயில்களை நிறுத்த அல்ல. எங்கள் உணர்வின் அடிப்படையிலாவது மத்திய அரசு கண்டனத் தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டுவர வேண்டும் என்கிற எண்ணத்தில்தான். திரு. ஜெயவர்த்தனேக்கு எப்படியாவது எங்கள் உணர்வுகளைக் கொண்டு செல்ல வேண்டும், அவரது அறிவுக்கு எங்கள் உள்ள உணர்ச்சி சென்றடைய வேண்டும் என்பதற்காகத் தான். ஆகவேதான் நாங்கள் ரெயில் நிறுத்தப்பட்டதற்கு நன்றி சொல்லத் தயாராக இல்லை. அதற்குப் பிறகும் பாராளுமன்றத்தில் தினந்தோறும் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கூட



1983 அக்டோபர் 29] [திரு. ம. சங்காலிங்கம்]

விவாதிக்கவில்லை. தொடர்ந்து பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்த எங்கள் கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்து கொண்டிருந்தார்கள். ஒரு பயனும் இல்லாமல் போகவே 8 ஆம் தேதி திரு. வை. கோபால்சாமி, திரு. எல். கணேசன் போன்ற எங்கள் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மாற்றுக் கட்சிகள் எல்லாம் ஆதரவு தெரிவித்தன. அதற்காக அவர்களை நான் பாராட்டவில்லை, அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த காணிக்கையைச் செலுத்துகிறேன். ஆனாலும் கூட இந்தியப் பிரதமர் ஸ்ரீலங்காவைக் கண்டிக்க முன்வரவில்லை. அதே நேரத்தில் ஆஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஓவன் ஜூலை 26-ஆம் தேதியே இதுகுறித்து ஸ்ரீலங்காவைக் கண்டிக்கிறேன் என்று அறிவிப்பு வெளியிட்டார்கள். அதுபோல் அமெரிக்கக் குடியரசுக்கு உட்பட்ட மசாசூச்சட்ஸ் அசெம்பிளி 26-ம் தேதியே ஒரு தீர்மானம் போட்டு ஸ்ரீலங்காவின் போக்கைக் கண்டித்திருக்கிறது. அவர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு ? மனித உரிமை, ஒரு மனித இனம் இனப் படுகொலையின் வாயிலாக அழிக்கப்படுகிறதே என்ற மனிதாபிமானம் தான் காரணம். மனிதாபிமான உணர்வின் காரணமாக அவர்கள் அவ்வாறு செய்திருக்கிறார்கள். ஒருவேளை ஸ்ரீலங்காவில் என்ன 'ஆக்ஷன்' எடுக்க இருக்கிறார்கள் என்று தெரிவதற்காக, பேசாமல் இருந்தார்கள் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொல்லுவார்களேயானால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் 'கன்சர்ன்' என்பதற்கும் 'கண்டம்' என்பதற்கும் என்ன அர்த்தம்? என்ன வித்தியாசம் என்பதை நாம் அகராதியில் கண்டுபிடிக்க முயற்சிப்பதை விட மத்திய அரசுதான் இதற்கான வழியைக் கண்டாக வேண்டும். அந்த நேரத்தில்தான் ஒரு கோடி கையெழுத்தை நாங்கள் வாங்கி கொண்டு போய் கொடுக்கவில்லை. ஒரு கோடி மகஜரைத்தான் கொண்டு போய் கொடுத்தோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் ஐ.நா. சபையை அணுகினால் வரக்கூடிய ஆபத்துபற்றிச் சொன்னார்கள். நாங்கள் ஐ.நா. சபையை அணுகினது உடனடியாக அதனால் ஸ்ரீலங்காவிற்குப் பலன் வரும் என்று எதிர்பார்த்து அல்ல. அது போல் இங்கே இப்போது அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானமும் அத்தகைய எண்ணத்தில் அல்ல. பொதுமக்களுடைய கருத்தை, உணர்வை மதித்து, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத் தெரிவிக்கிறோம். இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசுதான் என்று அன்றைக்கும் சொன்னோம், இன்றைக்கும் சொல்கிறோம். அன்றைக்கே மத்திய அரசு 'இராணுவத்தை அனுப்புவோம்' என்று சொல்லியிருந்தாலே, கொல்லப்பட்ட 2,800 தமிழர்

களில் 2,000 பேரை நாம் காப்பாற்றிய பெருமையைப் பெற்றிருப்போம். இராணுவம் வரும் என்று சொல்லியிருந்தாலே, உடனடியாக இனப் படுகொலை அங்கே தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும். எல்லாவற்றுக்கும் ஸ்ரீலங்காவின் போக்கைக் கண்டிக்கிறேன் என்ற இந்தியப் பிரதமர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருந்தார்கள் என்றால், ஸ்ரீலங்கா அரசு அச்சத்துக்கு ஆட்பட்

(முற்பகல் 11-40)

டிருக்கும் என்பதை நான் தெளிவாகவே சொல்கிறேன். ஏன் அப்படிச் செய்ய வில்லை என்று சொல்வதற்குப் பல நியாயங்களைச் சொல்லலாம். ஆனால் என்ன நியாயங்களைச் சொன்னாலும் கூட, தோற்று என்று நினைக்கிறேன், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர், திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும், இங்கே பேசிய பல பெரியவர்களும் வங்கதேசப் பிரச்சினை வேறு இன்ன பிரச்சினைக்கே ஈடுபடவேண்டுமென்று சொன்னால், வங்காள என்று சொன்னார்கள். வேறு என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்தத் தேசத்தில் இந்தியர்கள் கொல்லப்பட்டார்களா? பாகிஸ்தானியர்கள் பாகிஸ்தானியர்களால் கொல்லப்பட்டார்கள். ஆனால் ஸ்ரீலங்காவில் இந்திய இனத்தின் பகுதியாகிய தமிழ் மண்ணில் பிறந்தவர்கள், தமிழர்கள் கொல்லப் பட்டார்கள். 2,800 பேர்கள் ஒரே நாளில் கொல்லப்பட்டார்கள். 57 பேர் சிறையில் கொல்லப்பட்டார்களே, பெண்கள் கற்பழிக்கப்பட்டார்களே, இந்தச் சம்பவத்திற்கு ஈடாக ஒரு சம்பவத்தை உலக வரலாற்றிலேயே காட்ட முடியுமா? அப்படி இருக்கின்ற போது வங்காள தேசத்துக்கு ஒரு நியாயத்தைக் கற்பிக்கிற நாம், ஏன் இந்திய அரசுக்குச் சொல்லக்கூடாது?

வங்க தேசப் போருக்கு உதவுகிறோம் என்று தெரிந்த உடனே, பாகிஸ்தான் அரசு 1971-ல் ஐக்கிய நாடுகள் சபையில் போய் முறையிடு செய்து, உலகத்திலே உள்ள நாடுகளில் 104 நாடுகள் 'இந்தியாவே, தலையிடாதே' என்று எதிர்த்து ஓட்டளித்ததே, 14 நாடுகள், இந்தியா உட்பட எதிர்த்து ஓட்டளித்தது. உலக நாடுகளில் பெரும்பான்மையான 104 நாடுகளின் எதிர்ப்பைப்பற்றிக் கவலைப்படாமல், கிழக்குப் பாகிஸ்தானத்தில் இனப் படுகொலை நடந்ததைத் தடுக்க எவ்வளவு உணர்வுடன் மத்திய அரசு இறங்கியதோ, அந்த உணர்வு ஏன் இப்போது வற்றிவிட்டது? ஈடுபடத் தெரியவில்லை என்று குறையாகச் சொல்லமாட்டேன். அந்த உணர்வு உங்களுக்கு வற்றி விட்டதற்குக் காரணம் என்ன என்றுதான் கேட்கிறேன். "தமிழ் நாட்டை இந்தியாவின் பகுதியாக நீங்கள் கருதவில்லையா? தமிழர்கள் இந்தியர்கள் இல்லையா?" என்ற வினாவைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



அந்த வங்காள தேசத்தில் ஏற்பட்ட பிரச்சினை என்ன என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கே இதுபோல் திட்டமிட்ட படுகொலைகள் நடக்கவில்லை. 1970-ல் பொதுத் தேர்தல் நடந்தது. அந்த நாட்டுப் பொதுத் தேர்தலில், பாகிஸ்தானுடைய மக்கள் தொகை அடிப்படையில் மேற்கு பாகிஸ்தானில் இருந்த மக்கள் தொகையை விட கிழக்குப் பாகிஸ்தானில் அதிகமாக இருந்தபடியால், கிழக்கே அதிகமான பாராளுமன்ற உறுப்பினர் இடங்களை முஜிபூர் ரஹ்மான் தலைமையில் இருந்த அவாமி லீக் கட்சி பெற்றது. மொத்த பாகிஸ்தானத்திலும் அதிக இடத்தைப் பெற்றது. அதற்குப் பிறகு அசெம்பிளி தேர்தல் நடந்தது. அதிலே கிழக்குப் பாகிஸ்தானில் அவாமி லீக் பெரும்பான்மை பலம் பெற்றது. அப்போது பாகிஸ்தான் தலைவராக இருந்த யாஹியாகான் நீங்கள்தான் பிரதமர் என்று முஜிபூர் ரஹமானிடத்தில் சொல்ல, பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவராக இருந்த பூட்டோ அதனை மறுத்தார். 'எண்ணிக்கை அல்ல முக்கியம், இடம்தான் முக்கியம், தலைமையிடம் மேற்கு பாகிஸ்தானில் இருக்கிறது, கிழக்கு பாகிஸ்தான் கட்சி இங்கே ஆட்சி அமைக்க முடியாது' என்று சொன்னார். பிறகு கூட்டு அரசு அமைக்க முடியுமா என்று 3 நாட்கள் யோசனை செய்தார்கள். அதற்கு ஒத்துக் கொள்ளாததால், இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. முஜிபூர் ரஹமான் கிழக்குப் பாகிஸ்தான் சுதந்திரத் திருநாடாகப் பிரகடனப் படுத்தினார் கிளர்ச்சி, போராட்டம், கொலை நடந்தது. முஜிபூர் ரஹ்மான் 6 அம்சத் திட்டத்தை அறிவித்து அரசியலமைப்பை மாற்ற வேண்டினார். எத்தகைய அரசியல் அமைப்பைச் செய்வது, யார் ஆள்வது என்ற கிழக்கு, மேற்குப் பிரச்சினையில் மனித இனத்தை அழிக்கிற வேலை நடந்தபோது, இந்தியா அதற்குள் நுழைந்தது. காரணம் அப்போதிருந்த மனிதாபிமானம். அந்த உணர்வு இன்று இல்லையே? அந்த தர்ம நியாயம் இந்திய அரசுக்கு இப்போது இல்லாததால்தான், திட்டமிட்டு சிங்களத்திலே படுகொலைகள் நடந்தபோது நம்மால் உதவ முடியவில்லை.

1964 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி அண்ணா அவர்கள் பாராளு மன்றத்தில் சொன்னார்கள். ஸ்ரீலங்காவில் இருக்கிற தமிழர்கள் பூர்வீக இலங்கைவாசிகள். அவர்களை இந்தியத் தமிழர்கள் என்று சொல்லி அவர்களை அனுப்புவது என்ற ஒப்பந்தம் போட்டதே தவறு என்றார்கள். 'அவர்கள் அங்கேயே இருக்கவேண்டியவர்கள்தான்' என்றார்கள், ஆகவே, திட்டமிட்டுச்

செயல்பட்ட இந்தப் படுகொலைகளுக்கு மக்கள் ஆளானபோது, இந்திய அரசு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை. தமிழ் நாட்டில் மக்களின் எதிர்ப்புணர்வுக்குப்பின் ஆகஸ்ட் 15 ஆம் நாள் டெல்லி செங்கோட்டையில் கொடியேற்றிப் பேசிய பிரதமர் 'ஐ கண்டேம்' என்று சொன்னார்கள்.

கிழக்கு பாகிஸ்தானுக்காக பாராளுமன்றத்திலே தீர்மானம் போட்ட இந்திய அரசு ஸ்ரீலங்கா படுகொலைக்காக ஒரு தீர்மானம் போடவில்லை. அது கூட வேண்டாம். ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கூட அனுமதிக்கப்படவில்லையே, ஏன் என்று கேட்க விரும்புகிறேன். இந்த நிலைமையையெல்லாம் பார்க்கிறபோது, இராணுவத்தை அனுப்பச் சொல்வது தவறு என்ற கருத்து இந்தியத் தமிழ் மண்ணிலிருந்து எழக் கூடாது என்று நான் பணிவன்போடு சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது கூட "1974-ல் உங்களுடைய ஆட்சி நடைபெற்றபோது அப்போது முதலமைச்சர் சொன்னாரா?" என்று சிலர் சொல்கிறார்கள், 1974-ல் நடந்த சம்பவம் என்ன? 1974-ல் நடந்தது கொலை, கொள்ளை, தீ வைப்பு. ஆனால் இன்று இனப் படுகொலையின் உச்சகட்டம், 1983-ல், நடக்கிறது. 1977 ஆகஸ்டில் ஸ்ரீலங்காவில் கொலை, கொள்ளை நடந்திருக்கிறதே, "அப்போது நீங்கள் தான் அமைச்சரவையில் இருந்தீர்கள். இன்றைய முதலமைச்சர் தானே அன்றும் முதலமைச்சராக இருந்தார்கள்". அப்போது உங்களுக்குச் சங்கடம் விளைவிக்க, மத்திய அரசு இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று சொன்னோமா? இங்கே அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழியும்போது, "1977-லே தீர்மானம் போட்டோம். 1981-ல் தீர்மானம் நிறைவேற்றினோம்" என்றார்கள். அப்போது இராணுவத்தை அனுப்ப வேண்டுமென்று நாங்கள் சொன்னோமா? இல்லை, நாங்கள் கண்டனம் செய்தோம். இப்போது இராணுவத்தை அனுப்புவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது? இதைத் தவிர எந்த வழியும் இப்போது கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டிக் கொண்டு, இந்த உணர்வோடு நாம் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

அதே நோக்கில் இந்தப் பிரச்சினையில் பேசுகிறவர்கள் இங்கும் வெளியிலும் ஒருவரையொருவர் கொச்சைப் படுத்துவதன் மூலம் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் குறைத்து விடக்கூடாது என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையில் கூட நேற்று என் அன்பிற்குரிய நண்பர் திரு. வலம்புரி ஜான் அவர்கள் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழக சார்பில் கையெழுத்துக் கட்டுகளை ஐ.நா.வுக்கு எடுத்துச் செல்கிற எங்கள் கட்சி வழக்கறிஞர் திரு. டி. பி. ராதாகிருஷ்ணன் அவர்கள், வழியில் உள்ள நாடுகளில், அவர் மகளை வைத்துக் கொண்டு இங்கிலாந்திலும் பிரான்ஸ் நாட்டிலும் ஓரங்க நாட்டிய நாடகம் ஆடிக் கொண்டேதான் சென்றார்கள் என்றார். இல்லாதது சொல்வது இந்த அவையின் கண்ணியத்திற்குக் குறைவான செயலாகக் கருதுகிறேன். நான் சொல்கிறேன், அவர் தனது 12 வயது மகளைக் கொண்டு "தங்கத் தமிழ் ஈழம்" என்ற நாட்டிய நாடகம் நடத்தினார். அமெரிக்காவில், பிற நாடுகளில் இருக்கின்ற அந்த அமைப்பாளர்கள், இவர்களை அழைத்திருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்டு, ஸ்ரீலங்கா தமிழர்கள் பிரச்சினையைப்பற்றிச் சொல்கிற அளவுக்கு அந்த ஓரங்க நாட்டிய நாடகத்தை நடத்தியிருக்கிறார்கள். டாக்டர் பஞ்சாட்சரம் முதல் உலக ஈழத் தமிழ் மாநாட்டை நியூயார்க்கில் நடத்தியவர்கள். நம்முடைய மேலவை உறுப்பினர் டாக்டர் இரா. சனார்த்தனம் அவர்களும், திரு. நெடுமாறன் அவர்களும் போய் கலந்து கொண்டார்கள். அவர்களுடன் சேர்ந்து அந்தப் பணியைச் செய்வதை, கொச்சைப் படுத்திப் பேசுவது முறையா?

* திரு. வலம்புரி ஜான்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கொச்சைப் படுத்துவதற்காகச் சொல்லவில்லை. ஐ.நா. மன்றத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த அமைச்சர், அங்கே கிடைக்கிற சிறிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உலகத்திற்கெல்லாம் இந்தப் பிரச்சினையைச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தில் சொல்வதை, "தமிழகத்தைக் காட்டிக் கொடுக்கிறார்கள், காட்டிக் கொடுப்பதற்காக ஐ.நா. செல்கிறார்கள்" என்று சொன்னதன் காரணமாகவே, நான் அதை எதிர்த்தேன் அதைக் கூடத் தவறாகச் சொல்லாமல், நாட்டியம்

என்றாலும் நாடகம் என்றாலும் அதைக் கூட ஸ்ரீலங்கா என்பதைச் சொல்லுகிற நாடகம் என்பதால் நான் குறையாகச் சொல்லவில்லை என்றுதான் சொன்னேனே தவிர, அதைக் கொச்சைப்படுத்த வேண்டுமென்ற நோக்கமோ அல்ல. காட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்வது சபையின் கௌரவத்தைக் காக்கிற சொல் என்று பெரியவர் சங்கரலிங்கம் அவர்கள் கருதினால், உள்ளபடியே நான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

(முற்பகல் 11.50)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் விரைவில் முடித்துக் கொள்ள வேண்டும். மதியமே இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் முடிய வேண்டும் என்றிருப்பதால், சுருக்கமாக முடித்துக் கொள்ள வேண்டுகிறேன்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இன்னும் 5 நிமிடங்களில் முடித்துக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இந்தத் தீர்மானத்தையேகூட ஒரு சர்ச்சைக்குரிய முறையில் கொண்டு வராமல், எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து ஸ்ரீலங்காவிலுள்ள பிரச்சினையை மட்டும் கண்டித்து அதற்குத் தீர்வு காணும் முறையில் ஒரு வழியைச் சொல்லி, விட்டுவிட்டிருக்க வேண்டும். இவ்வளவு பெரிதாகப் போட்டு தீர்மானத்தின் முக்கியத்துவத்தையே குறைத்திருக்க வேண்டுமா என்றுதான் நான் நினைக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மாணிக்கம் அவர்கள் சொன்னதைப் போல், இந்தப் பிரச்சினைக்காக நாங்கள் எல்லாம் நடத்திய எல்லாப் போராட்டங்களையும் அதன் உச்ச கட்டமாக எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேரவையில் எங்கள் கட்சியின் துணைத் தலைவருமாக இருந்த பேராசிரியர் அவர்களும் தங்களுடைய பதவிகளை உதறித்தள்ளி தங்களுடைய எதிர்ப்பைக் காட்டினார்களே அது இடம் பெற்றிருக்க வேண்டாமா? அது மட்டுமல்ல, பேரவையில் உள்ள தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. நெடுமாறன் அவர்கள் தியாகப் பயணம் மேற்கொண்டு மதுரையிலிருந்து இராமேஸ்வரம் வரை நடந்து சென்று, தன்னோடு ஆயிரக்கணக்கான மக்களையும் அழைத்துச் சென்று எதிர்ப்பைக் காட்டினாரே, அதைப் பற்றிச் சொல்லியிருக்க வேண்டாமா? சொல்லப்பட்டதா? இது பாராட்ட வேண்டிய இடமா? நாம் என்ன செய்தோம்?





நாம் செய்ய வேண்டிய கடமையில் கால் பங்குகூட செய்யவில்லை நான் மொத்தமாகச் சொல்கிறேன். தமிழ் இனம், ஆளும் கட்சி, நாங்கள் ஆகிய அனைவரும் நாம் செய்ய வேண்டிய கடமையினை முறையாகச் செய்யவில்லை என்றுதான் நான் நினைக்கிறேன். எனவே இந்த நிலையில் நம்மை நாமே இப்படிப் பாராட்டிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பமாக வைத்துக்கொள்ளாமல் நாம் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து, மத்திய அரசு இந்தப் பிரச்னையில் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்று உணர்த்திட இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும்கூட காலம் கடந்துவிடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும் இதில் ஒன்று சேர்ந்து இந்தத் தீர்மானத்தில் இருக்கிற பாராட்டுகளையெல்லாம் எடுத்துவிட்டு, ஸ்ரீலங்காவில் நடைபெற்ற கொடுமைகளை மட்டும் கண்டித்து, அதைப் போலவே மத்திய அரசு தான் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் தவறியதைக் கண்டித்து—அதை நாம் துணிவோடு அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறேன்—தீர்மானத்தை முறையாக நிறைவேற்றுவார்களானால், தமிழ் இனமும் தமிழர்களும் பாராட்டுவார்கள் என்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

3. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையின் அலுவல் விவரத்தில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன :—

31—10—1981—காலை கூட்டம் இல்லை

மாலை 3-00 மணிக்கு முதல் துணை வரவு அறிக்கை மற்றும் கூடுதல் செலவுக்கான விவர அறிக்கை மீது விவாதம்.

எதிர்பாராச் செலவு குறித்த சட்ட முன்வடிவு

1—11—1983—காலை 9-30 மணி—தனி உறுப்பினர் அலுவல்கள்.

மேற்கொண்டு நிகழ்ச்சி நிரல் 31—10—1983 அன்று நடைபெற இருக்கும் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்படும்.

[1983 அக்டோபர் 22

2. அரசின் தீர்மானம்—தொடர்ச்சி.

ஸ்ரீலங்காவாழ் தமிழர்கள் பிரச்சினை பற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**புலவர் புலமைப்பித்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சொல்லில் அடங்காத சோகத்தை நெஞ்சில் சுமந்து கொண்டு என்னுடைய மேலவைப் பதவிக் காலத்தின் மாலை நேரத்தில் ஸ்ரீலங்கா தமிழர்களின் பிரச்சினையில் அரசு கொண்டு வந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிற வாய்ப்பை என்னால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், ஒரு துயரத்தைச் சுமந்து கொண்டிருக்கிற ஒரு வேதனையான மகிழ்ச்சியோடு இந்த வாய்ப்பினை நான் எடுத்துக்கொள்கிறேன்.

வெளிக்கடை சிறைச்சாலையில் சிங்கள வெறியர்களால் அணைக்கப்பட்ட 57 தியாக தீபங்களுக்கு, குறிப்பாக மான மறவன் மாவீரன் குட்டிமணி, ஜெகன், தம்பித்துரை ஆகியவர்களுடைய பாதங்களுக்கு என்னுடைய தலை தாழ்ந்த வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்தினுடைய வரலாறு கண்டிருக்க முடியாத அளவுக்கு ஒரு துயரச் சம்பவம், தமிழினம் எண்ணி எண்ணி, துயரப்பட வேண்டிய, சொல்லில் அடங்காத ஒரு சோகம், 15 மைல்களுக்கு அப்பால் இருக்கிற நம்முடைய தமிழர்களுக்கு—பேரறிஞர் அண்ணா அவர்களும், அதைத் தொடர்ந்து புரட்சித் தலைவர் அவர்களும் சொல்வதைப்போல் நம் தசையின் தசையாக, ரத்தத்தின் ரத்தமாக இருக்கிற நம்முடைய உடன்பிறப்புகளுக்கு—ஏற்பட்டிருக்கிற கொடுமைகளை எண்ணி, ஒரு வேளை வேதனையும், இன்னொரு வேளை விரக்தியும், இன்னொரு வேளை அளவு கடந்த வெறியும்கூட ஏற்படுகிற அளவுக்கு, அந்த நிகழ்ச்சிகள் ஆறாத ரணத்தை, மாறாத காயத்தை, நெஞ்சில் ஏற்படுத்தியிருப்பதை நான் எல்லோரிடத்திலும் காண்கிறேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இதிலே கருத்துக்களை வெளிப்படுத்துகிற விதத்திலே மாறுபாடுகள் வேறுபாடுகள் இருக்கலாமே தவிர, தமிழர்களுக்கு நடந்த இந்தப் பெரிய அவமானமிக்க இனப் படுகொலைகளை யாரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிற அளவுக்கு நெஞ்சமில்லாத நீசனல்ல நான் என்பதை உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.



[புலவர் புலமைப்பித்தன்] 1983 அக்டோபர் 29]

வேண்டுமானால், வேதனையையும், கண்டனங்களையும் தெரிவிக்கிற வாசகங்கள், வடிவங்கள் மாறியிருக்கலாமே தவிர, எண்ணங்களெல்லாம் ஒன்றாகவே இருந்திருக்கின்றன என்பதை நான் உணருகிறேன். ஒருவர் ஒரு கருத்தைச் சொல்லுகிறபோது, கவிதையாகச் சொல்லுவார். இன்னொருவர் ஒரு கருத்தைச் சொல்லுகிறபோது, அதை உரைநடையாகச் சொல்லுவார். இன்னொருவர் அதையே சொல்ல முடியாமல் தவிக்கிறபோது கண்ணீராலே கூட, மௌனத்தாலேகூட சொல்ல முடியும் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன் என்கிற வகையில் நாம் கட்சி பேதமில்லாமல்—எப்படி 7 வண்ணங்களாக இருக்கிற அட்டையை வேகமாகச் சுழற்றுகிறபோது அந்த 7 வண்ணங்களும் மறைந்து, ஒரே வண்ணமாகக் காட்சி தருகிறதோ அதைப் போல்—கட்சியினுடைய கொடிகள் வேறுபட்டிருந்தாலும், கொள்கைகள் வேறுபட்டிருந்தாலும், உள்ளத்தாலும் எண்ணத்தாலும் எல்லோரும் ஒன்றாகத்தான் இருந்திருக்கிறார்கள். வேண்டுமானால் அந்த வேதனையைக் காட்டிய விதங்களிலே வேறுபாடு இருந்திருக்கலாம் என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன்.

'நான்' என்றும், 'எனது' என்றும் பிரிக்கும்போதுதான் நமது ஒற்றுமை குலைகிறது. பலவீனம் ஏற்படுகிறது என்பதை நான் பொறுப்போடு வாயில் வைத்து யாரையும் இந்த நேரத்தில் குற்றம் காண்பது என்பது நம்முடைய பலத்தைக் குறைத்து, நாளைக்கு ஏற்பட இருக்கிற நல்ல தீர்வுக்கு அது இடையூறாக இருக்கும் என்ற அடிப்படையில் நான் அதை முழுமையாக அறிந்திருக்கிறேன். அதன் காரணமாகத்தான் அடிக்கடி ஆவேசம் கொள்கிற நானேகூட இன்று பேசுவதாக ஒப்புக்கொண்டு காலையிலிருந்தே என்னுடைய மனதை ஒரு சமநிலைக்குக் கொண்டு வந்து, நானே என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பிக்கிறேன் என்று சொல்லும் போது, நாளைக்கு ஏற்பட வேண்டிய நல்ல தீர்வை இது எந்த வகையிலும் பாதித்துவிடக் கூடாதே என்ற பொறுப்புணர்ச்சியோடுதான் இதைச் சொல்கிறேன்.

நேற்று மனம் திறந்து டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பேரவையில் சொல்லுகிறபோது, தமிழினத்திற்கு ஏற்பட்டிருக்கிற படுகொலையை, அதை நடத்தியிருக்கிற ஸ்ரீலங்காவின் இடி அமீன் ஜெயவர்த்தனே அரசைக் கண்டிக்கிற நிகழ்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும் இல்லையே என்பதை

வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொன்னபோது, நான் மனமார நினைத்துப் பார்த்தேன். அன்றைக்கு அவர்கள் ஆவேசப்பட்டு, உணர்ச்சி வயப்பட்டது இன்றைக்குக் காரியத்திற்குக் கொஞ்சம் இடையூறு செய்வதாக—இடையூறு என்று சொல்ல முடியாவிட்டாலும்—காரியத்திற்கு உதவும்படி இல்லாததாக மாறிப் போயிருக்கிறது என்பதை நினைத்து, நானும் அந்த வருத்தத்தில் பங்கெடுத்துக் கொள்கிறேன்.

அம்னெஸ்ட்டி இன்டர்நேஷனலில் சொன்னதை நான் 6 மாதங்களுக்கு முன்னாலே பல்வேறு கல்லூரிகளில் பேசி வந்தேன். பேசி வருகிறபோது சிறைச்சாலைகளில் அதிலும் குறிப்பாக, வெளிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தம்பித்துரை, ஜெகன் ஆகியோர்கள் எப்படிப்பட்ட சித்திரவதைக்கு உள்ளானார்கள் என்று சொன்னேன். அதைச் சொன்னால், சொல்கிற வாய் பதறும், எண்ணுகிற நெஞ்சம் வெடிக்கும் என்கிற வகையில் சித்ரவதை நடத்தியிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் தனி ஈழம் கேட்டார்கள் என்ற காரணத்திற்காக, தங்களுடைய சொந்த நிலத்திற்குப் பட்டா கேட்டார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களைச் சிறைச்சாலையில் வைத்து சித்திரவதை செய்தார்கள். அவர்களை நிர்வாணப் படுத்தி, தலை கீழாகக் கட்டித் தொங்க விட்டு, கீழே நெருப்பை மூட்டி அந்த நெருப்பில் மிளகாய் பொடியைத் தூவிவிட்டு அவர்களை எல்லாம் மூர்ச்சையடையச் செய்திருக்கிறார்கள். அவ்வாறு மூர்ச்சையடையச் செய்த பின்னாலே, கட்டப்பட்ட கயிற்றை அவிழ்த்து கீழே இறக்கி அவர்களுக்கு நினைவு வரச் செய்து மீண்டும் தாக்கியிருக்கிறார்கள். உச்சந்தலையிலிருந்து, உள்ளங்கால் வரை மிளகாய் பொடியைத் தடவியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, அதற்கு மேலும் போய், இவர்கள் ஆண் பிள்ளைகளாக இருக்கிற காரணத்தாலே அல்லவா அஞ்சாமல் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள் என்று கருதினார்களோ என்னவோ தெரியவில்லை—அருள் கூர்ந்து தாய்மார்கள் மன்னிக்க வேண்டும்—அவர்கள் ஆண் குறிகளில் 3½

(நண்பகல் 12-00)

அங்குலம் மின்சாரக்கம்பியைச் சொருகியிருக்கிறார்கள். அதற்கு மேலே போய் குட்டி மணியினுடைய மல வாயிலே பெரிய இரும்பு ராடை எடுத்து சொருகி அதை வெளியே எடுத்து ஜெகனுடைய வாயில் வைத்து சுவைக்கச் சொல்லி தாக்கினார்கள். அதை போல மாறாக ஜெகன் மலவாயில் இரும்பு ராடைச்





சொருகி எடுத்து குட்டிமணியினுடைய வாயில் வைத்து சுவைக்கச் சொல்லி தாக்கினார்கள். தாகம் என்று தண்ணீர் கேட்டபோது, அவர்களுடைய வாயில் சிறுநீரை ஊற்றி தாக்கினார்கள். இத்தனை துன்பங்களையும் தாங்கிக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்பதை தம்பிகள்தான் தங்களுடைய வாழ்க்கையில் செயல்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். நாம் பாராட்டுகிற வகையிலே நீதிமன்றத்திலே நிமிர்ந்து குட்டிமணி பேசினான். "இப்போது என்னிடத்திலே தமிழ் ஈழத்திற்காகத் தாவிருக்கிற ஒன்றே ஒன்று இந்த உயிர்தான். அதை இந்தக் கணமே வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும். ஆனால் நான் சாவதற்கு முன்னாலே ஒன்று கேட்கிறேன். நான் மாண்டு மறைந்து போய்விட்டால், என்னுடைய கண்களை எடுத்து பத்திரப்படுத்தி வைத்திருந்து கண் தெரியாத தமிழனுக்குத் தாருங்கள், நான் இல்லாவிட்டாலும் நாளை மலரப் போகின்ற—நல்ல நம்பிக்கையோடு சொல்லுகிறேன் நாளை மலரப்போகிற விடுதலைப்பற்றி—தமிழ் ஈழத்தை அந்த இளைஞன் என் கண்கள் வாயிலாகப் பார்க்கட்டும்" என்று சொன்னான். அது நடந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

அது மாத்திரமல்ல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் 2,800 பேர் இறந்தார்கள் என்று குறிப்பிட்டார். கணக்கு வந்தது 2,800 பேர். ஆனால் கிட்டத்தட்ட ஐந்தாயிரம் பேர் இருக்கும் என்ற செய்தியை நாள்தோறும் அங்கேயிருந்து வருகிற நண்பர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எதுவாக இருந்தாலும் நான் எண்ணிப் பார்க்கிறேன். "கல்தோன்றி மண் தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி." என்று சொன்னதற்காக நான் இப்படிக்கூட எண்ணிப் பார்க்கிறேன். ஒருவேளை மூப்படைந்த சமுதாயம் சாகத்தான் வேண்டுமென்பதைப் போல இந்த இனமும் மூப்படைந்த இனம் என்ற காரணத்தாலே, ஏழுக்க ஏழுக்க சாகும் நிலத்தை சரித்திரம் தந்து கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகத்தோடு எண்ணிப்பார்க்கிறேன்.

நடந்திருக்கின்ற கொடுமைகள், நடந்திருக்கின்ற கொலைகள், நடத்தப்பட்டிருக்கிற கற்பழிப்புச் சம்பவங்கள் எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கிறேன். காரில் வந்து கொண்டிருக்கிறார்கள் புதுமணத் தம்பதிகள். கார் தடுத்து நிறுத்தப்படுகிறது. கணவனுக்கு முன்னாலேயே புது மணப்பெண்ணான மனைவியைக் கற்பழித்துவிட்டு, சம்பந்தினாலே துண்டு துண்டாக அறுத்துப் போட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமைகளையெல்லாம் கேட்ட இலண்டனிலிருந்து வந்த நிருபர் ஒருவர் ஒரு புத்தப் பிக்ஷுவைப் பார்த்துக் கேட்டான்,

[புலவர் புலமைப்பித்தன்] [1983 அக்டோபர் 29

"இதெல்லாம் குற்றம் இல்லையா ?" என்று கேட்டான். அப்படிக் கேட்ட போது, உலகத்திலேயே அற நெறியும் கருணையும்தான் இருக்க வேண்டும் என்பதற்காக பட்ட மாளிகைகளை, மனைவியைத் துறந்துவிட்டு போதி மரத்தின் கீழ் தியானம் இருந்து ஞானம் பெற்ற புத்தர் வழியில் வந்த அந்த புத்த பிக்ஷு சொல்லியிருக்கிறான்—அவன் ஆங்கிலத்திலே சொன்னதை அப்படியே சொல்கிறேன். எனக்கு ஆங்கிலம் தெரியாது- "Killing is a sin ; but Killing a Tamil is not a sin அவன் இப்படிச் சொல்வதற்கு என்ன காரணம் என்று நான் எண்ணிப் பார்த்தேன். எறும்பைக் கொல்லுகிறோம், கோழியை அறுக்கிறோம். புறாவை அறுக்கிறோம். ஆட்டை அறுக்கிறோம். இதையெல்லாம் குற்றம் என்று கருதி ஆட்டை அடிப்பவனுக்கு ஆயுள் தண்டனை என்றால், எத்தனை பேர் ஆயுள் தண்டனை அடைந்திருப்பார்கள் என்று எண்ணிப்பார்க்கிறேன். கோழி, புறாவை அறுப்பதைப் போல, ஆட்டை வெட்டுவதைப் போல—பசுவை வதை செய்தால் இந்தியா போன்ற நாட்டிலே தடைச் சட்டம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் தமிழனை கோழி, புறாவை அறுப்பதைப் போல ஆட்டை வெட்டுவதைப் போல, ஈ, எறும்பைக் கொல்லுவதைப் போல கொல்லுவது குற்றம் அல்ல என்று கருதுகிறவனை என்ன சொல்வது? தமிழ் இனம் இந்த அளவிற்குக் கேவலமாகப் போய்விட்டதே என்று நான் நினைத்துப்பார்க்கிறபோது, சங்க கால இலக்கியங்களும் ஒருவேளை பொய்யோ! புரந்தலையோ! கதையோ! கட்டுக் கதையோ! என்று எண்ண வேண்டியதாக இருக்கிறது என்ற துன்பத்தைச் சொல்ல வேண்டுமென்று கருதி, இதைச் சொல்லுவதற்காகத்தான் இந்த நேரத்தை எடுத்துக்கொண்டேன்.

ஓடிக்கொண்டிருக்கிற இரயில் வண்டியிலே ஒருவனை வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். வெட்டி கதவின் வழியாகத் துண்டு துண்டாக வீசியிருக்கிறார்கள். இலண்டனிலிருந்து போன ஏழு எட்டு பேர் அவர்களைப் பார்த்து "ஏன் வெட்டினீர்கள் ?" என்று கேட்ட போது, "தமிழனைத்தானே வெட்டினோம், உனக்கென்ன போயிற்று ?" என்று கேட்டிருக்கிறார்கள். தமிழனைத் தானே வெட்டினேன், தமிழச்சியைத்தானே கற்பழித்தேன் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று எண்ணும்போது, பாரதிதாசன் அழகாகச் சொல்லியதை நான் எண்ணிப்பார்க்கிறேன். "அமிழ்தென்று கூறுமிந்த தமிழ் என்னாவி அழிவிற்குக் காரணமாய் இருக்கிறதென்று சமூகாயம் நினைத்திடுமோ ஐயகோ ! என் தாய் மொழிக்குப் பழி வந்தால் தகிப்பதுண்டோகோலோ !"



1983 அக்டோபர் 29] [புலவர் புலமைப்பித்தன்]

ஒரு குழந்தை தண்ணீர் கேட்டது தமிழிலே. அக்குழந்தையின் தாயும் இறந்துவிட்டாள், தந்தையும் இறந்துவிட்டான். அவர்கள் இருவரையும் கொன்றுவிட்டார்கள். குழந்தை விக்கி விக்கி அழுது தொண்டை வறண்டு போய் தண்ணீர் கேட்டது. தண்ணீரை தமிழிலே கேட்ட குழந்தையினுடைய வாயில் பெட்ரோலை ஊற்றி நெருப்பை வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள். இப்படி தமிழிலே தண்ணீர் கேட்ட காரணத்திற்காக, சாவைத் தழுவுகிற கொடுமை இருக்கின்றது என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, வேதனைப் படாமல் எப்படி இருக்க முடியும் ?

இன்னுமொன்றைக் கூட நினைத்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லுகிறேன். ஜுலை 25 ஆம் தேதி ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் கொழும்புவில் காணவில்லை. இந்தச் செய்தி ஆஸ்திரேலியா அரசாங்கத்திற்குப் போகிறது. செய்தி போனவுடனே ஆஸ்திரேலியா அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்தது. "இரண்டு பேரையும் 24 மணி நேரத்திற்குள் ஒப்படைக்கவில்லையென்றால் ஸ்ரீலங்கா எரியும்" என்று எச்சரிக்கை விடுத்தது. எச்சரிக்கை விட்டது 24 மணி நேரத்திற்குள் ஒப்படைக்க வேண்டுமென்று. ஆனால் நான்கு மணி நேரத்திற்குள்ளே அவசர அவசரமாகக் கண்டுபிடித்து தனி விமானத்தில் வைத்து ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்போதுதான் நான் நினைத்துப் பார்த்தேன், இப்படி நமக்காக யாரும் எச்சரிக்கை விடவில்லையே, அப்படி விட்டிருந்தால் துன்பங்கள் இப்படி நேர்ந்திருக்காதே என்று கருதினேன். அப்படிக் கருதியது தவறு என்று யாரும் நியாயமானவர்கள் கருதமாட்டார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். பல நேரங்களில் எங்களைக்கூட பேசுகிறார்கள், என்னைக்கூட சேர்த்துப் பேசுகிறார்கள். நான் அதைப் பெருமை என்று கருதவில்லை. யாரையும் சிறுமைப்படுத்துவதுமாகாது அல்லது என்னைப் பெருமைப்படுத்துவதுமாகாது. நான் கற்ற தமிழ் மேல் ஆணையாகச் சொல்லுகிறேன். அப்படிப் பேசவில்லை. அப்படி நான் பேசினால், நாலாயிரம் பேருடைய பிணத்தை, என்னுடைய பெருமையைத் தேடிக்கொள்

[புலவர் புலமைப்பித்தன்] [1983 அக்டோபர் 29

வதற்காக, ஏலம் போடுகிற கடைந்தெடுத்த வியாபாரி என்ற கருத்து வந்துவிடுமானால், அதை நான் எப்படி தாங்கிக்கொள்வது என்று தெரியாமல் சங்கடப்படுகிறேன். ஆகவே எல்லோருக்கும் உணர்வு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அங்கே நடக்கப் போகிற, நாளைக்கு உண்டாகப் போகிற விடுதலையைப் பற்றி "பிரிவினை" என்று சொல்லுகிறார்கள். எல்லாக் கட்சிகாரர்களையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து பிரிவினை என்று சொல்லாதீர்கள். "Purely it is a liberation and it is not a separation" அது விடுதலை. தங்களுடைய நாட்டை, தங்களுக்குள்ள இடத்தைக் கேட்கிறார்கள். இன்னும் எண்ணிப்பார்க்க வேண்டும். இரண்டு இனத்தாருடைய வரலாறும் ஒன்றல்ல. அது நிலநூலும் ஆகாது, அது வரலாறும் ஆகாது. இன்னும் சொல்லப் போனால், குமரிக் கண்டம் என்பதில் இந்து மகாசமுத்திரம் இருக்கும் பகுதியில் குமரிக்கோடு என்ற ஒரு மலை இருந்தது. "குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்று இலக்கியங்களில் பாடல் இருக்கின்றது. குமரிக்கோடு என்று ஒரு மலை இருந்திருக்குமானால், நான் தென்னிலங்கை, பாரதிதாசன் சொன்னதைப் போல, தென் திசையைப்பார்க்கிறேன். "என் சொல்வேன் அன்றந்த இலங்கையினை ஆண்ட மரபினர் எந்தன் தோள்களெல்லாம் பூரிக்குதடா—பாராண்ட மூத்த பூமி." அதனாலே இடையிலே கடல் கோள் ஏற்பட்டு, நிலம் பிரிக்கப்பட்ட காரணத்தாலே தனியாகப் போயிற்றே தவிர, அந்த நாடு வேறு நாடு என்று யாரும் சொல்ல முடியாது. ஆகவே தமிழருடைய ஆதிநாடு, ஆதிநிலம் என்பதை இன்றைக்கும் எண்ணிப் பார்க்கிறேன்.

பாரதப் பிரதமர் சென்ற வாரம் தொலைக்காட்சியில் பேசுகின்றபோது, ஒரு செய்தியை, எனக்கு மகிழ்ச்சியாக, தெம்பாக, நம்பிக்கை தருகிற வகையில் பேசியதற்காக, உள்ளபடியே நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சிங்களவர்களுக்குரிய உரிமையைக் காட்டிலும் தமிழர்களுக்கு அதிகம் என்று சொல்ல முடியாவிட்டாலும், சிங்களவர்களுக்குச் சமமான உரிமை தமிழர்களுக்கு இருக்கிறது என்று சொன்னதற்காக, நான் அவர் இருக்கிற திசை நோக்கி தொட்டுக் கும்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே நேர்ந்து போயிருக்கிற துன்பங்களுக்கு புரட்சித் தலைவர் சென்ற வாரம் ஒரு செய்தியைத் தெரிவித்தார். ஈழத்திலே உள்ள தமிழர்கள் அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கருத்துக்கு வருவார்களேயானால், எத்தகைய உதவியும் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று சொன்னார்கள்.



1983 அக்டோபர் 29] [புலவர் புலமைப்பித்தன்]

(பிற்பகல் 12-10)

இதைக் கேட்ட பின்னாலே, வேகவேகமாக, இந்த விடுதலை வேண்டுமென்று சொல்கின்ற எல்லா சார்புடையவர்களும் ஒன்றாக இணைய வேண்டும் என்ற எண்ணத்திற்கு வந்திருக்கிறார்கள். இதைப்பற்றி நான் தெளிவாகச் சொல்வது என்பது தேவையில்லை என்று கருதுகிறேன். இருந்தாலும், அங்கே அந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி ஒரு சொல்லில் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

ஒரு தாய் தன்னுடைய மகனை, ஒரு தீவிரவாதியாக இருக்கின்ற பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி அனுப்புகிறாள். அந்தப் பிள்ளை மூன்று தடவை சொல்லி அனுப்பியும் போகவில்லை. 4-வது முறையாக அந்தத் தாய் சொல்லி அனுப்பியிருக்கிறாள். "நான் என்னுடைய பிள்ளையை நாட்டிற்கு என்று தந்து விட்டேன். ஆனால் அவனைத் திரும்ப வரச் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால், ஏதோ என்னுடைய பிள்ளை நாட்டிற்கு உயிரைக் கொடுக்க உத்வேகமாக வீராவேசமாகப் புறப்பட்டுப் போய் விட்டான். அப்படிப் போய்விட்ட என்னுடைய மகனை வரச் சொல்லியிருப்பது என்னுடைய பந்த பாசத்திலே அவனைக் கட்டுப்படுத்தி வீட்டிலே வைத்துக்கொள்ள அல்ல." அதற்கு மாறாக அவள் சொல்லிக் கொண்டது, "அவன் வந்தால் அவனைக் கேட்டுத் தெரிந்துகொள்வேன். குண்டு வீசுவது எப்படி என்று எனக்குத் தெரியாது. அது என்னுடைய மகனுக்குத் தெரியும். அவன் வந்தால், நாளைக்கு இராணுவம் எங்களை அழிக்க வருகிறபோது, அதற்கு முன்னால் அவன் வந்து எனக்கு அதைக் கற்றுத்தந்தால், நான் இராணுவத்தைச் சேர்ந்த பத்துப் பேர்களைக் கொன்றுவிட்டு, நானும் என்னை அழித்துக்கொள்வேன். அந்த வித்தையைக் கற்றுக் கொள்ளலாம் என்றுதான் என் மகனை வரச் சொன்னேன். அவனை வரச் சொல்" என்றார்களாம். நான் அதை எண்ணிப்பார்க்கின்றபோது, அந்த புறநானூற்றில் வந்த தாயை அந்தத் தாயினுடைய வடிவத்திலே பார்க்கிறேன். இந்தத் துன்பங்களும், இந்தக் கண்ணீரும் ஒரு வெளிச்சமான நன்மைக்குத் தான் காரணமாகும் என்று கருதி, அந்தத் துன்பங்களைக்கூட விட்டுவிட்டு, மறந்து இந்தத் தீர்மானத்தை வரவேற்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நான் நேரம் அதிகமாக எடுத்துக் கொண்டிருந்தால் அதற்கு என்னை மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அமைகிறேன். வணக்கம்.

* திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மனித இனத்தையே நசுக்கி, அவமானப்படச் செய்த, வேதனையடையச் செய்த, ஸ்ரீலங்கா மண்ணிலே, தமிழர்களை வதைத்து சித்திரவதைக்கு ஆளாக்கிய பல்வேறு நிகழ்ச்சிகளையெல்லாம் இந்த அவையிலேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் உணர்வுக்கேற்ப, மொழிகளுக்கு ஏற்ப, எடுத்துச் சொன்னார்கள். தமிழ் இனத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட அவமானகரமான படுகொலைகள் என்பதோடு மட்டுமல்ல, மனித இனத்தைக் காலாகாலத்திற்கும் தலை குனிய வைக்கின்ற வகையிலேதான் இந்த துர்பாக்கியமான சம்பவங்கள் ஒவ்வொன்றும் நடைபெற்றிருக்கின்றன. ஆங்கிலத்திலே ஒரு வார்த்தை சொல்வார்கள். "Fantasies" என்பார்கள். மனிதனுடைய உணர்வைப்பற்றி, செயலைப்பற்றி வெளியிலே சொல்லவே வெட்கப்படுகின்ற அளவுக்கும் இருக்கும் என்பார்கள். அப்படிப்பட்ட உணர்வுகள் எண்ணங்கள் மனிதர்கள் மனதிலே ஏற்படுகின்றன. அப்படி ஏற்படுகின்ற உணர்வுகள் ஒரு வினாடியிலே மறைந்து போகும். அதை தனக்கு மிகமிக அந்தரங்கமானவர்களிடம் கூட தெரிவிக்க மாட்டார்கள். அதைத் தானேகூட மீண்டும் நினைத்துப் பார்ப்பது இல்லை. ஆனால் ஸ்ரீலங்கா மண்ணிலே அதைப்போன்ற கீழ்த்தரமான எண்ணங்கள் உருவாகியிருக்கின்றன என்பதை வெளிப்படுத்த இந்தக் காரியங்களைச் செய்து காட்டியிருக்கிறார்கள். வெறும் படுகொலையல்ல, வெறும் கற்பழிப்பு அல்ல, அந்தப் படுகொலையை எவ்வளவு கேவலமான, எவ்வளவு அவமானகரமான முறையிலே செய்யலாமோ, அப்படியெல்லாம் செய்திருக்கின்றார்கள். கற்பழிப்பை எண்ணிப்பார்க்கக்கூட முடியாத வக்கிரபுத்தியோடு செய்திருக்கின்றார்கள். அத்தனையையும் யார் மீது செய்தார்கள் என்று எண்ணிப்பார்க்கின்றபோது, தமிழ் மக்கள்மீது, தமிழ் மொழி பேசுவோர்மீது செய்திருக்கின்றார்கள். மிகுந்த வேதனையோடு சொல்கின்றேன். இதையெல்லாம் வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. இந்த நேரத்தில் தமிழகம் இவைகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறது. அது ஏதோ தமிழகத்திற்கு மட்டும் என்பது அல்ல, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட அவமானம் இது என நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள், இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது, மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. எப்படி இந்தப் பிரச்சினையில் செயல்பட வேண்டும், எப்படி இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்பதிலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் நம்மிடையே இருக்கலாம். ஆனால் உடனடியாக அதைத் தடுத்து நிறுத்த, பரிகாரம் கண்டாகவேண்டுமென்பதிலே தமிழகத்திலேயுள்ள யாருக்கும் எந்த விதமான அளவிலும் உணர்வு வேறுபாடு இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே பேசிய அத்தனை உறுப்பினர்களும் மிகத் தெளிவாகச் சுட்டிக்



காட்டினார்கள். இது ஒன்றிலேதான் நாம் தெளிவாக இருக்கவேண்டும். நமக்கிருக்கின்ற சங்கடம், இன்னொரு நாட்டில் அது நடக்கிறது என்பதோடு மட்டுமல்ல, இன்னொரு சிக்கலும்கூட அதிலே நிறைந்திருக்கிறது. இன்றைக்கு இன்னொரு நாடு, ஆதிபத்யம் பெற்ற நாடு, ஒரு 'சாவரின் ஸ்டேடஸ்' பெற்றுள்ள நாடு என்ற நிலைமைகளை உடையதாக இருக்கிறது. அவர்களுடைய அந்த நாட்டிலே நடைபெற்ற துக்ககரமான, அவமானகரமான நிகழ்ச்சிகள்பற்றிச் சொல்லி அதிலே தலையிடுவதற்கு நமக்கு இருக்கின்ற உரிமை எப்படிப்பட்டது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அங்கே இருக்கின்ற, இந்திய வம்சாவழியினராக இருக்கின்ற, தமிழ் பேசுகின்ற, மக்களுக்கு, குடியுரிமையற்ற மக்களுக்குப் பாதுகாப்பு தந்தாக வேண்டும். நாம் அவர்களுக்குக் குடியுரிமை வேண்டுமென்று வலியுறுத்துகின்ற அதே நேரத்திலே மிகத் தெளிவாக நம் பாரதத்தினுடைய பிரதமர் அவர்கள் தெரிவித்தார்கள். "அது அந்த நாட்டினுடைய பிரச்சினை. அவர்கள் அகதிகளாக வந்தால்கூட நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்., காரணம் ஸ்ரீலங்கா அவர்களுக்குச் சொந்தமான நாடு. அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படவில்லை என்றால், ஒரு மெஜாரிட்டியினரால் அப்படிப்பட்ட கொடுமைகள் நிலவுகின்றன என்ற காரணத்தினாலே அதைத் தீர்த்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம்" என்றார்கள். அதைத் தீர்த்து வைக்கின்ற வரையிலே அந்த நாட்டு உள் விவகாரத்தில் தலையிட நமக்கு உரிமை இருக்கிறது. அந்த மனிதாபிமான முறையிலே இந்தியா இதில் நுழைய முடிகிறது. ஆனால் பிரச்சினை தீராத நிலையிலேதான் பல சம்பவங்கள், வேதனைக்குரியவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது நாடற்றவர்கள் பிரச்சினை. குடியுரிமையற்றவர்களுடைய பிரச்சினை. காலாகாலமாக தமிழகத்தினுடைய கவனத்தை ஈர்க்கின்ற பிரச்சினை. காரணம் நம்முடைய முன்னோர்களின் மைந்தர்கள் அங்கே காலாகாலமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். நம் கலாச்சாரம், இனம், மொழி உறவுகள் எல்லாம் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் காரணத்தை வைத்துத்தான், 1952-லே இந்தப் பிரச்சினை வந்தபோது, நம்முடைய தமிழகத்தினுடைய தலைவர்கள் தமிழகச் சட்டமன்றப் பேரவையிலேயே நமது நிலையை எடுத்து வைத்தார்கள். இதுபற்றிய பிரச்சினையில் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற போது, சொல்லியிருக்கின்றார்கள்.

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

"Some time back, a bogey was set up that India wanted to conquer Ceylon. It has been made clear that there was no such intention on the part of India to conquer Ceylon or to force that country to a particular thing. We recognize Ceylon as an independent country and we have been dealing with that country as such. But, we are entitled to extend our sympathy to any section of the people in any country in any part of the world if they are suppressed and denied even the elementary rights."

ஸ்ரீலங்கா குடியாசுச் சட்டம் அமுலாகின்றபோது, அந்த நேரத்திலேயே இந்த நிலைமைகள் ஏற்பட்டன. அப்போதே நடக்கிருந்த வேதனையை, கவலையைத் தெரிவித்தோம். தமிழருக்குக் குடியுரிமை மறுக்கப்படுகின்றது என்பதை ஆணித்தரமாக, அழுத்தமாக எடுத்துச்சொன்னோம். அதை எடுத்துச் சொல்லி, அதைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக அதற்கான நடவடிக்கைகளில் எல்லாம் ஈடுபட்டோம். அன்றைக்கு இந்த நிலைமைகளை யெல்லாம் மிகத் தெளிவாகவே உணர்ந்த நிலையிலே தமிழகத்தினுடைய தலைவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெளிவாகவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு ஒன்றுபடாத கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்த திரு. கல்யாணசுந்தரம் அவர்கள்கூட பேரவையிலே சொன்னார்கள்.

"We know that is going to happen in Kashmir ultimately; and we also know what is going to be the attitude of the people of Kashmir towards India. We gain nothing in inviting the United Nations Organisation to interfere in our affairs. This is a similar matter between the people of India and the people of Ceylon. Reference of this issue to the United Nations Organisation would mean an invitation to the imperialists to interfere in our affairs and to increase the bitterness between India and Ceylon."

காரணம் நம்மை அடிமைப்படுத்தியிருந்தவர்கள், பிரிட்டிஷார் இந்த நாட்டைவிட்டு வெளியேறும்போது, ஸ்ரீலங்கா உட்பட விடுதலை பெற்ற நாடுகள் தங்களுடைய உதவியை நிரந்தரமாகக் கோரி நிற்க வேண்டுமென்ற வகையிலே பல சிக்கல்களை உருவாக்கி விட்டுச் சென்றார்கள். நம்மாலே, இந்தியா விரைவி லேயே அந்தச் சிக்கலிலேயிருந்து மீள முடிந்தது. ஸ்ரீலங்காவினாலே அந்தச் சிக்கலிலேயிருந்து இன்னும் மீள முடியவில்லை. பிரிட்டிஷார் ஆதிக்கத்திலே



983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

அவர்களுடைய ஆட்சியிலே ஸ்ரீலங்காவும் இந்தியாவும் இருந்தபோது இங்கிருந்த தமிழ் மக்களை ஏற்றி ஸ்ரீலங்காவிற்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்போது அவர்களுக்கு எல்லாப் பாதுகாப்பும் தருவதாகச் சொல்லியனுப்பியிருந்தார்கள். அவர்கள் அந்த நாட்டிற்கும் (ஸ்ரீலங்காவிற்கு) விடுதலை தந்து சென்றபோது, தமிழர்கள் லட்சக்கணக்கானவர்களுக்கு குடியுரிமையில்லாத நிலையை உருவாக்கிவிட்டுச் சென்றார்கள். இந்த நிலையிலேதான், எப்போதும் அவர்களுடைய தொடர்பிலே, வெளிநாட்டவர்கள் தயவிலேதான் விடுதலை பெற்ற நாடுகள் வாழ முடியும் என்ற நிலையை உருவாக்குவதற்காகவே அப்படி விட்டுச் சென்றார்கள் என்பதை அன்றையதினம் இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அதோடு மட்டு

(பிற்பகல் 12-20)

மல்ல. காங்கிரஸ் கட்சியினுடைய மூத்த பெரும் தலைவராக, தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏற்கப்பட்ட திரு. வரதராஜுலு நாயுடு அவர்கள் அன்றைக்கே சொன்னார்கள்.

"The question of refusal of citizenship rights to the Indians in Ceylon is not a simple question. It is of great political importance during the last 50 years. The British who have been ruling Ceylon, knowing that we Indians would ultimately be free, wanted to create anti-Indian feelings either on communal basis or on religious basis or on territorial basis."

அதைத்தான் அவர்கள் அன்றைக்கே, இன்றைக்கு நடைபெறும் உணர்ச்சிகளை 1952-லேயே, எதிர்பார்த்துச் சொன்னார்கள். இந்த நிலையை உருவாக்கிவிட்டு வெள்ளையர்கள் சென்றார்கள் என்று எச்சரித்துச் சொன்னார்கள். தொடர்ந்து இந்தப் பிரச்சினையை அணுகும் முறையைப்பற்றிச் சொல்லும்போது, இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தெளிவாக அறிவித்தார்கள்.

"We must. somehow or other decide it between Ceylon and ourselves. Let us not yield to the temptation—without realising it or feeling more or less on imperialistic lines—that our people have spread abroad all over South Asia, that we must have power everywhere and we are a great people and that we must fight it all out and retain our influence and our power there."

அதைத்தான் நமது பேரவைத் தலைவர்கள்கூட வெளியிலே பல

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

நேரங்களில் தெரிவித்திருக்கிறார்கள். "ஸ்ரீலங்காவில் மட்டுமல்ல, தெற்கு ஆசியா முழுவதும் பரவியிருக்கின்ற தமிழ் மக்கள்—இந்தியர்களிலேயே பெரும்பாலானவர்கள் நூற்றுக்கு எழுபது' என்பது தம் தமிழர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. பல நாடுகளில் இந்தப் பிரச்சினை உருவாக வழி வகுத்து விடும். ஆகவே எச்சரிக்கையாக அணுக வேண்டும்." என்று சொல்லி, முடிக்கும்போது, இராஜாஜி அவர்கள் ஒன்றைச் சொல்லுகிறார்கள். ஸ்ரீலங்காவிலே நாடு அற்றவர்களாக இருக்கிறவர்களைப்பற்றி, ஸ்ரீலங்கா குடியுரிமை தர மறுக்கப்படுகிறவர்களைப்பற்றி இராஜாஜி அவர்கள் சொல்லுகிறார்கள்.

"It is impossible to take these people back to India. We will never take them back to India, whatever may be their misfortune. We must make it quite clear to everybody that these people will not come back to India and these people will be there either as a nuisance or as citizens."

"அந்த ஆட்சி, ஸ்ரீலங்கா ஆட்சி, அவர்களுக்கு முழுமையான குடியுரிமை தரவில்லை என்றால், அதனுடைய விளைவுகளை அவர்களே அனுபவிக்க வேண்டும். அதற்காக அவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு இங்கே ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்க மாட்டோம். இலங்கை ஆட்சி அதற்கான விலையைத் தந்தாக வேண்டும்" என்று எச்சரிக்கை விடுத்தார்கள். இன்றைக்கு நடந்திருக்கும் கலவரங்கள் ஏதோ நம்முடைய அனுதாபத்தோடு, வேதனையோடு முடிந்து விடுவது என்பதல்ல. இந்தக் கலவரங்கள் நாட்டையே, திரு. ஜெயவர்த்தனேயை, சிங்களவர்களைப் பாதித்திருக்க வேண்டும். இதனால் நிரந்தரமாக எத்தனை ஆயிரம் எதிரிகள் அந்த அரசுக்கு உருவாக முடியும் என்பதைப் பார்க்கிறோம். எத்தனை பேர்களைச் சாகடிக்கிறார்கள், கற்பழிக்கிறார்கள் என்பதல்ல. மிகமுள்ள தமிழர்களை, மனித உணர்வு உடையவர்களை அந்த ஆட்சி பகைத்துக்கொள்கிறது என்பதோடு, அந்த நாடே பகைத்துக் கொள்கிறது. அந்த நிலை உருவாகும்போது ஸ்ரீலங்காவினுடைய (sovereignty) சாவொலியா? ஸ்ரீலங்காவினுடைய ஆட்சி நிலை குலைந்து போகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் மிகத் தெளிவாகக் காண்கிறோம். ஏன் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. அப்போதே எடுத்திருக்க வேண்டாமா, வேகம் காட்ட வேண்டாமா என்று நமக்கிருக்கும் மனக் குறைகளை வெளிப்படுத்துவதற்கு மட்டும் நாங்கே நிற்கவில்லை. இந்தியனாக இருக்கும் ஒவ்வொருவரும் இந்தியப் பிரதமரைப் பார்த்து, "இதில் வேகம் காட்டவில்லை. பிரச்சினையை வேகமாகத் தீர்க்க வேண்டாமா?" என்று கேட்க உரிமை இருக்கிறது. அதோடு மட்டுமல்ல, அதற்கான தீர்வை எடுக்கச் சொல்லும் உரிமையும் இருக்கிறது



1983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

ஆனால் திருமதி இந்திரா காந்தியிலிருந்து இங்கே இருக்கும் கடைசித் தமிழன் வரையில் எவரையும் தமிழ் இனத் துரோகி என்று சொல்லும் வாய் யாருக்கும இருக்கக்கூடாது. அது தமிழனுக்கு நல்லதல்ல. அது தமிழ் இனத்தை, இந்திய தேசியத்தைப் புரிந்துகொள்ளாத செயலாக, காட்டிக் கொடுக்கும் செயலாக அமையுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணம் சொல்லலாம், அப்படி அதில் நடவடிக்கை எடுத்தீர்களே, இதில் எடுக்கவில்லையே என்று. சொல்லுவது நம்முடைய உரிமை. இப்படித்தான் செய்ய வேண்டும், இப்படிச் செய்யாதவர்கள் தமிழ் இனத் துரோகிகள்; இப்படித்தான் நடக்க வேண்டும், இப்படி நடக்காதவர்கள் தமிழனைக் காட்டிக் கொடுத்தவர்கள்; இப்படிச் செயல்படாதவர்கள் ஆட்சிக்கு லாயக்கு இல்லாதவர்கள் என்று சொல்லுவது தமிழ் இனப் பாதுகாப்புக்குக் கூறும் வார்த்தையாக அமையாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையில் ஏற்பட்ட விளைவுகளைப் பார்க்க வேண்டும். ஜூலை 24—அந்தச் சம்பவம் நடந்தபோது நம்முடைய மாநிலத்திற்குப் பிரதமர் வருகை தந்தார்கள். பத்திரிகை நிருபர்கள் இப்படிச் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தபோது, அப்போதே பத்திரிகை நிருபர்களிடம் அவர்கள் சொன்னார்கள்.

"Mrs. Gandhi said, civil liberties, particularly the rights of minorities, and the respect for and protection of those rights were of special importance. In India, because we have large minorities, it has been our consistent effort to maintain harmony through co-operation among different communities. Violence breeds viloence and it is disruptive to national unity and integrity. We are sure that the leaders of different communities in Sri Lanka also realise this."

இன்னொரு நாடு மற்றொரு நாட்டினுடைய உள் விவகாரங்களில் தலையிடுகிறது என்ற தவறான எண்ணம் கற்பிக்கும் எந்தச் செயலையும் நாம் செய்யக்கூடாது என்று எச்சரிக்கையாகச் சொல்லிவிட்டு அடுத்து சொல்லுகிறார்கள்.

"However, India did not wish to nor did it interfere in the domestic affairs of another country. Especially, when there are people of common origin in two independent countries, it was particularly important not to say or do anything which could be misconstrued as interferance."

பாரதத்தின் பிரதமர் ஸ்ரீலங்காவினுடைய அதிபருக்கு மட்டுமல்ல, ஆளும் பொறுப்பில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்லுகிறார்கள்.

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

"உங்களுக்கு இருப்பது போன்ற பிரச்சனைகள் இந்தியாவில் எங்களுக்கும் உண்டு, ஆனால் அணுகும் முறையில் இதுபோன்ற வன்முறைகளை நுழைத்தால் அதற்குப் பதிலாக வன்முறைகளைத்தான் பரிசாகப் பெற முடியும் என்கிறார். எப்படிப்பட்ட எச்சரிக்கை என்று எண்ணிப் பார்க்க வேண்டும். பாரதப் பிரதமர் சொல்லுகிறார்கள். இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடுவது ஏற்புடையதல்ல என்று சொல்லிவிட்டு, அடுத்துச் சொல்லுகிறார், உங்களுடைய உள் நாட்டுப் பிரச்சனைகளிலே வன்முறையை ஆட்சியே புகுத்தினால், அதற்குப் பரிசு வன்முறைதான்" என்று சொன்னால். அதனுடைய பொருள் என்ன? அதில் உலக அரங்கிலே சில வார்த்தைகளை, சில சூழ்நிலைகளில் நுட்பமாகத்தான் சொல்ல முடியும். யார் எந்த நிலையில் எப்படிச் சொல்லுகிறார்கள் என்பது வேறு. நாமே சொல்லுகிறோம். இன்றைக்கு முதலமைச்சர் ஏன் சொல்லவில்லை என்று கேட்கிறோம். நான் முதலமைச்சராக இருந்தபோது ஏன் சொல்லவில்லை என்பதற்குக் காரணம் சொல்லுகிறபோது, அந்தப் பொறுப்புக்கு வரும்போது உள்ளத்திலே எதுவாக இருந்தாலும், செய்கிற காரியம் எதுவாக இருந்தாலும் அத்தனையையும் விளம்பரம் போட்டு இதைச் செய்கிறோம் என்று ஒரு ஆட்சி செய்ய முடியாது. இதில் தலையிடுகிறேன் என்று சொல்லிவிட்டு தலையிட முடியாது. இன்னொரு நாட்டின் ஆதிபத்தியத்தை மதிக்கிறோம் என்ற நிலையில், நமக்கு வேண்டியதை நம்முடைய அரசு, மத்திய அரசு, நமது பிரதமர் அவர்கள் செய்திருக்கிறாரா என்று எண்ணிப் பார்க்கின்ற மன வலிமை நமக்கு வேண்டும். ஆயாசங்கள் இருக்கும்போது, அந்தக் ஆயாசத்தின் அடித்தளத்தில் நம்முடைய வேகத்தை மட்டும் மனத்திலே வைத்து மற்றவர்களைப் புறக்கணிப்பது என்பது எங்கோ உணர்ச்சிவயப்பட்டு எழும் மக்களைத் திசை திருப்பும் காரியமாக அமையும் என்று சொல்ல விரும்புகிறேன் நமது பிரதமர் சொல்லுகிறார்.

(பிற்பகல் 12-30)

"On our part we are committed to maintaining and developing friendly relations with Sri Lanka as between two sovereign neighbours who have much in common. In dealing with this particular proplem, we hope Sri Lanka will respond with the same spirit and bear in mind the sentiments of the Indian people."

"உங்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் தலையிட மாட்டோம்" என்று பாரதத்தின் பிரதமர் சொல்கிறார். முழுக்க முழுக்க நிலைமைகளை நன்றாக உணர்ந்து, அதற்குப் பிறகு தீர்வு காண வேண்டும் என்கிறார். திரு. ஜெயவர்த்தனே அவர்கள் இந்திய மக்களுடைய, தமிழ் மக்களுடைய



1983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

பிரச்சினைகளை மனதிலே வைத்துக்கொண்டு நல்லமுறையில் இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று சொல்கிறார். தமிழ் மக்களுடைய உணர்வுகளை மனதிலே வைத்துக்கொண்டு பிரச்சினைகளை நல்லமுறையில் தீர்க்கவில்லையென்றால், விளைவுகளைச் சந்திக்க வேண்டுமென்பதைத் திட்டவட்டமாக நமது பாரதப் பிரதமர் சொல்கிறார். இங்கே பிரதமர் கண்டிக்கவில்லை, கண்டிக்கவில்லை என்று சொல்கிறார்களே, அவர்களது வாதத்திற்கு வேண்டுமானால் நான் பதிலுக்கு பதில் என்கிற அடிப்படையில் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆனால் சொல்லியிருப்பதற்கு என்ன பொருள்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. க. இராமமூர்த்தி**: இந்தப் பிரச்சினை பூதாகாரமாக உருவெடுப்பதற்கு முன்பே, மிகுந்த ஜாக்கிரதையாக இது குறித்து பாரதத்தினுடைய பிரதமர் அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையின் ஆழத்தை நன்கு ஆராய்ந்து பார்த்து நம்முடைய பிரதமர் செயல்பட்டிருக்கிறார். தமிழகம் இதிலே ஒருமித்து நின்றது. வரலாறு காணாத அளவில் தமிழகம் ஒருமித்து நின்றது. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மிகுந்த வேதனையோடு, உரிமையோடு சொன்னார்கள். மூன்று மாதங்கள் கழித்து சட்டமன்றம் கூடியிருக்க வேண்டுமா? இது சாதாரண கூட்டம் நடைபெறும் காலத்தில் தானே கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். சம்பவம் நடைபெற்ற உடனேயே சட்டமன்றத்தைக் கூட்டியிருக்க வேண்டாமா என்றும் கேட்டார்கள். நான் பதிலுக்கு பதில் என்று சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நானே அந்தக் கோரிக்கையை விடுத்தேன் சம்பவங்கள் நடைபெற்ற உடனேயே முதன் முதலாக சட்டமன்றத்தைக் கூட்டி உடனடியாக இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்தேன். என்ன காரணத்தாலோ நான் அன்றைக்குச் சொன்னது மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு கூட்டிய திராவிட

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

முன்னேற்றக் கழகம் உட்பட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கூட நான் இது பற்றிக் கேட்டேன். அந்த சமயத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து மத்திய அரசுக்கு அனுப்பினோம். அதுபற்றி இந்த நேரத்தில் சொல்வது தவறில்லை என்று நினைக்கிறேன். அந்தத் தீர்மானம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களாலே முன்மொழியப்பட்டது. அவர்களுடைய கரங்களாலே அது எழுதப்பட்டது. அதைப்பற்றி ஒன்றை ஞாபகப்படுத்துவது அவசியம் என்று கருதுகிறேன். கலைஞர் அவர்கள் அன்றைக்கு ஒன்றை அந்தத் தீர்மானத்திலே குறிப்பிட்டிருந்தார்கள். அதாவது மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் மெத்தனமாகச் செயல்படுவதை, நாங்கள் கண்டிக்கிறோம் என்கிற வாசகமும் அதில் இடம் பெற்றிருந்தது. மத்திய அரசு வேகமாகச் செயல்படவில்லை என்று சொல்வது எப்படி நியாயம் என்று கேட்டபோது, பேரறிஞர் அண்ணா அவர்களைக் குறிப்பிட்டு ஒன்றைச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இது போன்ற நிலையில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இப்படி வேகம் போதவில்லை என்று'சொன்னால், மேலும் மத்திய அரசு வேகமாகச் செயல்பட அது வழி வகுக்கும். ஆனால் உள்ளபடியே மத்திய அரசு வேகமாகச் செயல்படவில்லை என்ற கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட யாரும் ஆதரிக்கத் தயாராயில்லை. மத்திய அரசு மேலும் தீவிரமாக இது சம்பந்தமாகச் செயல்பட வேண்டுமென்ற உணர்வு தான் பாரதத்தின் பிரதமர் உட்பட அனைவருக்கும் இருந்து கொண்டிருக்கிறது. "ஆல் டோர்ஸ் ஆர் ஓப்பன்" (All doors are open)' என்று தான் நமது தூதுக் குழுவிடம் கூட பிரதமர் அவர்கள் சொன்னார்கள். "எப்படி பிரச்சினையை நல்ல முறையில் தீர்ப்பது என்பது குறித்து நானும் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன், நீங்களும் ஆலோசனை சொல்லுங்கள், செயல்படுவோம்" என்று தான் சொன்னார்கள். அன்றைக்கு நடைபெற்ற இன்னொன்றையும் சொல்கிறேன். மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். "சட்டமன்றத்தைக் கூட்ட வேண்டுமென்று சில பேர் நினைக்கிறார்கள். ஆனால் மிகுந்த உணர்வின் அடிப்படையில் நாமெல்லாம் ஒன்றாகக் கூடி ஒரே உணர்வின் அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில்—மற்ற மாநிலங்களில் அல்லது நாடாளுமன்றத்தில் இது பற்றிப் பேசுவது என்பது வேறு—நமது சட்டமன்றத்தைக் கூட்டுவது அவசியம் தானா என்பதுபற்றி எல்லோரும் சேர்ந்து முடிவெடுக்கலாம், சிந்திக்கலாம்" என்று மாண்புமிகு மேலவைத்



1983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

தலைவர் அவர்களே கூட குறிப்பிட்டார்கள். யாரோ சட்டமன்றத்தைக் கூட்டவேண்டுமென்று கேட்டது போலவும், அதை அரசு மறுத்தது போலவும் இப்போது உணர்வுகளை வெளிப்படுத்திச் சொல்வது சரியல்ல. ஆரம்பத்திலேயே இவர்களுக்கு இதில் என்ன ஆதாயம் என்கிற அணுகுமுறையில் இதனை அணுகுகிறார்கள் என்கிற எண்ணம் நம்மைப்பற்றி ஒருவருக்கும் வந்துவிடக் கூடாது. மத்திய அரசை அல்லது பாரதத்தின் பிரதமரை எப்படி, ஏன், எதற்காகக் குறை சொல்கிறோம் என்பது வேறு. ஆனால் இதில் எப்படிச் செயல்படுவது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எப்போதுமே மாநில அரசுகளுக்கு முன்னால் நின்று மத்திய அரசு தலைமை தாங்கி பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். சரித்திரமும் அதைத் தான் கண்டிருக்கிறது. ஆனால் ஸ்ரீலங்கா தமிழர்களுக்காக, அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக தமிழ் மக்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள் என்று அறிந்த உடனேயே, கட்சி வேறுபாடில்லாமல், வேறு எந்த ஒரு வேறுபாட்டையும் பார்க்காமல், 'மாநில அரசை மதிக்கிறேன், நாட்டு மக்களை மதிக்கிறேன்' என்கிற அடிப்படையில் தமிழகத்தில் மத்திய அரசுக்குச் சொந்தமான விமானம் பறக்கவில்லை, ரெயில்கள் ஓடவில்லை, கப்பல்கள் நகரவில்லை, வங்கிகள் செயல்படவில்லை, மத்திய அரசின் எந்த ஒரு அலுவலகமும் இயங்கவில்லை என்கிற ஒரு நிலையை மத்திய அரசு ஏற்படுத்தியது என்றால், மத்திய அரசு வேகமாகச் செயல்படவில்லை என்று சொல்வது நியாயமா? அதுவும் ஒரு முறை அல்ல, இரண்டுமுறை அத்தகைய நிலைமை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. ஒரு முறை அத்தனை கட்சிகளும் ஒருமித்து ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தினார்கள். இன்னொருமுறை அனைவரும் சேர்ந்து அல்ல, திராவிட முன்னேற்றக் கழகம் தனித்தே தமிழகத்திலுள்ள ரெயில்களை நிறுத்தும் போராட்டத்தில் ஈடுபடுவது என்கிற முடிவை எடுத்தது. ரெயில்கள் ஓடினால் அதனால் இங்கே ஏற்படுகிற கலவரம் சிங்களவர்களுடைய காதுக்கும் ஜெயவர்தனேயின் காதுக்கும் எட்டி, ஸ்ரீலங்கா தமிழர்களுக்கு ஆதரவாக நடத்தும் போராட்டம் மேலும் அங்குள்ள தமிழர்களை அவர்கள் நசுக்கக் கூடிய அளவுக்குப் போகாமல் அதைத் தடுக்கும் பொறுப்பு நமக்கு இருந்தது. இவர்களே ஒருவருக்கொருவர் முரண்பட்டிருக்கிறார்கள், ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்கிறார்கள் என்கிற தகவல் சிங்களவர்களுக்குப் போகக் கூடாது என்கிற வகையில், இந்த ஆட்சி அல்ல, தமிழகத்தில் இருக்கிற அரசியல்

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

கட்சிகள் எல்லாம் சேர்ந்து அல்ல, மக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அல்ல— தமிழக முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கிணங்க இரண்டாவது முறையும் தமிழகத்தில் ரெயில்கள் ஓட வேண்டாம் என்கிற முடிவை மத்திய அரசு அறிவித்தது. அதேநேரத்தில் அதற்கு முன்பு கேரளத்தில் அத்தனை எதிர்க் கட்சிகளும் சேர்ந்து பந்த் நடத்தினார்கள். அப்போதும் மத்திய அரசின் ரெயில்கள் ஓடக் கூடாது என்று தான் சொன்னார்கள். ஆனால் முழுக்க முழுக்க ரெயில்கள் ஓடின. அதுபோல் அதற்குச் சில நாட்கள் முன்பு பீகாரில் அதேமாதிரி நிலைமை ஏற்பட்டது. அங்கும் முழுக்க முழுக்க ரெயில்கள் எல்லாம் வழக்கம்போல் ஓடின. ஆனால் தமிழகத்தில் மட்டும் தான், இந்தப் பிரச்சினையின் தன்மையின் அடிப்படையில், அரசின் அணுகு முறையால் தமிழகத்தில் ரெயில்கள் ஒன்று கூட ஓடவில்லை. ஒரு கட்சி கேட்டுக்கொண்டது என்பதல்ல, ஒரு கட்சியின் முடிவை மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் புறக்கணிக்கின்றன என்கிற நிலையிலும், அது நடத்தும் போராட்டத்தில் வன்முறைக்கு சிறிதும் இடம் கொடுத்துவிடக் கூடாது, அந்த வன்முறை இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்குவதற்கு ஊக்கமளிப்பதாக அமைந்துவிடக் கூடாது என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் மத்திய அரசு அன்றைக்கு அப்படிப்பட்ட முடிவை எடுத்தது. சில பேர் இங்கே என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி முதன் முதலாக இந்தப் பிரச்சினை சம்பந்தமாக கூடி தன்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்ததுடன், பாரதப் பிரதமர் உடனடியாக இப்பிரச்சினை குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தது. டில்லியில் இருக்கின்ற ஸ்ரீலங்கா தூதர் அலுவலகத் திற்கு முன்பு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய பொதுச் செயலாளர்களான திரு. கருப்பையா மூப்பனார், திரு. ஸ்டீபன் மற்றும் திரு. சந்துலால் சந்திராகர் போன்றவர்களுடைய தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை சம்பந்தமாக தமிழகத்தைச் சார்ந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர், அது போல் கேரளாவைச்



1983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

சார்ந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர், அதுபோல் உத்தரப் பிரதேசத்தைச் சார்ந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுச் செயலாளர் இவர்கள் எல்லாம் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று காங்கிரஸ் கட்சியின் பலராகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். ஸ்ரீலங்காவின் செயலைக் கடுமையாகக் கண்டித்தார்கள். நாங்கள் இதிலே ஆதாயம் தேடவோ, போட்டி போடவோ வரவில்லை. எங்களைப் பார்த்து மற்றவர்களும் செய்தார்கள் என்று சொல்லவும் வர வில்லை. எனக்கு அது வேலையும் அல்ல. ஆனால் இதை வேண்டுமென்றே மறைத்து, இதை மட்டும் திரை போட்டு மறைத்துக் கொண்டு, மற்ற விஷயங் களைப்பற்றி மட்டும் பேசுவதிலே சிலர் மகிழ்ச்சியடைகிறார்கள். சிலர் எங்காவது ஒரு சம்பவம் நடைபெற்றால், அதை எப்படி தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று மற்றவர்கள் சந்தேகப்படும் அளவுக்கு, அல்லது அதற்கு இடம் கொடுக்கும் அளவுக்குச் செயல்படுகிறார்கள். அதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் கட்சியும் இடம் கொடுக்கக் கூடாது. அதற் கேற்ப ஒவ்வொருவரும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் செயல்பட வேண்டும்

(பிற்பகல் 12-40)

என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். தமிழகத்துடைய முதலமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக்கொண்டு டில்லிக் குச் சென்று பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தார்கள். அங்கே பிரதமர் அவர்கள் சொல்கிறார்கள்—

**The Prime Minister said that as a symbol of the Centre's sympathy and solidarity with Tamil Nadu all Centtal Government Offices will be closed on Tuesday, August 2nd. during the one-day bandh in the State. This is the first time ever that the Central Government is officially participating in a Bandh called by a State Government since it is aimed at focussing national attention on a sad event that transcends party politics and parochial considerations.**

இந்தியாவின் சரித்திரத்திலேயே முதல் முறையாக, இந்தப் புரட்சி நடந்தது. இந்த 'பந்த்'-ல் மத்திய அரசு கலந்துகொள்வது இதுதான் முதல் முறை. அதைச் செய்வதற்குக் காரணம், இந்திய நாட்டிலிருக்கிற அத்தனை மக்களுமே இந்தக் கொடுமையை உணர வேண்டும் என்பதுதான்.

இதற்குப் பிறகு, பிரதமர் அவர்கள் தொடர்ந்து சொல்கிறார்கள்—

"The Prime Minister promised that any attempt to internationalise this sad event by taking the issue to the United Nations or asking for a peace-keeping force would not serve any useful purpose. It might even set a bad precedent for the future by encouraging other countries to justify foreign intervention in similar situations".

அவர்கள் இருக்கிற சங்கடங்களைச் சொல்கிறார்கள். அதே நேரத்தில் இதற்காக மத்தியஸ்தம் வேண்டுமென்று கேட்கிறோம். அதற்காக ஐக்கிய நாடுகள் சபைக்குச் செல்ல வேண்டுமென்று கேட்கிறோம், இதிலே மத்தியஸ்தம் உருவாக்க வேண்டுமென்று, ஐ. நா. சபை தலையிட வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால், பாரதப் பிரதமர் அவர்களுடைய எல்லை, அவர்களுடைய ராஜதந்திரம், அவர்கள் செயலாற்றும் முயற்சியால், ஐ. நா. வின் உதவி இல்லாமலேயே பாரதத்தின் தூதர் மத்தியஸ்தத்திற்கு வருகிறார். அதில் இருக்கிற ராஜதந்திரம் என்னவென்றால், திரு. ஜெயவர்த்தனே மத்தியஸ்தத்திற்கு ஒத்துக்கொள்கிறார். அதை திரு. ஜி. பார்த்தசாரதி செய்கிறார். ஐ. நா. சபை வேண்டியதில்லை என்பதோடு மட்டுமல்ல, ஐ. நா. வினால் செய்ய முடியாத காரியத்தை என்னாலே செய்ய முடியும் என்று பாரதப் பிரதமர் அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார். அதை ஏற்றுக் கொண்ட திரு ஜெயவர்த்தனேயே. எந்த ஜெயவர்த்தனே—தமிழ்த் தலைவர்களைப் பார்க்கவே மாட்டேன், அவர்களுடைய உயிருக்குப் பாதுகாப்பு தரவே மாட்டேன், தமிழ் ஈழம் கேட்கிறவர்களா, இல்லையா என்பதுபற்றி எனக்குக் கவலையில்லை, அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் என் முன்னாலேயே வரக் கூடாது என்று சொன்ன திரு. ஜெயவர்தனேயை,—அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடனேயே பேச வைத்தது பாரதப் பிரதமரின் முயற்சி. இதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஐ. நா. வுக்குப் போகாமலேயே நடத்திக் காட்டிய இந்த அரும் காரியத்தை, மிகப் பெரும் காரியத்தை நம்மாலே மதிக்க முடிந்ததா? இல்லை. ஆனால் அங்கே சிங்களநாட்டு தமிழ்த் தலைவர்கள் அதை மதித்தார்கள். அதனால்தான் அவர்கள் சொல்கிறார்கள், இந்தியா தலையிட்ட பிறகுதான், இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சரும் அவரைத் தொடர்ந்து இந்தியத் தூதர் திரு. பார்த்தசாரதி அவர்களும் வந்த பிறகு தான், தமிழர்களுக்குப் பெருமளவுக்கு ஸ்ரீலங்காவில் பாதுகாப்பு கிடைத்தது. உயிருக்கு ஆபத்து நீங்கியது என்று மனம் திறந்து சொல்கிறார்கள் அந்த வார்த்தையை. அதிலே ஒரு பகுதியையாவது ஒரு வார்த்தையையாவது இங்கே யாராவது சொன்னார்களா என்றால், இல்லை.



சிங்களத்தில் அவதிப்பட்டவர்கள் சொன்ன அந்த வார்த்தையை இங்கே சிங்களத் தமிழர்களுக்காக வாதாடுகிறவர்கள், வாதாடுவதாகச் சொல்கிறவர்கள் சொல்லவில்லையென்றால், எவ்வளவு பொறுப்போடு இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம் என்பது மட்டுமல்ல, அதையும் தாண்டி வேறு எண்ணங்களோடு இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம் என்ற எண்ணத்தை மற்றவர்கள் மனதில் உருவாக்காமல் இருக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாம் கல்பமாக வடக்கு—தெற்கு என்று சொல்லிப் பழக்கப்பட்டவர்கள். அந்தப் பழக்கத்தின் காரணமாக, காஷ்மீரைப் பார், வங்காள தேசத்தைப் பார் என்று சொல்வோம். நான் இன்று கேட்கிறேன், சுதந்திரம் அடைந்த ஐந்தாண்டுகளுக்குள் புதுவை பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றது. அதற்கு நம்மால் உதவி செய்ய முடிந்தது. ஆனால் நாடு சுதந்திரம் அடைந்து 14 ஆண்டுகளுக்குப் பிறகும், மிகப் பெரிய கடும் சோதனைகளுக்குப் பிறகும், மாண்புமிகு துணைத் தலைவர் சொன்னதைப் போல, பெரும்பாலான சித்திரவதைகளை அனுபவித்த கோவா விடுதலை வீரர்கள், 14 ஆண்டுகள் அவதிப்பட்ட பிறகு, அறிஞர் அண்ணா அவர்கள் அயல் நாடுகளுக்குச் சென்றபோது, போப்பாண்டவரைச் சந்தித்து "எப்படியாவது போர்த்துக்கீசிய அரசுக்குச் சொல்லி, கோவாவுக்கு விடுதலை வாங்கித் தாருங்கள், அப்படியே விடுதலை வாங்குவது ஒரு பக்கம் இருந்தாலும், சித்திரவதைக்குள்ளாகிற கோவா விடுதலை வீரர்களுக்காவது சிறையிலிருந்து விடுதலை பெற்றுத் தாருங்கள்" என்று அண்ணா அவர்களே இந்தியாவின் பிரதிநிதியாக நின்று கேட்டதை நினைத்துப் பார்க்க வேண்டும். நமக்கு அந்த எண்ணம் வரவில்லையே. தேசிய அளவில் எண்ணுகிற எண்ணத்திற்கே இங்கே தமிழகத்தில் ஒரு தடை வந்து விட்டதோ அல்லது அதை மறக்க முயற்சிக்கிறோமோ, தெரியவில்லை. அப்படிப்பட்ட முயற்சி சரித்திரத்திற்கு நன்மையாக அமைந்துவிடாது.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், மீண்டும் மீண்டும் ஒரு வாதம் வந்து கொண்டிருப்பதால், அதைத் திரும்பச் சொல்வது எனது கடமை. இந்தச் சம்பவங்களை பிரதமர் கண்டித்தாரா, பிரதமர் என்ற Condemn

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

வார்த்தையை ஏன் பயன்படுத்தவில்லை?" என்று நேற்றும் இன்றும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். நேற்றைய தினம் பிரதமரின் உரையின் ஒரு பகுதியைப் படித்தேன். இன்னொரு பகுதியை இப்பொழுது படித்துக் காட்டுவது பொருத்தமாயிருக்கும்.

"I asked the President about the report that Sri Lanka had approached other Governments. His reply was that America has promised some wheat and U.K. some money."

என்று பிரதமர் அவர்கள், திரு. ஜெயவர்த்தனே என்ன டெலிபோனில் சொன்னார் என்பதை ஒப்புதல் வாக்குமூலமாக வாங்கியிருக்கிறார். அதையும் இந்த நாட்டுக்கு எச்சரிக்கையாகச் சொல்லியிருக்கிறார்.

"I pointed out to the President that developments in Sri Lanka affect us also. In this matter, India cannot be regarded just as any other country. Sri Lanka and India are the two countries which are directly concerned. Any extraneous involvement will complicate matters for both of our countries."

என்றால் என்ன அர்த்தம்? "இந்தப் பிரச்சினை உங்களுக்கும் எங்களுக்கும் சிக்கலை உண்டாக்கி விடும். இது வளர்ந்தால் நீயும் நானும் பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வோம். அதிலிருந்து கோதாவில் இறங்க வேண்டியிருக்கும்" என்றுதானே அர்த்தம். அடுத்தது எனக்கும் உனக்கும் சண்டை என்றுதானே அர்த்தம். கண்டிப்பதைத் தாண்டி, 'விளைவு'களை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று பிரதமர் அறிவிப்பதை விட, வேறு என்ன செய்ய முடியும்? வார்த்தைகளில் நாசூக்கு இருக்கிறது. ஆங்கில வார்த்தையின் புலமை காரணமாக, வெளிப்படுத்துகிற விதத்தில் ஒரு நாசூக்கு இருக்கிறது. "கண்டனம்" என்ற வார்த்தையை ஏன் சொல்லவில்லை என்றால், என்ன அர்த்தம்? என்ன நியாயம் இருக்க முடியும்? அந்த வார்த்தை இல்லையே என்பதற்காக ஒரு போராட்டம். இல்லையே என்பதற்காகவே அவர் தமிழ் விரோதி, இல்லையே என்பதற்காகவே ஸ்ரீலங்கா தமிழனைக் காட்டிக் கொடுக்கிறார், காட்டிக் கொடுக்கிறது இந்திய அரசு என்ற வாதம் வருமானால், அதிலே என்ன நியாயம் இருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். ஒரு எச்சரிக்கையாக பிரதமர் அந்த நேரத்தில் சொல்கிறார்.

"Forces of de-stabilisation are at work. Hence, we must make every effort to minimise any opportunity for feorign elements to weaken us."



1983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

திரு. ஜெயவர்த்தனேக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் எச்சரிக்கையாகவே பாரதப் பிரதமர் சொல்கிறார். ஆசியாவிலேயே மக்களால் அமைக்கப்பட்ட, ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட, நிலைத்த ஆட்சிகளை சீர் குலைப்பதில் வல்லரசுகள் வேகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படி ஈடுபடும் போது, அவர்கள் படையெடுத்து ஆட்சிகளைக் கலைக்கத் தேவையில்லை. மாறாக உள்ளேயே ஊடுருவல்காரர்களை விட்டு குழப்பத்தை, கொந்தளிப்பை, வன்முறைச் செயல்களைப் பரவவிட்டு ஆட்சி இயந்திரமே செயல்படாமல் செய்து, பொருளாதாரக் குழப்பங்களைச் செய்து, ஆட்சியைப் பலவீனப் படுத்தி, தங்களை மீறிப் போகாமல் வைத்துக் கொள்கிற வல்லரசுகள், உலகத்தில் கழுகுக் கண்களுடன் காத்துக் கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 12-50)

அதை நம்முடைய பாரதப் பிரதமர் சொல்கிறார். திருமதி இந்திரா காந்தி அவர்கள் சொல்லுகிறார். திரு. ஜெயவர்த்தனேயைப் பார்த்து எச்சரிக்கிறார். "உங்களுடைய நாட்டில் இத்தகைய நிலைமைகள் உருவாவதன் மூலமாக இத்தகைய விளைவுகள் ஏற்படும். இந்த நிலைமை நிலவுகிறது, ஆகவே இதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும்." என்று விடப்படும் எச்சரிக்கையின் பொருள்தான் என்ன? இப்படிச் சொல்லுகிறவரைப் பார்த்துத்தான், இப்படியெல்லாம் எச்சரிக்கை விடுபவரைப் பார்த்துத்தான் நாம் திரும்பத் திரும்ப "கண்டித்தார்களா, கண்டித்தார்களா?" என்று கேட்கிறோம்.

அவர் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்.

"She said that imperialism no longer invaded countries with armies. It has changed its strategies and now exerted political, economic and other kinds of pressures."

இந்த ஆண்டு இந்திய சுதந்திர நாளன்று பிரதமர் அவர்கள் பேசிய உரையில் ஸ்ரீலங்காவைப்பற்றிப் பேசுகிறபோது கடைசியாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இவை. இது ஸ்ரீலங்கா அரசுக்கு எச்சரிக்கையல்லவா? கண்டனமல்லவா? ஸ்ரீலங்கா அரசு வழி தவறி நடந்துவிட்டது. இதன் விளைவுகள் இப்படி இப்படி இருக்கப் போகின்றன என்று வன்மையாகக் கண்டித்துச் சொல்கிறார். இத்தனைக்கும் பிறகுதான் நாம் கேட்கிறோம் "எங்கே" "ஏன்" "எப்படி" என்று. இவ்வளவுக்கும் பிறகுதான் நம்முடைய

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

வார்த்தைகள் வேகமாக வந்து கொண்டிருக்கின்றன. கடைசியாக இன்னொன்றையும் பாரதப் பிரதமர் அவர்கள் சொல்கிறார். "நீங்கள் இந்தப் பிரச்சினையை விரைவாகவும் முழுமையாகவும் தீர்க்காவிட்டால், இலங்கையில் இருக்கிற மிதவாதிகளும் தீவிர வாதிகளாக மாறிவிடுவார்கள்". இது எவ்வளவு பெரிய தலையீடு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஸ்ரீலங்கா நாட்டினுடைய ஆதிபத்திய உரிமையில் தலையிட மாட்டோம் என்று சொல்லுகிற நாம்தான் இதைச் சொல்லுகிறோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். "உங்களுடைய நாட்டின் மிதவாதிகளும் பயங்கரவாதிகளாக மாறுகிற நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது. எனவே சீக்கிரமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவை, முடித்து வை" என்று சொல்லுகிற வலிமை, வல்லமை இந்தியாவுக்கு இருக்கிறது. இது ஏதோ இந்திரா காந்தி இந்தியாவின் பிரதமர் என்பதால் மட்டுமல்ல, அதற்கு மேலாக அவர் உயர்ந்து நிற்பதால் உலகத் தலைவர்களையும் அவரால் ஈர்க்க முடியும் என்ற காரணத்தால், அந்த எச்சரிக்கையை அவராலே விட முடிகிறது. அதுதான் தமிழர்களுக்குப் பாதுகாப்பாக அமைகிறது. அதுதான் சிங்களத்தில் ஏற்பட்டிருக்கிற வன்முறையை அடக்குவதற்கு உதவுகிறது. அந்த எச்சரிக்கைதான் இன்றையதினம் தமிழர்களுடைய பிரதிநிதியாக தமிழர் ஒருவரையே ஸ்ரீலங்காவிற்கு அனுப்பி வைத்துப் பிரச்சினையைப் பேசித் தீர்த்து வைக்க உதவி செய்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த எச்சரிக்கைதான் சிங்கள அரசையே நம்முடைய ஆலோசனையை, இந்திய அரசின் ஆலோசனையை, ஏற்றுக்கொள்ள வைக்கிறது என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, ஐக்கிய நாடுகளின் அவையில் நம்முடைய மாநிலத்தின் அமைச்சர் அவர்கள் சென்று ஆற்றிய உரையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டியது என்னுடைய கடமையாகும். எனக்குத் தனித்த முறையில் மிகவும் வேண்டியவர். என்னுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர். எனக்கு மிகவும் நெருங்கியவர். அவர் இன்றையதினம் அப்படிப்பட்ட பொறுப்பில் ஐ.நா. சென்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று சொல்வது சரி. ஆனால் எனக்கு மிகவும் நெருங்கியவர் என்று சொல்வதில் வேறு ஏதோ அர்த்தம் இருப்பதாகத் தெரிகிறதே!



1983 அக்டோபர் 29]

**திரு. க. இராமமூர்த்தி:** நெருங்கியவர் என்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் எனக்கு எப்படி நெருங்கியவரோ அதைப்போல் அமைச்சர் அவர்களும் நெருங்கியவர். அவர் படித்த காலத்திலிருந்து நன்கு தெரிந்தவர். இத்தனைக்கும் மேலாக மாண்புமிகு அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்கள் ஐ.நா. சபையில் ஆற்றிய உரையைப் பார்க்கும்போது, பின்னால் ஒன்றை மிகவும் பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்க முடிகிறது. முதன் முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் உள்ள யேல் பல்கலைக் கழகத்திற்குச் சென்றபோது, அங்கேயுள்ள அத்தனை பத்திரிகை நிருபர்களும் அவரைப் பார்த்து துருவித் துருவி கேள்விகளைக் கேட்டார்கள். இந்தியாவிலேயே தன்னுடைய சொந்த வலிமையால் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஒரு மாநிலத்தில் தன்னுடைய ஆட்சியை அமைத்துக் கொண்ட ஒரு கட்சியின் தலைவர், ஒரு மாநில முதல்வர், பிராந்திய அளவில் செயல்படுகிற ஒரு கட்சித் தலைவர், ஒரு மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று வந்திருக்கிறார், இவர் காங்கிரஸ் கட்சியைப்பற்றி, காங்கிரஸ் ஆட்சியைப்பற்றி, இந்தியாவைப்பற்றி என்ன சொல்லப்போகிறார், எதை அவர் வாயிலிருந்து சொல்ல வைக்க முடியும் என்று மிகுந்த ஆர்வத்தோடு துருவித் துருவி அவரிடம் கேள்விகளைக் கேட்டார்கள். ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் அப்போது ஒன்றைத் திட்டவட்டமாக, அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார். "இந்தியாவினுடைய அயல்நாட்டுக் கொள்கை என்பது மிகவும் சீரானது. சிறப்புக்குரியது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன், ஆதரிக்கிறேன். அதுமட்டுமல்ல இந்தியாவுக்கு வலிமையான, வல்லமையான, நிரந்தரமான, நிலையான ஆட்சியைத் தருகிற தகுதி இந்தியாவினுடைய பிரதமருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் தான் இருக்கிறது." அங்கே இருக்கிற நிருபர்கள் திரும்பத் திரும்பக் கேட்டார்கள் "நீங்கள் அந்தக் கட்சியை உங்கள் பகுதியில் அகற்றிவிட்டீர்களே" என்று. "அது எங்களுடைய மாநிலப் பிரச்சினை. அது வேறு. ஆனால் இந்தியாவில் இருக்கிற நிலைமை வேறு" என்று ஆணித்தரமாகச் சொல்லிவிட்டுத் திரும்பியபோது, தமிழக முதலமைச்சராகச் சென்ற அறிஞர் அண்ணா அவர்கள் இந்தியாவின் ஸ்டேட்ஸ்மேனாகத் திரும்பினார் என்பதைப் பெருமிதத்தோடு எண்ணிப் பார்க்கிறேன். இந்தியாவில் உள்ள அத்தனை மக்களும் பிராந்தியக் கட்சி ஒன்றின் தலைவர் இந்திய தேசிய உணர்வோடு செயல்படுகிற தேசத் தலைவர்களில் ஒருவராகக் காணப்படுகிறாரே என்று வியப்போடு மட்டுமல்ல, மகிழ்ச்சியோடு அவரை ஏற்றுக்கொண்டார்கள்.

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

இன்றைக்கு ஏறத்தாழ அந்த நிலைமைக்குத்தான் நம்முடைய அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் ஐ. நா. சபையில் தமிழர்களுடைய பிரச்சினையை முன்வைத்துப் பேசினார் என்பது மட்டுமல்ல, இந்த அரசின் பிரச்சினையை எடுத்து முன் வைத்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, இந்த மாநிலத்தின் பிரச்சினையை எடுத்து வைத்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே நடக்கிற வன்முறைகளைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார் என்பது மட்டுமல்ல, அதற்கு மேலாக இந்தியாவின் பிரதிநிதியாக, பாரதப் பிரதமரின் வாயாக, அவருடைய ஒலியாக, பாரதத்தின் கொள்கையை ஐ. நா. வில் எதிரொலிப்பவராகச் செயல்பட்டிருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப் பேசினாரா, அப்படிப் பேசினாரா என்பதல்ல பிரச்சினை, பலமுறை பல எண்ணங்களையெல்லாம் சுமந்துகொண்டுதான் நாம் இங்கே வருகிறோம். "இதையெல்லாம் எப்படியாவது சொல்லிவிட்டு வந்து விடுங்கள்" என்றுதான் நம் நண்பர்களும் நம்மை அனுப்பி வைக்கிறார்கள். ஆனால் இங்கே நமக்கிருக்கிற லிமிடேஷன் காரணமாக எவ்வளவு வேகமாக, எவ்வளவு அதிகமாக எப்படி நம்மாலே அந்தக் காரியத்தை ஆற்ற முடிகிறது என்பதை நாமே பார்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே இத்தகைய நிலைமையில் தமிழர்களுடைய பிரச்சினையை, உலக நாடுகள் முழுவதும் முறையாக அறியச் செய்வதில் இந்த அரசின் அங்கமாக இருக்கிற ஒரு அமைச்சர் இந்தியாவின் தூதராக இருந்து, இந்தியாவினுடைய பிரதிநிதியாக இருந்து, இன்றையதினம் அந்தக் காரியத்தை ஐ. நா. வில் செய்திருக்கிறார். அந்த உலக அரங்கில் முதலில் சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்களின் குரல் ஒலித்தது. அதற்குப் பிறகு இந்தியாவின் பிரதிநிதியாக திரு. கோபாலசாமி ஐயங்கார் அவர்களின் குரலும் அங்கே ஒலித்ததுண்டு. மீண்டும் ஒரு தமிழருடைய குரல் அங்கே ஒலிக்கிறது என்கிறபோது, நான் அதைப் பெருமையோடு இங்கே நினைவுகூர விரும்புகிறேன். அதைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதில் யாருக்கும் எந்தவிதமான வேறுபாடும் இருக்க முடியாது. கட்சியில்தானே நாம் மாறுபடுகிறோம். காப்பாற்றுவதில் நாம் மாறுபடவில்லையே, இந்தியர்கள் என்ற உணர்வில் மாறுபடவில்லையே? அந்த உணர்வோடுதானே செயல்படுகிறோம். ஆகவே இன்றைக்கு எடுத்திருக்கிற நடவடிக்கையைப் பொறுத்த வரை, இந்த அரசும், அதைப் போலவே மத்திய அரசும் சேர்ந்து எடுத்திருக்கிற நடவடிக்கையைப் பொறுத்த வரை, ஏற்பட்டிருக்கிற பிரச்சினையை வேகமாகத் தீர்ப்பதற்குத் துணை போகும் என்று நான் உறுதியாக நம்பு



1983 அக்டோபர் 29] [திரு. க. இராமமூர்த்தி]

கிறேன். உலக மக்கள் மத்தியில் இலங்கையின் அநாகரிகத்தை, காட்டுமிராண்டித் தனத்தை மிகத் தெளிவாக எடுத்து வைப்பதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் மீண்டும் திரு. பார்த்தசாரதியை அழைக்கவே மாட்டேன் என்று சொன்ன திரு. ஜெயவர்த்தனே "இப்போது எப்படியாவது திரு. பார்த்தசாரதி அவர்களை அனுப்பி வையுங்கள், மீண்டும் பேசுகிறேன்" என்று சொல்வதற்கான மாற்றத்தை உருவாக்கி வைப்பதில் இந்த அரசும் மத்திய அரசும் வெற்றி கண்டிருக்கின்றன என்பதில் நான் உண்மையிலே மகிழ்ச்சியடைகிறேன்.

அதற்கு மேலாக இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், மேலும் எப்படிப்பட்ட முறைகளில் அணுக வேண்டும் என்பதில், "நான் வழி அடைத்து விட்டேன், கதவை அடைத்துவிட்டேன், யாருடைய பேச்சையும் நான் கேட்க மாட்டேன்" என்று சொல்லுகிற வலிமையும் ஆட்சித் திறனும் இருந்தாலும் கூட, அதையும் தாண்டி, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், "நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். இதைக் குறித்து என்னோடு விவாதியுங்கள், என்னோடு கலந்து பேசுங்கள்" என்று இன்னமும் சொல்லுகிற ஜனநாயக உணர்வைக் கொண்டிருக்கிற ஒருவரை நாம் பாரதத்தின் பிரதமராகக் கொண்டிருக்கிறோம். எனவே அந்த உணர்வின் அடிப்படையில் ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுடைய பிரச்சினைக்குப் பரிகாரம் காண முடியும் என்ற உறுதியும் நம்பிக்கையும் இருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல. ஒரு சிறு வேண்டுகோளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் விடுக்க விரும்புகிறேன். என்ன காரணத்தாலோ 16 பேர்களுக்கும் அதிகமாக நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் இது வரை இந்தப் பிரச்சினை குறித்து பாரதப் பிரதமர் அவர்களைச் சந்திக்கவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்தாலும் கூட, எப்போதாவது —இந்த வார்த்தையைச் சொல்லவில்லை, அந்த வார்த்தையைச் சொல்லவில்லை என்று வேகமாக, மிகவும் உரிமையோடு கோபித்துக் கொள்வதைப் போல்—எப்போதாவது நேரம் ஒதுக்கி பாரதப் பிரதமர் அவர்களைப் பார்த்து இந்தப் பிரச்சினையில் இப்படியெல்லாம் தீர்வு காண வேண்டும் என்று விவாதிக்க வேண்டும். அதற்குத் தன்னுடைய அருமையான நேரத்

[திரு. க. இராமமூர்த்தி] [1983 அக்டோபர் 29

தில் கொஞ்சத்தையாவது ஒதுக்கி வைத்து அவரைச் சந்திக்க வேண்டும். அப்படிச் செய்வது அங்கேயுள்ள தமிழர்களுக்கும் இங்கேயுள்ள மக்களுக்கும் பெரிதும் துணை செய்யும் என்ற காரணத்தாலே, அப்படிச் செய்ய வேண்டும் என்று இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது நாம் மேற்கொண்டிருக்கிற அனைத்து முயற்சிகளும் நல்ல பலனை அளிக்கத் தக்க சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றன என்ற நம்பிக்கை பல பேருக்கு வந்திருக்கிறது. அது மேலும் வளருவதற்கு நம்முடைய செயல் திறனும், மத்திய அரசினுடைய துணையும், செயலும், ஆண்டவனுடைய அருளும் இருக்க வேண்டுமென்று வேண்டி அமைகிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அரசின் திருத்தத்தை முன்மொழிந்து, அவையின் முன்னவர், அவர்கள் விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுவார்கள்.

*** மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** (மாண்புமிகு முதலமைச்சர் சார்பில்) தலைவர் அவர்களே, அரசின் தீர்மானத்திற்கு கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்.

### பத்தி—உ

"உடனடியாகத் தீவிரமான செயல்முறைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இம்மேலவை கேட்டுக்கொள்வதோடு" என்ற சொற்றொடருக்குப் பின்னர் "உலக மக்களின் ஆதரவு, இந்திய மக்கள் அனைவரின் ஆதரவு, இலங்கையிலுள்ள நேர்மையான சனநாயகச் சக்திகளின் ஆதரவு ஆகியவற்றைத் திரட்டுவதற்கு துணை செய்யவேண்டும் என்றும் கோருவதோடு" என்ற சொற்றொடரையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

### பத்தி—ஊ

"இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும்" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள "பிரச்சனையைத் தீர்த்துவைக்கும்" என்ற சொற்றொடரை நீக்கிவிட்டு, அந்த இடத்தில், "தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும்.



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

### பத்தி—ஐ

"குடியுரிமை—வாக்குரிமை—தொழிலுரிமை—வாழ்வுரிமை" என்ற சொற்களுக்குப்பின்னர் "மொழிவுரிமை" என்ற சொல்லை இணைத்துக் கொள்ளவேண்டும். இறுதியில் "அதனைப் பின்பெறச்செய்ய" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள "வேண்டும் என்று வற்புறுத்துகிறது" என்ற சொற்றொடருக்கு மாற்றாக "இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இம்மேலவை கேட்டுக் கொள்கிறது" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

### பத்தி—ஓ

"இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத் தக்க" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, "முறையில்" என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் "முறையிலும், இலங்கைவாழ் தமிழர்க்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நல்ல எண்ணமும், நல்லுறவும், நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும். இறுதியில் உள்ள "இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயலவேண்டும் என்று" என்ற சொற்றொடர்க்குப் பின்னர் உள்ள "இம்மேலவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது" என்ற சொற்றொடருக்கு மாற்றாக, "இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இம்மேலவை கேட்டுக் கொள்கிறது" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும்.

### பத்தி—ஔ

"இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும்" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள, "என்று" என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில், "என்றும் அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ள இலங்கைவாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குச் சென்று குடியேற வழிவகை செய்யவேண்டும் என்றும், அவர்கள் இழந்த சொத்துக்களையும், வீடுகளையும் திரும்ப மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை மலைத்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள முழுக் குடியுரிமையும், வாக்குரிமையும், வாழ்வுரிமையும் பெற வழிவகை காண வேண்டும் என்றும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும்."

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயராலே தீர்மானத்தை இங்கே முன்மொழிந்து மாண்புமிகு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கின்ற இந்த விவாதத்தினுடைய இறுதியில் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முன்னாலே வழங்கப்பெற்றிருக்கிற திருத்தங்களையும் அந்தத் தீர்மானத்தோடு இணைத்து ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காக உங்களால் அனுமதிக்கப்பட்டு இந்த அவையின் முன்னால் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லுகிற வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

கடந்த இரண்டு நாட்களாக இந்த அவை, நான் அறிமுகப்படுத்தப்பட்ட போது எடுத்துக்காட்டியவாறு முதல் முறையாக நம்முடைய தமிழ் மக்கள் இரத்தத்தின் இரத்தமாக வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் ஸ்ரீலங்காவில் கொலை வெறியர்களாலே கொடுமைப்படுத்தப் படுகிற, உயிர் பறிக்கப்படுகிற அந்தக் கொடுமையான சூழ்நிலையைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு வாழ, வழி வகுப்பதற்கும் எதிர்காலத்திலே இப்படி ஏற்படாமல் தடுப்பதற்கும் தமிழகத்திலே வாழ்கிற ஐந்து கோடி தமிழக மக்களும் உலகத்தின் பல்வேறு பாகங்களில் வாழ்கிற தமிழ் பேசுகின்ற மக்களும் உறுதுணையாக இருப்போம் என்று எடுத்துக்காட்டுகிற வகையிலே இந்த அவையிலும் இந்தத் தீர்மானத்தை விவாதித்து நிறைவேற்ற இருக்கிறோம்.

இந்தத் தீர்மானத்தைப்பற்றிப் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த, பிரிவுகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் ஒரு இலட்சியத்திற்காக எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்களாக இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு இலட்சியத்திற்காக எடுத்து வைக்கப்படுகிறபோது, அந்த இலட்சியத்தை அடைகிற வழிகளிலே மாறுபாடுகள் அல்லது வேறுபாடுகள் அவரவர்களுடைய சொந்தக் கருத்துக்களையொட்டியும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிற சில முறைகளையொட்டி



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

யும் வரக்கூடும் என்பதை இந்த மாமன்றம் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே பல்வேறு கருத்துக்களைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் தமிழக அரசு என்ன செய்திருக்க வேண்டும், இந்திய அரசு எப்படி நடைபெற்றிருக்க வேண்டும். எப்படி கொள்கைளை அறிவித்திருக்க வேண்டும், எப்படி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதைப்பற்றி அவரவர்கள் தங்கள் கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அதிலே ஒவ்வொரு கட்சிக்கும் சொந்தக்காரர்களாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தக் கட்சியினுடைய அடிப்படையையொட்டி கருத்துக்களை எடுத்து வைத்ததும், அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கின்ற மற்ற உறுப்பினர்கள் அதற்கு விவரமாக விளக்கம் அளித்ததையும் இங்கே நாம் பார்த்தோம். ஆகவே அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், அதிக நேரம் விளக்க வேண்டிய சூழ்நிலை இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்ரீலங்காவிலே நடைபெற்ற கொடுமைகள், கோரக் கொலைகள், மனித நாகரீகத்தையே அழிக்கின்ற கொடுஞ்செயல்களை ஒரு அரசாங்கம் என்கிற அமைப்பிலே இருந்துகொண்டு அவர்களின் துணையோடு இராணுவமும், சிங்கள வெறியர்களும், காவல் துறையினரும் ஆயிரக்கணக்கில் மனிதர்கள்—நாம் துடிக்கின்றோமே அதற்குக் காரணமாக உள்ள தமிழர்களை—அதிலும் தேடிப் பார்த்து தமிழ் மக்களைக் கொன்று குவிக்கின்ற, ஒரு இனத்தையே அழித்துவிடுகின்ற, கொலை வெறியோடு கொடுஞ்செயல்களிலே ஈடுபடுகின்ற கொடுமையைக் கண்டிப்பதற்கும் மேலும் இது போன்ற கொடுமை நடைபெறாமல் தடுப்பதற்கும் நாம் இந்தத் தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற முன்வந்திருக்கிறோம். அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தக் கருத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும் என்பதைத் தான் இந்தத் தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் சார்பிலே இங்கே முன்மொழிந்தபோதும் இப்போதும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு கொடுமையான நிகழ்ச்சி இத்தனை ஆண்டுக் காலமாக நடந்து கொண்டு வந்தது என்பதைப்பற்றி இங்கே எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். நான் அதை முதலிலேயே குறிப்பிட்டுக் காட்டினேன். இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மீண்டும் ஒரு முறை அதைத் தொகுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே ஸ்ரீலங்காவிலே திட்டமிட்டு தமிழ் மக்களை அழிப்

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

பதற்கு, ஒழிப்பதற்கு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன என்பதை நம்மாலே இன்றைக்கு உணர முடிகிறது. ஆனால் நீண்ட காலமாக இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஒரு நிகழ்ச்சியில் தமிழகம் எப்படி அதற்கு எதிராகச் செயல்பட்டது அல்லது அங்கே அழிக்கப்படுகிற தமிழ் இனத்திற்கு ஆதரவாக முன் வந்தது என்ற வரலாறை உறுப்பினர்கள் அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். இந்த விவாதத்தை நடத்துவதற்கு ஒரு மூன்று மாத காலம் கழித்து சாவதானமாக வழக்கம் போல நடைபெறுகிற கூட்டத்தைக் கூட்டி இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களிலே சிலர், குறிப்பாக நம்முடைய உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்காலிங்கம் அவர்கள், மிகுந்த வேதனையோடு தெரிவித்தார்கள். அதற்காக சில விளக்கத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. திண்டிவனம் இராம மூர்த்தி அவர்கள் எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே தலைமை ஏற்றுக்கொண்டிருக்கிற மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் போன்றவர்கள் அந்த நேரத்திலே என்ன கருத்துக்களை அந்தக் கூட்டத்திலே எடுத்து வைத்தார்கள் என்பதை இங்கே நினைவுபடுத்தினார்கள். ஜூலை 24 அல்லது 25 ஆம் தேதி ஒரு இரண்டு நாட்களுக்குள் அங்கே இந்தக் கொடுமைகள், உலகம் கண்டிராத கொடுமைகள் தமிழ் இனத்திற்கு இழைக்கப் படுகின்றன என்ற செய்தி வந்தவுடனே, தமிழ் இனத்தின் தலைவராக விளங்கு கிற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வார்த்தையை இந்த மன்றத்திலே பயன் படுத்த நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று நினைக்கிறேன். நன்றி தெரி விக்க வேண்டுமா, பாராட்டு தெரிவிக்க வேண்டுமா என்று கேட்டாலும் அவர் எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் இலக்கியங்களாக இடம் பெற்றுவிட்டன என்பதை, தலைவர் அவர்களே, அருள்கூர்ந்து உங்கள் மூலமாக, இந்த அவைக்கும், இந்த நாட்டுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். செய்தி கிடைத்தவுடனே முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமரோடு தொடர்பு கொண்டு



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

டெலக்ஸ் செய்தியைக் கொடுத்து உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நட வடிக்கை என்னவென்று அவர்கள் கருதினார்களோ அந்தக் கருத்தை இந்தியப் பிரதமருக்குத் தெரிவித்தார்கள். அடுத்த நடவடிக்கையாக அமைச்சரவையைக் கூட்டினார்கள். அருள்கூர்ந்து, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவையைக் கேட்டுக்கொள்கிறேன். ஸ்ரீலங்காவில் நடைபெற்றக் கொடுமை கள் தொடர்ந்து 35 ஆண்டுகாலமாக நடைபெறுவதாகக் குறிப்பிட்டார்கள். தொடர்ந்து நடைபெற்ற இந்தக் கொடுமைகளைக் கண்டித்து. ஒரு முறை தான் எடுத்துக் காட்டியதைப் போல, 1952 ஆம் ஆண்டிலே சட்டமன்றப் பேரவையிலே நிறைவேற்றிய தீர்மானத்தைத் தவிர, இதற்காக ஒருமுறை யாவது அமைச்சரவையைக் கூட்டி கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிய தாக ஒரு வரலாறு உண்டா என்பதை அருள்கூர்ந்து, தலைவர் அவர்களே, உங்கள் மூலம் இங்கே பாராட்டலாமா என்று கேட்ட உறுப்பினர்கள் தங்களுடைய இதயத்தைத் தொட்டுப் பார்த்துச் சொல்ல வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அமைச்சரவை கூடி, அந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பு கிறது. ஒரு மாநிலத்தினுடைய அமைச்சரவை, அமைக்கப்பட்டிருப்பது ஒரு கட்சியினுடைய அமைச்சரவையாக இருக்கலாம். ஆனால் ஆளுநராலே பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்ட பிறகு, 5 கோடி தமிழ் மக்களுக்கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற அமைச்சரவை, 5 கோடி தமிழ் மக்களுக் கும் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள்—உறுப்பினர்கள் அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும்—கண்டனத் தீர்மானத்தை நிறை வேற்றி, அடுத்த நடவடிக்கை என்ன என்று கேட்கிறபோது, "உடனடியாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி அங்கே தமிழன் செத்துக்கொண்டிருக்கின்றான். அங்கே கொலை வெறி தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது, என்பதால் முறை யாகச் சட்ட மன்றத்தைக் கூட்டி அவரவர்களுடைய கருத்துக்களை, விரும்பு கின்ற கருத்துக்களை எல்லாம், சட்டமன்றத்திலே உரிமையைக் கொடுத்திருக் கின்ற காரணத்தினாலே, எதைப்பற்றியும் பேசலாம், அப்படிப் பேசிக்கொண்டி ருந்தால் நிலைமை தீர்ந்துவிடும்" என்று எண்ணியபோது, தமிழகத்தினுடைய தலை மகன், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பாநிலத்திலே இருக்கின்ற 30-க்கும் மேற்பட்ட கட்சிகளை, இந்தச் சட்ட மன்றப் பேரவை யிலேயும், மேலவையிலேயும் இடம்பெற்றிருக்கின்ற கட்சிகள், இங்கே இடம் பெறாமல் வெளியிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற கட்சிகள், நீங்கள் யாருடைய சார்பிலே இங்கே வந்து பேசுகின்றீர்களோ, அந்தக் கட்சிகளை,

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

அந்தக் கட்சிகளுக்குரிய தலைவர்களையெல்லாம் அழைத்து 27 ஆம் தேதி, 28 ஆம் தேதி ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தினார்களே. இதற்கு முன்னால் இலங்கைத் தமிழன் செத்துக்கொண்டிருந்தானே, அவர்கள் 50 பேர்களாக இருக்கலாம் அல்லது 15 பேர்களாக இருக்கலாம். அன்றைக்கும் கற்பழிக்கப் பட்டார்கள் தமிழ்ப் பெண்கள். அன்றைக்கும் குத்திக் கொலை செய்யப்பட்டார்கள் தமிழர்கள். அன்றைக்கும் உலகத் தமிழ் மகாநாட்டைத் தான் நடத்தினார்கள், ஈழத் தமிழர்கள். அதற்குள்ளே இராணுவம் புகுந்து கொன்று குவித்ததே. அன்றைக்கும் தமிழகத்திலே அமைச்சரவை இருந்ததே. தமிழக அமைச்சரவை என்று பெருமையோடு இருந்ததே. அன்றைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி எந்த முடிவுகளைப் பற்றியும் விவாதிக்கவில்லை. இப்போது, தமிழ் இனத்தின் தலை மகன், தமிழ்த் தாயின் தலை மகன், பேரறிஞர் அண்ணாவினுடைய இதயக் கனி, டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தானே அவ்வளவு பேரையும் வாருங்கள் என்று ஆர்ப்பரித்து எழுந்து நின்று அழைத்தார்கள், என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். சொல்லுங்கள், "உண்ணாவிரதம் இருக்கவேண்டுமா? சாகும் வரை இருக்கிறேன். இல்லை ராஜிநாமா செய்துவிட்டால், ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை தீரும் என்றால், கூண்டோடு ராஜிநாமா செய்வோம்" என்றார்கள். அப்படிக் கேட்டார்களே. "முன்னாள் முதல்வர், எதிர்க் கட்சித் தலைவராகப் பணியாற்றியவர்கள், சட்டமன்றப் பேரவையிலே இன்றைக்கு இல்லையே" என்று நம்முடைய பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் வருந்தினார் என்று இங்கே பேசிய துணைத் தலைவர் அவர்கள் வருந்தினார்களே. அந்த இரக்கத்தை எடுத்துக்காட்டினார்களே. அந்த இனிய இதயம் படைத்தவர் அன்றைக்கு முன்னாள் முதல் அமைச்சர் அவர்களை அழைத்தார்கள். கலந்துகொள்ளாமல் இருந்த முன்னாள் முதல் அமைச்சர் அன்று வந்தார்கள் என்ற உடனே மனம் மகிழ்ந்து, வரவேற்று, அவருடைய ஆலோசனைகளைக் கேட்டார்கள். தீர்மானங்களைத் திருத்துங்கள் என்று சொன்னார்கள். "மத்திய அரசுக்கு நாம் என்ன சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள். நீங்கள் அதைத் தயாரியுங்கள்" என்று சொன்னார்கள்.

"அந்த மெமோராண்டத்தை உங்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கிறோம். "நீங்களும் திருத்துங்கள்" என்று கேட்டார்களே. எல்லாக் கட்சிகளுடைய பிரதிநிதிகளும் கூடி அடுத்த இரண்டு நாட்களுக்குள்ளே இந்தியப் பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டது. அமைச்சரவை இரண்டாம் தேதி அன்று தமிழகமே வியக்கின்ற அளவுக்கு ஒரு



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

கண்டன அர்த்தாலை நடத்த வேண்டும் என்று முடிவு எடுத்து, அந்த முடிவை அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் முன்னால் வைத்தது. அதை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். தமிழகத்தினுடைய வரலாற்றிலே இல்லாத அளவுக்கு எல்லா எதிர்க் கட்சிகளும் கலந்துகொண்டன என்ற சிறப்பையும் நாம் இதிலே இணைத்துக்கொள்கிறேன். இதைவிட மிகப் பெரிய சிறப்புத்தான் இந்திய அரசும் இதிலே கலந்துகொண்டது என்பது. சட்டபூர்வமாக எதிர்க் கட்சிகளும் கலந்துகொண்டன. எதற்கும் இணங்கிவராத இந்திய அரசும் கலந்து கொண்டது என்றால், அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன், எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறைத்து மதிப்பிடுகின்றார்களே, நியாயமா? தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அங்கே எல்லாக் கட்சி பிரதிநிதிகளும் பார்த்தார்கள் இந்தியப் பிரதமர் அவர்களை. அவர்கள் மனம் திறந்து அங்கே பேசினார்கள். மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பேசினார்கள். அகில இந்திய கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். அகில உலக கட்சிகளுடன் தொடர்பு கொண்டு கொள்கைகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கின்ற, வழி வகுத்துக்கொண்டிருக்கின்ற சில கட்சிக்காரர்கள் அதில் இருந்தார்கள். ஆக எந்தப் பிரச்சினைகள் வந்தாலும், உலகச் சூழ்நிலையைக் கண்ணோட்டமாகக் கொண்டு முடிவு எடுக்கின்ற அந்தத் தகுதியைப் பெற்றிருக்கின்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள், அவ்வளவு கட்சிக்காரர்களும் அன்றைக்கு இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்தார்கள். இந்தியப் பிரதமரும் மனம் திறந்து, "ஸ்ரீலங்காவிலே தமிழர்கள் படுகின்ற அவதியை, கொலையை, கொள்ளையை, கற்பழிப்பை நிறுத்த வேண்டும், எப்படிச் செய்வது? எப்பொழுது செய்வது என்பதைத்தான் நான் இரவு பகலாகச் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு நன்றி காட்டக்கூடாதா? நாம் மீண்டும் மீண்டும் இந்திய அரசைத் தானே கேட்கிறோம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, படை நடத்த வேண்டும் என்று. நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கின்ற இந்திய அரசுக்கு, எடுத்த நடவடிக்கைக்காக ஒரு பாராட்டு சொல்லக்கூடாதா? "உங்களை எடுத்த நடவடிக்கைக்காகப் பாராட்டுகிறோம். மேலும் நடவடிக்கை எடுங்கள்" என்று தானே தீர்மானம் கேட்கிறது. அதைப் பாராட்டக்கூடாதா? இந்த மாநிலத்தினுடைய முதல்வர் அவர்களை நீங்கள் பாராட்டவேண்டாம். யார் யார் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நான் இறுதியிலே சொல்கின்றேன். எந்தெந்தத் தமிழன் செத்துக்கொண்டிருக்

[திரு. இராம. வீரப்பன்] 1983 அக்டோபர் 29

கின்றானோ அவன் பாராட்டிக்கொண்டிருக்கின்றானே. எவன் கற்பிழந்த பெண்ணை தன்னுடைய மனைவியாகக் கொண்டு, இன்றைக்குத் துன்பத்திலே துடித்துக்கொண்டிருக்கின்றானோ, அவன் பாராட்டியிருக்கிறான். ஆனால் இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லாம் பெரும் மனது வைத்து பாராட்ட வேண்டும். நாம் எல்லாம் ஒன்றாக இருந்து ஒரு உணர்வைப் பெற்றவர்கள்தான். அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பாடம் பயின்ற வர்கள்தான். இந்த நேரத்திலே தங்களுடைய இதயத்திலே ஏற்றுக்கொள் ளாமல் இருக்கிறார்கள். இந்த முதலமைச்சருக்கு ஒரு பாராட்டா என்று நினைக்கிறார்கள். இந்த முதலமைச்சருக்குத் துணையாக நின்று, நான் அப்படிச் சொல்ல மாட்டேன், இந்தத் தமிழ் மக்களுக்குத் துணையாக நின்று, இல்லை; ஸ்ரீலங்கா தமிழர்களுக்குத் துணையாக நின்று, என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, எச்சரிக் கின்ற, இன்றைக்கும் எச்சரித்துக்கொண்டிருக்கின்ற, செயல்களாலே எச்சரித்துக் கொண்டிருக்கின்ற மத்திய அரசுக்குப் பாராட்டா என்கிறார்கள். காரியத்திலே ஈடுபடுகின்றவர் அவர் நான் உன்னை அடிப்பேன், அடிப்பேன் என்று சொல்லிக்கொண்டிருக்க மாட்டான். அவன் அடித்துவிடுவான். அடி வாங்கியவனுக்கு அதற்குப் பிறகுதான் அடி வாங்கி விட்டது தெரியும். அரசியலிலே ஆட்சித்திறனிலே நாம் எல்லாம் மிகச் சிறந்த ஆற்றல் படைத்த வர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். படை எடு, படை எடு என்று சொல்லிக்கொண்டு இருந்தால் நான் படை எடுப்பேன், படை எடுப்பேன் என்று ஒருவர் சொல்லிக்கொண்டிருக்க மாட்டார். படையெடுக்கின்ற காலத் திலே நாம் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. ஆகவே இந்தியப் பிரதமர் அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித்தலைவர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள், வரிசைப்படுத்தி சுட்டிக் காட்டினார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன். இந்தச் சட்ட மன்றம் கூடவில்லையே, கூடவில்லையே என்றால், அன்றைக்கே கூட்டியிருந்தால், அந்த அமளி துமளியோடு முடிந்துபோயிருக்கும். இன்றைக் குக் கிளப்பியதாலேதான் அந்தப் பிரச்சினை மீண்டும் உயிர் பெற்று வந்திருக் கிறது. அந்த நெருப்பை அணையாமல் காப்பாற்றிக்கொண்டிருக்கிறோம். ஸ்ரீலங்கா ஐக்கிய தமிழர் விடுதலை முன்னணித் தலைவர், எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர். அவர்கள் வேண்டுமானால் சட்டப்படி அவரை எதிர்க் கட்சித் தலைவர் இல்லை என்று இன்றைக்குச் சொல்லலாம். நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தமிழ்ச் சமுதாயம் ஏற்றுக்கொண்டிருக்கிறது, அவர் தான் எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீலங்கா அரசுக்கு என்று. அவர் சொல்



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

கின்றார், 'இந்தியப் பிரதமர் அவர்கள் இந்த நேரத்திலே முறையாகத் தலை யிட்டு இருக்காவிட்டால், இந்தக் கொலையைத் தடுத்து நிறுத்தியிருக்க முடியாது' என்று, வீடு பற்றி எரிகிறபோது, முதலிலே செய்ய வேண்டிய வேலை நெருப்பை அணைக்க வேண்டும். அணைத்தற்குப் பிறகு என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று பார்க்க வேண்டும். யார் நெருப்பை வைத் தவன் என்ற பிரச்சனை பின்னாலே. இந்த நெருப்பை அணைக்கின்ற முயற்சியில் ஈடுபடுகின்றபோதுகூட, நாம் சாதாரணமாக எண்ணுகிறோம், எரிகின்ற நெருப்பிலே தண்ணீரை ஊற்றிவிட்டால் நின்றுவிடும் என்று. அது கூட சில நேரத்திலே ஷார்ட் சர்க்யூட் ஆகிவிடுகிறது. மின்சாரத்தினாலே பிடிக் கின்ற நெருப்பிலே—அவர்கள் நமக்கு அறிவுரை தருவது—தயவுசெய்து தண்ணீரை ஊற்றிவிடாதீர்கள், தண்ணீரை ஊற்றினால், அது மீண்டும் அதிக மாகப் பற்றிக்கொண்டு விடுகிறது. அந்த நேரத்திலே நெருப்பு தண்ணீரால்கூட தன்னை அதிகரித்துக்கொள்கின்ற சக்தியாக மாற்றிவிடுகிறது." அத னாலேதான், சில நேரத்திலே தண்ணீரை ஊற்றாதே என்று சொல்லி, மண்ணை அள்ளிப் போடுகிறோம். வேறு திராவகம் கலந்த அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துகிறோம். ஆகவே நெருப்பை அணைப்பது என்பது நம் முன் னால் இருந்த பிரச்சினை. அணைக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளை இந்த உலகத்திலே இருக்கின்ற தமிழர்கள் அனைவரும் பாராட்டுகின்றார்கள். அருள் கூர்ந்து, மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு ஏதோ பெருமை சேர்ப்பதற்காகப் பாராட்டவில்லை. நம்முடைய இந்தியப் பிரதமருக்கு பெருமை சேர்ப்பதற்காகப் பாராட்ட வில்லை. அவர் யார் யாரிடத்திலே பாராட்டு வாங்கவேண்டுமோ, அங்கே யிருந்து எல்லாம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும்

(பிற்பகல் 1-20)

பெற்றுக் கொண்டிருக்கிறார். 'நேருவின் மகளே, வருக, நிலையான ஆட்சி தருக' என்ற பாராட்டைப் பெற்றவர்தானே இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள். நிலையான ஆட்சியைத் தருவார் என்ற நம்பிக்கை இருந்ததால்தானே 1981 ஆம் ஆண்டு சட்டமன்றத்திலே ஸ்ரீலங்கா பிரச்சனை வருகிறது. நீங்கள் இன்றைக்கு ஏன் சட்டமன்றத்தைக் கூட்டவில்லை என்று கேட்கிறீர்களே, இந்தப் பிரச்சனை வந்தபோதெல்லாம் சட்டமன்றத் திலே தீர்மானத்தைக் கொண்டு வந்த அரசைப் பார்த்துக் கேட்லாமா? தீர் மானத்தைப் பற்றியே நினைக்காதவர்கள் இருந்த காலத்தை விட்டுவிட்டு, இம் மாதிரி சம்பவம் 1977-லே நடந்தபோது சட்ட மன்றத்திலே தீர்மானம்; 1981-

லே நடந்தபோது சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்தோம். அப்படிக் கொண்டு வந்த அரசைப் பார்த்து, "ஏன் சட்டமன்றத்தைக் கூட்டவில்லை?" என்று கேட்கிறீர்களே; தயவு செய்து "உங்கள் நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள், நியாயம்தானா" என்று. அரசியல் வாதங்களுக்காக இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ளலாமா? நான் ஏன் 1981 ஆம் ஆண்டு தீர்மானத்தை மாத்திரம் குறிப்பிடுகிறேன் என்றால், 1977 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றுகிறபோது, அன்றைக்குப் பிரதான எதிர்க் கட்சியாக இருந்து, எதிர்க் கட்சித் தலைவராக இருந்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்குக் கலந்துகொள்ளவில்லை. அதைப்பற்றியெல்லாம் யார் யார் எப்படிப் பேசியிருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, நம்முடைய அவையின் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அது அவசியம் என்றாலும்கூட, நேரம் எனக்கு இப்போது இடம் தரவில்லை. ஆனால் 1981-லே அதே எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், முன்னாள் முதல்வர் அவர்கள், அந்தத் தீர்மானத்திலே கலந்துகொண்டு பேசுகிறார்கள். பேசுகிறபோது அவர்கள் என்ன கருத்தைச் சொல்கிறார்கள் என்பதை மாத்திரம் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் முதல்வர் எதிர்க் கட்சித் தலைவராக இருந்து, ஸ்ரீலங்காவுக்காக இந்தப் பதவியை நான் துறக்கிறேன் என்று அவர்கள் பதவியைத் துறந்ததால் ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினை தீர்ந்திருக்கக்கூடும் என்று எண்ணியிருக்கக்கூடும். ஆகவே அவர்களுடைய எண்ணத்திற்கு நான் தலை வணங்குகிறேன். அவர்கள் தியாகத்திற்கு அரசு தலை வணங்குகிறது. அதனாலேதான் முதல்வரவர்கள் இந்த நேரத்தில் அவர் இங்கே இல்லையே என்று வருந்தினார்கள். அப்படி அவர் இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இல்லையானாலும், இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை அவர்தான் எதிர்க் கட்சித் தலைவர். அவர்கள் பேசுகிறார்கள் அன்று "இந்தக் கொடுமைகளை எல்லாம் இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் தமிழகத்தின் முதல் அமைச்சரவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நானும் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசிய நேரத்தில் இது பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். நம்முடைய தமிழர்களுக்காக எடுத்து வைத்த கோரிக்கைகளில் ஆழ்ந்த கவனத்தைச் செலுத்திய இந்தியப் பிரதமர் அவர்கள் தக்க



ஏற்பாடுகளை நிச்சயமாக இந்தியப் பேரரசு கவனிக்கும் என்ற உறுதிமொழியை எனக்கு அளித்திருக்கிறார்கள். அதைப்போல முதலமைச்சருக்கும் அளித்திருக்கும் செய்தியை ஏடுகளில் பார்த்து ஓரளவுக்கு ஆறுதலும், மன நிறைவும் பெற்றுள்ளேன்" என்று சொல்லியிருக்கிறார்.

இன்றைக்கு என்ன நிலைமை? 1981-லே இருந்த 1983 க்குள்ளே நிலைமை என்ன மாறியிருக்கிறது? என்ன சொல்கிறோம் வாதத்திற்கு? அன்றைக்கு இருந்த நிலைமை வேறு, பிரச்சினைகள் வேறு; இன்றைக்கு நடைபெற்றிருக்கிற கொடுமைகள் வேறு என்ற வாதத்தை எடுத்து வைக்கிறபோது, அன்றைக்கு வெறும் தீர்மானத்தை 1977-லே நிறைவேற்றிய அரசு, 1981-லே நிலைமை வளர்ந்ததையொட்டி, தமிழக அரசு சார்பில் முதன் முதலாக அர்த்தால் நடத்தியது. அது நிலைமையினுடைய கொடுமையைக் காட்டியது. இன்றைக்கு 1983-லே என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? அர்த்தாலை மாநில அரசு மாத்திரம் நடத்தவில்லை. ஒரு கட்சி அரசு மாத்திரம் நடத்தவில்லை. எல்லா கட்சிகளும் சேர்ந்து நடத்தின. எதிர்க் கட்சிகளும் சேர்ந்து நடத்தின. இதைவிட வரலாற்றுச் சிறப்பு, மத்திய அரசும் சேர்ந்து நடத்தியது. இதைவிட பெரிய சிறப்பு, ஒரு மாநில அரசு மாத்திரம் தீர்மானம் போடவில்லை, பல்வேறு மாநில அரசுகள் தீர்மானங்கள் போட்டன. பல்வேறு மாநிலங்களில் ஊர்வலங்கள் நடைபெற்றன, கண்டனங்கள் நடைபெற்றன. இன்றைக்கு இந்திய அரசு இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லும் உணர்வைத் தவறு என்று சொல்லவில்லை. நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். அதை மாண்புமிகு முதல்வரவர்கள் பேரவையில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இவ்வளவு ஆவேசமாக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளை மறைத்துவிட்டு காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ; கறைச் சேற்றால் தாமரையின் வாசம் போமோ என்று பாவேந்தர் பாடினாரே,—அப்படி சூரியனை மறைத்துவிடலாம், தாமரையின் வாசத்தைப் போக்கிவிடலாம் என்று எண்ணுகிற எண்ணத்தைப் போல, "இன்றைக்கு நீங்கள் எடுத்த நடவடிக்கை சரியில்லை, சரியில்லை என்று ஜெயவர்த்தனே அரசையும், சிங்கள வெறியர்களையும், ராணுவத்தையும் கண்டிக்கும்போது, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிற பாரதத் தாயின் தலை மகனையும் கண்டிருக்கிறீர்களே? அதற்கு நன்றி சொல்ல வேண்டும், பாராட்ட வேண்டுமென்றால் இந்தப் பக்கமே தலை காட்டக் கூடாது என்று சொல்கிறீர்களே" இவ்வளவு முயற்சிகள் எடுத்த தமிழக அரசை ஒரு அவை பாராட்ட வேண்டுமென்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம். நான் இதை எடுத்துச் சொல்லத் தயாராகி, எந்த உணர்வு, எவ்வளவு காலம்

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

யார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதல்ல. 1952-லே மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழ் நாட்டிலே குரல் கொடுத்தார்கள். தமிழகச் சட்ட மன்றம், அன்றைக்கு ஒருங்கிணைந்த சட்டமன்றம் குரல் கொடுத்தது. ஆனால் ஸ்ரீலங்காவிலே வாழும் இந்திய வம்சா வழித் தமிழர்களின் உரிமைகள், வாக்குரிமைகள் பறிக்கப்பட்டபோது தமிழகத்தைத் தவிர, இலங்கையிலேகூட எதிர்ப்புக் குரல் கேட்கவில்லை என்று நேற்றையதினம் பெரிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுக் காட்டினார்கள் என்பதை மாத்திரம் நான் நினைவு படுத்த விரும்புகிறேன். நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. அன்றைக்கே தலையிட்டிருந்தால், அன்றைக்கே ஸ்ரீலங்கா தமிழர்கள் திரண்டு எழுந்திருந்தால், இந்திய வம்சாவழியினர், ஈழத் தமிழர்கள் என்று பிரித்துப் பேசாதீர்கள் என்று இங்கே உபதேசம் செய்தவர்கள் அன்றைக்கு அங்கே போய் உபதேசம் செய்திருந்தால், "யாரைப் போகச் சொல்கிறாய், யாரை வெளியேறச் சொல்கிறாய், தமிழ் பேசும் தமிழரையா? என்னுடைய ரத்தத்தின் ரத்தத்தையா போகச் சொல்கிறாய்" என்று ஸ்ரீலங்கா தமிழர்கள் கிளர்ந்து எழுந்திருந்தால், இன்றைக்கு இவ்வளவு தைரியம் சிங்கள வெறியனுக்கு வந்திருக்குமா? ஆட்சியிலே இருக்கிறவர்களுக்கு வந்திருக்குமா? இன்றைக்கு நாம் இவ்வளவு கண்டிக்கக் கொண்டிருப்போமா? யார் வைத்த கொள்ளியோ வீடு வந்து சேர்ந்ததே என்பதைப்போல, இன்றைக்குத் தமிழன் செத்துக் கொண்டிருக்கிறான். நாம் இங்கே துடித்துக் கொண்டிருக்கிறோம். நடவடிக் கைகளை எடுக்க வேண்டுமென்று யார் யாரிடத்திலோ கேட்டுக் கொண்டிருக் கிறோம். ஐ. நா. சபைக்குப் போகிறோம். ஐ. நா. சபைக்குப் போக வேண்டாம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் அதிலே தெளிவாக இருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட கருத்து உள்ளவர்களும் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய கருத்துக்களும் இந்தத் தீர்மானத்திலே இருக்கட்டும் என்றுதான் இங்கே தீர்மானத்திலே சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இந்தத் தீர்மானம் ஏன் இவ்வளவு நீளமாக இருக்கிறது என்றால், பல கருத் துக்களை ஒன்றாகத் திரட்டி பலருடைய பிரதிநிதித்துவம் இந்தத் தீர்மானத் திலே இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வளவு நீளமாகத் தயாரிக்கப் பட்டிருக்கிறது. வெறுமனே கண்டித்து விடுகிறோம் என்று சொல்லிவிட் டால், 4 வார்த்தையிலேகூட கண்டித்து விடலாம். இந்த அவையினுடைய துவக்க நாளிலே நம்மாலே என்ன செய்ய முடிந்தது? அனுதாபம் தெரிவித் தோம். இரங்கல் தெரிவித்தோம். குட்டிமணி பற்றியும் மற்றவர்கள் பற்றியும் வர்ணித்தார்களே, அவர்களுக்கு என்ன செய்ய முடிந்தது? ஆனால்



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

இன்றைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் திட்ட மிட்டுச் சொன்னார்கள். குட்டிமணி அடிப்பட்டவர் இந்த மண்ணிலே கால் வைத்தபோது, "அவர்கள் அரசாலே வரவேற்கப்படுகிறார்கள். அவர்கள் தங்கியிருக்க அரசாங்கமே வீடு வழங்கி, அவர்களுக்கு மாதந்தோறும் ஓய்வூ தியம்போல் உதவித் தொகை வழங்கப்படும். அவர்களுக்குக் குழந்தைகள் இருக்குமானால், அவர்களுக்குப் படிப்பு முதலிய எல்லா வசதிகளையும் தமிழக அரசு செய்யும்." அந்த அடிப்படையிலே அன்றைக்கும் அறிவித்தார்கள், நேற்றும் சட்டமன்றப் பேரவையிலே அறிவித்தார்கள்.

ஸ்ரீலங்காவிலே இருந்து வருகின்றவர்கள், தமிழகத்தைத் தேடி வருகின்ற வர்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டு இங்கே வாழ நினைத்தால், அவர்களுக்குத் தமிழக அரசு புகலிடம் தரும். எவ்வளவு காலம் இருக்கிறார்களோ, நியாய மாக சட்டப்படி நடந்துகொள்ளும்வரை, என்கிற உறுதியை சட்டமன்றப் பேரவையிலே தெரிவித்திருக்கிறார்கள். இங்கேயும் தெரிவிக்கச் சொன்னார் கள். இன்றைக்கு அப்படிப்பட்ட செய்திகளை நாம் செய்ய வேண்டும்.

இந்த தீர்மானத்தை 3 நாட்கள் விவாதித்து நிறைவேற்றுவதோடு நம் முடைய கடமை முடிந்துவிடவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் நேற்றைய தினம் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் "மேலும் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும், மனித இன உரிமைக் குழுவிற்குச் சென்று அங்கே விவாதிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்கள். அந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் தெரிவித் தார்கள். ஆகவே ஸ்ரீலங்காவிலே வாழ்கிற தமிழர்கள், அவர்களிலே இருந்து விடுதலை பெற்று, ஒருவேளை வடகிழக்கு மாநிலங்களில் இருக்கிறவர்கள் அவர்களாகவே, அவர்களுடைய வழியிலேயே தனியாகத் தங்களுடைய நாட்டை அமைத்துக்கொண்டோம் என்று முடிவெடுப்பார்களானால், அதற்கு நாம் ஆதரவு அளிப்போமே தவிர, அவர்களுடைய முடிவிற்குள்ளே தலை யிடுகிற உரிமை நமக்கும் இல்லை; நீ அவருக்குக் கொடு என்று சொல்லுகிற உரிமையும் நமக்கில்லை என்று நான் சொல்லவில்லை. அந்த விடுதலை இயக்கத்தைப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு நடத்துகிறவர்களே சொல்லு கிறார்கள்.

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

(பிற்பகல் 1-30)

"நீங்கள் எங்கள் பிரச்சினைகளுக்கு உள்ளே தலையிடாதீர்கள், எங்களுக்கு ஆயுதங்கள்போன்ற உதவிகளை வேண்டுமானால் செய்யுங்கள், எங்கள் பிரச்சினைகளுக்குள்ளே நுழைந்து, தலையிட்டு, கெடுத்து விடாதீர்கள்" என்று அவர்கள் கடிதம் எழுதியிருக்கிற விவரத்தையெல்லாம் கவலையில் படிக்கிறேன். ஆகவே இன்றைக்கு ஈழத் தமிழர்கள் விடுதலை பெற வேண்டும். அது பிரிவினை அல்லவா, உரிமை அல்லவா என்பதற்குள் நுழையவில்லை. ஒரு நாட்டிற்குள்ளே வாழ்கிற இரண்டு இனம் சேர்ந்து வாழ்கிற நிலைமை இல்லாதபோது, "நாங்கள் தனியாக எங்களுடைய நாட்டை, எங்களுடைய மண்ணை ஆட்சி செய்கிறோம், உன்னோடு இருந்து பலன் இல்லை" என்று கேட்கிற உரிமை அவர்களுக்கும் உண்டு. அதைத் தடுக்கிற, வேண்டாமென்று சொல்கிற உரிமை நமக்கு இல்லை. ஆனால் இங்கே, ஆதிபத்தியம் உள்ள நாட்டிலே உட்கார்ந்துகொண்டு, உலகத்திலேயுள்ள நாடுகளுக்கு எல்லாம் அவரவர்கள் கேட்கிற விடுதலையை எல்லாம் நாம்தான் வாங்கித் தருவோம் என்று சொல்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்குகிறோம் என்று சொல்கிற குற்றசாட்டை அவர்கள் உலக மன்றத்தில் எழுப்பாமல் ஜாக்கிரதையாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதைத்தான் ஐக்கிய நாடுகள் அவையில் ஜாக்கிரதையாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அருள்கூர்ந்து இப்படிப் பட்ட பிரச்சனையில் நான் எடுக்கிற முடிவுகள் அவர்களுக்குத் துணை புரிவதாக இருக்க வேண்டும். நாம் முன்னாலே குறிப்பிட்டதைப் போல இந்தியா வம்சாவழி தமிழர்கள் 8 லட்சம், 10 லட்சம் பேர்களுடைய உரிமையைப் பறித்து, வாக்குரிமையைப் பறித்து நாடாளுமன்றத்திலே 8 பேர் இடம் பெறுகின்ற ஒரு சூழ்நிலையைத் தடுத்து நிறுத்தினார்களே, அன்றைக்கே விழித்துக்கொள்ளவில்லை தமிழ் இனம். தமிழகத்திலேயே தீர்மானம் நிறைவேற்றினோம், ஸ்ரீலங்காவிலே இருக்கிற தமிழ் இனம் விழித்துக்கொள்ளவில்லையே. நாம் யாரையும் குறை சொல்ல முடியாது. குறை சொல்லக் கூடாது. அன்றைக்கு இருந்த நிலைமையில் அவர்கள் அப்படித்தான் முடிவு எடுத்திருப்பார்கள். இன்றைக்குள்ள நிலைமையிலே அவர்கள் இப்படி முடிவு எடுக்கிறார்கள். ஆகவேதான் நம்மாலே எந்தெந்தக் காரியங்களை சட்ட வழியிலே, உலகம் ஒத்துக்கொள்ளும் வழியிலே செய்ய முடியுமோ அவற்றைத் தான் நம்முடைய இந்த மாநில அரசு செய்கிறது. சட்ட மன்றப் பேரவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்ததைப் போல, கொஞ்சம் அதிகமாகவே இந்த மாநில அரசு ஸ்ரீலங்கா வாழ் தமிழர்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறது. "சில நேரங்களில் வரம்பை மீறிக் கூட நாங்கள் நடந்து



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

கொண்டிருக்கிறோம்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மை காரணம் அப்படிப்பட்ட பிரச்சினை. இதிலே சட்டத்தை, நீதியை, நியாயத்தைப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு இன்றைக்கு ஸ்ரீலங்கா தமிழர் சமுதாயம் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவேதான் சில விதிகளை நாமே கூட மீறியிருக்கிறோம், என்று கூடச் சொன்னார்கள். ஆனால் இந்தியப் பிரதமர், இந்திய அரசு முறையாக இந்தக் காரியத்தை அணுகி அணுகி, இதை சிக்கல் உள்ள பிரச்சனையாக மாற்றாமல்," முதலிலே கொலையைத் தடுத்து நிறுத்துவோம், அதற்குப் பிறகு கொலைக்குக் காரணமாக யார் இருந்தார்கள் அல்லது எது காரணம் என்பதை எல்லாம் பார்ப்போம், இனிமேல் அப்படி நடைபெறாமல் தடுப்போம்" என்கிற முறையில் அணுகுமுறையை மேற்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் கேட்கிற ஈழத்தை அவர்கள் விடுதலை பெற்றுப் போய்விட்டாலும் மீண்டும் ஒரு 25 லட்சம் தமிழர்கள் அந்த சிங்களவர்கள் மத்தியில் வாழ்ந்தாக வேண்டும். தயவுசெய்து நாம் இதையும் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். பாகிஸ்தானைப் பிரித்துக்கொண்டு போய்விட்டார்கள். ஆனால் உலகத்திலேயே அதிகமான இஸ்லாமியர்கள் வாழ்கிற நாடு என்கிற பட்டியலில் நான்காவது அல்லது ஐந்தாவது இடத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிற நாடுதான் நமது இந்தியத் துணைக் கண்டம். அவ்வளவு உரிமையோடு இங்கே இஸ்லாமிய மக்கள் வாழ்கிறார்கள். அத்தகைய ஜனநாயக உரிமை பெற்ற ஆட்சியும், மண்ணும் கொண்டதுதான் நமது இந்தியத் துணைக் கண்டம். ஆனால் அதற்குப் பிறகு ஸ்ரீலங்காவில் இன்றைக்கு கொடுமைக்காரர்களாக விளங்குகிற இந்தக் கொலை வெறியர்கள் மத்தியிலே 25 இலட்சம் பேரை விட்டுவிட்டு நாம் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டால், நிலைமை என்ன ஆகும் என்பதையும் ஈழத் தமிழர்கள் அவர்களாகவே சிந்திக்க வேண்டுமா இல்லையா என்பது அவரவர்களுடைய உரிமை அல்லது அவர்களுடைய கடமையாகக் கூட இருக்கலாம். அன்றைக்கு இப்பிரச்சினையை விட்டுவிட்டார்கள். "குதிரை போய்விட்ட பிறகு லாயத்தை இழுத்து மூடுவது" போல் இன்றைக்குச் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று இன்றைக்குச் சிந்திக்கிறார்கள். எல்லோரையும் ஒன்றாகக் குடியமர்த்தி விடுவோம் என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் சொன்னார். இங்கே வருகின்றவர்களையே நம்மால் ஓரிடத்தில் குடியமர்த்த முடியவில்லை. ஆனால் ஈழ நாட்டிலே அந்த 25 லட்சம் பேர்களையும் ஒரே இடத்தில் குடியமர்த்தி விடுவோம் என்று நாம் இங்கே சட்ட மன்றத்தில் உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் குடியமர்த்தும் வேலையை யார் கவனிக்க முடியும்? அதோடு கூட பத்திரிகைக்

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

செய்திகளை எல்லாம் இங்கே படித்துக்காட்டினார்கள். "டைம்ஸ் ஆஃப் இந்தியா" பத்திரிகையின் நிருபர் அந்த நேரத்தில் கொழும்புக்குச் சென்று வந்து வெளியிட்ட செய்தியும் பத்திரிகையில் வந்திருக்கிறது. நான் அதற்குள்ளே எல்லாம் செல்ல விரும்பவில்லை. "அங்கே இருந்துகொண்டிருந்த தமிழன் என்ன சொன்னான்? மனைவியைப் பறிகொடுத்த தமிழன் என்ன சொன்னான்?" என்பதை எல்லாம் "டைம்ஸ் ஆஃப் இந்தியா" என்கிற பத்திரிகையின் நிருபர் அங்கே சென்றிருந்தபோது, தானே பார்த்து வந்த விவரங்களையெல்லாம் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். இது மென்மையான, ஆனால் வலிமையான பிரச்சினை. அதையும் தாண்டி தமிழர்களுக்கு இது இனப் பிரச்சினை. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் சொன்னது போல், 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்ற ஒரு தொன்மையான இனம் தமிழ் இனம். ஆகவே வயது முதிர்ந்து விட்டால் போய்விட வேண்டியது தான் என்ற எண்ணமா போதும் என்று குறிப்பிட்டார்கள். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தமிழ் உள்ளளவும், தமிழகம் உள்ளவும், தமிழ் இனம் உள்ளளவும், தமிழ் இனத்தை உலகத்திலே அழிக்க எந்த சக்தியும் பிறந்து வரவில்லை. தமிழ்த் தாயின் தலைமகன், பேரறிஞர் அண்ணா அவர்கள் அடையாளம் காட்டி விட்டுச் சென்றிருக்கிற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்த ஆட்சியிலே முதலமைச்சராக இருக்கிற காலம் வரை அவர்களும் சரி, தமிழக அரசும் சரி அப்படி தமிழர்களை அழிக்கிற அந்தக் கொடுமைக்காரர்களுக்கு நிச்சயமாக இடம் அளிக்காது. அந்தக் கவலை தயவுசெய்து உங்களுக்கும் வேண்டாம், நமக்கும் வேண்டாம். நாம் பாதுகாப்பான இடத்திலே இருக்கிறோம். பாதுகாப்பானவர்களுடைய பொறுப்பிலே இருக்கிறோம். இல்லையானால் இறங்கி வருவாரா திரு. ஜெயவர்த்தனே? திரு. பார்த்தசாரதியை அனுப்புங்கள் என்று கேட்பாரா திரு. ஜெயவர்த்தனே? அவர் எவ்வளவு வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார் என்று சொல்ல முடியாது. அவர்கள் இன்றைய தினம் அபாயத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆபத்தில் உதவ இந்தியா வராதா என்று தேடுகிற நேரத்திலே இந்தியா ஒரு எதிரி நாடு என்று காட்டி விட்டால், அவர்கள் எங்கேயாவது சென்று சரணடைந்து விடுவார்களோ என்பது தான் இந்தியாவுக்கு உள்ள கவலை. நான் ஆரம்பத்திலேயே சொன்னதுபோல், இது உள்நாட்டுப் பிரச்சினை என்பதிலிருந்து இந்தியப் பிரதமர் இதை இரண்டு நாடுகளுக்குள்ள பிரச்சினையாக மாற்றியிருக்கிறார். தயவுசெய்து இதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதனாலே தான் ஐக்கிய நாடுகள் மன்றத்திலே நுழைய மாட்டேன் என்கிற நிலைமையில் எந்த இடத்திலே இந்தப் பிரச்சினையைச் சொல்ல வேண்டுமோ அந்த இடத்திலே சொல்லுவதற்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

இந்தியப் பிரதமா அவாகள். "அப்படிப்பட்ட ஒரு அமைச்சருக்குப் பாராட்டா? அவருக்குப் பாராட்டா?" என்கிறார்கள். தமிழ் இனம், தமிழ் இனம் என்று பேசிக்கொண்டிருக்கிறோமே இந்தத் தமிழ் இனத்தினுடைய வரலாற்றை இலக்கியத்திலே படித்தோம். "கங்கை கொண்டான், கடாரம் கொண்டான்" என்று படித்தோம். ஆனால் தமிழ் நாட்டில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, வளர்ந்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் மாணவனாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்களுடைய படையிலே தன்னை ஒரு தொண்டனாக ஆக்கிக் கொண்டு, ஏற்றுக்கொண்டு, இந்த அமைச்சரவையிலே ஒரு அமைச்சராக இருக்கிற ஒருவர் இந்தியத் தூதுக் குழுவுக்கு இந்தியப் பிரதமருடைய தலைமையை ஏற்றுச் செல்கிறார். இந்த தூதுக் குழுவில் ஒரு உறுப்பினராகச் செல்கிற இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க காரியத்தை இப்போது நாம் பாராட்டவில்லையென்றால், ஸ்ரீலங்காவிலே செத்துக்கொண்டிருப்பவனுக்கு வாழ்வளிக்கப் போகிறோம் என்கிற தீர்மானத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமே, இதற்கு ஏதாவது பொருள் இருக்கும் என்று கருதுகிறீர்களா?

இந்தியப் பிரதமர் அவர்கள் வந்து விட்டால், வெளி உறவுத் துறை அமைச்சர் தலைமை ஏற்க வேண்டும். அவரும் வந்து விட்டால், பிறகு தலைமை ஏற்று நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு பேசுகிறவர் தமிழகத்தினுடைய மின் துறை அமைச்சர். அவர் ஒரு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்பதை தயவுசெய்து மறந்து விடுங்கள். அவர் தமிழகத்தினுடைய ஓர் அமைச்சர். பேரறிஞர் அண்ணாவாலேயே வளர்க்கப்பட்ட ஒரு தொண்டன். அவர்களுடைய மாணவன். அவருக்கும் கொடுத்திருக்கிற அந்தப் பெருமையை இந்த மன்றம் பாராட்டவில்லையென்றால், தன் பிள்ளையைப் பெற்ற இந்த தாய் தன் பிள்ளையைப் பாராட்டவில்லையென்றால், வேறு யார் பாராட்டுவது என்று கருதுகிறீர்கள்? தயவு செய்து சொல்லுங்கள். அதற்காகத் தானே இந்தத தீர்மானத்திலேயே அதற்கும் பாராட்டு என்று தெரிவிக்கிறோம். ஆகவே அருள்கூர்ந்து சொல்கிறேன். இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளில், எடுத்து வைக்கப்பட்ட வாதங்களில், அந்த லட்சியங்களில் இந்த அரசுக்கு எந்தவிதமான கருத்துமாறுபாடும் இல்லை, ஈழத்தைப் பிரித்துக் கொடுத்து விட்டுத் தான் மறுவேலை பார்ப்போம் என்று சொல்கிற ஒரு இலட்சியத்தைத் தவிர, தனி ஈழத்தைப் பிரித்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதோ, விடுதலை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோ இலங்கைத் தமிழர்களுடைய பிறப்புரிமை. அதற்கு உதவ வேண்டிய நோக்தில், உதவ வேண்டிய வழிகளில் முடிந்தால் உதவி செய்வோம். அதையும் சொல்லிக்

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

கொண்டு செய்துகொண்டிருக்க முடியாது. காரணம் சொல்லிக் கொண்டு செய்தோமானால், ஐக்கிய நாட்டு மன்றத்திலே போய் குற்றச் சாட்டை எழுப்புகிறார் ஸ்ரீலங்கா நாட்டு பிரதிநிதி. "ஐக்கிய நாட்டு மன்றத்திலே என்ன செய்தீர்கள்? என்ன சாதித்தீர்கள்? எதற்காக பாராட்டு? அங்கே போய் நீங்கள் உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதில்லை என்று தானே ஒப்பாரி வைத்திருக்கிறீர்கள்" என்று இங்கே சில மாண்புமிகு உறுப் பினர்கள் எடுத்துச்சொன்னார்கள். அவர்களுக்கு நான் பணிவன்போடு ஒரு

(பிற்பகல் 1-40)

குறிப்பை மாத்திரம் தெரிவிக்கிறேன். உலகத்திலேயே ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு அகதிகளாக அனுப்பப்படுகிற சூழ்நிலையை உருவாக்கு கிற ஒரு நாட்டின் நிலையைப் பற்றி விவாதம் வருகிறது. அந்த விவாதத்தை, பெரு முயற்சி எடுத்துக்கொண்டு, கொண்டுவந்திருக்கிறார்கள். கொண்டு வந்த தற்குப் பிறகு, மேற்கு ஜெர்மனி நாட்டைச் சேர்ந்தவர்கள் மிக்க சாமார்த்திய மாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்ததைப் போல— ஸ்ரீலங்கா எந்த நாட்டை இன்று நம்பிக் கொண்டிருக்கிறதோ அந்த நாட்டின் பிரதிநிதி அதற்குச் சாதகமாகப் பேசுகிறார். அதற்குள்ளே நமது மின் துறை அமைச்சர் நுழைகிறார். இதைப்பற்றி எப்படி உலகத்தில் செய்திகள் வந்தன என்று பார்க்க வேண்டும். தி.மு.க. உறுப்பினர்கள் 'தன்மானமற்று, இன உணர்வற்று" என்று சொன்னார்கள். அப்படி ஒரு சூழ்நிலை அவர்களுக்கு இருக்கலாம் "India-Lanka clash at U. N." இது டைம்ஸ் ஆப் இந்தியா' வில் வந்த தலைப்பு. ஐ. நா. சபையில் நம் அமைச்சர் என்ன சொல்கிறார்? இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார். இதைச் செய் வதற்கு பிரதமர் சாமர்த்தியமாக வழி வகுத்துத் தந்தார்கள். அப்படி ராஜ தந்திரமாகக் காரியத்தை ஆற்றுகிறவர் அண்ணாவின் தம்பியாக, புரட்சித் தலைவரின் தொண்டனாகத்தான் இருப்பார் என்பதை இன்றைக்கு இந்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. "the issue was raised in a low-key manner யாரும் தொடங்குகிறபோதே 100 மைல் வேகத்தில் தொடங்க மாட்டார்கள். ஆகவே, எந்த நிலையிலும் பதட்டப்படாமல், ஆத்திரப்படாமல், அவசரப்படாமல், அமைதியாக விவாதத்தைக் தொடங்கி, அங்கே புயலை எழுப்பி விட்டார். அந்தப் புயலை எழுப்பியதன் விளைவாக, என்ன பேசினார் என்பதை நேரம் கருதி விட்டுவிடுகிறேன். இது எப்படி அந்த நாட்டுப் பிரதிநிதியைப் பாதித்தது என்பதை மட்டும் சொல்கிறேன். அவர் துடித்துக்கொண்டு பதில் அளிக்கிறார். அதனால் நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் இந்தியாவின் பிரதிநிதியாக. தலைவராக இருந்து



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

இந்தப் பிரச்சினையில் நுழைகிறார். "நீ அகதிகளை உருவாக்குகிறாய். நீ உன்னுடைய நாட்டில் வாழ உரிமை பெற்றவர்களை அகதிகளாய் அனுப்புகிறாய். அது தவறு" என்று அங்கே நுழைகிறார். அதற்கு ஸ்ரீலங்கா பிரதிநிதி கோபத்தால் கொந்தளிக்கிறார். அவர் எதையெதையோ சொல்லிவிட்டு,— நம் வீடுகளில் சில நேரத்தில் சண்டை வந்து விட்டால் (தாய்மார்கள் மன்னிக்க வேண்டும்), பெண்களைப் பற்றிச் சொல்வோம், அவர்கள் எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றிப் பேசமால், 'உன்னைத் தெரியாதா? உன் அப்பாவைத் தெரியாதா, உன் பாட்டனைத் தெரியாதா, அவரைத் தெரியாதா, இவரைத் தெரியாதா?' என்று எல்லாம் பேசுவார்களே, அதுபோல,—இவர் எழுப்பிய பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்காமல், அங்கே இருக்கிற பொன்சேகா, என்ன பதில் அளிக்கிறார் என்றால், இந்தியாவுக்குள்ளே அது நடக்கவில்லையா, இது நடக்கவில்லையா, அசாமில் நடக்கவில்லையா என்று ஒப்பாரி வைக்கிறார்.

அந்த ஒப்பாரிக்கு உடனடியாகப் பதில் அளித்து, "இந்தியாவிற்குள்ளே இருந்து யாரையும் நாங்கள் அகதிகளாக அனுப்பவில்லை. அப்படி யாரும் அகதிகளாகச் செல்லவில்லை, எந்தக் குடிமகனும் செல்லவில்லை. நீங்கள் உங்கள் நாட்டிலிருந்து அகதிகளை உருவாக்கி வந்திருக்கிறீர்கள்" என்கிறார். "அப்படி வந்து கொண்டிருக்கிற ஸ்ரீலங்கா அகதிகளின் எண்ணிக்கை எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது என்று பார்த்தால், இதுவரை வந்து சேர்ந்தவர்களின் எண்ணிக்கை, 23,097 பேர்கள். ஆனால் நம்முடைய அரசின் பொறுப்பில் இருக்கிறவர்கள் அதில் 5,144 பேர்கள்தான். பாக்கி 18 ஆயிரம் பேர் ஸ்ரீலங்கா சென்று விட்டார்களா அல்லது அவர்களது உறவினர்களைத் தேடிச் சென்றுவிட்டார்களா என்று தெரியவில்லை. அதுபற்றி அரசிடத்தில் தகவல் இல்லை. இப்படி 23 ஆயிரம் பேர்களை இந்தியாவுக்கு அகதிகளாக அனுப்பிய ஒரு நாட்டின் பிரதிநிதி, அகதிகள் பிரச்சினைபற்றிப் பேச என்ன உரிமை இருக்கிறது?" என்று, மாண்புமிகு திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் இந்தியாவின் சார்பில் கேட்கிறார். அதற்குத்தான் அவர் கொதித்து எழுந்து "அப்படிச் செய்யவில்லையா, இப்படிச் செய்யவில்லையா?" என்று கேட்டதற்கு. "எங்கள் நாட்டிலிருந்து யாரையும் அகதிகளாக உன்னுடைய நாட்டுக்கும் அனுப்பவில்லை, வேறு எந்த நாட்டுக்கும் அனுப்பவில்லை" என்று இவர் அடித்து பதில் சொல்கிறார்.

"இந்திய நாட்டில் அப்படி ஒரு ஜனநாயக அரசு இருக்கிறது," என்று பதில் அளித்த அற்புதத்தைப் பாராட்டி ஸ்ரீலங்கா தமிழர்கள் எல்லாம் அவரைக் கட்டிக் தழுவிப் பாராட்டியிருக்கிறார்கள். நியூயார்க் நகரிலே. ஆனால். தாயகத்தில். இந்தத் தாய் நாட்டில். வள்ளுவர் சொல்லியிருக்கிறாரே,

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

மகனுக்குத் தந்தை செய்யவேண்டிய, "அவையத்திலே முந்தியிருப்பச் செய் வது" என்று, அதை மாண்புமிகு மின்துறை அமைச்சரைப் பெற்ற தந்தையும் செய்திருக்கிறார், அப்படி அந்தத் தந்தை ஏழ்மை காரணமாகச் செய்யத் தவறியிருந்தால், மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து விட்ட காரணத்தால் செய்யத் தவறியிருந்தால், அண்ணா அவர்கள் செய்திருக் கிறார்கள். அப்படி அண்ணா அவர்கள் விட்டுவிட்டுச் சென்ற பணியை, மாண்புமிகு புரட்சித் தலைவர், அவரை அவையிலே முந்தியிருப்ப இருக்கும் செயலைச் செய்திருக்கிறார்கள். ஆனால் மகன் தந்தைக்காற்றும் பணியை யில் செய்து கொண்டிருக்கிறார். இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன புண்ணியத்தைச் செய்தானோ என்பதைப்போல இவரை அமைச்சராகப் பெறுவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் எப்படிப் பாடத்தைக் கற்றார்களோ என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு திரு. பண்ருட்டி ராமச்சந்திரன் இப்போது ஐக்கிய நாட்டு சபை

அப்படி அங்கே இந்தப் பிரச்சினையை எழுப்பி அவருக்குக் கோபா வேசத்தை உண்டாக்கி, எவ்வளவு சாமர்த்தியமாகப் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையில் விவாதத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார் நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர், அதற்கு வழி வகுத்துத் தந்தவர் நம்மு டைய பிரதமர். அதற்கு அடிப்படை அமைத்துத் தந்திருக்கிறார் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர். இந்த மூன்று பேருக்கும் இதற்காகவாவது இந்த மன்றம் தன்னுடைய பாராட்டைத் தெரிவிக்கக் கூடாதா? சரி, தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது தமிழகத்தின் பண்பாடு அல்லவா? தட்டிக் கொடுத்து, இதைச் செய்திருக்கிறீர்கள், இன்னும் கொஞ்சம் வேகமாகச் செய் யுங்கள் என்று சொல்லக் கூடாதா?

ஆகவே இந்தத் தீர்மானத்தில் இந்த மன்றத்தின் சிறப்பை, பெருமையை, தமிழனுடைய, தமிழ் நாட்டினுடைய சிறப்பைச் சொல்வதற்கு இந்தப் பாராட்டுப் பகுதிகள் இருக்கிறதே தவிர, தனிப்பட்டவர்களுக்காக அல்ல. மற்றவர்களுக்கு, பாராட்டு வேண்டாமா என்று கேட்டார்கள். அதிலே மிகத் தெளிவான எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்த்துத்தான் பாராட்டியிருக் கிறோம். தனியாக சொல்லக் கூடாதா என்று கேட்டால், மாண்புமிகு புரட்சித் தலைவரைச் சொல்கிறபோது. அவர் ஒரு ஆட்சியின் சின்னம். பிரதமரைப்பற்றிச் சொல்கிறபோது அவர் இந்தியாவின் சின்னம். ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியாவின் பிரதிநிதியாக ஒரு சின்னம். ஆகவே



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

இந்த நாட்டு மக்களாலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஆட்சித் தலைவர் களைக் குறிப்பிடுகிறோம். வேறு எதிர்க் கட்சிகளைச் சொல்ல ஆரம்பித்து விட்டால், நாம் யாரையும் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது.

அங்கே, குட்டிமணி தன் கண்ணை இழந்த கதையை, வெட்டிச் சாய்க்கப் பட்ட கொடுமையை நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்களே, அது மட்டும் தானா பாராட்டப்படக் கூடியது, எத்த னையோ பேர், பெயர் தெரியாமல் செத்து மடிந்திருக்கிறார்களே, இரண்டா யிரம், மூவாயிரம் என்கிறார்கள், என் ஐயாயிரம் என்று கூட சொல்கிறார்கள், அவர்கள் எல்லாம் இந்த விடுதலை இயக்கத்திற்காக, உரிமைப் போராட்டத்திற் காக, ஸ்ரீலங்கா தமிழ் மக்களுடைய வாழ்வுக்காக உயிரை விட்டு, அதற்கு அஸ்திவாரம் இட்டு அமைத்திருக்கிறார்களே, அவர்களுக்கும் சேர்த்துத்தானே தலை வணங்க வேண்டும். ஆகவே இங்கே அனைத்துக் கட்சிகள் என்று போட்டிருக்கிறோமே, யாரையும் மறந்துவிடவில்லை, யாரையும் விட்டுவிட வில்லை. யாரையும் குறைத்துச் சொல்ல வேண்டுமென்ற அவசியமுமில்லை. அருள் கூர்ந்து இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து, இந்தப் பகுதிகளை எல்லாம் சேர்த்து, அரசு கொண்டு வந்திருக்கிற திருத்தங்களையும் ஏற்றுக்கொண்டு, எல்லோரு டைய கருத்துக்களையும் பிரதிபலிக்க வேண்டுமென்ற எண்ணம் தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமே தவிர, ஐக்கிய நாட்டு சபைக்குப் போனால்தான் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பதல்ல.

அங்கே போகக் கூடாது என்று சொல்லிக் கொண்டிருந்தாலே, இவர் உலகத்திலேயிருந்து ஒதுங்கியிருக்க விரும்புகிறார் என்ற பழிச் சொல் வந்து விடும். அங்கே யார் இருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அவரை எப்படி சந்திக்க வேண்டும் என்பதும், அந்தத் திறமையும் நம்மிடத்திலே உண்டு. அது மாநில அரசுக்கும் உண்டு. மத்திய அரசுக்கும் உண்டு. தமிழகத் திலேயிருந்து சென்றிருக்கிற மின் துறை அமைச்சருக்கும் உண்டு, பிரதமர் அவர்களுக்கும் உண்டு. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் காலையிலே இங்கே தாமதமாக வருவதற்குக் காரணமே அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டதுதான். அங்கே அவர் 31 ஆம் தேதி உலக நாடுகள் பிரதி நிதிகளை அழைத்திருக்கிறார். அவர்களும் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். கட்சி வாதத்தை எடுத்து வைக்க இருக்கிறார். ஒலிக்க வேண்டிய இடத்தில் பிரச்சினை ஒலிக்க இருக்கிறது. கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. ஆனால் அதற்குள்ளே போய் நம் தலையை விட்டு மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதுதான் இந்தியாவின் நிலை. நீங்கள் என் தீர்மானத்தில் சேர்க்கிறீர்கள்

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

என்றால் அந்தக் கருத்தோடும் சிலபேர் இருக்கிறார்கள். அதையும் சேர்த்து அரசு சொல்கிறது. யார் யார் எதை எதை ஏற்றுக்கொள்ளவேண்டுமோ அதை யதை அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். நாங்கள் கேட்கும்போது, "எனக்கு 10 வகை பாயசம், வடை, கறி ஆகியவைகள் சேர்த்து சாப்பாடு போடு" என்று கேட்கிறோம். ஆகவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்கள் இருப்பதைக் கேட்கிறோம். ஆகவேதான் இந்தத் தீர்மானத்தில் பல்வேறு கருத்துக்களையும் இணைத்திருக்கிறோமே தவிர, ஐ.நா. மன்றத்தில் போய்த்தான் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற இறுதியான முடிவைத் தமிழக அரசும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் எங்காவது தகராறு வந்தால், வருகிறவன் வம்புக்காரனாக இருந்தாலும், ஐ. நா. அவை என்று ஒன்று இருக்கிறதே, அங்கே போய் பிரச்சினையை எழுப்பக்கூடாதா என்று நாளைக்கு யாராவது கேட்பார்களே, அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றுதான், சொன்னார்கள். ஆனால் அவரைப் போல் அவ்வளவு சாமர்த்தியமாக நடந்து அந்தப் பிரச்சினையையும் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் எடுத்திருக்கிற நடவடிக்கைகள், இதுவரை வரலாற்றிலேயே இல்லாதவாறு எடுக்கப்பட்டிருக்கின்றன. அதுவும், தமிழக அரசால் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை இந்திய அரசால் பாராட்டப்பட்டிருக்கின்றன. இந்திய அரசும் சேர்ந்து எடுத்திருக்கிறது. இன்னும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு நாம் ஸ்ரீலங்கா தமிழர்களை வாழ வைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறோம். அது நடந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-50)

இனிமேல் ஸ்ரீலங்கா தீவில் தமிழனுக்குத் தீங்கு செய்கிற தைரியம் அந்தச் சிங்கள வெறியனுக்கு, சிங்கள இராணுவத்திற்கு, சிங்களக் காவல் துறைக்கு வராத சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்த மக்கள் அங்கேயே வாழ உரிமை பெற்றவர்களாக, அந்த நாட்டுக் குடிமக்களாக வாழ்கிற சூழ்நிலையை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அதற்குத்தான் நம்முடைய முயற்சிகள், முன்னாலே வைக்கப்படுகிற அடிகள் முறையாக வைக்கப்பட வேண்டும் என்பதால்தான் இன்றைக்கு தமிழக அரசு மிகுந்த எச்சரிக்கையோடு. ஆனால் உணர்ச்சிகளைக் குறைத்துக் கொள்ளாமல், உறுதியைக் குறைத்துக் கொள்ளாமல் செயல்படுகிறது. "நான் மெதுவாகத்தான் அடி எடுத்து வைப்பேன். ஆனால் அழுத்தமாக வைப்பேன்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நான் பின்பற்றுகிறவன் என்று பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவரைப்போல் அவ்வளவு சாமர்த்தியமாக நட-



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

வடிக்கை எடுக்க என்னால் முடியுமா என்பது எனக்குத் தெரியாது என்பதையும் அவர் அங்கே குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, அரசு இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள், வரலாற்றில் இதற்கு முன்னால் வேறு எந்த அரசாலும், எந்த இயக்கங்களாலும் எடுக்கப்பட முடியாத அளவுக்கு, இதை ஒரு நாட்டினுடைய பிரச்சினையாக மாற்றி, இந்திய அரசாங்கத்தையே இதில் ஈடுபட வைத்து, இந்தியப் பிரதமர் அவர்களே அதில் முழு உணர்வோடு, முழு உரிமையோடு கலந்து கொண்டு, காரியங்களையும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இனி "படை எடு, படை எடு" என்று சொல்லி, "நான் படை எடுப்பேன்" என்று சொல்வதால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. படையெடுத்தால் என்ன ஆகும் என்பதைப்பற்றி கம்யூனிஸ்ட் கட்சியில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. ஆனால் உலகம் இன்றைக்குப் படையெடுக்கிற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை என்பதை மட்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஐ. நா. அவை என்பதும்கூட படையெடுப்பதற்காக அல்ல. சமாதானப் படையைத்தான் அனுப்பச் சொல்கிறோம்.

ஒரு நாடு இன்னொரு நாட்டைப் படையெடுத்து வீழ்த்தி விடலாம், அடிமைப்படுத்திவிடலாம் என்று எண்ணுகிற காலத்தில் நாம் வாழவில்லை. அமைதிக்காக உலகம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது. அப்படிப் பார்க்க வேண்டுமானாலும், போரின் கொடுமையைச் சந்தித்த அந்த மக்களைப் போய்ப் பார்த்துக் கேட்க வேண்டும். அந்த மக்கள், போர் என்றாலே என்ன சொல்கிறார்கள், என்ன எண்ணுகிறார்கள் என்பதை நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். வளர்ந்து கொண்டிருக்கிற இந்தியா போன்ற ஜனத்தொகை அதிகமாக உள்ள ஒரு நாடு எதிர் பாராமல், அல்லது அவசரப்பட்டு அல்லது ஆத்திரத்தில் சிக்கி எங்காவது ஒரு போர்ச் சூழலில் இந்த நாட்டை மாட்ட வைத்து, இந்த நாட்டினுடைய வல்லமையைக் குறைக்க வேண்டும் என்று கழுகுப் பார்வையோடு சுற்றிக் கொண்டிருக்கிற வல்லரசுகளுக்கு நாம் இரையாகிவிடக் கூடாது. அது தமிழ்ச் சமுதாயத்தின் பேராலே நடந்துவிடக்கூடாது என்பதிலும், தமிழர்கள் கொஞ்சம் முன்னெச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், ஸ்ரீலங்கா பிரச்சினையிலே ஒருவேளை உலக யுத்தமே வரலாம், இல்லை போர் வரலாம் என்று பயப்படுகிறார்கள் என்று கூட சொல்கிறார்கள். அது பல போர்க் களங்களைக் கண்ட தளபதிகளுக்கு அச்சமில்லாமல் இருக்கலாம். ஆனால் போரைச் சந்திக்காத, அமைதியையே விரும்பிக் கொண்டிருக்கிற ஒரு

நாட்டு மக்கள், போரைக் கண்டு அச்சப்படுவார்கள். போரைச் சந்தித்து அழிந்து போன நாட்டு மக்கள் போரைக் கண்டு அச்சப்படுவார்கள். அவர் களையெல்லாம் நினைவில் வைத்துப் பார்க்க வேண்டும்.

பங்களா தேஷ், காஷ்மீரம் என்கிறோம். அந்த நாட்டு மக்களை, அங்கே போய் கற்பிழந்தவர்களைப் போய் கேட்க வேண்டும், வெட்டிச் சாய்க்கப் பட்டவர்களைப் போய் கேட்க வேண்டும், சுட்டுக் கொல்லப்பட்டவர்களைப் போய்க் கேட்க வேண்டும். விடுதலை பெற்ற நாடுகளிலேயே சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். அது விடுதலை பெற்ற நாடுதான். விடுதலைக்காகப் போராடிய நாடுதான். அதற்குள் நான் அதிகமாக நுழைய விரும்பவில்லை. அது அவர்களுடைய உரிமை. ஆனால் நாம் கவலைப்படுவது நம்முடைய தமிழர்கள், நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தினர், அங்கே அடிபட்டால் இங்கே ஓடி வருகின்றானே அவனுக்காக. அங்கே அடிபட்டால் எதிர்த்துத் தாக்குகிறானே அவனாவது பலமுள்ளவனாக இருக்கிறான் முதலில் அங்கே அடி வாங்கினால் இங்கே ஓடி வருகிறானே அவனை முதலில் கவனிக்கிறோம். அதனால்தான் 1952-ல் இந்தச் சட்ட மன்றத்திலே முதன் முதலில் தீர்மானம் வந்தது. வேறு எங்கேயும் வரவில்லை. ஸ்ரீலங்காவிலேயே அப்போது எதிர்ப்புக் குரல் எழவில்லை. "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்று சொன்னார்களே" அதைப் போல் ஸ்ரீலங்காவில் யாரும் ஆடவில்லை, ஆனால் அன்றைக்கிருந்த சென்னை மாநிலம்தான் ஆடியது. எனவே இதற்குப் பின்னாலே இருக்கிற உண்மையை, மிகப் பெரிய உண்மையை தயவு செய்து மறைத்துவிட முயலாதீர்கள்; மறந்துவிடாதீர்கள். ஆக, இன்றைக்கு அந்தத் தலைவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குறுக்கே நீங்கள் நுழைந்து விடக்கூடாது. இந்த உணர்வுகளையெல்லாம் நான் எடுத்துச் சொல்வதற்குக் காரணமாக இந்தத் தீர்மானம் ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

நான் முதலிலே சொன்னேன். "பாராட்டுவது ஒரு பெரிய விஷயமா? நீங்கள் பாராட்டக் கூடாதா?" என்று. ஆனால் யார் யார் பாராட்டுகிறார்கள் என்பதைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

தமிழக முதல்வர், தமிழ்த்தாயின் தலை மகனாம் பேரறிஞர் அண்ணா அவர் களின் இதயக் கனியை, அவர் எடுத்த நடவடிக்கையை, அவர் மூலம் இந்திய அரசு மேற்கொண்டிருக்கிற நடவடிக்கையை இந்த மேலவையில் இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களில் சிலபேர் பாராட்ட வேண்டுமென்று அவர்கள் உள்ளம் விரும்பினாலும் ஏதோ கட்சிக் கட்டுப்பாடு காரணமாக அவர்களுக்குத் தடை விதிக்கலாம். ஆனால் யார் யார் பாராட்டுகிறார்கள்? உலகத்தில் துன்பப்பட்டு, துயரப்பட்டு கொலையுண்டிருக்கிறானே அந்தத் தமிழனுடைய தசை ஆடுகிறது. அவ்வாறு துடிக்கிறவன் பாராட்டுகிறான். நான் இந்தியாவுக்குள்ளிருந்து போகிறேன்.



இன்றைக்கு இங்கே பேசிக் கொண்டிருக்கிறோமே தமிழ் மக்கள்—மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல்—தமிழகத்தில் வாழ் கிற 5 கோடி தமிழர்களில் 2 கோடிக்கு மேல் தமிழ் பேசாதவர்கள். அதைப் போல இந்தியாவுக்குள் வாழ்கிற—தமிழகத்திற்கு வெளியே வாழ்கிறவர்கள்—ஒரு கோடி பேர்களுக்கு அதிகமான தமிழர்கள், உங்களுக்கு நான் இன்னொரு உண்மையும் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தினுடைய தலைநகராம்தான் தமிழ் பேசுகிறவர்களுடைய எண்ணிக்கைப்படி முதல் நகரம். இரண்டாவது நகரம் தமிழகத்தில் இல்லை. கருநாடகத்தின் தலைநகரமான பெங்களூர். மூன்றாவது நகரம் தமிழகத்திலே இல்லை. மராட்டிய மாநிலத்தின் தலை நகரமான பம்பாய். இவற்றிக்குப் பிறகுதான் டெல்லி, கல்கத்தா. அதற்குப் பிறகு கிழக்காசிய நாடுகள், மலேசியா, பிஜித் தீவுகள், மொரிஷியஸ் போன் றவை. இன்றைக்கு அமெரிக்க நாட்டில் 3,000-க்கும் மேற்பட்ட தமிழர்களுக்கு கிரீன் கார்டு வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். "இப்படிப்பட்ட நிலைமையில் உலகத்தில் இருக்கிற நாடுகள் துடித்தெழுந்தன, ஆஸ்திரேலியா துடித்தெழுந்து வந்ததே, இந்தியா துடித்தெழவில்லையே?" என்று சொன் னார்கள். இதில் ஆஸ்திரேலியா சம்பந்தப்பட்ட கட்சிக்காரன் அல்ல. ஆகவே துடித்தெழுந்து வர முடிந்தது. ஆனால் நாம் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள். ஆகவே துடித்து எழுந்தால், எவனாவது உள்ளே நுழைந்து விடுவான். ஆகவே நாம் இரண்டு பேரும்தான் பேசித் தீர்க்க வேண்டும். அதிலும் இந்தியா மிகுந்த உறுதியோடு நின்றது. அதனால் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறது.

அங்கே பேசினார் பொன் சேகா. ஸ்ரீலங்காவின் வெளி உறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார். "அந்த 2, 3 நாட்களில்—ஒரு வாரத்தில் நடைபெற்ற கொடுமைகளுக்கு நான் தலை வணங்குகிறேன், வருந்துகிறேன், மன்னிப்புக் கேட்கிறேன்" என்று சொல்லி யிருக்கிறார். இப்படிச் சொல்ல வைத்ததற்குப் பின்னாலேதான் நாம் நுழை கிறோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இன்றைக்கு அவர்கள் நம்முடைய பிரதிநிதியை அழைக்கிறார்கள், பேசுவதற்காக. நாம் நம்முடைய தீர்மானத் தில் "வட்ட மேஜை மாநாட்டைக் கூட்டு, அதில் எல்லோரையும் உட்கார வைத்துப் பேசு, எதிர்க் கட்சிகளை எல்லாம் அழைத்துப் பேசு, விடுதலை

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29]

கேட்கிற வீரர்களையும் அழைத்துப் பேசு" என்று கொண்டு வருகிறோம். அப்படிப் பேசினால்தான் பிரச்சனை தீருமே தவிர, சண்டை எடுத்து குண்டைப் போட்டு அழிப்பதால் பிரச்சினைகள் தீர்ந்து விடாது. யுத்தங்களால் பிரச்சனைகள் தீர்ந்ததாக வரலாறே இல்லை. அது புதிய பிரச்சனைகளை உண்டாக்கும் ஏழ்மையை, வறுமையை வளர்த்து ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை க்ஷீணிக்க வைக்கும், வளர்க்கும், ஆகவே, அருள் கூர்ந்து யுத்தம் என்று பேசுகிறவர்கள் உலகத்தில் உள்ள நிலைமைகளை அறிந்து பேச வேண்டும்.

உலகத்தில் எங்கெங்கே இருக்கிற தமிழர்கள் அரசு எடுத்த நடவடிக்கைகளை எப்படியெல்லாம் பாராட்டுகிறார்கள் என்பதை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

"தமிழ்நாடு நற்பணி மன்றம்—தமிழ்நாடு வெல்பேர் சொசைடி—கல்கத்தாவிலிருந்து எழுதுகிறது.

"We appreciate measures you are inviating to end the conflagrahion".

நான் மற்ற பகுதிகளைப் படிக்கவில்லை. இது இந்தியாவில் வேறு மாநிலத்தில் இருக்கிற தமிழர்கள் எப்படி இந்தப் பிரச்சினையைப் பார்க்கிறார்கள், தமிழக அரசை எப்படிப் பாராட்டுகிறார்கள் என்பதற்குச் சான்று.

அடுத்து, கனடா நாட்டில் உள்ள வின்ட்சார் தமிழ் ஈழச் சங்கம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம்; "அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் காட்டிய ஆர்வமும், ஆற்றிய கருமங்களும், எங்களுக்கு ஆறுதலையும் ஆனந்தத்தையும் அளித்தன. தங்களது தலைமையில் அனைத்துக் கட்சிகளும் இந்தியப் பிரதமரிடம் தூது சென்றதிலிருந்து சகல நிகழ்ச்சிகளையும் ஸ்டேட்ஸ்மென், இந்துஸ்தான் டைம்ஸ் இந்தியா டு டே போலும் மேற்கத்திய ஆங்கில வாரப் பத்திரிகைகள் மாக வாசித்து அறிந்தோம்" "தமிழ்நாட்டிலிருந்து வந்த அன்பர்களும் அன்று

(பிற்பகல் 2-00)

நடைபெற்ற சம்பவம், தமிழ்நாட்டின் உணர்ச்சிப் பிரவாகம் ஆகியவற்றையெல்லாம் விவரித்தார்கள். நீங்கள் செய்கின்ற தொண்டுகளுக்கு இலங்கைவாழ் தமிழர்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளார்கள். இலங்கை வாழ்



[1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

தமிழர்களுக்கு தமிழக மக்களும், நீங்களும்தான் ஒரே ஒரு பாதுகாப்பு என நாங்கள் திடமாக நன்றிகூறி எதிர்காலத்திலே நாங்கள் தங்கள் கரங்களை இலங்கைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற நீட்ட வேண்டுமென்று கூறி விடைபெறுகின்றோம்."

[பிற்பகல் 2-00]

அடுத்து, ஆஸ்திரேலியா நாட்டிலே வாழ்கிற தமிழர்கள். கான்பெரா நகரத்திலிருந்து அவர்கள் எழுதுகிறார்கள். "We the Tamils" என்று அவர்கள் அற்புதமாக எழுதுகிறார்கள். இங்கேயிருக்கின்ற தமிழர்கள் ஆங்கிலத்திலே எழுதும்போது Tamils என்று எழுதுகிறார்கள். ஆஸ்திரேலியாவிலே வாழ்கிறவர்கள் Thamils என்று எழுதுகிறார்கள்.

"We the Thamils of Australia wish to express our deep appreciation for the concern which the people of Tamil Nadu have expressed through you as Chief Minister and your Government and we earnestly plead with you to continue to work for the emancipation of Thamils of EEzhal.

இது ஆஸ்திரேலியா நாட்டுத் தமிழர்களுடைய குரல். இதற்கு முன்னாலே கனடாவிலே வாழ்ந்த குரலைத் தெரிவித்தேன். இது ஆஸ்திரேலியா நாட்டுத் தமிழர்கள். இங்கே விடுதலைப் புலிகளுக்கு அல்லது ஈழம் கேட்கிற அந்த விடுதலை வீரர்களுக்கு, விடுதலை இயக்கத்திற்கு தாங்கள்தான் வாரிசு என்று சில பேர் உரிமை கொண்டாடுகிறார்களே, இந்த முதலமைச்சர் மீது பழி போட வேண்டுமென்று கருதுகிறார்களே, இந்தியப் பிரதமரைத் தாக்க வேண்டுமென்று எண்ணுகிறார்களே, அந்தத் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் எழுதுகிறது. அதை யார் எழுதுகிறார் என்பதைக் கடைசியிலே சொல்லுகிறேன். புரட்சித் தலைவருக்கு எழுதப்பட்டக் கடிதம். "தமிழ் ஈழ மக்களின் சொல்லொண்ணாத் துயரைத் துடைக்க தாங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது. அதற்காக தமிழ் ஈழ விடுதலைக் கழகம் தங்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறது. இலங்கை தமிழர் சிக்கலில் ஐக்கியநாடுகள் மன்றம் தலையிட ஆவன செய்யுமாறு இந்திய தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு தாங்கள் உரிய நேரத்தில் டெலக்ஸ் செய்தி அனுப்பியது மிகவும் போற்றத்தக்கது. இதற்குப் பின்னாலே பல விவரங்கள் இருக்கின்றன. வெளியே சொல்லக்கூடாத விவரங்கள் அவை." இதை எழுதியிருக்கிறவர் யார் தெரியுமா? க. உமாமகேஸ்வரன்—முகுந்தன் எனும் மகேஸ்வரன். உலகத்திலே வாழ்கிற தமிழர்கள் இந்தத் தமிழக அரசினுடைய நடவடிக்கை, இந்தத் தமிழகத்தின் தலைமகன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்கிற நட-

[திரு. இராம. வீரப்பன்] [1983 அக்டோபர் 29

வடிக்கை, இந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற அறிஞர் அண்ணாவின் தம்பி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரின் நடவடிக்கை ஆகியவற்றுக்கு ஆதரவாக வெளிப்பட்டு நின்று மிருந்த ராஜதந்திரத்தோடு இன்றைக்கு ஸ்ரீலங்கா பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று முயன்று கொண்டிருக்கிற இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களிடத்திலே எவ்வளவு நம்பிக்கை வைத்து இன்றைக்கு உலகத்திலே வாழ்கிற தமிழர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் கடிதங்கள் மூலமாகத் தெரிவித்த கருத்துக்களைத்தான் கூறினேன். நேரில் வரும் நூறுக் கூருக்களும் அவரைப் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். ஏதோ உணர்ச்சிவசப்பட்டு சொல்லியிருக்கிறார். இந்த தமிழ்த் தாயின் தலைமகனைப் பார்த்து ஒருவர் குற்றம் சொல்லுகிறார், சுட்டு விரலை நீட்டுகிறார். தன்னைக் கொலை செய்ய வந்தவரைக் கூட அண்ணன் என்று அழைத்த எதையும் தாங்கும் இதயம் படைத்த புரட்சித் தலைவர் முதல்வராக இருக்கிறார், ஒரு கட்சியின் தலைவராக இருக்கிறார், அறிஞர் அண்ணாவினுடைய வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட தாயவர் மீது, "ஐயா, நீங்கள் எந்தக் குற்றச்சாட்டுகளை வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால் தமிழ் இனத்தின் தலைவர், புரட்சித் தலைவர் மீது சாட்டுகிற குற்றம் தமிழ் இனத்தையே சாட்டுகிற குற்றம்" என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் மிருந்த மன வருத்தத்தோடு அவர் இங்கே இல்லையென்றாலும் சொல்லி நீங்கள் கொடுத்திருக்கிற திருத்தங்களையெல்லாம் பின்வாங்கிக் கொண்டு அருள்கூர்ந்து அனைவரும் ஒரு குரலில் எதிர்காலத்திலே இலங்கைத் தமிழ் மக்களை வாழவைப்பதற்கு இந்தத் தீர்மானத்தைத் திருத்தங்களோடு ஒருமனதாக ஏற்று, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற திருத்தங்களோடு இன்னுமொரு புதிய திருத்தத்தை அரசின் சார்பிலே இருக்கின்ற அசல் தீர்மானத்தில் பகுதி 'ங' என்பதற்குப் பதில் கீழ்க்கண்ட பகுதியைச் சேர்த்துக் கொண்டு ஏற்கெனவே உள்ள (ங) பகுதியை (ச) வாகவும் (ச) பகுதியை (ரூ) வாகவும் திருத்திக்கொள்ள வேண்டும் :

"இலங்கை அதிபர் ஜயவர்த்தனே அவர்கள் மீண்டும் சமசரப் பேச்சை நடத்த இந்தியப் பிரதமரின் தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை மீண்டும் அனுப்பி வைக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதை இந்த மேலவை வரவேற்பதோடு இலங்கை தமிழர்களின் அனைத்துத் தரப்புத் தலைவர்களையும் நியாயமற்ற முறையில் ஏற்றுக்கொள்ளத்தக்க முறையில் வட்ட



1983 அக்டோபர் 29] [திரு. இராம. வீரப்பன்]

மேசை மாநாடு விரைவாகக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மேலவை கேட்டுக்கொள்ளுகிறது." இத்தீர்மானத்தை அத்தோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா திரும்பப் பெறுகிறாரா?

**திரு. ஆ. நல்லசிவன் :** தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிற ஏழு திருத்தத்தில் சில திருத்தங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பாரா (எ), (ஏ) (ஐ), மற்றும் (க) ஆகியவற்றுக்குக் கொடுத்துள்ள திருத்தங்களை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை.

"பாரா (எ)

பாரா முழுவதையும் நீக்கிவிட வேண்டும்.

பாரா (ஏ) வில் 9-வது வரியில்,

"இம்மேலவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்திருப்பதோடு, இலங்கை வாழ் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய வல்லரசான அமெரிக்கா, வாழ்வளிக்க முன்வராமல், தமிழினத்தின் அழிவுக்கு காரணமாக அமையும் ஆயுதங்களை வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாக கண்டிப்பதோடு, ஆயுதம் வழங்குவது—கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிடவேண்டுமென்றும் வலியுறுத்துகிறது" என்று வரும் வாசகங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக கீழ்க்காணும் வரிகளை சேர்த்துக் கொள்ளவேண்டும் :

"இம்மேலவை அதிர்ச்சியும், கவலையும் அடைகிறது. அமெரிக்கா இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாக கண்டிக்கிறது. ஆயுதங்களை வழங்குவது, கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அமெரிக்காவின் செயல்கள் இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை நாட்டின் சுதந்திரத்திற்கும், இந்தியாவின் சுதந்திரத்திற்கும் ஆபத்தை உண்டாக்குகிறதென்று இம்மேலவை கருதுகிறது. இத்தகைய அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது".

பாரா (ஐ) யில் 5-வது வரியில்

"ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ, அல்லது"

என்று வரும் வாசகங்களை நீக்கி விடவேண்டும்".

பாரா (க)

பாரா முழுவதையும் நீக்கிவிட்டு, அதற்கு பதிலாக பின்வரும் பாராவை சேர்த்துக் கொள்ளவும் :

"ஐ. நா. வின் பொதுச் சபைக்கு இந்திய அரசின் குழுவில் ஒருவராக சென்ற தமிழக அரசின் மின்துறை அமைச்சர் ஐ.நா. வின் விசேஷ அரசியல் குழுவில் இப்பிரச்சினை பற்றி பேசியிருக்கிறார்.

பயங்கரவாத செயல்களை ஒடுக்கும் பெயரால் இலங்கையில் சிறு பான்மை தமிழ் மக்கள் வன்முறைக்கு இலாக்காகக் கூடாதென்றும், இந்தியா இந்தக் கமிட்டியில் இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கு இதுவே காரண மென்றும், இலங்கை தமிழர் பிரச்சனையை சர்வதேச பிரச்சனையாக்க இந்தியா முயற்சிப்பதாக கூறப்பட்ட புகாரை மறுத்தும், பேச்சு வார்த்தைகள் மற்றும் இந்தியப் பிரதமரின் விசேடத்தூதர் ஜி. பார்த்தசாரதியின் சமரச முயற்சிகள் மூலம் இப்பிரச்சனைக்கு அமைதியான முறையில் தீர்வு ஒன்று காணவே இந்தியா உண்மையில் விரும்புகிறதென்றும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவுபட சரியான கருத்துக்களை முன்வைத்து பேசியதை இப்பேரவை பாராட்டுகிறது "

திருத்தங்கள் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் என் பெயரில் இருக்கக் கூடிய திருத்தத்தை வலியுறுத்துகிறேன். மாண்புமிகு முன்னவர் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அவர் அதை ஏற்றுக்கொள்ளுகிறாரா என்பது தெரிந்த பிறகு அதைப் பற்றி நான் சொல்லு கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும் இது விவாத நேரம் அல்ல என்பது.

**திரு. ம. சங்கரலிங்கம் :** அரசு கொடுத்த திருத்தங்கள் எதையும் நான் விடச் சொல்லவில்லை. அதோடு நான் கொடுத்திருக்கிற திருத்தத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு கொண்டிருக் கக்கூடிய உணர்வுக்கு வலுவூட்ட நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கி றேன். இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அந்த வலுவை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைச் சொல்லி நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)



**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த திருத்தங்களை வலியுறுத்த அவையில் உறுப்பினர் இல்லாததால், திருத்தங்கள் கைவிடப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. மாணிக்கம் : தலைவர் அவர்களே, "பாரா (எ) முழுவதையும் நீக்க வேண்டும்" என்ற திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை "பாரா (எ) முழுவதையும் நீக்க வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, தமிழ் ஈழ விடுதலைக்கு ஆதரவாக இந்தத் தீர்மானத்திலே சேர்க்க வேண்டுமென்ற என்னுடைய கருத்து ஏற்கப்படாததால் இதை நான் ஏற்பதற்கு முடியாமல் வெளிநடப்புச் செய்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் வெளிநடப்புச் செய்தார்.)

**மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை.** இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்சினைபற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கு வரப்பெற்ற கீழ்க்கண்ட அரசின் திருத்தங்கள்.

**பத்தி—உ**

"உடனடியாகத் தீவிரமான செயல்முறைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இம்பேரவை கேட்டுக்கொள்வதோடு"
என்ற சொற்றொடருக்குப் பின்னர்,

"உலக மக்களின் ஆதரவு, இந்திய மக்கள் அனைவரின் ஆதரவு, இலங்கையி லுள்ள நேர்மையான சனநாயகச் சக்திகளின் ஆதரவு ஆகியவற்றைத் திரட்டு வதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் கோருவதோடு"
என்ற சொற்றொடரையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

பத்தி—ஊ

"இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும்" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள "பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்"
என்ற சொற்றொடரை நீக்கிவிட்டு, அந்த இடத்தில், "தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

பத்தி—ஒ

"குடியுரிமை—வாக்குரிமை—தொழிலுரிமை—வாழ்வுரிமை" என்ற சொற்களுக்குப் பின்னர்,

"மொழியுரிமை" என்ற சொல்லை இணைத்துக் கொள்ளவேண்டும். இறுதியில் "அதனைப் பின்பெறச்செய்ய" என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள "வேண்டும் என்று வற்புறுத்துகிறது" என்ற சொற்றொடருக்கு மாற்றாக "இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இம்மேலவை கேட்டுக் கொள்கிறது" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும்.

பத்தி—ஓ

"இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத் தக்க"
என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள,

"முறையில்" என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் "முறையிலும், இலங்கைவாழ் தமிழர்க்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நல்லெண்ணமும், நல்லுறவும், நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும்"
என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும்.

"இறுதியில் உள்ள இலங்கை அரசு சனநாயகப் பண்புடன் முயலவேண்டும் என்று"
என்ற சொற்றொடர்க்குப் பின்னர் உள்ள "இம்மேலவை இலங்கை அரசை வற்புறுத்துகிறது"
என்ற சொற்றொடருக்கு மாற்றாக,



"இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இம்மேலவை கேட்டுக்கொள்கிறது"
என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ளவேண்டும்.

பத்தி—ஔ

"இலங்கை அரசு உரிய முறையில் நட்ட ஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும்"
என்ற சொற்றொடருக்குப் பின்னர் உள்ள,

"என்று" என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில், "என்றும் அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ள இலங்கைவாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குச் சென்று குடியேற வழிவகை செய்யவேண்டும் என்றும், அவர்கள் இழந்த சொத்துக்களையும், விடுகளையும் திரும்ப மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை மலைத்தோட்டத் தமிழ் தொழிலாளர்கள் முழுக் குடியுரிமையும், வாக்குரிமையும் வாழ்வுரிமையும் பெற வழிவகை காணவேண்டும் என்றும்" என்ற சொற்றொடரை இணைத்துக் கொள்ள வேண்டும்.

"கீழ்க்கண்ட பகுதியை (ங) ஆகச் சேர்த்துக் கொண்டு ஏற்கெனவே உள்ள (ங), (ச) பத்திகளை முறையே (ச), (ஞ) பத்திகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

(ங) இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்கள் மீண்டும் சமரசப் பேச்சை நடத்த இந்தியப் பிரதமரின் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை மீண்டும் அனுப்பி வைக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதை இந்த மேலவை வரவேற்பதோடு, இலங்கைத் தமிழர்களின் அனைத்துத் தரப்புத் தலைவர்களையும் நிபந்தனையற்ற முறையில் கலந்து கொள்ளத்தக்க முறையில் வட்டமேசை மாநாடு விரைவாகக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மேலவை கேட்டுக் கொள்கிறது."

திருத்தங்கள், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

(அ) கடந்த ஜூலைத் திங்கள் முதல் தொடர்ந்து இலங்கை வாழ் தமிழர்களான ஈழத்தமிழர்கள், இந்தியப் பாரம்பரை வழிவந்த தமிழர்கள் இந்தியத் தமிழர்கள் ஆகியோர்க்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொலை, கொள்ளை,

தீ வைப்பு, கற்பழிப்பு, சூறையாடுதல், துயரிழைத்தல் போன்ற கொடுஞ் செயல்களை அறிந்து இம்மேலவை மிக்க அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறது.

(ஆ) மேற்கண்ட கொடுஞ்செயல்களைத் தொடர்ந்து செய்து வரும் சிங்கள இன வெறியர்களையும், அவர்களுக்கு உடந்தையாக நின்று அட்டூழியங்கள் பலவற்றையும் நடத்திவரும் இலங்கை இராணுவத்தினர்—காவல்துறையினர் ஆகியோரையும், அவர்களுக்கு ஆதரவு அளித்துவரும் அதிபர் ஜெயவர்த்தனே தலைமையிலுள்ள அரசையும் இம்மேலவை வன்மையாகக் கண்டிக்கிறது.

(இ) இலங்கையில் நடைபெற்றுவரும் நாகரிகமற்ற, காட்டுமிராண்டித் தனமான, சனநாயகப் பண்பற்ற மனிதாபிமானமற்ற முறையில் நடைபெற்று வரும் கொடுமைகளை எதிர்த்து, எதிர்ப்புக் குரல் கொடுக்கும் வகையில் சட்ட ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டுக் கண்டன ஊர்வலங்கள் நடத்தியும், பொது வேலை நிறுத்தம்—கடையடைப்பு செய்தும், அமைதி ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டும், கோரிக்கைகள் எழுப்பியும் தங்கள் உள்ள உணர்வை ஒருமித்த முறையில் எழுப்பிய பொதுமக்களுக்கும் பல்வேறு துறையினர்க்கும், அனைத்து அரசியல் கட்சியினர்க்கும், எல்லா அமைப்பினர்க்கும் இம்மேலவை தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ஈ) பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ள இலங்கைவாழ் தமிழர்களின் துயர்களை எல்லாவகைகளிலும், துடைக்கவும் தமிழக மக்களில் ஒருமித்த உணர்வுகளுக்குச் செயல் வடிவம் கொடுக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களின் ஆதரவோடு எடுத்த நடவடிக்கைகளை இம்மேலவை பாராட்டி வரவேற்பதோடு, தமிழக மக்களின் உணர்வை ஏற்று, இலங்கைவாழ் தமிழரின் ஆதரவையும், மதிப்பையும் பெற்று, ஆக்க நிறைவான இயன்ற நடவடிக்கைகளையெல்லாம் எடுக்க முன்வந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(உ) இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் இப்பொழுது ஏற்பட்டுள்ள இக்கட்டான கட்டத்தில், தங்களுக்கு நிலையான வாழ்வுரிமையும், பாதுகாப்பையும் இந்திய அரசின் முயற்சியாலும், செல்வாக்காலும், நியாயவுணர்வாலும், நடவடிக்கையாலும் மட்டுமே பெறமுடியும் என்று தெளிவாகவும் திண்மையாகவும் கருதுவதால், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் காலத்தாழ்வுக்கு இடமேற்படாமல், உடனடியாகத் தீவிரமான செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இம்மேலவை கேட்டுக் கொள்வதோடு உலக மக்களின் ஆதரவு, இந்திய மக்கள் அனைவரின் ஆதரவு, இலங்கையிலுள்ள நேர்மையான சனநாயகச் சக்திகளின் ஆதரவு ஆகியவற்றைத் திரட்டுவதற்கு ஆவன செய்ய



வேண்டும் என்றும் கோருவதோடு இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து இன்னல் ஏற்படாதவாறு பேச்சு வார்த்தையை விரைவுபடுத்தி இந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறும் இம்மேலவை வற்புறுத்துகிறது.

(ஊ) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இனம்—மொழி—வரலாறு—நாகரிகம்—பண்பாடு—உறவு—தொடர்பு போன்றவற்றில் நீண்ட நெடுங்காலமாகவே பிணைப்பு இருந்து வருவதாலும், அண்டை நாட்டினரும், அகில உலக நாட்டினரும் கவலைப்படுவதற்குரிய தன்மையில் இலங்கையில் சிறுபான்மையோரின் அடிப்படை மனிதவுரிமைகளுக்கு அழிவு ஏற்படுத்தப்பட்டு வருவதாலும் இந்திய மக்கள்—இந்தியத் தூதுவரகம்—இந்திய வங்கிகள்—இந்தியச் சுற்றுலாப் பயணிகள் கடுமையாகத் தாக்கப்பட்டிருப்பதாலும், இந்திய அரசு, இலங்கையில் ஏற்பட்டிருக்கும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டியது நியாயமான செயலாகும் என்பதை இம்மேலவை இந்திய அரசுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

(எ) உலக நாடுகளில் வாழும் சிறுபான்மையோரின் நலம் காக்கும் பொறுப்பையும், அவர்களுக்கு நிலையான வாழ்வளிக்கும் பொறுப்பையும், அடிப்படையுரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் அவை, இலங்கைவாழ் தமிழர்களின் பிரச்சினையை நிலையாகத் தீர்க்கும் பொருட்டு, உடனடியாகத் தன் முழுச் செல்வாக்கையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி, நியாயத்தை நிலைநாட்ட முன் வரவேண்டும் என்று இம்மேலவை வற்புறுத்துகிறது. ஐக்கிய நாடுகள் அவையில் முக்கியமான வகையில் அங்கம் பெற்றுள்ள இந்திய அரசு இதனை வலியுறுத்துமாறு இம்மேலவை கேட்டுக் கொள்கிறது.

(ஏ) இலங்கையில் ஆயுதவலிவாலும், அடக்குமுறைகளாலும், வன்முறைச் செயல்களாலும், தமிழர் இனத்தையே அழிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள் வழங்க அமெரிக்க அரசு ஆயுத்தம் செய்து வருவதையும், திருகோணமலைப் பகுதியை நிலையான கப்பற்படைத் தளமாக ஆக்கிக்கொள்ள முயல்வதையும், அமெரிக்க அரசின் பாதுகாப்புத் துறைச் செயலாளர் திரு. வென்பெர்ஜெர் இலங்கை அரசுடன் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தியிருப்பதையும் கண்டு இம்மேலவை அதிர்ச்சியும், கவலையும் அடைந்து இருப்பதோடு, இலங்கைவாழ் தமிழர்க்கு வாழ்வளிக்க முன் வராமல் தமிழினத்தின் அழிவுக்கும் காரணமாக அமையும் ஆயுதங்கள் வழங்க முன்வந்திருக்கும் போக்கை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆயுதம் வழங்குவது—கடற்படைத்தளம் அமைப்பது போன்ற அநியாயச் செயல்களை அமெரிக்கா அறவே கைவிட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1983 அக்டோபர் 29

(ஐ) இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் நலங்கருதி தமிழக அரசாலும், இந்திய அரசாங்கம் அனுப்பிவைக்கப்பெறும் உணவுப் பொருள், உடைகள், உடைமைகள், மருந்துகள் போன்றவை உரியவர்களுக்குப் போய்ச் சேரவைப்பதற்கு இந்திய அரசு ஐக்கிய நாடுகள் அவையின் மூலமோ அல்லது உலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமோ, அல்லது இந்திய தூதுவராலயத்தின் மூலமோ தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இம்மேலவை இந்திய அரசைக் கேட்டுக் கொள்கிறது.

(ஒ) உரிமைவேட்கையோடு அறப்போர் நடத்தும் இலங்கைவாழ் தமிழர்களின் குடியுரிமை—வாக்குரிமை தொழிலுரிமை—வாழ்வுரிமை மொழியுரிமை போன்றவற்றை அடியோடு பறிக்கும் வகையில் இலங்கை அரசால் கொண்டுவந்து சட்டமாக்கப்பட்டுள்ள காட்டுமிராண்டி சட்டத்தை இம்மேலவை வன்மையாகக் கண்டிப்பதோடு, அதனை பின்பெறச் செய்ய இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இம்மேலவை கேட்டுக்கொள்கிறது.

(ஓ) இலங்கையிலுள்ள தமிழர் தலைவர்கள் நிபந்தனையற்ற முறையில் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டு, தங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும் ஒளிவு மறைவில்லாமல் வெளியிட வாய்ப்பளித்து, நல்லுறவு அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி, இலங்கைவாழ் தமிழர்கள் அனைவரும் மன அமைதியும், நம்பிக்கையும் கொள்ளத்தக்க முறையிலும், இலங்கை வாழ் தமிழருக்கும் சிங்கள மக்களுக்கும் இடையில் நல்ல எண்ணமும் நல்லுறவும் நம்பிக்கையும் ஏற்படும் வகையிலும் தீர்வு காண இலங்கை அரசு ஜனநாயகப் பண்புடன் முயல வேண்டும் என்று இலங்கை அரசை வற்புறுத்துமாறு இந்திய அரசை இம்மேலவை கேட்டுக்கொள்கிறது.

(ஔ) இலங்கை வன்முறைக் கொடுமைகளுக்கு ஆளாகி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், படுகாயமுற்று அவதிப்படுவோர்க்கும், சொத்துக்களை இழந்து தவிப்போர்க்கும் இலங்கை அரசு உரிய முறையில் நட்டஈட்டினை உடனடியாக அளிக்க வேண்டும் என்றும், அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ள இலங்கை வாழ் தமிழர்கள் மீண்டும் இலங்கைக்குச் சென்று குடியேற வழிவகை செய்ய வேண்டும் என்றும், அவர்கள் இழந்த சொத்துக்களையும் வீடுகளையும் திரும்ப மீட்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கை மலைத் தோட்டத் தமிழ்த்தொழிலாளர்கள் முழுக் குடியுரிமையும், வாக்குரிமையும், வாழ்வுரிமையும் பெற வழி வகை காண வேண்டும் என்றும் இம்மேலவை வற்புறுத்துவதோடு, அதற்கான உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.



1983 அக்டோபர் 29] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

(க) தமிழ்மக்களின் உள்ளக் குமுறலையும் எண்ணங்களையும் கோரிக்கைகளையும் ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்து வைக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில் தமிழக ஆட்சியில் அமர்ந்துள்ள அமைச்சரவையின் உறுப்பினரான மாண்புமிகு மின்துறை அமைச்சரை இந்தியக் குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, அனுப்பிவைத்த இந்தியப் பேரரசையும், அனைத்து நாடுகளும் அறியும் வண்ணம் ஐந்து கோடித் தமிழ் மக்களின் உணர்வை, ஐக்கியநாடுகள் அவையில் வெளிப்படுத்திய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களையும் இம்மேலவை பாராட்டுகிறது.

(ங) இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே அவர்கள் மீண்டும் சமரசப் பேச்சை நடத்த இந்தியப் பிரதமரின் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களை மீண்டும் அனுப்பிவைக்குமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பதை இந்த மேலவை வரவேற்பதோடு, இலங்கை தமிழர்களின் அனைத்துத் தரப்புத் தலைவர்களையும் நிபந்தனையற்ற முறையில் கலந்து கொள்ளத் தக்க முறையில் வட்ட மேசை மாநாடு விரைவாகக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மேலவை கேட்டுக் கொள்கிறது.

(ச) நிலையான வாழ்வுரிமைகளுக்கும், நிலைத்த பாதுகாப்புக்கும் அறவழியில் அறப்போர் நடத்திடும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு இம்மேலவை தன் முழு ஆதரவை அளிப்பதோடு, அவர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

(ஞ) இந்தத் தீர்மானத்தில் மேலே குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை இந்தியப் பேரரசின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கான எல்லாவித முயற்சிகளையும் முறைப்படி மேற்கொள்ளுமாறு இம்மேலவை தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம், திருத்தப்பட்டவாறு, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவையில் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 31—10—1983 திங்கட் கிழமையன்று பிற்பகல் 3 மணிக்குக் கூடும். பின்னர் அவை ஒத்தி வைக்கப்பெற்றது.

(பிற்பகல் 2-10)

*A. Statutory Rules and Orders.*

173. Annual Report on the working of the Tamil Nadu Labour Welfare Board for the year 1978-79. [Laid on the table of the House under section 35 of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1982) (Tamil Nadu Act 36 of 1972).].

174. 11th Annual Report of the State Industries Promotion Corporation of Tamil Nadu for the year 1981-82 (both English and Tamil). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).].

175. Annual Report on the working of the Tamil Nadu Labour Welfare Board for the year 1979—80. [Laid on the table of the House under section 35 of the Tamil Nadu Labour Welfare Fund Act, 1972 (Tamil Nadu Act 36 of 1972).].

176. 13th Annual Report of the Tamil Nadu Textiles Corporation for the year 1981-82 (both English and Tamil). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956).].

177. Notification issued in G.O. Ms. No. 2060, Education, dated 15th September 1981 regarding appointment of the first Vice-Chancellor of the University. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act No. 9 of 1982).].

178. Notification issued in G.O. Ms. No. 2187, Education, dated 30th September 1981 regarding appointment of the first Registrar of the Tamil University. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act No. 9 of 1982).].

179. Notification issued in G. O. Ms. No. 169, Education dated 1st February 1982 regarding appointment of Finance Officer of the Tamil University. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act 9 of 1982).].



180. Notification issued in G.O. Ms. No. 2013, Education, Science and Technology Department, dated 10th September 1982 in regard to the date from which the Senate of the Tamil University, Thanjavur, commenced to exercise its functions. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act No. 9 of 1982).].

181. Notification issued in G.O. Ms. No. 2014, Education, Science and Technology Department, dated 10th September 1982, in regard to the date from which the Syndicate of the Tamil University, Thanjavur, commenced to exercise its functions. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act 9 of 1982).].

182. Notification issued in G.O. Ms. No. 2015, Education, Science and Technology Department, dated 10th September 1982 in regard to the date from which the certain sections of the Tamil University Act, 1982 came in to force. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act 1982.) (Tamil Nadu Act 9 of 1982)

183. Notification issued in G.O. Ms. No. 2016, Education, Science and Technology Department, dated 10th September 1982 in regard to the date from which the Finance Committee of the Tamil University, Thanjavur commenced to exercise its functions. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982).]

184. Notification issued in G.O. Ms. No. 2606, Education. Science and Technology Department, dated 26th November 1982 in regard to nomination of Members to Senate by Chancellor of Tamil University. [Laid on the table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982).].

*B. Reports, Notifications and other Papers.*

21. Twentieth Report of the Committee on Estimates (Seventh Assembly) on the action taken by the Government on the recommendation contained in the Report on Forest. (Tamil)

[ISSUED 9—3—1984

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

MONDAY, 31st OCTOBER 1983

Volume 201 (No. 5)

©
GOVERNMENT OF TAMIL NADU
1984

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price: Rs 2.75 Paise]

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| | | பக்கங்கள். |
| 1. | வினாக்கள்—விடைகள் | 369—389 |
| 2. | அறிவிப்புகள்— | |
| | (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு | 389 |
| | (2) ஆளுநரிடமிருந்து செய்தி | 389 |
| | (3) பேரவையிலிருந்து செய்தி | 389 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம்— சேலம் நகராட்சியின் கழிவு நீரைப் பயன்படுத்தி கழிவு நீர்ப் பயிர்ப் பண்ணை ஒன்றை உருவாக்க பூலாவாரி அக்கரைப் பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களைக் கையகப் படுத்துவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து. | 390—393 |
| 4. | கவன ஈர்ப்பு— நடு நிலைப் பள்ளிகளாக இருந்து, அரசு உயர் நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் பணி வரன்முறை செய்யப் படாமை குறித்து. | 393—395 |
| 5. | தகவல் கோரல்— சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் திரு. இளையபெருமாள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து. | 396 |
| 6. | 1983–84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது விவாதம். | 396—440 |
| 7. | 1975–76, 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கையின்மீது விவாதம். | 440 |
| 8. | அரசின் சட்ட முன்வடிவு— தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983). | 440—441 |
| 9. | அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 442—449 |

143193

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

திங்கட்கிழமை, 1983 அக்டோபர் 31

ஐப்பசி 14, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு 2014.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (மாண்புமிகு டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Agriculture Instructors.*

*31. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Tamil Nadu Agriculture Instructors Association has sent a representation to the Government to convert their posts into full-time posts; and

(*b*) if so, the action to be taken thereon?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஆம்.

(இ) விவசாய பயிற்றுனர்கள் சங்கத்திடமிருந்து பெறப்பட்ட பல கோரிக்கைகளில், மேல்நிலைக் கல்வி தொழிற் பிரிவில் பணியாற்றும், பகுதிநேர ஆசிரியர்களை, முழுநேர ஊழியர்களாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் ஒன்றாகும். மேல்நிலைக் கல்வி திட்டத்தின்கீழ் தொழிற்பாட வகுப்புகளை நடத்த முழுநேர ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவுமில்லை; அதற்கான கல்வித் தகுதிகளும் நிர்ணயிக்கப்படவுமில்லை; ஆசிரியர்கள் நியமனம் செய்யவே அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், தொழிற் கல்வி சீரமைப்பு பற்றி அரசுக்கு ஆலோசனை கூற அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளில் ஒவ்வொரு தொழிற்பாட பிரிவுக்கும் ஒரு முழுநேர ஆசிரியர் நியமிக்கலாம் என்பது ஒன்றாகும். இது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

[1983 அக்டோபர் 31

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, அவ்வாறு டாக்டர் வி. சி. குழந்தைசாமி குழுவினுடைய அறிக்கையை எவ்வளவு சீக்கிரமாக அமுல்படுத்த இருக்கிறோம் என்பதை அறிய விரும்புகிறேன். தற்சமயம் உள்ள பகுதி நேர தொழில் ஆசிரியர்கள் இரண்டு பாட வேளைகள் ஒரு ஆண்டிலே குறைவாக எடுக்கிறார்கள் என்பதால், அதாவது 1980-81 ஆம் ஆண்டிலே இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் எடுத்து வந்த 20 பாட வேளைகளிலே 2 பாட வேளைகளை உடற்பயிற்சிக் கல்விக்கு ஒதுக்கிய காரணத்தினாலேயே 2 பாட வேளைகள் குறைந்தால், அந்த ரூ. 150, ரூ. 150 சேர்ந்து 300 ரூபாய் பெற முடியாமல் இருக்கிறார்கள். அது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அது குறித்து என்ன ஆணையிட இருக்கிறார்கள் என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, அதுபற்றி விவரம் இங்கேயில்லை. ஆனால் அந்தப் பிரச்சினை குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடக்கத்திலேயிருந்து, 3 ஆம் வகுப்பிலிருந்து தொழிற் கல்வி அளிக்கும் ஒரு பெரிய திட்டம் உருவாக்கியிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தத் திட்டம் எந்த ஆண்டில் தொடங்கப் போகிறது? அதற்கு மத்திய அரசிடம் ரூ. 5 கோடி கேட்டிருப்பதாக, பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கிறோம். அது குறித்து விவர அறிக்கை இப்போது உண்டா? அதைக் குறித்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அது குறித்து அதிகாரிகள் மட்டத்திலே ஆய்வு செய்து வருகின்றார்கள். அவர்களிடமிருந்து அறிக்கை கிடைத்த பிறகு, அதைப்பற்றி முடிவு எடுக்க முடியும்.

**திரு. செ. முத்துசாமி:** கைத்தொழில் மேல்நிலைப் பள்ளியிலே சிறப்பாக பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்பதற்காக குழு அமைத்து, அரசாங்கத்திற்கு அதன் அறிக்கை வந்து, 6 மாதத்திற்கு மேல் ஆகிறது. இன்னும் பரிசீலனை நிலையிலே இருப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள். மாணவர்களுக்குத் தொழிற் கல்வி நல்ல முறையில் அளித்து, அவர்கள் வெளியிலே வந்து தொழில் அமைக்க வேண்டும் என்பது, நம் அரசினுடைய நோக்கம். அப்படியானால் முழுநேர ஆசிரியர்களாக்கி, ஊதியத்தை இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அவர்களுக்குக் கொடுத்து, நல்ல தொழில் கல்வியை மாணவர்களுக்குக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?



1983 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** முழு நேர ஆசிரியர் ஒருவரை, ஒவ்வொரு தொழில் கல்விப் பிரிவிற்கும் நியமிக்க வேண்டுமென்ற கருத்தினை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பகுதி நேர ஆசிரியர்களை இல்லாது செய்து, எல்லோரையுமே முழு நேர ஆசிரியர்களாக ஆக்குவது என்பது நல்லதல்ல. காரணம், தொழிற் கல்வியில், அந்தத் தொழில் சம்பந்த நிறுவனங்களிலே பணியாற்றிக்கொண்டிருப்பவர்களை இதற்கு நேரடியாகப் பயன்படுத்தவேண்டுமென்ற கருத்து இருப்பதால், இந்தப் பகுதி ஆசிரியர்கள் பதவி என்பது நல்லது, அது இருக்க வேண்டும், அது இருப்பது தொழில் கல்விக்கு நல்லது என்ற அடிப்படையிலேதான் அதை நாம் ஆரம்பத்திலேயிருந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், சில பேர்களாவது முழுநேர ஆசிரியர்களாக இருக்க வேண்டுமென்று ஒரு அபிப்பிராயத்தை அந்தக் குழு சொல்லியிருப்பதால், அதைப்பற்றி நாம் ஆய்வு செய்து வருகிறோம். அதிலே இப்போது மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் தொடக்கப் பள்ளி நிலையிலேயிருந்தே அந்தத் தொழிற் கல்விக்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்ற அடிப்படையிலே கருத்து வெளியிட்டு, அந்தக் கருத்தை ஆராய்கின்ற வகையிலே அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே இதையும் அத்தோடு சேர்த்து ஆராய்ந்து, நிச்சயமாக முக்கியமாக மேல்நிலைப் பள்ளியிலே தொழிற் கல்விப்பிரிவு இப்போது இருப்பதைவிட இன்னும் சிறந்த முறையில் நடப்பதற்கு நாம் ஆவன செய்வோம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, பகுதி நேர தொழிலாசிரியர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கு ரூ. 150 தான் வழங்கப்படுகிறது. இரு வேளைகளும் போதிந்து, அவர்கள் ரூ. 300 வாங்க வாய்ப்பு இல்லாமல் போகிறது. அந்த ரூ. 150 என்பது கடைநிலை ஊழியர்களுக்குக் கிடைப்பதை விட குறைவாக இருப்பதாலும், மாணவர்கள் அவர்களை மதிப்பதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலேயும், அந்தக் கல்வித் தரம் கூட உயர்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே ரூ. 150 என்ற அந்த ஊதியத்தை ரூ. 300 அல்லது ரூ. 450 என்று உயர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா? அதைப பற்றி அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, ஒரு வேலையுமே இல்லாதவர்களைப் பகுதி நேர ஆசிரியர்களாக வைத்துக்கொண்டிருந்தால் இந்த நிலைமை ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நம்முடைய நோக்கம் அதுவல்ல. வேறு வேலையில் இருப்பவர்கள் அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட பிரிவிற்குத் தொழிற் கல்வி போதிக்க பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆத்துடன் சிறப்பான தொழிற் கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் பணிகளை வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படியும் சில பேர்கள் அந்தத் தொழிற் கல்விக்கு உதவி செய்து வந்திருக்கிறார்கள். ஆகவே வேறு ஒரு தொழிலிலே இருக்கின்றவர்கள் இந்தப் பகுதி நேரப் பதவிகளை ஏற்றுக்கொண்டு, தொழிற் கல்வியைத் தருகிறார்கள் என்கின்ற அடிப்படையிலே வருகிறபோது, அந்த ரூ. 150 என்பது சரியாகப்படும். வேலையே இல்லாமல் பகுதி நேர ஆசிரியர்களாக வந்து சேர்ந்திருப்பவர்களுக்கு ரூ. 150 கொடுக்கிறபோது, அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. அப்படிக் கேட்பதிலே நியாயம் இல்லை. ஆனால் அந்த நியாயத்தைப் பார்த்துக் கொண்டு, பகுதி நேர ஆசிரியர்களாக வரக்கூடிய வாய்ப்பைக்கூட தடுத்துவிட நாம் தயாராக இல்லை. அந்த வாய்ப்பு இருக்கும் அதே நேரத்திலே ஒரு பிரிவுக்கு ஒரு முழு நேர ஆசிரியரைப் போடுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. அதைத்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அந்த முடிவு வந்த பிறகு, சில பேர்களுக்கு நன்மை ஏற்படும்.

### மேல்நிலைப் பள்ளிகளில் வணிகவியல் ஆசிரியர்கள் நியமனம்.

* 32. **வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல் நிலைப் பள்ளிகளில், வணிகத் துறை ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு நிர்ணயித்துள்ள தகுதிகள் யாவை?

(இ) நியமனம் செய்வதற்கு பின்பற்றப்படும் முறைகள் யாவை?

(உ) தகுதியுடையோரிருந்தும், தகுதி குறைவானவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(எ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (இ) மேல்நிலைப் பள்ளிகளில் வணிகவியல் ஆசிரியர்கள் நியமனத்திற்கு அரசு நிர்ணயித்துள்ள கல்வித் தகுதிகள், அதற்குப் பின்பற்றப்படும் முறைகள் அடங்கிய விவரப் பட்டியல் @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

---

@ 445 ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.





### தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

* 33. **வினா—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆராய வல்லுநர் குழு எப்போது அமைக்கப்பட்டது?

(இ) குழு ஆராய்வதற்கு அரசு சுட்டிய பொருள்களின் (Term of reference) விவரங்கள் யாவை?

(உ) குழுவின் பரிந்துரைகள் யாவை?

(எ) அரசு அவைகளின்மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) குழு அமைக்க 1979 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஆணையிடப்பட்டது.

(இ) பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தினை அரசு துறைகளில் நடைமுறைப்படுத்தவும், மேலும் தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தி அமைக்கவும் பற்றிய பரிந்துரைகள் செய்தல்.

(உ) (1) பள்ளிப் பாட நூல்களில் அய், அவ் என்னும் வடிவங்கள் அச்சிடப்பெற்று இருந்தால், அவற்றை மாற்றி, ஐ, ஔ என்று பழைய முறையிலே அச்சிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

(2) எழுத்துச் சீர்திருத்தம் தொடர்பாக அப்பாத்துரையார் அவர்களது எழுத்து வடிவிலுள்ள கருத்துக்களைப் பிற உறுப்பினர்களுக்கு அனுப்ப வேண்டும்.

(3) 'இகர', 'ஈகார' 'உகர', 'ஊகார' உயிர் மெய் எழுத்துக்கள் தொடர்பான சீர்திருத்தம் பற்றிய ஆய்வை மேற்கொள்ளலாம்.

(4) இக்குழுவில் மேலும் 17 பேர்களை உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும்.

(எ) ஐ, ஔ ஆகிய உயிரெழுத்துக்கள் இவ்வடிவிலேயே இருக்கலாம் என்று 23—5—1979 ஆம் நாளிட்ட அரசுக் குறிப்பாணையில் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னர் பாடநூல் நிறுவனம் அச்சிடுகின்ற பாடநூல்கள் யாவற்றிலும் ஐ, ஔ ஆகிய எழுத்துக்களே இடம் பெறுகின்றன. எனவே, இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை எழவில்லை. எழுத்துச் சீர்திருத்தம் தொடர்

[1983 அக்டோபர் 31

பாக அப்பாத்துரையார் அவர்களின் எழுத்து வடிவில் உள்ள கருத்துக்கள் பிற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டன. இதற்கிடையில் குழுவின் காலம் முடிவடைந்துவிட்டபடியால் கல்வி அமைச்சரைத் தலைவராகவும், மேலும் 6 தமிழறிஞர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு 1982 டிசம்பர் திங்களில் குழு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, இந்த எழுத்துச் சீர்திருத்தம் என்பது விரைவாகச் சுருக்கெழுத்து எழுதுவதற்கும், தட்டெழுத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தி, தந்தி முதலியவைகள் தமிழிலே வருவதற்குரிய முறையில் அமைய வேண்டுமென்பதுதான் சிந்தனை. இப்போது கல்வி அமைச்சர் அவர்கள் தலைமையிலே புதிதாக ஏற்பட்டிருக்கின்ற குழு, இந்தக் கருத்துக்கள் அமையுமாறு அறிக்கை தர வேண்டும். அதற்கும் ஒரு அறிக்கை விடுத்து, குறிப்பிட்ட தினங்களுக்குள் இன்னின்ன முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கருத்துக்களைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவிப்பு கொடுக்க வேண்டும். அதற்கு என்று பரிசும்கூட கொடுக்க வேண்டும். தந்தி முதலியவைகள் தமிழிலே கொடுப்பதற்கு ஏற்ற வகையிலே, அதை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

(பிற்பகல் 3-10)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து மேலும் சில எழுத்துக்களைச் சீர்திருத்தி அமைப்பது என்பது விஞ்ஞான ரீதியாகத் தமிழை வளர்க்கவும், தமிழை நாம் கையாளவும் ஒரு வாய்ப்பு தரும். அதற்காகத்தான் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கைகளே இன்னும் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், முழுமையாக ஒப்புக் கொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, சிங்கப்பூர் அரசாங்கம் அங்கே நம்முடைய பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. குழந்தைசாமி அவர்கள் போனபோது, அவர்களிடத்தில் பேசி, ஒரு தீர்க்கமான முடிவை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். நாம் கொண்டு வந்துள்ள எழுத்துச் சீர்திருத்தத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டு, இனி நாம் கொண்டு வரும் சீர்திருத்தங்களையும் அங்கே கொண்டுவர ஒரு முடிவை சிங்கப்பூர் அரசாங்கம் எடுத்திருக்கிறது. அப்படி சீர்திருத்தங்களை மலேசியா, சிங்கப்பூர் போன்ற இடங்களில் கொண்டுவர வேண்டுமென்றாலும், தமிழ் நாட்டைப் பொறுத்த



1983 அக்டோபர் 31]

மட்டில், எழுத்துச் சீர்திருத்தத்தைப் பத்திரிகைகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றன. அது வருத்தம் தருவதாக இருக்கிறது. பொது மக்களிடத்திலே நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள பத்திரிகைகள் நல்ல ஆதரவு கொடுக்கவில்லை. மேற்கொண்டு சீர்திருத்தம் கொண்டு வரலாம். ஒரு கட்டத்தில் கொண்டு வந்த சீர்திருத்தங்களையே முழு ஆதரவுக்கு நடைமுறைக்குக் கொண்டு வராமல் மேற்கொண்டு எழுத்துக்களை மாற்றிக்கொண்டு போவது இந்த நேரத்தில் அவசியமாக இருக்குமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. இருந்தாலும் அது பற்றி ஆய்வு நடத்தி 'உ', 'ஊ', 'இ', 'ஈ' ஆகிய எழுத்துக்களை சீர்திருத்தி அமைத்தால், தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் கம்ப்யூட்டர், டெலிபிரிண்டர் போன்ற தனிக் கருவிகளைப் பயன்படுத்தும் நிலைமை வந்துவிடும். அதை விரைந்து செய்ய வேண்டுமென்பது தான் தமிழக அரசின் ஆசை. இருந்தாலும் மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்றாக வேண்டுமென்பதால், இதில் நிதானத்தைக் கடைப் பிடிக்கிறோம்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, ஆங்கிலப் பேரறிஞரான பெர்னார்ட் ஷா ஆங்கில மொழியிலே ஏராளமான எழுத்துக்கள் தேவையில்லாமல் இருப்பதைக் கண்டு, அதற்குத் தீர்வு காண பெரும் நிதியை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். Knife என்பதைச் சொல்லும்போது [illegible] தேவை இல்லாமல் எழுத்து வேறு. இது மொழியின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறதென்று கருதி, அதற்காக ஒரு நிதியை ஏற்படுத்தி, மாற்றம் காண விழைந்தார்கள். தமிழ் மொழியின் மேன்மை மக்கள் [illegible] ஆகி [illegible] நிதி பெற்று, சீர்திருத்தம் கொண்டுவர அரசு [illegible] ஒரு [illegible] மாற்றம் உருவாகும். அந்தப் பணியைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் [illegible] ஏற்றுக்கொள்ள தமிழக அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்ப் பல்கலைக் கழகத்தை, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி [illegible] எடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்வதில் தமிழக அரசுக்கு அபிப்பிராய பேதமில்லை. அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இப்போது இருக்கின்ற பிரச்சினை, நாம் கொண்டு வந்துள்ள எழுத்துச் சீர்திருத்தம் குறைந்த அளவுக்குத்தான் இருக்கிறது. இதை அரசுத் துறைகளிலே நடைமுறைப் படுத்தி விட்டோம். தமிழ்ப் பாடநூல் நிறுவனமும் நடைமுறைப்படுத்தி விட்டது. [illegible] நிலையமும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் பத்திரிகைகளும், பிற அமைப்புகளும் இதை ஏற்றுக்கொள்ளாத நிலை இருக்கிறது. அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறது. [illegible] அவர்களைக் கட்டாயப்படுத்தும் சூழ்நிலையை அரசு உருவாக்கும்

நிலைமை ஏற்பட்டால், அதற்கும் தயாராக இருக்க வேண்டும். அந்தப்
பத்திரிகைகள் வாங்குவதை நிறுத்துவதும், எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்
பற்றினால்தான் அந்தப் பத்திரிகைகளை ஆதரிக்க முடியும் என்று சொல்வதும்,
அப்படி இல்லை என்றால், அரசின் ஆதரவை அந்தப் பத்திரிகைகளுக்குத்
தராமல் இருக்கும் நிலைமைக்கு அரசு செல்வதும் ஏற்படாமல் இருக்க
வேண்டும். விஞ்ஞான ரீதியாக, மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு
முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, விஞ்ஞான அடிப்படையில் செய்த
சீர்திருத்தத்தை ஏன் பத்திரிகைகள் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன? இந்த
நாட்டிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட பத்திரிகைகள் தங்களுடைய ஆதரவைத்
தர மறுக்கின்றன என்பது விளங்காத ஒன்றாக இருக்கிறது. இதற்கு ஆதரவு
காட்டுவதன் மூலமாக தமிழ்ச் சமுதாயத்திற்கு, இந்த மக்களின் முன்னேற்றத்
திற்கு பத்திரிகை நடத்துகிறவர்கள் உதவுகிறார்கள். தயவுசெய்து அவர்கள்
இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள
பத்திரிகைகள் இதைப் பின்பற்றாதது குறித்துக் குறிப்பிட்டார்கள். எழுத்துக்
களைக் குறைக்கும் அதே நேரத்தில், பத்திரிகைகளில் இவற்றைப் பின்பற்று
வதன் மூலமாக 'ஸ்பேஸ்' பிரச்சினை வருகிறது. இதைப் போல வேறு சில
பிரச்சினைகளும் பத்திரிகைகள் கண்ணோட்டத்தில் இருக்கின்றன. இந்தப்
பிரச்சினைகளை அரசு தீர்ப்பது குறித்து, பத்திரிகை நடத்துபவர்களையும்,
புத்தகங்கள் வெளியிடுபவர்களையும் அழைத்துப் பேசி, தனை முறையில் அவர்
களுக்கு அரசு அளிக்க இருக்கும் உதவிபற்றி உறுதிமொழிகள் கொடுத்தால்,
நிச்சயமாக அவர்கள் இதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன். எனவே இது
குறித்து அமைச்சரவர்கள் உரிய முயற்சிகளை எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் :** எழுத்துச் சீர்திருத்தத்தைப் பயன்
படுத்துவதன் மூலம் நவீனக் கருவிகளை, நவீன இயந்திரங்களைப் பயன்
படுத்தும் வாய்ப்பு பத்திரிகைகளுக்கு இருக்கிறது. சிக்கனத்திற்குப்
போன தந்தை பெரியார் அவர்களே அதைப் பார்க்காமல், எழுத்துச் சீர்
திருத்தத்தைப் பயன்படுத்தி வந்தபோது, மற்றவர்கள் அதைப்பற்றிக் கவலைப்
பட வேண்டியதில்லை. எந்த அளவுக்குச் செலவு செய்கிறார்களோ, அந்த
அளவுக்கு விலை வைத்து விற்கிறார்கள். எனவே இதில் சிக்கல் என்பது வர
இடமில்லை. நம்முடைய மனதுதான் இதற்கு இடம் தர வேண்டும். பழமைப்
பிடிப்பு தளர வேண்டும்.





## மைய மதிப்பீட்டு முறையில் தரப்படும் ஊதியம்

34 வினா—**திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், த. சந்தோஷம் மற்றும் பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மைய மதிப்பீட்டு முறையில் பத்தாம் வகுப்புத் தேர்வு, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு ஆகியவற்றில் விடைத் தாள்கள் திருத்தப்படுவதற்குத் தரப்படும் ஊதியம் எவ்வளவு?

(இ) இத்தொகையை உயர்த்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா ?

(உ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) ஒரு விடைத்தாள் திருத்து வதற்கு தரப்படும் ஊதியம் பின்வருமாறு :—

பத்தாம் வகுப்புத் தேர்வு—ரூ. 1.

பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு—ரூ. 1-25.

(இ) மற்றும் (உ) மேல்நிலைத் தேர்வுக்கான விடைத்தாள் திருத்தும் ஊதியமான ரூ. 1-25-ஐ உயர்த்தும் கருத்துருவை, தற்போதுள்ள நிதிநிலை காரணமாக பரிசீலனையைத் தள்ளிவைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, 10 ஆம் வகுப்புக்கான தேர்வில், 2½ மணி நேர வினாத் தாளுக்கு விடையளிக்கிறார்கள். 12-ஆம் வகுப்பைப் பொறுத்தவரை 3 மணி நேர வினாத் தாளுக்கு விடை அளிக்கிறார்கள். ஒரு ரூபாய் என்பது பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட தொகை. தேர்வை நடத்த, மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கிறோம். அந்தக் கட்டணங்களிலிருந்துதான் ஆசிரியர்களுக்குப் பணம் தரும் நிலைமை இருக்கிறது. எனவே மேலும் இந்தத் தொகையைக் கூட்டுவது என்றால், அரசுக்கு ஆகக்கூடிய நிதிச் செலவு மிகக் குறைவாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய மதிப்பீடு. எனவே 10 ஆம் வகுப்பு 2½ மணி நேர விடைத் தாள் திருத்த 2½ ரூபாயும், 12 ஆம் வகுப்பு 3 மணி நேர விடைத் தாள் திருத்த 3 ரூபாயும் என்ற அளவில் இந்தக் கட்டணங்களை உயர்த்துவது குறித்து அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, 1¼ ரூபாயை 2 ரூபாயாக்கினால் அரசுக்கு செலவு 9 லட்சம் ரூபாயாகும். அதையே நிதி நிலைக்கு இடம் தரவில்லை என்று தள்ளி வைக்கிறோம். எனவே 3 ரூபாய் என்பதை இப்போது நினைத்துக்கூட பார்க்க முடியாமல் இருக்கிறோம். மாணவர்கள் தரும் பணம் என்னும்போது, எஸ்.எஸ்.எல்.சிக்கு இப்படிப்பட்ட ஏற்றும் நிலையில் இருக்கிறோமா என்றால், கொஞ்சம் ஏற்றினாலும் எதிர்ப்பு வருகிறது என்பதால், அதில் கண்டிப்பாக இருக்கிறோம். எனவே நிதி நிலைமை இடம் தரும்போது, இதைப்பற்றி மறுபடியும் பரிசீலிக்கப்படும்.

**திரு. த. சந்தோஷம் :** விலைவாசிகள் சமீபத்தில் திடீரென்று உயர்ந்திருக்கின்றன. இதைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் தன் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கிறது. எனவே அதற்கேற்றபடி இதையும் உயர்த்துவது அவசியம். போன ஆண்டு மாப்ப விடைத் தாள் திருத்த வந்தவர்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் மிகக் குறைந்த நாட்களில் திருத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது, நிச்சயமாக விலைவாசிகள் உயர்வைக் கருத்தில்கொண்டு மதிப்பூதியத்தை உயர்த்துவது அவசியம். இந்தச் சூழ்நிலையில் அரசு பரிசீலனை செய்யுமா ?

(பிற்பகல் 3-20)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இப்பொழுது ஒரு விடை திருத்த 1¼ ரூபாய் என்றாலும், ஒரு நாளைக்கு 30 தாள் திருத்துவதால் ஓரளவுக்குப் பணம் வருகிறது. மொத்தமாகப் பார்க்கும்போது, அவ்வளவு குறைவுபடவில்லை. இருந்தாலும் அவர்களுடைய கோரிக்கையை அரசு நிதிநிலை காரணமாகத்தான் ஒத்தி வைத்திருக்கிறதே தவிர, வேறு எந்த அடிப்படையிலும் அல்ல.

**திரு. பா. ரா. தாமஸ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நிதிநிலை காரணமாக இதை ஒத்தி வைத்திருப்பதாக இங்கே சொன்னார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ள வகையில் தற்காலிகமாகவாவது 1½ ரூபாய், 2 ரூபாய் என்கிற அளவுக்கு உயர்த்துவார்களா ? அதோடுகூட தினப்படி வழங்குவதில்கூட ஆசிரியர்கள் தொல்லைக்கு உள்ளாகிறார்கள். தவிரவும் அவர்களுக்கு அடிப்படைத் தேவைகள் கூட இல்லாத நிலை இருக்கிறது. எல்லா மாநகராட்சிகளிலும் சென்னை மாநகரத்திலே வழங்குவது போன்று தினப்படியை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்குரிய செயற்குறிப்பை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குப் பரிந்துரைத்து அனுப்பி, அவர்களுடைய ஒப்புதலை பெற்று ஆசிரியர்களுக்கு வழங்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?



1983 அக்டோபர் 31]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தினப் படியை இப்போது நாம் அந்தந்த ஊருக்குத் தகுந்தபடி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது குறித்து வேண்டுமானால் பரிசீலித்துப் பார்க்கலாம்.

**திரு. செ. முத்துசாமி :** 2 ரூபாயாக உயர்த்தினால் அரசுக்கு 9 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்வளவு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நமக்கு பட்ஜெட் வழியாக வந்து நாம் செலவழிக்கும்போது, இந்த 9 இலட்சம் ரூபாய் என்பது அரசுக்கு ஒரு பெரிய தொகை அல்ல. ஆசிரியர்கள் தேர்வுத் தாளைத் திருத்துகிறபோது, நல்ல மனோநிலையில் இருந்து திருத்த வேண்டிய அவசியம் இருப்பதால் இதை உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம். அந்த வகையில் துரிதமாக இதை உயர்த்துவதற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நிதிநிலை சரியானவுடன், நிச்சயமாக இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்காலிக வேலைநீக்க காலம்.

*** 35. வினா—திரு. செ. முத்துசாமி மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

தொழிலாளர்கள், தொழிற்சாலை நிர்வாகத்தினரால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டால், கால நிர்ணய அடிப்படையில் 50 சதவிகிதம் ஊதியம், 75 சதவிகிதம் ஊதியம், முழு ஊதியம் நிர்வாகம் தரவேண்டுமென்ற சட்டம் தனியார் பள்ளி, உள்ளாட்சி, அரசு நிர்வாகப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் வகையில் திருத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** கேள்வியில் குறிப்பிட்டுள்ள "தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம், 1981"-ல் உள்ள ஏற்பாடுகள் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அரசு நிர்வாகத்தில் உட்படுத்தப்பட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பொருந்தாது. ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்தும். ஆகவே, தமிழ் நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்திற்கு ஏற்ப, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு

கால நீட்டிப்பு அடிப்படையில் பிழைப்பூதியம் வழங்கத்தக்க வகையில் தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 1973 மற்றும் அதன் கீழமைந்த விதிகளைத் திருத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, தனியார் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும் இந்தச் சட்டத்தை விரிவுபடுத்த அரசு பரிசீலிக்கும் என்று இங்கே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அரசுத் துறைகளிலே பணியாற்றக்கூடிய சில அதிகாரிகள் விருப்பு வெறுப்பு அடிப்படையில் நீண்ட நாட்களாக ஆசிரியர்களை சஸ்பென்ஷனில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்தச் சட்டம் ஏன் பொருந்தாது ? அவர்களுக்கும் வழங்குவது நியாயம் என்பதோடு கூட உள்ளாட்சித் துறைக்கும் இது நீட்டிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, அவர்களுக்குப் பொருந்தாது என்று சொன்னேனே தவிர, தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. இப்போதைய அடிப்படை விதிகளின்படி அவர்களுக்குப் பிழைப்பூதியம் வழங்கப்படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட பிறகு, முறையான விசாரணையின்றி, தவறாக தண்டிக்கப்பட்டார் என்கிற நிலையில் சஸ்பென்ஷன் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். அவ்வாறு அறிவிக்கும்போது, இர்ரெகுலர் சஸ்பென்ஷன் என்கிற வகையில் அவர்கள் சஸ்பென்ஷன் செய்யப்பட்ட முழுக் காலத்திற்கும் முழு ஊதியம் பெற தகுதியுடையவர்கள். ஆனால் தனியார் பள்ளி நிர்வாகங்கள் அந்தக் காலத்திற்குரிய முழு ஊதியத்தையும் தர மறுக்கின்றன. காரணம் அவர்களுடைய சொந்தப் பணத்திலிருந்து கொடுக்க வேண்டும். இந்தக் குறைபாட்டை நீக்க உரிய சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தக் காலத்திற்குரிய தொகையை மேலாண்மை தான் தர வேண்டுமென்று இருக்கும்போது, அவர்கள்தான் தர வேண்டும். ஆகவே, இதற்கு வேறு சட்டத் திருத்தம் தேவையில்லை என்று கருதுகிறேன். ஆனால் அப்படி அவர்கள் தரவில்லையென்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.



### செம்பியவிளாகம்-பெருமழை சாலையை மேம்படுத்துதல்.

*36 வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம் செம்பியவிளாகம்-பெருமழை சாலையை மேம்படுத்தி தார்ச் சாலையாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அந்தச் சாலை மேம்பாடு செய்யப்பட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து ஏராளமான கோரிக்கைகள் அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் நகல்கள் எல்லாம் என்னிடத்தில் தரப்பட்டிருக்கின்றன, அது குறித்து ஆவன செய்ய இப்பொழுது உத்தேசம் இல்லாவிட்டாலும்கூட, அடுத்த ஆண்டாவது அதைச் சேர்ந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இப்பொழுது கல் எல்லாம் போடப்பட்டு அந்த வகையில் அந்தச் சாலை மேம்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் அதைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டுமென்றால், அதற்கு 6 இலட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டுமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வருகின்ற காலத்தில், அடுத்த ஆண்டாவது இதைத் தார்ச் சாலையாக ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

### வருங்கால வைப்பு நிதிக்கு வட்டி.

*37 வினா—**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியாற்றும் ஆசிரியர், ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதித் தொகைகளுக்கு கடந்த பத்து ஆண்டுகளாக வட்டி கணக்கிடப்பட்டு வைப்பு நிதியில் சேர்க்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

[1983 அக்டோபர் 31

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆசிரியர், ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி தொகைகளுக்கு 1977-78 ஆம் ஆண்டு வரையிலும் வட்டி கணக்கிடப்பட்டு வைப்பு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

(இ) 1978-79, 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளுக்கான வட்டி கணக்கிடப் பட்டு ஊழியர்களின் வைப்பு நிதிக்கணக்குடன் விரைவில் சேர்க்கப்படும் என்று மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

**திரு. செ. முத்துசாமி:** ஆசிரியர்கள் கட்டக்கூடிய ஒரே சேமிப்பு இந்த வருங்கால வைப்பு நிதிதான். அந்தத் தொகையை ரிட்டையர் ஆகும்போது கூட தருவதில்லை. கடந்த பத்து ஆண்டுகளாக வட்டி கணக்கிடப்பட்டு வைப்பு நிதியில் சேர்க்கப்படவில்லை. இதனைச் சரி செய்வதாக மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதுபோன்ற நிலைமை இன்னும் சில நகராட்சிகளில் இருக்கின்றது. இதுகுறித்து கேட்டால், எங்களுக்கு வருமானம் இல்லையென்ற காரணம் சொல்கிறார்கள். தமிழகத்தி லுள்ள நகராட்சிகளில், மாநகராட்சிகளில் ஆசிரியர் மற்றும் ஊழியர்களிட மிருந்து பெறப்பட்ட வருங்கால வைப்புத் தொகைக்கு இதுவரை வட்டி கொடுக்கப்படாமல் இருந்தால், அனைத்துக் கணக்குகளும் இந்தமாதத்திற் குள் வட்டி கொடுத்து கணக்கைச் சரியாக வைத்துக்கொள்ள வேண்டுமென்கிற முறையில் அரசு திட்டவட்டமான ஆணை ஒன்றை வெளியிட முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மூலக் கேள்வி கோவை மாநகராட்சி யைப் பற்றியது. ஆகவே கோவை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில், இன்னும் ஒரு மாத காலத்திற்குள் யார் யாருக்கு விட்டுப் போயிருக்கிறதோ அவையெல்லாம் சேர்க்கப்பட்டு, கணக்கு சரி செய்யப்பட்டு முடிவு எடுக்கப் பட்டுவிடும். மற்ற நகராட்சிகளைப் பொறுத்தவரையில், தனிக் கேள்வி கேட்டால், பதில் தரப்படும்.

**திரு. பா. ரா. தாமஸ்:** பொதுவாக உள்ளாட்சித் துறையிலே உள்ள ஆசிரியப் பெருமக்களுக்கு அந்தந்த ஆண்டு வருங்கால வைப்பு நிதித் தொகை களுக்கு வட்டி கணக்கிடப்படுவதில்லை. ஆகவே கட்டாயம் அந்தந்த ஆண்டு முடிவிலே தவறாமல் முழுத் தொகையையும் கணக்கிட்டு அதற்குரிய வட்டியைச் சேர்க்க வேண்டும் என்ற முறையில் அரசு திட்டவட்டமான ஒரு ஆணையைப் பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** அது இனிமேல் நடை முறைப்படுத்தப்படும்.



1983 அக்டோபர் 31]

## *Selection Grade to Ex-Hindi Pandits.*

* 38. Q.—Thiru P.R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether it is a fact that Ex-Hindi Pandits are eligible for Selection Grade counting their past services in the posts of Hindi Pandits, as per G.O. Ms. No. 333, Education Department, dated 14th February 1977;

(b) if so, the number of Ex-Hindi Pandits working in Municipal Schools in the State as on 1st December 1982, not awarded Selection Grade; and

(c) the action taken to implement the Government Order?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(இ) நான்கு.

(உ) தேர்வுநிலை வழங்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** பேரறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழித் திட்டத்தை அமல்படுத்தியபோது, பாதிக்கப்பட்ட சுமார் 477 இந்தி ஆசிரியர் களுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். இடை நிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்தப் பணியில் இருந்தாலும், ஏற்கெனவே இந்தி ஆசிரியராக இருந்து பெற்று வந்த ஊதியத்தைத் தொடர்ந்து வாங்கினார் கள். அதுபோல் முதல் நிலை இந்தி ஆசிரியர்களாக ஏற்கெனவே பணி யாற்றிக் கொண்டிருந்தவர்கள் பிறகு பி.டி. ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தைத் தொடர்ந்து வாங்கினார்கள். அதுபோல் செகண்டரி கிரேட் ஆசிரியராக இருந்து பி.டி. ஆசிரியருக்குரிய தகுதி இருந்தால், பி.டி. ஆசிரியருக்குரிய சம்பளம் வழங்க வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் உள்ளபடியே அம்மாதிரி நகராட்சிப் பள்ளிகளில் வழங்கப்படுவதில்லை. ஆகவே அவர்களுக்கு பி.டி. ஆசிரியர்களுக்குரிய சம்பளம் வழங்க மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இப்பொழுது 4 இந்தி ஆசிரியர் களுக்கு மட்டுமே அந்தத் தேர்வு நிலை வழங்கப்படாமல் இருக்கிறது. ஒன்று நாகப்பட்டினம் நகராட்சி. சேலம் நகராட்சியைப் பொறுத்தமட்டில், இரண்டு பேருக்கு வழங்கப்பட வேண்டும். அடுத்து, திருச்சியில் ஒருவர். ஆக

1—12—1983 அன்று உள்ளவாறு 4 பேருக்கு மட்டுமே பணி வரன்முறைப் படுத்தப்பட்டு தேர்வு நிலை வழங்கப்படாத நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட விவரம் என்னிடம் இல்லை. அப்படிப்பட்ட நிலை இருக்குமானால், அதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாகக் கவனிக்கப்படும்.

## *Madurai Rajaji Government Hospital.*

*39. *Q.*—Thiru K. MEENAKSHISUNDARAM: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the number of special wards respectively of the 'A', 'B' and 'C' type in Government Rajaji Hospital, Madurai;

(*b*) the categories of persons to whom 'B' and 'C' wards are being allotted;

(*c*) whether the Government are aware of the fact that 'B' and 'C' wards are inadequate; and

(*d*) if so, whether there is any proposal under the consideration of the Government to increase the number in 'B' and 'C' wards?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) அரசு இராஜாஜி மருத்துவ மனையில் 7 'ஏ' பிரிவு அறைகள், 32 'பி' பிரிவு அறைகள் மற்றும் 92 'சி' பிரிவு அறைகள் உள்ளன.

(ஆ) மாதத்திற்கு ரூபாய் 500க்கு குறைவில்லாத வருமானமுடையவர் களுக்கு 'சி' பிரிவு, ரூபாய் 800க்கு குறைவில்லாத வருமானமுடையவர்களுக்கு 'பி' பிரிவும் கொடுக்கப்படுகிறது.

(இ) தற்போது உள்ள சிறப்பு வார்டு அறைகள் போதுமானவை அல்ல.

(ஈ) சிறப்புப் பகுதி அறைகளை அதிகரிக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, மதுரை இராஜாஜி மருத்துவமனையில் 'பி' பிரிவு மற்றும் 'சி' பிரிவு வார்டுகள் போதிய அளவுக்கு இல்லை என்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே





இங்கே ஒப்புக்கொண்டார்கள். அதே சமயத்தில் 'பி' பிரிவு மற்றும் 'சி' பிரிவு வார்டுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதும் தற் போது அரசிடம் இல்லை என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். அவை போதிய அளவுக்கு இருந்தால்தான், அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அங்கு சேர்ந்து சிகிச்சை பெற முடியும். அப்படி அவர்கள் சிகிச்சை பெற வேண்டிய அவசியமும் இருக்கிறது. இப்போது போதிய அளவு அறைகள் இல்லாத காரணத்தால், ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் ஜெனரல் வார்டுகளில் சேர வேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் ரொம்பவும் அல்லல்படுகிறார்கள். இதனை மறுபரிசீலனை செய்து, தனி கவனம் செலுத்தி, வார்டுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

(பிற்பகல் 3-30)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது 'பெரிபரல் ஹாஸ்பிடல்' என்ற மருத்துவ மனைகளை புறநகர் களில் கட்டி வருகிறோம். அதைப் போலவே அங்கும் ஒரு 'பெரிபரல்' ஆஸ்பத்திரி இருக்கிறது. அவைகளை நிரப்ப முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்கே நோயாளிகள் அதிகப்பட்டால் இங்கே இருக்கக்கூடிய 'லோடு ஆப் பேஷண்ட்ஸ்' (load of patients) அவ்வளவு ஜாஸ்தியாக இருக்காது. அந்த வகையில் செய்து கொண்டிருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தையும் அந்த உணர்வை யும் நான் மதிக்கிறேன்.

**திரு. த. சந்தோஷம் :** இந்த 'பி', 'சி' பிரிவு அறைகளில் இடவசதி போதாது என்று சொல்லப்பட்டது. அதைவிட முக்கியமானது பொது வார்டு களில் ஒருவர் காலடியில் இன்னொருவர் படுத்துக் கொண்டிருக்கும் நெருக்கடி இருக்கிறது. அவர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே பொது வார்டுகள் உள்ள மருத்துவ மனைகளை விஸ்தரிக்க வேண்டும். ஒரு காலத்தில் அந்த ஆஸ்பத்திரி வளாகத்தை ஒட்டியிருந்த மரங்களை வெட்டிவிட்டு, அந்த மருத்துவ மனையை விஸ்தரிக்க ஒரு திட்டம் இருந்தது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இன்னமும் நில ஆர்ஜிதம் செய்து பொது வார்டுகளை விஸ்தரித்து மருத்துவ மனையில் பொதுமக்களுக்கு வசதி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் சொன்ன கருத்துக்கள் ஏற்கத்தக்கவை. ஏனென்றால் 'ஸ்பெஷல் வார்டு' களை விஸ்தரித்துக் கொண்டே போனால், பொதுமக்கள் ஏராளமாக வருவது

பாதிக்கப்படும். ஆகவேதான் இதற்குப் பரிகாரம் விஸ்தரிப்பது அல்ல. புற நகர்களில் 'பெரிபரல்' ஆஸ்பத்திரிகள் இருப்பதால், பெரிய பெரிய நோய்களுக்கு பெரிய மருத்துவ மனைகளுக்கு வரக்கூடிய நிலை இருப்பதால், சாதாரண காய்ச்சல் போன்ற நோய்களுக்கு இந்த மருத்துவமனைகளைப் பயன்படுத்தலாம் என்று 'உலக சுகாதார நிறுவனம்' கருத்து தெரிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் செய்தால்தான், நாம் பரிகாரம் காண முடியும்.

**திரு. ம. சங்கரலிங்கம் :** மருத்துவ மனைகளை வளர்ப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும், மருத்துவக் கல்லூரிகளோடு இணைந்த மருத்துவ மனைகள் போதிய இட வசதிகளும் வார்டுகளும் கொண்டவை. அப்படி பொதுப் படுக்கைகள் கூடுதல் எண்ணிக்கை வசதி மிகத் தேவையானது. மதுரை மருத்துவமனை மிகவும் விஸ்தரிக்கப்பட வேண்டியது என்று அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஒருவேளை நிதிநிலை அதற்கு உதவி செய்யவில்லை என்றால், கேரளாவில் செய்வதுபோல் செய்யலாம். அங்கு மருத்துவக் கல்லூரிகளில், கோவாப்பரேடிவ் செக்டாரில் வார்டுகளைக் கட்டி, அதற்கான வாடகையை எடுத்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கும் மருத்துவ மனைக் கட்டிடங்கள் கிடைக்கின்றன. அதுபோல் இங்கும் உபரி நிதி உள்ள நிறுவனங்களின் நிதியைப் பயன்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா? அதை ஆராய்ந்து பயன் பெற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இது சிறந்த கருத்து. நிச்சயமாக அரசு ஆராயும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளைப் பொறுத்தவரையில், வேறு பல மருத்துவ மனைகள் மூலமாக இந்தப் பளுவைக் குறைக்க முயற்சித்தாலும்கூட, சில பேர்கள் தங்களது பதவி காரணமாக, ஸ்பெஷல் வார்டுகளில் சேர்க்கிறார்கள். ஸ்பெஷல் வார்டுகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அவர்கள் அந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. இதனைத் தவிர்க்க இந்தப் பிரிவுகளை அதிகரிக்க அரசு முன்வருமா? இதுவரையிலும் குறைந்தபட்சம், அதற்கான டிமாண்ட் எப்படி இருந்தது என்று பரிசீலித்திருக்கிறதா? அப்படி விஸ்தரிக்க வேண்டியதில்லை என்றாவது அரசு கருதுகிறதா? அப்படியானால், அதற்கு மாற்று ஏற்பாடுகள் ஏதும் அரசு செய்திருக்கிறதா?



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன கருத்தின் மூலம் ஒரு விபரத்தைக் கொண்டுவர முயற்சிக்கிறார். அவர் வெற்றி பெறுவார். 1979 ஆம் ஆண்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட உள் நோயாளிகள் 1.644 பேர்கள். 1980-ல் 1.708 பேர்கள். 1981ல், 1,800 பேர்கள். அதேசமயம் வெளி நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்கள்; 1979-ல் 4,970 பேர்களும், 1980-ல் 5,192 பேர்களும், 1981ல் 5,486 பேர்களும் ஆவார்கள். ஆகவே படிப்படியாக இந்த மருத்துவ மனைகள் பாப்புலராகிக் கொண்டு வருவதால், ஏராளமான நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி விஸ்தரிக்க வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தேர்வு நடத்துவதில் காலதாமதம்.

* 40 வினா—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுத் தேர்வு நடத்தும் தேதியை நிர்ணயம் செய்வதில் இவ்வாண்டு காலதாமதம் ஏற்பட்டதால், நூற்றுக்கணக்கான பார்மசிஸ்ட் (மருந்து கலக்குதல்) படித்த மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ம. சங்கரலிங்கம் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 13—10—82 அன்று கேட்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் 1983 ஆம் ஆண்டில் பதில் சொல்கிறார்கள். 1982 ஜூலையில் நடக்க வேண்டிய தேர்வு பற்றிக் கேட்டிருந்தேன். மதுரைப் பல்கலைக் கழகம் அந்தத் தேர்வை தாமதமாக நடத்தியது. அதனால் டிப்ளமோ கோர்ஸ் படிக்கும் மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அந்தத் தாமதம் எதனால் ஏற்பட்டது?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது தெரிகிறதா, எத்தனை ஆண்டு ஆனாலும் பதில் வந்து விடுமென்று?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அவர்கள் சொன்ன மாதிரி, 1982-ன் குறிப்புகளை வைத்திருக்கிறேன். ஏப்ரல் 1982-ல் நடக்க வேண்டிய அந்தத் தேர்வு 7—4—1982-ல் நடந்தது No postponement. அதுபோல் 1—11—1982ல் நடக்க வேண்டிய தேர்வு 1—12—1982ல் ஒரு மாதம் கழித்து நடத்தப்பட்டது. அப்படி "கொஞ்சம் தாமதமாக நடத்த வேண்டும், சிலபஸ் முடிக்கவில்லை. ஆகவே தாமதப்படுத்தலாம்" என்று அதிகாரிகள் கேட்டுக்கொண்டார்கள். தேர்வுகளைக் கூடிய வரையில் தள்ளிப்போடாமல் இருப்பதற்கு முயற்சிகள் எடுக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ம. சங்கரலிங்கம் :** இந்தத் தேர்வுகள் ஜூலையில் நடக்க வேண்டுமென்று இந்திய பார்மசி கவுன்சில் 1981-ல் முடிவு செய்து அறிவித்தது. அது தான் அக்டோபரில் நடந்தது. அதற்கு 2 கல்லூரிகளில் பாடங்கள் முடிக்கவில்லை என்பது ஒரு காரணம். அதை மாணவர்களும் கேட்டார்கள். மாணவர்கள் சொல்லி ஆசிரியர்களும் கேட்டார்கள். அது வேறு. பாடங்களைக் குறித்த காலத்தில் நடத்தினால்தான், தேர்வுகள் மற்ற காரியங்கள் குறித்த காலத்தில் நடக்கும். ஏன் அவர்கள் பாடம் முடிக்கவில்லை, ஏன் மாற்றம் கேட்டார்கள் என்ற காரணம் தெரியவில்லை. 8 கல்லூரிகளில் 2 கல்லூரிகள் பாடம் முடிக்காததால், எல்லாக் கல்லூரிகளும் அப்படி மாற்ற வைப்பது, நம்முடைய தேர்வு நிலையைக் குறைத்து விடும். இதை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நான் கொடுத்த தகவலை முழுமையாகப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். 1—11—1982ல் நடக்க வேண்டிய தேர்வு 1—12—1982ல் நடந்தது.

**திரு. செ. முத்துசாமி :** இந்த டிப்ளமா பார்மசி கோர்சின் எண்ணிக்கையை அரசு குறைவாக வைத்திருக்கிறது. இதில் வேலை வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. நாம் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியதில்லை. அவர்களே வேலை தேடிக் கொள்வார்கள். மெடிகல் ஷாப் வைப்பதற்கு ரிடையர் ஆனவர்களை வைத்துக்கொண்டு தடுமாறுகிறார்கள். இளைஞர்கள் அதிக அளவில் வேலை பெற இந்த இட எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தற்போது அப்படிப்பட்ட ஒரு கருத்து அரசிடம் இல்லை.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி ( * ) அவ்வுரை அவ்வுறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விவரம் முடிவு செய்யப்பட்டது—

1—11—1983—தனி உறுப்பினர் அலுவல்கள்.

2—11—1983 முதல் 11—11—1983 வரை—கூட்டம் இல்லை.

12—11—1983—அரசினர் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். மேற்கொண்டு நிகழ்ச்சி விவரம் பின்னர் முடிவு செய்யப்படும். மேலவை வழக்கம் போல் காலை 9-30 மணிக்குக் கூடும்.

### (2) ஆளுநரிடமிருந்து செய்தி.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (3) பேரவையிலிருந்து செய்தி.

சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியல் அமைப்புச் சட்டப்படி பணச் சட்ட முன்வடிவு என பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இப்பேரவையின் பரிந்துரைக்காகப் பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு, தமிழ் நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவினை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983) மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(பிற்பகல் 3-40)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**சேலம் நகராட்சியின் கழிவுநீரைப் பயன்படுத்தி கழிவு நீர்ப் பயிர்ப் பண்ணை ஒன்றை உருவாக்க, பூலாவாரி, அக்கரைப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவதால் விவசாயிகள் பாதிக்கப்படுவது குறித்து.**

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மான விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கக் கோருகிறேன்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மேலவை விதி 43-ன் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பைக் கொடுத்துள்ளேன். அதாவது, சேலம் நகரத்தில் இருக்கிற சாக்கடைக் கழிவு நீரைப் பயன்படுத்தி அரசு ஓர் பயிர்ப் பண்ணை அமைப்பதற்காக அருகில் உள்ள பூலாவாரி, அக்கரைப்பாளையம் ஆகிய இரண்டு கிராமங்களில் ஏறத்தாழ 700 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்காக 4 (1) நோட்டிபிகேஷன் வெளியிட்டுள்ளார்கள். அந்தப் பகுதியில் உள்ள அனைத்து நிலங்களும் நல்ல விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களாக இருக்கின்றன. 250-க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்களும், ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களும் இவ்வாறு அங்கே நிலங்கள் ஆர்ஜிதப்படுத்துவதன் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் சேலம் நகரத்திலிருந்து கழிவு நீரைப் பூலாவாரி மற்றும் அக்கரைப்பாளையத்திற்கு எடுத்துச் செல்வதற்கு—அந்தப் பகுதிகள் உயரமான நிலையில் இருப்பதால்—மூன்று இடங்களில் பூஸ்டர் பம்புகள் அமைத்து, கழிவு நீர் எடுத்துச் செல்வதற்கான முறையில் திட்டமிட்டு பண்ணையை அமைக்க இருக்கிறார்கள். இதைவிட, சேலம் நகராட்சியின் கழிவு நீரைப் பயன்படுத்தி, நல்ல முறையில் அதற்கு வருவாயை ஈட்டும் வகையில் தாழ்வான பகுதிகளான வீரபாண்டி, அக்கரைப்பாளையம், எஸ். பாப்பாரப்பட்டி போன்ற இடங்களில் உள்ள ஏரிகளில் அந்த நீரைச் சுத்தப்படுத்தி விட்டு, விவசாயிகளுக்கு உபயோகத்திற்கு விட்டால், அதன் மூலம் அவர்களிடமிருந்து அதிகமான தீர்வையை அரசு பெற்று நகராட்சிக்கு உதவிட முடியும்.



அதைப் போலவே சேலம் இரும்பாலைக்கு என்று 1964 ஆம் ஆண்டில் ஆர்ஜிதம் செய்வதற்காக எடுக்கப்பட்ட பகுதிகளும் தாழ்வான பகுதிகளாக இருக்கின்றன. எனவே ஏற்கெனவே இருக்கிற ஏரிகளில் இந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தி விட்டு, அதற்காக விவசாயிகளிடமிருந்து அதிகப்படியான தீர்வையைப் பெறுவது என்ற முறையை ஏற்பதன் மூலம் தற்போது பாதிக்கப்பட இருக்கும் 250 விவசாயக் குடும்பங்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களும் அதிலிருந்து விடுபடுவதற்கான சூழ்நிலை ஏற்படும். எனவே அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இப்பிரச்சினையைக் குறித்து முழுமையாக விவாதிக்கவும், விடிவு காணவும் அவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, சேலம் நகராட்சிக்காக, ரூ. 12 கோடி மதிப்பீட்டில் வடிகால் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு, அதற்காக ஆண்டொன்றுக்கு ரூபாய் 15,60,000 பராமரிப்புச் செலவுக்காக அரசாங்கத்தின் மூலமாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, அத்திட்டம் தற்போது நிறைவேறுகிற நிலையை எட்டியிருக்கிறது.

இத்திட்டத்தின் கீழ், கழிவு நீர்ப் பண்ணை ஒன்றை நிறுவுவதற்காக பூலாவாரி, அக்கரைப்பாளையம் போன்ற பகுதிகளில் உள்ள நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நில ஆர்ஜிதச் சட்டம் 4 (1)ன் கீழ் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அது குறித்த ஆட்சேபணைகளை சுமார் 19 பேர் தெரிவித்து, அந்த ஆட்சேபணைகள் எல்லாம் தவிர்க்கப்பட்டு, இன்றைய தினம் நிலம் எடுக்கப்படுவதற்காக 5 (ஏ) விசாரணை என்கிற அந்தப் பிரிவின்கீழ் அவர்களுக்கெல்லாம் அறிக்கைகள் அனுப்பப்படுகிற சூழ்நிலையில் இன்றைய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது.

இது குறித்து சேலம் உருக்காலைக்கு அருகில் நிலங்களைப் பார்வையிட்டபோது, அது வடிகால் துறையினர் மூலமாகச் சரியில்லை என்று சொல்லப்பட்டதால், அவர்களும் அதற்கான சான்றிதழைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே இதற்காகச் சேலம் உருக்காலைக்குப் பக்கத்தில் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. குறிப்பாக, வீரபாண்டி போன்ற பகுதிகளில் எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலைமையை மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் கூட நிலங்களைக் கையகப்படுத்த முடியாத சூழ்நிலையில் அரசு இருக்கிறது. அதைத்தான் அரசின் துறைக் குறிப்புகள் எனக்குத் தெரிவிக்கின்றன. அதோடு தற்போது கையகப்படுத்தப்படுகிற நிலங்கள் அனைத்தும் புஞ்சை நிலங்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே இவ்வாறு கையகப்படுத்தப்படுகிற அனைத்து நிலங்களும் புஞ்சை நிலங்களாக இருக்கிற காரணத்தால், இவைகளை அரசு எடுத்துக் கொள்ளலாம் என்ற குறிப்புகள்தான் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இதற்காக ஆட்சேபணை தெரிவித்தவர்களே, "இவைகளையெல்லாம் புஞ்சை நிலங்களாக இருந்தாலும் தோட்டப் பயிர் செய்கிற நிலங்களாக இருக்கின்றன" என்றுதான் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு, உடனடியாக மீண்டும் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எப்படி இருந்தாலும், சேலம் நகராட்சியினுடைய கழிவு நீரைக் கொண்டு ஒரு கழிவுநீர்ப் பண்ணை அமைப்பது என்பது தேவையாக இருக்கிறது. அதை எந்த இடத்தில் வைத்துக் கொள்வது என்பதில்தான் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. எனவே அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களும் பொது மக்களும் ஆக அத்தனை பேரும் ஒத்துழைப்பைக் கொடுத்தால்தான், செம்மையாக அந்தத் திட்டத்தை முடித்துக் கொடுக்க முடியும். இல்லையென்றால் எதிர்ப்புகள் வந்து கொண்டேதான் இருக்கும். கடைசியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது நிறைவேற்றாமலேயே கழிவு நீரை வெளியே கொண்டு போக முடியாத நிலைதான் ஏற்படும். எனவேதான் அந்தத் திட்டத்தை அவசரமாக முடிக்க வேண்டும் என்ற அளவில், பணிகளை மேற்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களே இதே மன்றத்தில் ஏற்கெனவே ஏன் அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை சேலம் நகரில் நிறைவேற்றவில்லை என்று கேட்டவர்தான். எனவே அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில், இப்படி ஒரு எதிர்ப்பைக் கொண்டு வந்து இந்த நிலங்களையெல்லாம் கையகப்படுத்தக் கூடாது என்று சொன்னால், பாதாளச் சாக்கடைத் திட்டம் பாதாளத்திலேயே போய்விடும். கண்டிப்பாகக் கீழே போகிற நிலைதான் ஏற்படும், அதன் காரணமாகக் கண்டிப்பாக அந்தத் திட்டம் நிறைவேறாத திட்டமாகவே இருக்கும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுமக்கள் மத்தியிலே அதிகமான தொடர்பு உடையவராக இருக்கிற காரணத்தால், அவர் இதை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்



திட்டத்திற்காக இந்த நிலங்களைக் கையகப்படுத்துவதுதான் சரியாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கொடுத்த விவரப்படி, பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டு, மீண்டும் பரிசீலனை செய்து, வேறு இடத்திற்கு மாற்ற முடியுமா என்பதையும் ஆராய்ந்து பார்த்து முடிவு எடுக்கப்படும் என்று சொல்லி, இந்தப் பொருள் குறித்து விவாதிப்பதற்காக இந்த அவையின் நடவடிக்கையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதை மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பொருள் குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### 4. கவன ஈர்ப்பு.

**நடுநிலைப் பள்ளிகளாக இருந்து, அரசு உயர் நிலைப் பள்ளிகளாக மாற்றப் பட்ட பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் பணி வரன்முறை செய்யப்படாமை குறித்து.**

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பின்வரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"1—6—1981-க்கு முன்னால் இருந்த நடுநிலைப் பள்ளிகளை, அரசு உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயமும் பணி வரன்முறையும் செய்யாததனால் அவர்கள் அடைய வேண்டிய சலுகைகள் கிடைக்காது, நூற்றுக்கணக்கானோர் அவதிப் படுவது குறித்து".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்த விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 446 ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## நடுநிலைப் பள்ளிகளாக இருந்து, அரசு உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்ட பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் மற்றும் பணி வரன்முறை செய்யப்படாமைக் குறித்து

[1983 அக்டோபர் 31

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட நாள் முதல் அரசு மற்றும் சார்நிலைப் பணியாளர் தொகுதி பொது விதி 48-ன் கீழ் பின்நோக்கி வரன்முறை செய்ய வேண்டும். இவ்வாறு பணி பின்னோக்கி வரன்முறை செய்ய மேற்கூறிய பொது விதி 48 அரசுக்கு அதிகாரம் வழங்குகிறதா என்ற சட்டப் பிரச்சினை எழுந்திருப்பதன் காரணமாக, இந்த ஆசிரியர்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு எந்தத் தேதியிலிருந்து அந்தப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டனவோ அந்தத் தேதியிலிருந்தே அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுடைய பணியை வரன்முறைப்படுத்துகிற இந்தச் சாதாரண நடைமுறையைக்கூட அமுல்படுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை என்றால், வேறு யார்தான் அதைச் செய்வது என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகிறது. இதன் காரணமாக, கடந்த நான்கைந்து ஆண்டுகளாக அந்த ஆசிரியர்கள் எல்லாம் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினை இது. இதன் காரணமாக அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் கிடைக்கவில்லை. ஆண்டு ஊதிய உயர்வு கிடைக்கவில்லை. பதவி உயர்வு கிடைக்கவில்லை. அதோடு சாதாரணமாகக் கிடைக்க வேண்டிய விடுப்புச் சலுகைகள்கூட கிடைக்கவில்லை. இப்படி பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிற அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் கொடுக்கப்பட்ட அதிகாரத்தில் குறைவு இருக்கிறது என்றால், அந்த அதிகாரத்தை அரசு மேற்கொள்ளுகிற வகையில் விரைவான நடவடிக்கை எடுத்தாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு அந்த ஆசிரியர்களின் பணியை வரன்முறைப்படுத்தாத காரணத்தால், அந்த ஆசிரியர்கள் அடைகிற பல்வேறு கஷ்டங்களைப் பற்றி அரசு நன்கு உணருகிறது. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பல சலுகைகளைப் பெற முடியாமல் அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் அரசு உணர்ந்திருக்கிறது. இவ்வாறு வரன்முறைப்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்போது, விதி 48-ன்படி பின்னோக்கி வரன்முறைப் படுத்த முடியுமா என்பதுதான் அரசுக்கு இருக்கிற சந்தேகமாக இருக்கிறது. அதைப்பற்றி அட்வகேட் ஜெனரலின் கருத்துரை பெற்று, இப்போது அரசு அதை ஆய்வு செய்து வருகிறது. விரைவில் அந்த ஆய்வை முடித்து தக்க பரிகாரத்தை ஆசிரியர்களுக்குத் தருவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 அக்டோபர் 31]

(பிற்பகல் 3-50)

**திரு. செ. முத்துசாமி :** இந்த அறிக்கை கல்வித் துறையிலிருந்து வந்திருப்பதே ஆச்சரியமாக இருக்கிறது. இது நாள் வரையில், சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து பல ஆண்டு காலமாக பஞ்சாயத்துப் பள்ளிகளில் இருந்தவர்களை அரசுப் பள்ளிகளில் ஏற்றுக்கொண்டபோது, முன்தேதியிட்டு அவர்களுடைய பணியை வரன்முறை செய்வதைத்தான் நடைமுறையில் நாம் பார்த்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது, திடீரென்று இப்போது மட்டும் புதிதாக 48வது பிரிவு முளைத்திருப்பது எப்படி என்று தெரியவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் முன்பு கல்வியமைச்சராக இருந்தபோதும், தற்போதைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் காலத்திலும்கூட எத்தனை எத்தனையோ அப்சார்ப்ஷன்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் புதிதாக இந்தக் கேள்வி எப்படி எழுப்பப்படுகிறது என்பது தெரியவில்லை. கடந்த காலத்திலே ஒரு பணிக்கு, தந்துவிட்டு இப்போது அட்வகேட்-ஜெனரலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்வது குதர்க்கமான சூழ்நிலையாகத் தெரிகிறது. இதுமாதிரி வந்தவர்களுக்கு ஏற்கெனவே இம்மாதிரி ஆணையிடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்து, இதைச் செய்வதற்கு அரசுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது என்பதையும் தெரிவித்து, இந்த சட்டத்தின் கீழ் அமுல்படுத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவர்களுக்கு இதுவரை இருந்து வந்த அதிகாரம் இப்போதும் இருக்கிறதென்றால், அதைச் செய்யாமல் இருக்க எந்தவிதமான காரணமும் இல்லை. அப்படி அதிகாரம் இருந்து அதைச் செய்யாமல் இருந்தால், அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு முயற்சி எடுக்கும். அதற்கு மாறாக அதிகாரம் இல்லையென்று சொல்லி அட்வகேட்-ஜெனரலுக்கு அனுப்பி அவருடைய கருத்தைக் கேட்டு, அதற்குப் பிறகு ஆய்வு செய்யலாம் என்றால், சந்தேகப்படாத நிலைமையில் செய்திருக்க முடியாதென்று நம்புகிறேன். ஆகவே ஆசிரியர்களுக்கு உதவக்கூடாதென்ற தப்பான எண்ணம் கல்வித் துறையில் இல்லை. செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆகவே அதிகாரம் இருந்தால், நிச்சயமாகச் செய்திருப்பார்கள். இருக்கிறதா, இல்லையா என்பதை அட்வகேட்-ஜெனரலிடம் கேட்டிருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது கிடைத்திருக்கிற கருத்தை வைத்துக்கொண்டு விரைவான நடவடிக்கை எடுக்க கல்வித் துறை நடவடிக்கை எடுக்கும்.

### 5. தகவல் கோரல்.

### சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. இளையபெருமாள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர், அவர்களுக்குள்ள வாய்ப்புக்களை அரசு புறக்கணித்துவிட்டது என்று சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருப்பதால், ஆதி திராவிட மக்களிடையே பதட்டம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கலாம். திடீரென்று இப்படி பிரச்சினையைக் கிளப்பினால், அரசு சார்பாக பதில் எப்படிச் சொல்ல முடியும்? அரசினர் விரும்பினால் பதில் சொல்லலாம். பதில் சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் தர வேண்டுமல்லவா?

### 6. 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களே, இந்த அவையில் ஏறக்குறைய 12 வருட அனுபவம் பெற்றிருக்கிறேன். துணை விவர அறிக்கை மீது யாரும் பேசுவதே கிடையாது. துணை விவர அறிக்கை வருகிறது என்பதனால், பேசவேண்டும் என்பதற்காக, தேடிப் பிடித்து சிலரைப் பேச வைப்பார்கள். இப்போது பேச வந்திருப்பது எத்தனை பேர் என்ற விவாதத்திற்கு வந்திருக்கிறோம். ஒருவேளை நான் தாராளம் காட்டி பழக்கத்தை உண்டாக்கி விட்டேனோ! பேச பெயர் கொடுத்தவர்களை அனுமதிக்கிறேன். ஐந்து நிமிடங்களுக்கு அதிகப்படாமல் இருந்தால், ரொம்ப நல்லது. இப்போது ஒரு வழக்கம் வைத்திருக்கிறோம். ஆளுநர் உரை வந்தால், அதில் இருப்பதையெல்லாம் விட்டுவிட்டு, இல்லாததை 'இது இது இல்லை' என்று சொல்லிப்பேசுவது வழக்கம். ஆளுநர் உரைக்கு அது அவசியமாகலாம். நிதிநிலை அறிக்கை மீதும் அப்படியே. ஆகவே இதிலே என்ன இருக்கிறதோ அதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டுச் சொல்லி அதிக பட்சம் ஐந்து நிமிடங்கள் பேசுமாறு அழைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,



27—10—1983 அன்று அவை முன் வைக்கப்பட்ட 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையில் "மானியம் 58—கடனும் முன் பணமும்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ரூபாய் 15 கோடியே 43 இலட்சம் 8 இனங்களைக் கொண்டது. ஆங்கிலப் பிரதி 33 ஆம் பக்கத்திலே, தமிழ் பிரதி 37 ஆம் பக்கத்திலே இந்தத் தலைப்பின் கீழ் 7 இனங்கள் சேர்க்கப்பட்டு எட்டாவது இனம் விடுபட்டுள்ளது. தற்போது மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள அந்தத் திருத்தத்தையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அதன் கூட்டுத்தொகை எட்டு இனங்களையும் சேர்த்து போடப்பட்டிருக்கிறது. அச்சிடப்பட்டதிலே எட்டாவது இனத்தைத் தவறி விட்டிருக்கிறார்கள். அந்த இனத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது நடைபெறும் விவாதத்தில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு எந்த அளவிற்கு நிதியை ஒதுக்கீடு செய்து நல்ல முறையில் செலவு செய்திருக்கிறது என்ற விவரம் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. வறட்சிப் பணிகளைத் திறமையாகச் செய்தமைக்காக, குறிப்பாக குடிநீர்ப் பிரச்சினையைக் கட்டுக்கோப்புடன் உறுதியாகச் சமாளித்ததற்காக நான் இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டு தலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு இனங்களுக்கு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற விபரம் இங்கே தரப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்று அரசு ஊழியர்களுக்குக் கிணறு தோண்டுவதற்கான கடன் பற்றியது. அரசு ஊழியர்களுக்கு தங்களுடைய இல்லங்களில் கிணறுகள் தோண்டுவதற்காகக் கடன் உதவி வழங்கப்பட்டதை நான் வரவேற்கிறேன், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் கிணறு தோண்டுவதற்காக வழங்கப்படும் இந்தக் கடன் உதவியை நகரவை, தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இந்த அரசு வழங்க மறுத்தது நகரவை, தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். ஆகவே ஒரு தரப்பினருக்கு நன்மை செய்யும்போது, அவதிக்குள்ளாகியுள்ள சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் நாம் நம்முடைய நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதை

இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். வருங்காலத்திலே இத்தகைய குறைபாடுகள் இல்லாமல் அனைத்துப் பிரிவினருக்கும் இந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சமயத்திலே எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. இந்தத் துணை மதிப்பீடு சம்பந்தமான பொருள் பற்றியதாக இல்லாவிட்டாலும், இதை அறிய விரும்புகிறேன். நாளை முக்கியமான ஒரு மாநாடு டில்லியில் நடைபெறப் போகிறது. மாநில முதல்வர்கள் கலந்துகொள்ளக்கூடிய அந்த மாநாட்டில் முக்கியமான ஒரு கருத்து விவாதத்திற்கு வரப்போகிறது. மாநில அதிகாரத்திலே இருக்கின்ற சில உரிமைகளை மத்திய அதிகாரத்தின் கீழ் கொண்டு வருவது பற்றியது. அதாவது "transfer of certain items from Sales tax to Central Excise' என்பதுபற்றிய முக்கிய விவாதம் நாளைக்கு நடைபெறப் போகிறது. மாநில உரிமைகளைப் பற்றிய ஒரு ஆழமான பொருளாக இருப்பதால், சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நேரத்தில் நம்முடைய மாநில அரசினுடைய, தமிழக மக்களுடைய கருத்தாக நாம் என்ன சொல்லப் போகிறோம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையின்போது சுட்டிக்காட்டினால், இந்த மன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்குமென்று இந்தச் சமயத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணை நிதிநிலை அறிக்கையை வரவேற்று, இந்த அரசுக்குப் பாராட்டு தெரிவிக்கிற நேரத்தில், தற்போது ஆசிரியர்களுக்கு மிகப் பெரிய கடுமையான அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிற நிதி தொடர்பான ஆணையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியர்களுக்கு தாங்கள் பெற்றிருக்கிற உயர் கல்விக்காக பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் இல்லையென்ற காரணத்தால், ஊக்க ஊதியம் தரும் திட்டத்தை அறிமுகப் படுத்தியதன் காரணமாக, உயர்கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்கள் பயனடைந்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஆனால் 5—9—1983 அன்று ஆசிரியர்களுடைய தினமாகக் கொண்டாடப் படும் அந்த நாளில் அரசாணை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. Teacher's Day is celebrated to honour the teachers and to remember their vital role in Society. மத்திய, மாநில அரசுகளின் சார்பாக வண்ண சுவரொட்டிகள் ஒட்டி மரியாதை செலுத்தும் அந்நாளில் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையிலிருந்து, தலைமைச் செயலாளர் அவர்களால் கையொப்பமிட்டு ஓர் ஆணை வெளி வந்திருக்கிறது. இந்த அரசாணையின் மூலமாக, ஏற்கெனவே வழங்கிய ஊக்க ஊதிய [illegible]



உயர்வுகள் நிறுத்தப்பட்டு, அதற்குப் பதிலாக கணிசமாக ஒட்டுமொத்தமான தொகை ஆசிரியர்களுக்கு வழங்குவது குறித்த விளக்கம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாணை ஆசிரியர்களிடையே அதிருப்தியை, எதிர்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த நோக்கத்திற்காக இத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார்களோ அந்த நோக்கத்தைச் சிதைக்கிற அளவிற்கு இந்த ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ஆணையை வெளியிடுவதற்கு முன்னால் ஆசிரியர்கள் பிரதிநிதிகளோடு கலந்து பேசியிருந்தால், நாங்கள் எங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருப்போம். அந்த வாய்ப்பு எங்களுக்குத் தரப்படாததால் ஆசிரியர்கள் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே அதற்காக அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

(பிற்பகல் 4-00)

5—9—1983 தேதியிட்ட அரசாணை எண் 843, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை சார்பாக வெளியிடப்பட்ட இந்த அரசாணையை முழுமையாக நிறுத்தி வைத்து, அதைத் திரும்பப்பெற்றுக்கொண்டு, பழைய ஊதிய உயர்வு முறையையே நடைமுறைப் படுத்த வேண்டும். அதற்கான ஆணையை விரைவில் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே 7½ லட்சம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் சார்பாக இந்த வேண்டுகோளை இந்த சமயத்தில் விடுக்கிறேன். மாண்புமிகு தலைவர் அவர்கள் அவசரமாக இந்தப் பிரச்சினையை, இந்த அறிக்கையையொட்டி நடைபெறுகின்ற விவாதத்தில், அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, என்று சொன்னதால், உறுப்பினர் அவர்கள் முடித்துக்கொள்ளப் போகிறார்கள் என்று அல்லவா பார்த்தேன். இதில் பேசுவதற்குக்கூட 10 பேர்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** அதைப் போலவே அரசு ஓராண்டுக்கு முன்பு அரசு ஊழியர்களுக்கு 'Leave Travel Concession' என்று ஒரு நல்ல சலுகையைக் கொடுத்து, அரசு ஊழியர்களுக்குப் பலனைக் கொடுத்திருக்கிறது. ஆனால் அந்த 'லீவ் டிராவல் கன்செஷன்' நகராட்சியிலே உள்ள பள்ளிகள், தனியார் பள்ளிகள் இவைகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்ற குறைபாட்டினை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தக் குறைபாட்டினை நீக்குகின்ற வகையில் அதற்கு உரிய ஆணைகளை வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. ரா. வெங்கடகிருஷ்ணன்] [1983 அக்டோபர் 31

முடிப்பதற்கு முன்பாக ஒன்று சொல்லிக்கொள்கிறேன். இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள பேராசிரியர்களுக்கும், துணைப் பேராசிரியர்களுக்கும், மதுரை, காமராசர் பல்கலைக்கழகத்தில் உள்ள பேராசிரியர்களுக்கும், துணைப் பேராசிரியர்களுக்கும் ரூ. 1,100 என்ற ஊதிய விகிதத்தை நிர்ணயித்து அதை அவர்கள் அமுல்படுத்துவதற்கான ஆணை களை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தந்தப் பல்கலைக் கழகங்களில் வெளி யிட்டு, அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் என்னுடைய சொந்த ஊரிலே இருக்கின்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திலே, விரிவுரையாளர்களுக்கு அந்த ஆணையினுடைய பலன் இதுவரையில் கொடுக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அங்கே பணியாற்றுகின்ற விரிவுரையாளர் களுக்கும் இந்த ரூ 1,100 ஊதிய நிர்ணயம் செய்து அந்தச் சலுகையை அளிக்க வேண்டும், அதாவது 1—1—1974 லிருந்து 'நோஷனல்' அடிப் படையிலேயும், 1—1—1981 முதல் பணப்பயன் அடிப்படையிலேயும் இதர பல்கலைக் கழகங்களைப் போலவே வழங்க ஆணையை வெளியிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறை அதை வெளியிட வேண்டும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர்களுக்காக அதை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுப்படையாக இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டி மகிழ்ச்சியில் இருக்கின்ற நேரத்தில், குறிப்பாக ஆசிரியர்களுடைய பல்வேறு குறைகளுக்குத் தீர்வு காணும் வகை யில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தங்கள் தாராளமான மனதுடன் நிதி ஒதுக்கீட்டை வருங்காலத்தில் செய்ய வேண்டும் என்று பணிவான வேண்டுகோளை விடுத்து இந்தச் சமயத்தில் பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர் களே, ரூ. 158.75 கோடி நிதி ஒதுக்கியிருக்கின்ற வகையில் ஆணை பதிப்பித்து கொடுக்கப்பட்டிருக்கிறது. நல்ல பணிகளுக்குத்தான் வழி செய்யப்பட்டிருக் கிறது. நல்ல சிறப்பான முறையிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன்.

அதே சமயத்திலே ஓய்வு பெற்ற ஊழியர்கள் குறித்து சமீபத்திலே சில மாதங்களுக்கு முன்னாலே நான் ஒன்றைத் தெரிந்துகொண்டேன். அதாவது பல மாதங்களுக்கு முன்னாலே உச்ச நீதி மன்றம் ஒரு ஆணையைப் பிறப்பித்



1983 அக்டோபர் 31] [திரு. ஈ. எஸ். வெங்கடேசன்]

திருக்கிறது. அந்த ஆணைப்படி, ஓய்வு பெற்றவர்களுக்கு, 'லிபரலைஸ்ட் பென்ஷன்' பற்றி அறிவித்திருக்க வேண்டும். அதுகுறித்து நிதி ஒதுக்கம் செய்யவில்லையே என்று வருந்துகிறேன். "1979 ஆம் ஆண்டு தளர்த்தப் பட்ட, ஓய்வு ஊதியத் திட்டத்தின்படி, ஓய்வு பெற்றவர்கள் எல்லோருக்கும் ஓய்வு ஊதியத்தைக் கொடுக்க வேண்டும். அதாவது ஓய்வு பெற்ற தேதி எதுவாயினும், அவர்கள் அனைவருக்கும் ஒரே திட்டத்தின்படி ஓய்வு ஊதியம் கொடுக்கும் வகையில் உச்ச நீதி மன்றத்தின் ஆணை இருக்கிறது. அது குறித்து கடந்த ஜனவரி 25-ம் தேதி நிதி அமைச்சர் அவர்கள் கவனத்தை ஈர்க் கின்ற வகையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தேன். அவர் அதற்குப் பதில் அளிக்கும் வகையிலே, மத்திய அரசுடன் தொடர்புகொண்டு அதைப் பற்றிச் சொல்வதாக பதில் அளித்தார்கள். இப்போது மத்திய அரசு உச்ச நீதிமன்ற ஆணைப்படி, அதை ஏற்று உத்தரவிட்டிருக்கிறது. குஜராத், மகாராஷ்ட்டிரா, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களும் அதுபோன்ற வகையிலே உத்தரவிட்டிருக்கின்றன. ஆனால் இந்த மாநிலத்திலே, அதைச் செய்யவில்லை. அதைச் செய்யவேண்டும் என்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே ஊக்க ஊதியம்பற்றி எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் சொன்னதை நான் அப்படியே வழிமொழிகிறேன். அதிலே 5—9—1983க்கு முன்னரே தேர்வு பெற்றவருக்குக்கூட நிர்வாகம் அந்த இன்சென்டிவ் ஊதிய உயர்வு அளிக்காத காரணத்தினாலே, அது நிறுத்தப்பட்டிருந்தது. அவர்களுக்கு இப்போதும் வழங்கவில்லை என்று ஒரு புகார் வந்துள்ளது. இது நிர்வாகத்தின் தவறே தவிர ஆசிரியர்களின் தவறல்ல. அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்களுக்கு உடனடியாக ஊக்க ஊதியம் வழங்க வேண்டும், மேலும், அந்த ஆணையினை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்து கிறேன்.

1—6—1981-ல் இரு ஆண்டு பயிற்சிக்காகத் தரப்பட்ட ஓராண்டு ஊதிய உயர்வு அந்தத் தேதியோடு நிறுத்தப்பட்டதாக இப்போது ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும், பயிற்சி பெற்றவர்களுக்கு எப்போது தரவேண்டுமோ அதைத் தொடர்ந்து தருவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் பலர், இதுவரை ஊதிய நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய

நிதியமைச்சர் அவர்கள் தலைமையிலே, நியமிக்கப்பட்ட குழு, ஓய்வு பெற்றால் 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான பிரச்சினையைப் பரிசீலிக்க நியமிக்கப்பட்ட அந்தக் குழு, இன்னமும் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லை. அதை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கையை எடுத்து, தீபாவளி போனசாக ரூ. 10 ஆயிரம் தர வேண்டும். அல்லது நவம்பர் 14-லிலே நேரு பிறந்த நாளிலேயாவது தருவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, தேர்வாளைக் குழுவினாலே தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் பல பகுதிகளிலே இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பல்வேறு நிலை ஆசிரியர்கள் அப்படி இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கிறது. ஒட்டுமொத்தமாக இதுவரையிலே பணியிலே இருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளித்து, அவர்களுக்கு உடனடியாகப் பணிவரன்முறை செய்து அவர்கள் 10 ஏ(1) ன்படி பணிபுரிந்து அடிப்படை ஊதியத்திலே இன்கிரிமெண்ட் வாங்கியிருக்கிறார்களே அதையும் நிறுத்தாமல், தொடர்ந்து தருவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து ஒரு செய்தி; ஓய்வு பெற்றவர்களுடைய நலனைக் கவனித்துக் கொள்வதற்காக என்று தனி அமைச்சரை மகாராஷ்டிராவிலே நியமித்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்திலேயும்கூட ஏறத்தாழ 24 அமைச்சர்கள் இப்போது இருக்கின்றார்கள். இன்னும் ஒருவர் கூடினால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. எனவே ஓய்வு பெற்றவர்களுடைய நலனைக் கவனித்துக் கொள்வதற்காக ஒரு அமைச்சரை நியமியுங்கள் என்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் விடுக்கிறேன்.

அது மட்டுமல்ல ஓய்வு பெற்றவர்கள் உடல் நலத்தைக் கவனித்துக்கொள்வதற்கு என்று நல்வாழ்வுப் படி என்று மேகாலயாவிலே, பஞ்சாபிலே, குஜராத்திலே, பீகாரிலே ரூ. 25 விதம் வழங்குகின்றார்கள். அதுவும் எண்ணிக்கையிலே குறைந்து, நாட்களை எண்ணிக்கொண்டிருக்கக்கூடிய ஓய்வு பெற்றவர்களுக்கு, அந்த நல்வாழ்வுப் படியை தமிழகத்திலும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் போராடிய தியாகிகளுக்கு அந்தத் தியாகத்தின் காரணமாக, திராவிட பாரம்பரியம் நாட்டை ஆண்டுக் கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய நிதி அமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் நன்றாக உணர்ந்தவர்கள்—அளிக்கப்பட்ட அந்த பென்ஷனை, 1967-க்குப் பின்னால் 1974-லே டாக்டர் கலைஞர் அவர்கள்





ஆட்சியிலே இருந்தபோது அளிக்கப்பட்ட அந்தத் தொகையை எமர்ஜென்சி காலத்திலே, அவசர நிலை பிரகடனப்படுத்திய காலத்திலே நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத்தப்பட்ட அந்தத் தொகையை மீண்டும் அளிப்போம் என்று முதலமைச்சர் அவர்கள் பலமுறை உறுதிமொழியாக அளித்திருக்கிறார்கள். என்றாலும் இன்னும் தரவில்லை. அதை அவர்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தருவது மட்டுமல்லாமல், அந்த ரூ. 75-ஐ ரூ. 500 ஆகவும், அவர்களுக்கு, தியாகிகளுக்கு உரிய 5 ஏக்கர் நிலத்தையும், வீடு இல்லாதவர்களுக்கு வீடும், அவர்கள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியும் தந்தால்தான் நாம் நன்றிக் கடன் செலுத்தினோம் என்று ஆகும். உண்மையிலேயே அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தினோம் என்ற ஒரு பொருள்பட அதையும் உடனே செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைமை ஆசிரியர்கள் பதவி வேண்டாம் என்று எழுதித் தந்ததற்கு, அதுவும் தொடக்கப்பள்ளியிலே இருப்பவர்களுக்கு சிறப்பு நிலை, தேர்வு நிலை, வழங்கப்பட்டு அவர்களும் அந்தப் பலனை அனுபவித்து வந்தார்கள். ஆனால் தலைமை ஆசிரியர்கள் பதவி வேண்டாம் என்று எழுதிக்கொடுத்த காரணத்தினாலேயே, அந்தச் சிறப்பு நிலை, தேர்வு நிலையையெல்லாம்கூட நிறுத்தி விடுகின்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது எந்தவிதத்திலும் பொருந்தாது. ஆசிரியர் சமுதாயத்திற்கு புரமோஷன் ஆப்பர்சூனிட்டியே கிடையாது. ஆகவேதான் அந்தச் சலுகைகள் அவர்களுக்குத் தரப்பட்டன. அதைத் தொடர்ந்து தருவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் விரிவாகப் பேச நேரம் இல்லாத காரணத்தினாலேயே, எல்லாவற்றையும் கோடிட்டுக்காட்டியிருக்கிறேன். 5 நிமிடங்களில் பேசி முடிப்பது என்பது மிக அரிதான காரியம். முழுவதும் சொல்ல முடியவில்லை. மற்றொரு முக்கியமான விஷயம். தஞ்சை மாவட்டத்திலே 12 ஓவிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்குப் போதிய கல்வித் தகுதியில்லையென்று சொல்லி இப்போது அவர்களை வீட்டிற்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்த்து பணியிலே இருப்பவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் இன்றுதான் குறிப்பிட்ட 5 நிமிடங்களுக்குள் பேசி முடித்திருக்கிறார்கள்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையினை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக வறட்சிப் பணிக்காக என்று பல்வேறு தொகைகளை வழங்கியிருப்பதற்கு நான் முதலிலே என்னுடைய

[திரு. செ. முத்துசாமி] [1983 அக்டோபர் 31

முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் தலைமை ஆசிரியர்களுக்குச் சிறப்பு நிலை வழங்காமல் அவர்களைத் தள்ளி வைத்திருக்கக்கூடிய சூழ்நிலையை மாற்ற வேண்டும். மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அதை உடனடியாக வழங்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, கல்லூரி ஆசிரியர் சங்கத்திலுடைய மாநிலத் தலைவர் திரு. நாகலிங்கம் என்பவர் ரிட்டையர் ஆகியிருக்கிறார்கள். இப்போது போய், அந்த சங்கத் தலைவர் மீது ஒரு ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, தொடர் ஊதிய நிறுத்தத்தைச் செய்திருப்பது மிகவும் அநியாயம். தயவுசெய்து அந்த நடவடிக்கையைக் கைவிடும்படி நான் கல்வித் துறையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மூலமாக வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

ஆபாசச் சுவரொட்டியை அழிக்கக்கூடிய ஒரு போராட்டத்தில், ஒரு பெண்மணி, கல்லூரி ஆசிரியர் கலந்துகொண்டார்கள். அது ஒரு நல்ல செயல்தான். ஆனால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்று புரியவில்லை. அதையும் கைவிடும்படி நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

கல்வித் துறையிலே நீண்டகாலமாக காலியிடங்கள் உள்ளன. கூடுதல் பள்ளிக் கல்வி இயக்குநர் இடம் காலியாக இருக்கிறது. பல முதன்மைக் கல்வி அலுவலர் இடங்கள் காலியாக இருக்கின்றன, பல மாவட்டக் கல்வி அலுவலர் இடங்கள் காலியாக இருக்கின்றன. நாட்டிலே ஆட்களே இல்லையா? இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டரஸ் பதவிகள் காலியாக இருக்கின்றன. கல்வித் துறையிலே தகுந்த ஆட்களே இல்லையா என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக அந்தப் பதவிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இடை நிலைப் பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. அதே ஊதிய விகிதத்தில் ஊதியம் வாங்கும் ஓவிய ஆசிரியர்கள், தொழில் ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோருக்கு அந்த ஊதிய உயர்வு வழங்காதது அநீதி. எனவே அவர்களுக்கும் அந்த நிதியை வழங்கி அவர்களுக்கும் ஊதிய உயர்வு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1—6—1981-க்குப் பின்னால் வரும் செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு அந்த ஊதிய உயர்வு இல்லை என்று சொல்லியிருப்பதும் அநியாயம். அந்த உத்தரவை வாபஸ் பெற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.



1983 அக்டோபர் 31] [திரு. செ. முத்துசாமி]

செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக இருந்துகொண்டு எம்.ஏ., பி.டி., பி.ஏ., பி.டி., தமிழ் ஆசிரியர்களாகத் தகுதி பெற்றிருக்கிறார்கள். 4,107 பேர் பட்டதாரி ஆசிரியர்களாகவும், 1292 பேர் தமிழாசிரியர்களாகவும் தகுதி பெற்றும், வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் எஸ்.ஜி. பி.டி. ஆசிரியர்கள் என்று பதவி உயர்வு தந்த பிறகு, அதைப் பின்பற்ற வேண்டிய நிலைமை தமிழகத்திற்கு ஏற்பட்டிருப்பது குறித்து வருந்தி, அப்படி அவர்களுக்குப் பதவி உயர்வு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிவிட்டோம். இதுவரை அவர்களுக்கான பணி விதிகள் ஏற்படுத்தப்படாமல் இருக்கின்றன. அதனால் அவர்களுக்குச் சலுகைகள் கிடைக்காமல் இருக்கிறது. உடனடியாக அதை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அடுத்து, 'ஆசிரியர்களுக்கு என்று வீடு கட்டும் வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் வழங்கப்பட்டிருக்கிறது' என்று சாதனைப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. சாதனைப் பட்டியலில் இடம் பெற்றுள்ள கோரிக்கை இன்னும் அமுல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சோவியத் நாட்டுக்குச் சுற்றுப் பயணம் சென்றபோது, வீடுகளைத் தனிப்பட்டவர்கள் கவலைப்படாமல் கட்டிக் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்த்தேன். அதைப்போல நல்ல திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், மேல் நிலைப் பள்ளிகள் 1978-ல் தொடங்கப்பெற்று, 5 ஆண்டுகள் ஆகியும் ஊதிய நிர்ணயம் செய்யப்படாமல் நூற்றுக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்களும், தமிழாசிரியர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேல்நிலைக் கல்வி கொண்டு வந்து எவ்வளவு காலமாகிறது? இதுவரை அவர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யாமலிருப்பது கல்வியை எவ்வாறு சீர்திருத்தும்? கீழே இருக்கிறவர்களுக்கு 'இன்க்ரிமெண்ட்' தருகிறார்கள். தலைமை ஆசிரியர்களுக்கு இல்லை. அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் தமிழாசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன்முறை செய்யப்படாமல் இருப்பதால், ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 10(ஏ) (1) விதிப்படி, ஆந்திராவில் இருக்கக் கூடியவர்களை பணி வரன்முறை செய்திருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் அமைச்சரவை முடிவெடுத்து, அத்தனை பேரையும் பணி வரன்முறை

[திரு. செ. முத்துசாமி] [1983 அக்டோபர் 31

செய்யும்போது, என் இங்கே அப்படி பணி வரன்முறை செய்ய அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கம்யூனல் ஜி.ஓ.படி சலுகைகள் வைத்து, அவர்களைத் தேர்ந்தெடுத்து, 5 ஆண்டுகள், ஆண்டுகள் பணி செய்த பிறகு, "மீண்டும் சர்வீஸ் கமிஷன் முன்னால் நில்லுங்கள்" என்று சொல்லுவது சரியல்ல. அவர்களுடைய பணியை உடனே அரசு வரன்முறை செய்ய வேண்டுமென்று பணிவோடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் ஆசிரியர்களுக்கு இன்சென்டிவ், ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது அது வழங்கப்பட்டது. உயர்ந்த கல்வித் தகுதியைப் பெற்ற ஆசிரியர்களுக்கு உயர்ந்த ஊதியம் வழங்க வேண்டுமென்று வழங்கப்பட்டது. வேறு இலாகாவினருக்கு அது வழங்கப்படவில்லை. அந்த ஊதிய உயர்வு இந்த ஆண்டு ஆசிரியர்கள் தினத்தன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு மூலம் இல்லை என்றும், எஃப். ஆர். திருத்தப்பட இருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலைமையை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பி. & ஏ. ஆர். துறையில் கேட்கும்போது, அது ஆசிரியர்களுக்கு நன்மை பயக்கும் என்று நினைத்தோம் என்று கூறுகிறார்கள். அதனால் ஆசிரியர்களுக்குப் பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை, இப்போது பின் வாங்குகிறது; பி. & ஏ. ஆர். துறையிலே எல்லோருக்கும் கிடையாது' என்று போட்டுள்ள உத்தரவு வாபஸ் பெறப்பட்டு, ஆசிரியர்களுக்கு இன்சென்டிவ் ஊதிய உயர்வு வழங்கும் முறை நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் விடுப்புகால பயணச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. அப்போதும் பாராட்டினேன். இப்போதும் பாராட்டுகிறேன். நாவலர் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்தபோது, எந்தச் சலுகை அளித்தாலும் நகராட்சி ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அது உண்டு என்பதற்கு 'அப்ளிகபிள் ஆர்டர்' போல போட்டு, வெளியிட்டார்கள். அரசுப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 'எல். டி. சி.' வழங்கினாலும், அது உள்ளாட்சித் துறையிலே உள்ள ஆசிரியர்களுக்கு, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பொருந்தாது என்று சொல்லப்பட்டிருப்பது சற்றும் நியாயமல்ல என்பதை நிதி அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 அக்டோபர் 31] [திரு. செ. முத்துசாமி]

ஊட்டியைவிட அதிக உயரத்தில் இருக்கும் வால்பாறையிலே இருக்கிறவர்களுக்கும், ஆனைமலைப் பகுதியில் இருக்கிறவர்களுக்கும் குளிர்காலப்படி வழங்கப்படவில்லை. ஊட்டியைவிட உயர்ந்த பகுதியில் உள்ளவர்களுக்கு வின்டர் அலவென்ஸ் வழங்கவில்லை. அங்கே குளிரிலே தடுமாறுகிறார்கள். இதை விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தோட்டப் பகுதியிலே இருக்கிறவர்களுக்கு வீடுகள் இருக்கின்றன. எஸ்டேட் ஓனராக இருக்கிறவர்கள் வீடு தர மறுக்கிறார்கள். எனவே, அவர்களுக்குத் தனியாக வீடு கட்டித்தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தெலுங்கு மொழியில் பயிற்சியும், மலையாள மொழியில் பயிற்சியும் தரும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தமிழ் படிக்க வேண்டுமென்ற உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது அவர்கள் நிர்வாகப் பொறுப்புக்கு வரும்போதுதான் தேவைப்படுமென்று கூறி, மைனாரிட்டி வகுப்பினர் நடத்தும் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு தாருங்கள் என்று கேட்டு, அமைகிறேன்.

**திரு. ப. மாணிக்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, 5 நிமிடங்களுக்குள்ளே முடிக்க முயல்கிறேன். உறுப்பினர்கள் இங்கே வருவதே பேசத்தான். இந்த அவையிலே அது ஒன்றுதான் கிடைக்கிறது. வேறு வாய்ப்பு, மற்ற அவைக்கு உள்ளதுபோல், இங்கே இல்லை. இருப்பினும் சுருக்கமாக முடிக்கிறேன். நான் ஒரேயொரு அம்சத்தை எடுத்துக்கொள்கிறேன்.

துணை மதிப்பீடுகளிலே வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு ஈடு செய்யாத சில செலவினங்களும் இந்த அனுமதியில் அடங்கும் என்று போட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு செய்திருக்கிறது. மத்திய அரசும் தொகை ஒதுக்கியிருக்கிறது. இதிலே மூன்றாம் பாராவில் எந்தெந்த அம்சங்களுக்கு எவ்வளவு என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே இரண்டு விவரங்களை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். பணம் அனுமதிப்பது என்பதிலே தாராளமாக இருக்கலாம். அது சரி. அதிலே ஒன்றும் குறை கிடையாது. ஆனால் அனுமதிக்கின்ற பணம் செலவழிக்கப்பட்டு, பலன் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, பல தவறுகள் நடக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மிக்க வருத்தத்தோடு மற்றொரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிவாரண வேலைகளில்கூட மோசடிகள் சில நடக்கின்றன. இதை நான் சொல்லும்போது, உறுப்பினர் அவர்கள் நிரூபிக்க முடியுமா என்று அரசுத் தரப்பில் கேள்வி எழலாம். நிரூபிக்கக்கூடிய சில

[திரு. ப. மாணிக்கம்] [1983 அக்டோபர் 31

உண்மைகளை மட்டுமே மனதிலே இருத்தி, சொல்கிறேன். 21,538 துளைக் கிணறுகள் தோண்டப்பட்டன. பல இடங்களில் தண்ணீர் வரவில்லை. ஒரு நாள் வந்து, நின்றுவிட்டது. அது இயற்கை. நிலத்தடி நீர் இருந்தால்தான் வரும் என்ற உண்மையை நாம் அறிவோம். இருப்பினும் அதைப் பார்த்துப் போட வேண்டிய பொறுப்பு குறிப்பிட்ட துறைக்கு உள்ளது. அவசரமாக வறட்சி நேரத்தில் வேலை செய்தது என்பது உண்மை. அவசர வேலை செய்ய வேண்டி இருந்தது. பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் அவசர வேலை என்ற பெயரிலே எந்த இடத்தில் போட வேண்டுமோ அங்கே போடாமல், வேறு இடங்களில் போட்டு, ஒரு நாள் தண்ணீர் வந்து நின்றுவிட்டது. இன்னும் சில இடங்களில் தண்ணீர் வரவே இல்லை. சில இடங்களில் போட்டு, பூட்டு போட்டுவிட்டார்கள். இவ்வளவு துளைக் கிணறுகள் போடப்பட்டிருக்கின்றன என்று சொல்லும்போது, அந்த எண்ணிக்கையைக்கூட மறுக்கவில்லை. அந்த எண்ணிக்கையில் எந்த இடத்தில் போடப்பட்டதாக அறிக்கை வந்திருக்கிறதோ, அந்த இடத்திற்குப் போனால் இராது

(பிற்பகல் 4-20)

நான் விசாரித்துவிட்டு, பார்த்து வந்துதான் சொல்கிறேன். ஏற்கெனவே தமிழ் நாட்டில் கசிவு நீர்க் குட்டைகள் ஏராளம் உண்டு. ஆனால் எந்தத் துறை அதை நிர்வகிப்பது என்கிற தாவா நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. பல இடங்களில் ஏற்கெனவே இருந்த கசிவு நீர்க் குட்டைகள் மூடப்பட்டு குடிசைகள் எழும்பியுள்ளன. இது எதனால் ஏற்படுகிறது என்றால் அரசியல் செல்வாக்கால். இதனால் நம்முடைய நிலத்தடி நீர் ரொம்பக் கீழே போய்விட்டது. இப்போது புதிதாகக் கசிவு நீர்க் குட்டைகளை வெட்டுவதற்காக அரசு இலட்சக்கணக்கில் செலவிட அனுமதித்துள்ளதாகச் சொல்லியுள்ளது. ஆனால் ஏற்கெனவே இருந்து வந்த கசிவு நீர்க் குட்டைகள் எங்கே போயின என்பதுதான் என்னுடைய கேள்வி. சர்வே மேப்பில் ஏரி இருக்கும். ஆனால் போய்ப் பார்த்தால், இன்றைய தினம் அந்த ஏரி இல்லை. இப்படிப்பட்ட நிலையில் இதனை நிர்வகிப்பது பஞ்சாயத்தா, இல்லை நகராட்சியா. இல்லை வேறு ஏதாவது துறையா என்று நான் அறிய விரும்புகிறேன். ஏற்கெனவேயே இருந்த கசிவு நீர்க் குட்டைகள் என்னவாயின? உண்மையிலேயே கசிவு நீர்க்குட்டைகள் புதிதாக வெட்டப்பட்டுள்ளனவா என்று நான் அறிய விரும்புகிறேன். அல்லது வெறும் கணக்குதானா?



1983 அக்டோபர் 31] [திரு. ப. மாணிக்கம்]

அடுத்து, செயற்கை மழைக்காக ரூபாய் 27 இலட்சம் செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசு அந்த நேரத்தில் இதற்காக காட்டிய ஆர்வத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் ஆர்வத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் அந்த நேரத்தில் ஜனங்கள் எல்லாம் தண்ணீருக்காகத் தவித்தார்கள். இது இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். சென்னை மாநகரில் செயற்கை மழை பெய்விப்பதற்காக வந்த நிபுணர்கள் கம்பெனி ஆட்கள். பக்குவமான மேகங்களைப் பக்குவப்படுத்தி மழையைப் பெய்விப்பதுதான் நிபுணர்களின் வேலை என்று கூறினார்கள். ஆள் வந்து, விமானமும் வந்தது. ஆனால் மழை பெய்விக்க மிக முக்கியமான பொருளான சில்வர் அயோடைட் வந்து சேரவில்லை, கல்யாணத்தில் தாலி மட்டும் வரவில்லை என்பதுபோல. திரும்பவும் அங்கு போய் அதை எடுத்து வந்தார்கள். நிரம்ப அனுபவம் உள்ள கம்பெனி எது முக்கியமாக அவசியமோ அதைக் கொண்டு வரவில்லை. நாம் செய்கின்ற எல்லா முயற்சிகளுமே பலன் அளிப்பதில்லை. சில முயற்சிகள் பயன் அளித்தால், சில முயற்சிகள் பலன் அளிக்காது. அது இதற்கும் பொருந்தும். இதில் அரசு எவ்வளவுதான் அக்கறையும், ஆர்வமும் காட்டிய போதிலும், எங்கோ கோளாறும் இருந்திருக்கிறது என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. அப்படிப்பட்ட கோளாறுகள் இனிமேல் வராமல் அரசு கவனமாக இருக்க வேண்டும். ஆனால் உள்ளபடியே அரசினுடைய ஆர்வத்தை, அவசரத் தன்மையை, நல்ல உணர்வை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஆர்வம், அவசரத் தன்மை, நல்ல உணர்வு மட்டும் இருந்தால் போதாது. எந்த ஒரு அரசாக இருந்தாலும் சரி, செய்கின்ற காரியங்களை கோளாறு இல்லாமல் செய்ய வேண்டும். அப்போதுதான் அதனால் மக்களுக்குப் பலன் ஏற்படும். இல்லாவிட்டால் அத்தனை காரியங்களும் பாழாகிவிடும். இந்திய வரலாற்றைப் பார்த்தோமேயானால், எவ்வளவோ அரசுகள் நல்ல முறையில், சிறந்த முறையில் மக்களுக்குச் சேவை செய்து வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் அதே நேரத்தில் சில அரசுகள் விவசாயிகளைச் சரியான முறையில் கவனிக்காதபடியால், சீர்குலைந்து அழிந்து போயிருக்கின்றன. ஆகவேதான் அரசு செய்கின்ற எந்த ஒரு காரியமானாலும், கோளாறு ஏற்படாமல், அதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்று சொல்கிறேன்.

ஐம்பது ஏக்கருக்கு மேல் ஆயக்கட்டுள்ள பாசன ஏரிகளை ஆழப்படுத்துதல், செப்பனிடுதல் ஆகிய பணிகளுக்காக ரூபாய் 6.27 கோடி செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில்கூட பல

இடங்களில் மோசடி நடந்திருக்கிறது. இந்த ரூ. 6 கோடியும் செலவிடப்பட வில்லை. பல இடங்களில் மோசடி செய்து இந்தப் பணி நடைபெற்றதாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளனவே தவிர, அவை சரியாக வேலை செய்யவில்லை.

வறட்சி ஏற்பட்ட நேரத்தில் பல்வேறு இடங்களில் தண்ணீருக்காக மக்கள் எல்லோரும் தவித்தார்கள். தமிழகத்திலே எப்போதுமே இரண்டு பற்றாக் குறை இருந்து வந்திருக்கிறது. ஒன்று தண்ணீர். இன்னொன்று மின்சாரம். இந்த இரண்டுக்கும்தான் எப்போதும் தமிழகத்தில் பற்றாக்குறை. இருக் கின்ற தண்ணீரைச் சேமித்து, மிகவும் எச்சரிக்கையுடன் அதைச் செலவு செய்து, விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதற்கு உறுதுணையாக இருப்பவை ஏரிகள். இன்றைக்கு ஏரிகளையே தூர்த்துவிட்டு வீடுகளை அமைத்து விட்டார்கள். பல்லாவரம் பகுதியிலே இருக்கின்ற ஏரியிலே நூற்றுக்கணக்கில் குடிசைகளைப் போட்டிருப்பதை இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தண்ணீர் என்றால் மூன்று வகைத் தண்ணீர் இன்றையதினம் நமக்குக் கிடைக்கிறது. ஒன்று குடிப்பதற்கான தண்ணீர். இரண்டாவது குளிப்பது போன்ற வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்துகிற தண்ணீர். மூன்றாவது மக்கள் தங்களைச் சுத்தப்படுத்த பயன்படுத்துகின்ற தண்ணீர். இந்த மூன்றா வது ரக தண்ணீர்கூட நமக்குக் கிடைக்காத நிலை வறட்சிக் காலத்தில் ஏற்பட்டது. இந்த அறிக்கையிலே பல ஏரிகள் தூர் எடுக்கப்பட்டிருப்ப தாகச் சொல்லப்பட்டிருககிறது. உண்மையிலேயே அவை வெட்டப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இதிலே தவறுகள், குறைபாடுகள், மோசடிகள் நடைபெற்றிருக்கின்றன. அறிக்கையிலே சொல்லியிருப்பது போல் ஏரிகள் வெட்டப்படவில்லை. நான் சொல்லியுள்ள குறைபாடுகளை எல்லாம் அரசு ஆராய்ந்து அறிய வேண்டுமென்றும், வருங்காலத்தில் ஒரு சிறு குறைபாடு கூட இல்லாத வகையில் அரசு கவனமாக இருந்து இம்மாதிரிப் பணிகளை கவனிக்க வேண்டுமென்றும் கேட்டு, அமர்கிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன்:** தலைவரவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை விவர அறிக்கையின் மீது சில பிரச்சினைகளைப் பேசலாமென்று நினைத்திருந்தேன். ஆனால் மாண்புமிகு தலைவர் அவர்கள் நேரத்தைச் சுருக்கி விட்டார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் துணை மானியக் கோரிக்கையை ஒரு அறிக்கையாக இங்கே வைத்



திருக்கிறார்கள். ஆனால் இப்போது மாநிலங்களுக்கு வந்துகொண்டிருக்கிற பணத்தையும், அதற்குரிய அதிகாரத்தையும் மைய அரசே எடுக்கிற வகையில் யோசனை செய்ய, நாளைக்கு மத்திய அரசு டெல்லியில் ஒரு மாநாட்டில் விவாதிக்க இருக்கிறது. அதாவது 5 பொருள்கள் மீது கூடுதல் விற்பனை வரி விதிக்க இருக்கிறார்கள். இப்படி பல கோடிக்கணக்கான பணம், மாநிலத்திற்கு வரவேண்டிய பணத்தை, அவர்களுடைய இஷ்டம்போல், முதலமைச்சர்களை எல்லாம் கூட்டி வைத்து சம்பிரதாயத்தோடு பேசி, எடுத்துக் கொள்ளப் போகிறார்களா? நாளைக்கு இது குறித்து விவாதிக்க நம்முடைய மாநிலத்தி லிருந்து கூட அமைச்சர்கள் போக இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மேற்கு வங்க நிதியமைச்சர் திரு. அசோக் மித்ரா அவர்கள் சமீபத்தில் சென் னைக்கு வந்து இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் நிதியமைச்ச ரைக கலந்து பேசியிருக்கிறார்கள். இது விவாதத்திற்குரிய பிரச்சினை என்ப தோடு மட்டுமல்லாமல், மாநிலங்களுக்கு வந்துகொண்டிருக்கிற நிதி ஆதாரங் களையும், மாநிலங்களுக்கு இருக்கிற அதிகாரங்களையும் மத்திய அரசு எடுத்துக்கொள்வது என்கிற அடிப்படையில், இது மிக மிக முக்கியமான ஒன்று. இம்மாதிரி மிகவும் முக்கியமான ஐந்து பொருள்கள் மீது இருக்கிற சேல்ஸ் டாக்ஸை சர்சார்ஜ் என்கிற முறையில் மாற்றுவதற்கு இடமளிப்பது என்பது சிறிதும் பொருத்தமற்ற ஒன்று. அது சரியல்ல. அதனை நாம் அனுமதிக்கவே கூடாது என்று திரு. அசோக் மித்ரா அவர்கள் குறிப்பிட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "அங்கே போய் பேசிப் பார்க்கலாம்" என்று சொல்லி யிருக்கிறார்கள். இந்த 5 பொருள்கள் மீதும் கூடுதல் விற்பனை வரி விதிப் பதன் மூலம் அவர்களுக்கு அந்த வருவாய் போய்ச் சேர எந்த வகையிலும் இம்மாநில அரசு அனுமதிக்கக் கூடாது. இது குறித்து இந்த அரசின் திட்ட வட்டமான கொள்கையை இங்கேயே, அவையிலேயே மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும். இந்த அவையிலேயே 'இந்தக் காரியத்தில் மத்திய அரசோடு ஒத்துழைக்க மாட்டோம்' என்று தெரிவிக்க வேண்டும். இங்கேயே, இப்பொழுதே இந்த அரசின் நிலையை தெளிவாகச் சொல்லிவிட்டால், அங்கே போய் நிர்ப்பந்தத்துக்கு ஆளாக வேண்டிய நிலை வராது. அப்படி ஆகிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டு கோள். அரசியல் காற்று திசை மாறி வேறு அடித்துக்கொண்டிருக்கிறது. (சிரிப்பு). மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதுகுறித்து முன்கூட்டியே தமிழக மக்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். இந்த விஷயத்தில் தமிழ் நாட்டு மக்களுடைய உணர்வையும், தமிழ் நாடு அரசினுடைய நிதிநிலை பற்றாக்குறையாக இருக்கிற நேரத்தில் நம்முடைய திட்டவட்டமான நிலை யையும் இதிலே அவசியம் தெளிவுபடுத்த வேண்டும். இது துணை நிதிநிலை அறிக்கையாதலால்தான், நான் இதுபற்றிச் சொல்கிறேன்.

இந்த அறிக்கையிலேயே, இரண்டாவது பாராவிலே வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மைய அரசு ரூபாய் 68.36 கோடிவரை செலவினங்களை அனுமதித்திருக்க, மாநில அரசு ரூபாய் 88.76 கோடி வரையிலான செலவினங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, மத்திய அரசு அனுமதித்திருப்பதை விட மாநில அரசு கூடுதலாக அனுமதி வழங்கியுள்ளது. இதிலே எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், மத்திய அரசைவிட இம்மாநில அரசு கூடுதலாக வறட்சி நிவாரணத்திற்காகச் செலவு செய்திருக்கிற அதே நேரத்தில், சத்துணவுத் திட்டத்திற்கு ஆகின்ற செலவுகளையே சமாளிக்க முடியாமல் மத்திய அரசிடமிருந்து உதவியைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது, வறட்சி நிவாரணத்திற்காகவாவது மாநில அரசைவிட கூடுதலாக மத்திய அரசு நிவாரணம் கொடுக்கக் கூடாதா? என்னைப் பொறுத்தவரையில், ஒன்று சொல்லுவேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக ஆகின்ற முழுத் தொகையையும் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து வற்புறுத்திக் கேட்டுப் பெற வேண்டும். அப்படி இந்த அரசு மத்திய அரசைக் கேட்டதா என்று நான் அறிய விரும்புகிறேன். இந்த அரசின் கன்டின்ஜென்சி ஃபண்டிலிருந்து இம்மாதிரி அவசர காரியங்களுக்கு எடுத்துச் செலவிடுவது என்பது வேறு. ஆனால் இந்த வகைக்கு ஆகின்ற முழுத் தொகையையும் ஏன் இந்த அரசு மத்திய அரசிடம் கேட்கக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலேயே இது குறித்து அரசின் நிலையை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அதற்காக என்று ஒரு பத்தியேகூட அதில் சேர்க்கப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது, முழுப் பொறுப்பையும் மத்திய அரசே ஏற்க வேண்டுமென்றுதான் வற்புறுத்த வேண்டும். இது துணை மானியக் கோரிக்கையாக இருப்பதால், இதற்குத் துணையாக நிதி நிலை அறிக்கையில் இருந்த கருத்தையும் இதிலே சேர்க்க வேண்டும்.

திரு ஆ. நல்லசிவன் : மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இது குறித்து தெளிவுபடுத்தியதற்கு என்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஆனால் மைய அரசு ரூபாய் 68.36 கோடி வரை செலவினங்களை அனுமதித்திருக்க, இம்மாநில அரசு ரூபாய் 88.76 கோடி வரையிலான செலவி னங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது என்கிற சொல் இருப்பதால்தான், இது குறித்து எனக்கு ஏற்படுகிற ஐயப்பாட்டின் காரணமாகத்தான் நான் இப் பிரச்சினை குறித்து விளக்கம் பெற ஆசைப்படுகிறேன்.





(பிற்பகல் 4-30)

அடுத்ததாக, வறட்சி நிவாரணத்தோடு வருகிற பிரச்சினை அரிசிப் பிரச்சினை., இப்போது மழை பெய்தாலும், வருகிற ஜனவரி வரை அரிசி நமக்குக் கிடைக்கப் போவதில்லை. அரிசியைப் பதுக்கி வைத்திருப்பவர்கள் வேண்டுமானால், தாங்கள் பதுக்கி வைத்திருக்கிற அரிசியை மழை காலத்தில் அதிக விலைக்கு விற்கலாம் என்று கொஞ்சம் வெளியே விடுவார்கள். ஆனால் லேட்டஸ்ட் நிலவரம், முந்தாநாள் மதுரையில் அரிசி விலை, பொன்னி ஒரு கிலோ ரூ. 5.30, ஐ.ஆர். 20 அரிசி ரூ. 5.00, கருணா அரிசி ரூ. 4.30, அரிசி குருணை ரூ. 4.10 விற்கிறது. இந்த நிலையில் நியாய விலைக் கடைகளில் அரசாங்கம் ரூ. 2-15-க்கு அரிசி போடுகிறார்கள். 20 கிலோ அரிசி ஒரு கார்டுக்குத் தரப் படும் என்று இந்த மன்றத்திலும், பேரவையிலும், பொது மேடைகளிலும் சொல்கிறார்கள். ஆனால் கடைகளில் 5 கிலோதான் நகர்ப்புறங்களிலும், 2 கிலோதான் கிராமப்புறங்களிலும் போடுகிறார்கள்.

இருபது கிலோ போடுவோம் என்று சொல்லிவிட்டு, "5 கிலோ போட்டால் போதும் என்று நீங்கள் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்" என்று நான் கருது கிறேன். இதற்குக் காரணம் இப்போது அரசாங்கம் அரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்து வாங்கி, அதை நியாய விலைக் கடைகளில் கொடுப்பதன் மூலம், இந்த 5 கிலோ, 2 கிலோ கொடுப்பதற்கே 90 கோடி ரூபாய் நாம் மானியமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. 20 கிலோவையும் சொன்னபடி போட்டால், இன்னும் அதிகச் செலவாகுமே என்று பயப்படுகி றார்கள். ஆகவே 5 கிலோ கொடுப்பது என்பது அரசு செய்த ஏற்பாடுதான் என்று சொல்லிக்கொள்கிறேன். கொள்கை அறிவிப்பில் 20 கிலோ அரிசி என்று போட்டிருந்தாலும் 10-12 கிலோ அரிசி போடக்கூடாதா? பட்ஜெட் உரையில் மத்திய அரசு வறட்சிக்காக 1 லட்சம் டன் அரிசி தரவேண்டும் என்று கேட்டார்கள். இப்போது 40,000 டன் அரிசி கிடைத்ததுமே, அவர்களைப் பாராட்டுகிறார்கள். இதிலிருந்தே இவர்களுக்கும் அவர்களுக்கும் பரஸ்பரம் புகழ்ச்சி, பாராட்டுகிற நிகழ்ச்சியாகவே நடப்பது தெரிகிறது. இப்படியே 40 ஆயிரம் டன்னுக்குப் பாராட்டிக் கொண்டிருந்தால் இப்போது போடுகிற 5 கிலோ, 2 கிலோவுக்கும் ஆபத்து வந்துவிடும் என்று பயமாக இருக்கிறது. இதுவும் சேர்ந்து அரசியல் காற்றாடி வீசுவதைத்தான் காட்டுகிறதா? தமிழ் நாட்டு மக்கள் மழை பெய்கிற சமயத்தில் அரிசியைப்பற்றிப் பேசமாட்டார்கள் என்று நினைக்கிறார்களா? இதற்கு அமைச்சர் அவர்கள் பேசும்போது தயவு செய்து பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசு

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 அக்டோபர் 31

அறிவித்த 20 கிலோ அரிசி தரவில்லை. மத்திய அரசை "நாங்கள் கேட்ட 1 லட்சம் டன் அரிசியைத் தாருங்கள்" என்று வற்புறுத்த வேண்டாமா? அப்படி ஒரு வார்த்தைகூட இதில் இல்லையே! வறட்சி குறுவை அறுவடை வந்தால்தான் முடியும். வறட்சியின் விளைவை அரிசியால்தான் சமாளிக்கிறோம். இந்த நிலையில் எல்லாக் கார்டுகளுக்கும் ரூ. 2.15 விலையில் அரிசி போட அரசிடம் அரிசி இருக்கிறதா இல்லையா என்றுகூட தெரியவில்லை. அதைப்பற்றிப் பேச்சே இல்லை. நிதி அமைச்சர் உணவு அமைச்சரும்கூட. நிதியமைச்சராக . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும்தான் ஆண்டு முழுவதும் உள்ள கொள்கை மற்ற விஷயங்களை விளக்க முடியும். துணை மானியக் கோரிக்கையில் எந்தெந்த நோக்கில் எவ்வளவு தொகை செலவழிக்கப் பட்டது என்று சொல்லி, அதற்கு அனுமதி தாருங்கள் என்று கேட்கிறபோது, பாலிசி மற்ற நிலைமைகள் வராது. வேறு குறுகிய காலக் கேள்விகள் மற்ற விவரங்களைக் கேட்டால், அதற்கு விளக்கங்கள் தரலாம். இந்தக் கொள்கை விளக்கங்கள் பொதுவாக துணை மானியக் கோரிக்கையில் வராது. இதைக் குறிப்பிடாதது குறித்து இது அவருடைய கருத்து என்று சொல்லலாமே தவிர, அரசு இதைக் குறிப்பிடவில்லையே என்று சொல்வது தவறு. அவருடைய கருத்து என்று சொல்வது நல்லது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** எனக்கு உதவியதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**திரு. ஆ. நல்லசிவன்:** ஆக இந்த 20 கிலோ அரிசியையும் அதற்கான மானியத்தையும் நாங்கள் தருவோம் என்று சொல்லவில்லை. அரசு இந்த அறிக்கையில், "20 கிலோ அரிசியும் தருவோம், ரூ. 2.15-க்கும் தருவோம், அதனால் ஏற்படும் மானியத்தையும் தருவோம்" என்று சொல்லியிருக்க வேண்டும்.

இன்னொரு விஷயத்தைச் சொல்லி முடிக்கிறேன். கல்லூரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. கோவையில், அண்ணா தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் நடத்தும் பி.எஸ்.ஜி. கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர்களுக்கு ஒரு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 2, 3 இன்கிரிமெண்ட் 'கட்' செய்யப்பட்டிருக்கிறது. 58-ம் வயதில் இருப்பவர்களுக்கு இந்த வயதிலேயே '[illegible] எபெக்ட்'



1983 அக்டோபர் 31] [திரு. ஆ. நல்லசிவன்]

கொடுத்து 2, 3 இன்கிரிமெண்டை 'கட்' செய்வதால், அவர்கள் 58 வயதில் ரிடையராகும்போது அவர்களுக்கு ரூ. 27,000 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மூன்று இன்கிரிமெண்ட் 'கட்' செய்தால் ரூ. 30,000 முதல் ரூ. 40,000 வரை நஷ்டம் ஏற்படுகிறது. இதை அண்ணா தி.மு.க.வின் ராஜ்ய சபை உறுப்பினர் அந்தக் கல்லூரியின் நிர்வாகிதான் செய்திருக்கிறார். பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அரசாங்கத்திற்கு அப்பீல் செய்தபோது, 'இதுபோன்ற மைனர் பனிஷ்மெண்ட் விஷயத்தில் சர்க்கார் தலையிடாது' என்று சர்க்காரும் கூறிவிட்டது. இந்த உத்தரவை வைத்துக்கொண்டு, 1980 ஆம் ஆண்டில் டைம்-டேபிள்படி இரண்டு வகுப்புகள் எடுக்கவில்லை என்று சொல்லி, 3 ஆண்டுகள் கழித்து, இப்போது 1983-ல் அந்தப் பேராசிரியர்களுக்கு 3 இன்கிரிமெண்ட் 'கட்' செய்திருக்கிறார்கள். இப்படி இந்த உத்தரவு வந்து 1 வாரத்திற்குள் 7 ஆசிரியர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு ஆசிரியருக்கு அவரது வாழ்க்கையில் 30 ஆயிரம், 40 ஆயிரம் ரூபாய் நஷ்டமாவது மைனர் பனிஷ்மெண்ட்டா? இதில் என்ன நியாயம் இருக்கிறது? படித்த ஆசிரியர்கள் பழி வாங்கப்படுவதற்கு மாநில ஆட்சிக் கட்சி எம்.பி. காரணமாக இருக்கிறார் என்பதை அரசு யோசிக்க வேண்டும். இது ஆளும் கட்சிக்கு நல்லதா என்று கல்வி அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும். இதுபோன்று குமரித் துறையில் ஒரு பிரச்சினை. ஒரு சிவில் சப்ளைஸ் தாசில்தாருடைய மகன் கொலை கொல்லப்பட்டிருக்கிறார். பெரும்புள்ளி ஒருவர் கன்னியாகுமரி மாவட்ட பார்டரில் ஒரு லாரியில் அரிசியைக் கடத்திக்கொண்டு போகின்றபோது, அதைத் தடுத்துப் பிடித்த சிவில் சப்ளைஸ் தாசில்தார் அதை பிடித்திருக்கிறார். அவருக்கு ரூ. 5000 லஞ்சமாக அவர்கள் சொல்லி அந்த லாரியை விடச் சொல்லியிருக்கிறார்கள். விடாமல் போகவே, அந்தப் பெரும்புள்ளி, இவர் குடும்பத்தையே அழித்துவிடுவதாகச் சொல்லிவிட்டு, ஞானப்பிரகாசம் என்ற அவரது மகனை, கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த 19 வயது பையனை, அவனது முகத்தில் ஆசிட்டை ஊற்றி கொலை செய்து, [illegible] வழியில் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். பிறகு விஷயம் தெரிந்து விளவங்கோடு இன்ஸ்பெக்டர் சென்று, அதை அனாதைப் பிணம் என்று சொல்லி புதைத்துவிட்டார்கள். ஆனால் ஞானப்பிரகாசம் என்ற கல்லூரி மாணவனைக் காணவில்லை என்று . . . .

**திரு. ம. சங்கரலிங்கம்:** அந்தப் பையன் அங்குள்ள விவேகானந்தர் கல்லூரி மாணவன். அந்தக் கல்லூரி 4 நாட்களாக நடக்கவில்லை.

[1983 அக்டோபர் 31

(பிற்பகல் 4-40)

திரு. ஆ. நல்லசிவன் : விவேகானந்தா கல்லூரியில் படித்து வந்த அந்த மாணவர் காணாமல்போய் விட்டிருக்கிறார் என்ற செய்தி அவருடைய படத்தோடு பத்திரிகைகளிலும் போடப்பட்டிருந்தது. பின்னாலே கொலை செய்யப்பட்ட அந்த மாணவனுடைய பிணம் தோண்டி எடுக்கப்பட்டு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அரிசி கடத்தல்காரர்கள் தாசில்தாருடைய மகனையே கொன்றிருக்கிறார்கள். அங்கே உள்ள விளவன்கோடு காவல்துறை இன்ஸ்பெக்டர் அந்த வழக்கைச் சரியாக விசாரிக்காமல், அந்தக் குற்றவாளிகளையே தப்ப விட்டிருக்கிறார். அந்த அதிகாரி மீது ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அதிகாரியை உடனடியாக சஸ்பெண்டு செய்யாவிட்டாலும் கூட, அந்த இடத்திலிருந்து குறைந்தபட்சம் டிரான்ஸ்பர் செய்தாவது விசாரிக்க வேண்டும். இந்த விஷயத்தில் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, துணை மதிப்பீட்டைக் குறித்த சில கருத்துக்களை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ரூ. 158.75 கோடிக்கான நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதன் மூலம் கோரியிருக்கிறார்கள். இதில் பலவேறு திட்டங்களின் கீழ் செலவு செய்யப்படுவதற்கான குறிப்புகள் எங்களுக்குத் தரப்பட்டிருந்தாலும், இந்தத் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை முழுமையாகவும், மன நிறைவைத் தரக்கூடிய வகையிலும் அமையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்தில் ஏற்கெனவே கிராம வேலை வாய்ப்புத் திட்டம், தன்னிறைவுத் திட்டம், சிறுபாசனத் திட்டங்கள் என்று இப்படி பல்வேறு தலைப்புகளில் நிறைவேற்றப்பட்ட அந்தப் பணிகளுக்கேதான் மீண்டும் இப்போது நாம் நிதி ஒதுக்கிச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். இதைச் சொல்லும்போது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இன்னொரு விஷயத்தையும் கொண்டுவர விரும்புகிறேன். வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பிறகு திருத்திய மதிப்பீடுகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் பொதுப்பணித் துறையில் நாம் வழங்கியிருக்கிற உத்தரவுகளுக்கு மாறுபட்ட வகையில், அவற்றையெல்லாம் மீறுகிற வகையில் திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதிலிருந்து, முறையாக இந்த வறட்சி நிவாரணப் பணிகளில் நாம் நிதியைச் செலவிடவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.





ரூ. 10,000-க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டால், அதைக் குறித்த திருத்திய மதிப்பீடு என்ற வகையில் எந்த வகையிலும் ஏற்கெனவே தயாரித்த தொகையைக் காட்டிலும் 25 சதவீதத்திற்குக் கூடுதலாக திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்படக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் தற்போது ரூ. 50,000-க்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது என்றால், ஒரு மாதம் அல்லது 2 மாதம் கழித்து அதற்கு ரூ. 1,50,000 செலவில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அங்கீகாரம் பெறப்பட்டு பல்வேறு இடங்களில் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் என்னால் ஆதாரத்தோடு அவற்றைத் தெரிவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே ஏதோ காண்ட்ராக்டர்கள் அல்லது வேறு யாரோ சொல்லைக் கேட்டு, அதிகாரிகள் விதிமுறைகளுக்குப் புறம்பாகச் செயல்பட்டு நிதியைச் செலவு செய்திருக்கிறார்கள் என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, கிருஷ்ணா நதியிலிருந்து நம்முடைய சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டு வருவதற்காக ரூ. 30 கோடியை 6 மாதங்களுக்கு முன்பே ஆந்திர மாநிலத்திற்கு நாம் வழங்கிவிட்டோம். அத்திட்டத்திற்கான திட்ட நகலைக் கூட இந்த அவையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் வைக்கவில்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். அதற்கான திட்டம் முழுமையாகத் தயாரிக்கப்பட்டிருந்தால், அது இந்த அவைக்குத் தெரிவிக்கப்பட வேண்டாமா என்பதை, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களின் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். ரூ. 30 கோடியைக் கொடுத்திருக்கிறோம். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ரூ. 30 கோடி கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டிருக்கிறோம். சாதாரணமாக ரூ. 30 கோடிக்கு 18 சதவீதம் வட்டி என்ற அடிப்படையில் பார்த்தால்கூட, மாதம் ஒன்றுக்கு ஏறத்தாழ 45 லட்சம் ரூபாய் தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கு தற்போது நட்டமாகிக் கொண்டிருக்கிறது. ஆக இதைக் குறித்த திட்ட நகலைக் கூட பார்க்க முடியாத நிலையில், இவ்வாறு 6 மாதங்களுக்கு ஒரு முறை ரூ. 30 கோடியைக் கொடுத்துவிட்டு, காத்துக் கொண்டிருப்பது முறைதானா என்பதையும் தங்கள் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, உள்ளாட்சி நிருவாகம் என்பது மிகவும் சீர்கெட்டுப் போன நிலையில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் நம்முடைய அவைக்கும் இது நன்றாகத் தெரியும். சென்னை நகரத்திலும் சரி, மாவட்டத் தலைநகரங்களிலும் சரி, கிராமப்புறங்களிலும் சரி, எங்கே பார்த்தாலும் இருள் சூழ்ந்த பகுதிகளைத்தான் நாம் காண முடிகிறது. எங்கேயும் மின்சார

[திரு. சோ. அழகம்] [1983 அக்டோபர் 31

கூலியைப் பார்க்கவே முடியவில்லை. தற்போது மின்சாரத் தட்டுப்பாடு இல்லை என்று சொன்னாலும்கூட, இன்றைக்கும் கிராமப் பகுதிகளில் குறிப்பாக தூரல் பகுதிகளில் விவசாயிகள் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு விட்டு விட்டு முறையில்தான் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி மின்சாரம் தடைபடக் கூடிய காரணத்தால், விவசாயிகள் இன்றைக்குப் பெரிய துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு, விவசாய உற்பத்தியில் கூட சரியாகக் கவனம் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப்போலவே சென்னை நகரில் பொதுப் பணித் துறையில் சென்னைக் கோட்டம், சென்னை வடக்குக் கோட்டம், சென்னை தெற்குக் கோட்டம், செங்கை கோட்டம் என்று பல பகுதிகளைப் பிரித்து, அவற்றை ஒரு பொறியாளர் பார்வையிடுகிற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பொறியாளர் தனக்கு வேண்டிய ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் வேலைகளைக் கொடுத்து, அதன் மூலம் பல தவறுகளைச் செய்கிறார் என்று புகார் அரசாங்கத்திற்கு வந்து, திடீரென்று கடந்த செப்டம்பர் மாதத்தில் அவர் அந்தப் பணியிலிருந்து மாற்றப்பட்டார். ஆனால் என்ன காரணத்தாலோ, திடீரென அவர் மாற்றப்பட்ட ஆர்டர் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் அவரை அதே இடத்தில் நியமித்திருக்கிறார்கள். ஆகவே தவறு செய்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதைப் போன்ற இத்தகைய செயல்கள் தவறு நடக்காமல் பார்த்துக்கொள்ள வழிவகை செய்யுமா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக ரூ. 158.75 கோடிக்கு நிதி ஒதுக்கீடு கோரும் இந்தத் துணை மதிப்பீட்டில் கண்டுள்ள நிதி அனைத்தும் ஏற்கெனவே வறட்சி நிவாரணத்திற்காக நடைபெற்ற காரியங்களுக்காகச் செலவிடப்படுகிறது என்பதோடு இவைகளெல்லாம் பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய அளவில், முறையாகவோ, உரிய அளவில் நடைபெறவில்லை, இதில் தவறுகள்தான் மலிந்திருக்கின்றன என்பதை மட்டும் இங்கே எடுத்துச் சொல்லி, இடங்களுக்காகச் செய்யப்படும் செலவு என்பது கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையைப் போல் இருக்கிறது, உண்மையில் மக்களுக்குப் பயன்படும்படி இல்லை என்று அமைகிறேன். வணக்கம்.



1983 அக்டோபர் 31]

**திரு. எம். டீ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, முதல் துணை மதிப்பீடுகள் மேலவையின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின்மீது நான் சில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். முதல் துணை மதிப்பீடுகள் என்பதாலேயே, பின்னாலே இரண்டாவது, மற்றும் மூன்றாவது துணை மதிப்பீடுகள் என்று வருவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று கருதுகிறேன். எனவே அப்போதும் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்குமென்று எண்ணி, இப்போது ஒரு சில கருத்துக்களை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மழையில்லாமல் கடுமையான வறட்சி நிலவிய பிறகு, தற்போது மழை பெய்து கொண்டிருக்கிறது என்பது நமக்கு ஓரளவுக்கு மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாக இருந்தாலும்கூட, இதனால் நாட்டிலுள்ள மக்களுடைய பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாக எண்ணுவது உண்மையிலே தவறாகும். குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களைப் பொறுத்தவரையில், மழை பெய்த பின்னே, தங்களின் விவசாயத்தைச் செய்ய போதிய வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படும் விவசாயக் கடன்களைக் கூட வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அது மட்டுமல்லாமல், கூட்டுறவு வங்கிகளிலும் பணம் பெற வாய்ப்பில்லாத காரணத்தால், பல இடங்களில் தொல்லைக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

பல கிராமங்களில் கூட்டுறவு வங்கிகள் கடன் பெறுவதற்கான தங்களின் தகுதியைக்கூட பல காரணங்களால் இழந்துவிட்டிருக்கின்றன. எனவே உடனடியாக, தற்போது பெய்துள்ள மழையைப் பயன்படுத்தி விவசாயக் காரியங்களைச் செய்வதற்கு இயலாமல் பல பகுதிகளில் விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இரண்டாவதாக, வறட்சிப் பணிகள் என்பவை பெரும்பாலும் கிராமங்களில் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதற்கான நிதி அவர்கள்மேல் செலவழிக்கப்படுகிறபோது, அவற்றையெல்லாம் சரியாகத்தான் செலவழித்திருக்கிறார்களா என்று பார்க்கிறவர்களும் அதிகாரிகளாகத்தான் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், பொதுமக்கள் மத்தியில் உண்மையிலேயே அந்த பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்ற எண்ணம்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1983 அக்டோபர் 31

மூன்றாவதாக, வறட்சியால் பாதிக்கப்பட்ட நோக்கில் பெரும்பாலும் விவசாயப் பெருமக்களும், விவசாயத் தொழிலாளர்களும் அதிலும் குறிப்பாக, தாழ்த்தப்பட்டவர்கள்தான் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்குக் காரணம் மற்றவர்களெல்லாம் வேறு வகையில் கடன் வாங்கியாவது காலத்தைக் கழிக்க முடியும். ஆனால் கூலி வேலையைச் செய்கிற, அதையே நம்பி இருக்கிற வேறு வேலை எதுவும் செய்யத் தெரியாத தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்காக நாம் புதிய திட்டங்கள் எதையும் சரியாக வகுக்கவில்லை, அவர்களுக்கு உதவுகிற வகையில் சரியான முறையில் ஒதுக்கப்பட்ட பணம்கூட செலவழிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இதற்காக மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்ட நிதி சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று சொல்லி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திரு. இளையபெருமாள் அவர்கள் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கே பலமுறை எழுதியும் நேரில் எடுத்துக் கூறியும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்து எழுதியும்கூட, சரியான பதில் வரவில்லை, சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற காரணத்திற்காக சென்னையில் இதற்காக அடையாள உண்ணாவிரதம் இருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது, இது எந்த வகையிலும் அரசுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லை என்பதை மட்டும் இங்கே தெரிவிக்க

(பிற்பகல் 4-50)

விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல் இதையொட்டியே மதுரையில் கடந்த மாதம் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகளை அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறுவதற்காக உண்ணாவிரதம் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களை அரசாங்கம் சரியாகக் கவனிக்காததால் இராமநாதபுரம் மாவட்டத்திலே 18 குடும்பங்களைச் சார்ந்த 90-க்கும் மேற்பட்ட மக்கள் வேறு மதத்தைத் தழுவ வேண்டிய நிலை வந்ததோ என்று ஐயுறுகிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1983 அக்டோபர் 31] [திரு. பி. சுப்பிரமணியம்]

நான்காவதாக இங்கிருந்து வெளிநாட்டிற்குச் சென்று அங்கு இருபதாண்டு காலம் வாழ்ந்த பின்னர், இந்திய அரசாங்கத்திற்கும், ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமாக 4 இலட்சம் தமிழ் மக்கள் இந்தியாவிற்கு வந்திருக்கிறார்கள். அந்த மக்களுக்குப் புனர் வாழ்வு அளிப்பதற்குத் தேவையான விவரங்கள் இதிலே இல்லை. நேற்றைய 'இந்து' பத்திரிகையிலே ஒன்றைப் படித்துப் பார்த்தேன். அதன் விசேஷ நிருபர் அதைப்பற்றி விளக்கமாக அறிந்து, கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார். இந்தியாவிற்கு ஸ்ரீலங்காவிலிருந்து வந்த மக்களுக்குச் செலவிடுவதற்காக 1983-84ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 26 கோடியே 30 இலட்சம் ரூபாயில் இந்த மாதம் 10ஆம் தேதி வரையில் 25 இலட்சம் ரூபாய் மட்டுமே செலவழிக்கப்பட்டிருக்கிறதென்றால், ஒரு சதவீதம் கூட செலவழிக்கப்படவில்லையென்றால், மீதியுள்ள பணத்தை வருகின்ற நான்கைந்து மாதங்களிலே அரசாங்கம் எப்படி செலவழிக்கப்போகிறது, அதற்கு என்ன வழிவகை வைத்திருக்கிறது என்பது தெரியவில்லை. ஏற்கெனவே செலவு செய்த தொகைகளுக்கு அங்கீகாரம் வேண்டுமென்று கேட்கும் இந்த அரசு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட அந்தப் பணத்தைச் செலவு செய்வதில் ஏன் கண்ணுங்கருத்துமாக இல்லை என்பதைக் கேட்க விரும்புகிறேன். ஆகவே ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை, செலவழிக்கப்பட்ட பணமும் சரியாக மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற குறைபாடு இருப்பதை இந்த அவையில் சுட்டிக் காட்டி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகள் இந்த அவையின் முன் வைக்கப்பட்டு ரூபாய் 158 கோடியே 75 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதன் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சிறப்பாக வழங்கியிருக்கிறார்கள். வறட்சி நிவாரணப் பணிகளைப்பற்றியெல்லாம் இங்கே பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த மூன்று பருவ மழைகள், தமிழகத்தைப் பொறுத்த வரையில், பொய்த்துவிட்டதன் காரணமாக, கடுமையான துன்பத்திற்கும் கொடுமையான துயரத்திற்கும் தமிழகம் ஆளாக்கப்பட்டிருந்தது என்பதை இந்த அவையினர் நன்கு அறிவார்கள். 75 ஆண்டுக்கால தமிழக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், அதிலே கிட்டத்தட்ட 45 ஆண்டுகளில் வறட்சி இருந்திருக்கிறது. அந்த 45 ஆண்டுகளிலே மிகக் கடுமையான, கொடுமையான வறட்சி நிலவியது என்று சொல்லப்படுகிற

ஆண்டுகள் 13 ஆண்டுகள். மற்ற 32 ஆண்டுகளில் வறட்சி விட்டு விட்டு வந்திருக்கின்றது. அதாவது ஒரு சில மாவட்டங்களில் வறட்சி ஏற்படுகிற போது, சில மாவட்டங்கள் நன்றாக இருக்கும். கல்லுப்பட்டியிலே வறட்சி என்றால் கோயம்புத்தூரிலே நன்றாக இருக்கும். சில ஆண்டுகளில் கோயம்புத் தூரிலே வறட்சி என்றால் கல்லுப்பட்டியிலே நன்றாக இருக்கும். அப்படி ஆங்காங்கே வறட்சி என்ற நிலையில் இருந்தது 32 ஆண்டுகள். ஆனால் ஆண்டு முழுவதும் வறட்சி என்று நாம் ஒத்துக் கொள்ளக்கூடிய வகையில் கடுமையான, கொடுமையான ஆண்டுகள் 13 ஆண்டுகள். கடந்த இரண்டு ஆண்டுகள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட ஆண்டுகள் என்பதை இந்த அவை நன்கு உணரும். அந்த வகையிலே வறட்சி நிவாரணப் பணிகளைப் பொறுத்த வரையில், ஆண்டுக்காண்டு ஆரம்பத்திலேயே நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு கிட்டத்தட்ட அக்டோபர் திங்களில் மூன்று, நான்கு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. நவம்பர்--டிசம்பர் மாதங்களில் 6 மாவட்டங்கள், பத்து மாவட்டங்கள், 12 மாவட்டங்கள் என்று ஆகி கடைசியில் மார்ச்—ஏப்ரல் என்று வருகிறபோது, மொத்தமுள்ள 16 மாவட்டங்களில் 13 மாவட்டங்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டன என்ற செய்தி வந்த பிறகு, அது பற்றி அறிக்கை தயாரிக்கப் பட்டு, தமிழகத்தின் பரவலாக தமிழகத்திலே இருக்கின்ற அல்லலுறும் மக்க ளுக்கு ஓரளவிற்கு ஆறுதல் அளிக்கிற வகையிலே, வறட்சி நிவாரணப் பணி களை மேற்கொள்ளலாம் என்று கருதி, 217 கோடி ரூபாய் அளவிற்குச் செல வழிக்க அனுமதி அளித்து அதை மத்திய அரசுக்கு நாம் அனுப்பி வைத் தோம். மத்திய அரசினர் இதையெல்லாம் ஆராய்ந்து விரிவான நடவடிக்கை எடுக்க இரண்டு குழுக்களை நியமித்து, இரண்டு பாகங்களிலும் இரண்டு குழுக் களை போகச் செய்து, இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்துவிட்டு வரச் சொன்னார்கள். அக்குழுவின் தலைவர் பத்திரிகை நிருபர்களிடத்திலே பேசும் போது, "பீகாரில் ஏற்பட்ட கடுமையைவிட அதிகமான கடுமையை தமிழகத் தின் பல்வேறு பகுதியில் எங்களால் நேரிடையாகக் காண முடிந்தது" என்று தெரிவித்து, தக்க நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். அவர்கள் கணக்கிட்டு 68 கோடி ரூபாய் அளவிற்கு இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்காகச் செலவழிக்கலாம் என் றார்கள். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நாம் ஆண்டுக்காண்டு கிட்டத் தட்ட எட்டரை கோடி ரூபாயை பட்ஜெட்டிலே ஒதுக்கி வைக்க வேண்டும். அதை வறட்சி, வெள்ளம் வருகிற ஆண்டில் பயன்படுத்த வேண்டும். சொன் னால் வெள்ளம், வறட்சி வராமல் இருந்தால், ஒதுக்கப்பட்ட பணம் எட்டரை, எட்டரை கோடி ரூபாயும் சேர்ந்து கொண்டே வரும். எந்த ஆண்டில்



வறட்சி, வெள்ளம் வருகிறதோ அப்போது முழுவதையும் செலவழிக்க வேண்டு மென்ற நியதி தொடர்ந்து இருக்கிறது. அந்த வகையிலே இரண்டாண்டு காலமாகச் சேர்ந்து 17 கோடி ரூபாய் இருக்கிறது. அந்த 68 கோடியிலே 17 கோடி ரூபாயை நாமே செலவழிக்க வேண்டும். 14 கோடி ரூபாயை மத்திய அரசு மானியமாகத் தந்திருக்கிறது. மீதித் தொகையை கடனாகத் தந்திருக் கிறார்கள். அந்தக் கடனை ஏழு, எட்டு ஆண்டுக் காலத்திற்குள் நாம் திருப்பிச் செலுத்த வேண்டும். அடுத்து வருகின்ற ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் தொகையை அளவிற்குக் குறைத்துக்கொண்டு கணக்கிட்டுக் கொடுப் பார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்லிய மாதிரி, வெள்ளம், வறட்சி போன்ற ஆட்சியின் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட இயற்கை அழிவுகளால் ஒரு நாடு பாதிக்கப்பட்டால், ஒரு நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், இருக்கின்ற வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி மக்க ளுக்கு நல்வாழ்வு தருகின்ற பொறுப்பை மாநில அரசுதான் ஏற்க வேண்டு மென்ற நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய கட்டுப் பாட்டிற்கு அப்பாற்பட்டு, ஒரு ஆட்சியினுடைய கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் வறட்சி, வெள்ளம் போன்ற சேதங்கள் ஏற்படுகிறபோது மத்திய அரசு, மாநில அரசு ஆகிய ஆட்சிகள் சேர்ந்து நிவாரணத்திற்குப் பொறுப்பேற்க வேண்டு மென்று பல தடவை நாம் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். அந்த வகை யிலே இப்படி ஏற்படுகிறபோது மாநில அரசே அன்றாட நடவடிக்கைகளை எடுத்து மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற பணிகளை மேற்கொண்டுள்ளது. மற்றும் ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்ற மாநில அரசு பெருந்தொகை ஒதுக்க வேண்டியிருப்பதால், அதற்கு மத்திய அரசு பெரும் உதவி செய்ய வேண்டும், துணையாக நிற்க வேண்டும் என்ற கோரிக்கையை எல்லா மாநில அரசுகளும் வைத்துக்கொண்டு வருகின்றன. அந்த வகையிலே நாமும் எடுத்து வைக்கிறோம். திரு. சவான் அவர்கள் தலைமையின் கீழ் எட்டாவது நிதிக் குழு வந்து எல்லா மாநிலங்களிலும் நிலைமையை ஆராய்ந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அடுத்த மார்ச் மாதத் திற்குள் அறிக்கையை அளிப்பார்கள். இந்த அறிக்கையின் அடிப்படையிலே அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும். நாம் அந்த நிதிக் குழுவிடத்திலே வறட்சி நிவாரணப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது, வெள்ள நிவாரணப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போது, 70 சதவீதத்தை மத்திய அரசு மானியமாகத் தர வேண்டுமென்றும் 30 சத வீதத்தை மாநிலங்களுக்கு கடனாகத் தர வேண்டுமென்றும் கோரிக்கையை வைத்திருக்கிறோம். இதிலே எந்த அளவிற்கு மத்திய அரசு முடிவு செய்யும் என்பதைப் போகப் போகத்தான் பார்க்க வேண்டும். அந்த வகையிலே இ

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 31

கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்தாலும், நாட்டின் நிலைமை, தேவை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்த மாதிரி, இன்னும் பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் காரணமாக, 88 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்க வேண்டிய இக்கட்டான கட்டத்திற்கு வந்து செலவழித்திருக்கிறோம். வறட்சி நிவாரணப் பணிகள் முடிந்துவிட்டன என்று கருதக்கூடாது. இதனுடைய தொடர்புடைய பணிகள் இருந்து கொண்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்த வகையிலே பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அரிசி நிலைமையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டார்கள். சாதாரண காலத்திலே மழை பெய்ய வேண்டிய அளவிற்கு தென்மேற்கு பருவக் காற்றின் மூலமாகப் பொழிந்தால், தமிழகத்தைப் பொறுத்த வரையில், 58 இலட்சம் டன் அரிசி நமக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் சென்ற ஆண்டு 31 இலட்சம் டன்தான் கிடைத்தது. ஆகவே மீதியை மத்திய அரசின் இருப்பிலிருந்தோ, பிற மாநிலங்களிலிருந்து வாங்குதல் மூலமோ சேகரிக்க வேண்டிய இக்கட்டான கட்டம் வந்தது. அந்த வகையிலே பெரிய இடர்பாட்டிற்கு ஆளானோம். அது மட்டுமல்லாமல், சென்ற ஆண்டு 22 மாநிலங்களில் 16 மாநிலங்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அந்த 16 மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய கட்டாயத்தில் மத்திய அரசு இருந்ததால், நம்முடைய மாநிலத் தேவை முழுவதையும் நிறைவேற்ற முடியவில்லை என்று சொல்லி அவர்கள் ஓரளவிற்கு இருப்பதைத் தந்து கொண்டிருக்கிற சூழ்நிலை வந்தது. 1982-வது

(பிற்பகல் 5-00)

ஆண்டு ஜூன் திங்களிலிருந்து இந்த ஆண்டு மார்ச் வரையிலே மத்திய இருப்பிலேயிருந்து நமக்கு எதுவுமே வராததனாலே, நம்முடைய இருப்பை, பஃபர் ஸ்டாக் என்று சொல்லப்படுவதை நாம் நிரப்பி வைத்துக்கொண்டு செலவழிப்பதற்கான வழிவகைகள் ஏற்படாமல் போயிற்று. அதற்குப் பிறகு 5 ஆயிரம் டன் தந்தார்கள். பிறகு 10 ஆயிரம் டன், பிறகு 15 ஆயிரம் டன், பிறகு 20 ஆயிரம் டன், பிறகு 25 ஆயிரம் டன், அதற்குப் பிறகு 30 ஆயிரம் டன் அரிசியும், 30 ஆயிரம் டன் கோதுமையும், 3, 4 மாதங்களுக்குக் கொடுக்க ஆரம்பித்து, இந்தத் திங்களிலிருந்து 40 ஆயிரம் டன் அரிசியும், 30 ஆயிரம் டன் கோதுமையும் தருவதாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இருப்பதை வைத்துத்தான் தரவேண்டும். 20 கிலோ கார்டுக்குத் தருவது என்ற சூழ்



1983 அக்டோபர் 31] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நிலை இருந்தாலும், கையில் இருப்பதைப் பகிர்ந்து அளிக்க வேண்டியதாக இருக்கிறது. அண்டை மாநிலங்களில் வெளிச்சந்தையிலேயிருந்து வாங்கிக் கொண்டு வந்து மக்களுக்குத் தரலாம். மத்திய அரசிலேயிருந்து கிடைக்கவில்லை என்றால், அப்படிச் செய்யலாம். கொஞ்சம் கூடுதல் செலவானாலும் கூட, நாம் வாங்கவேண்டிய அவசியத்தில் இருந்ததால், தமிழக அரசே கூட அப்படிச் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்து, மத்திய அரசிடம் அனுமதி கேட்டோம். ஆனால் முதலிலே ஒரு லட்சம் டன் ஆந்திராவிலே வாங்கிக் கொள்வதற்கும், ஹரியானா, பஞ்சாப் போன்ற மாநிலங்களிலே சில ஆயிரக்கணக்கான டன்கள் வாங்கிக் கொள்வதற்கும் அனுமதி கேட்டோம். அந்த வகையிலே, ஆந்திராவிலே 50 ஆயிரம் டன் வாங்கிக்கொள்ளலாம், ஹரியானா, பஞ்சாபிலே 20 ஆயிரம் டன் வாங்கிக்கொள்ளலாம் என்று அனுமதி அளித்தார்கள். ஹரியானா, பஞ்சாபிலேயிருந்து 20 ஆயிரம் டன்கள் வெளிச்சந்தை விலையைக் கொடுத்து வாங்கினோம். அதே மாதிரி ஆந்திராவிலேயிருந்து 50 ஆயிரம் டன் வெளிச்சந்தையிலே கொடுத்து வாங்க வேண்டியிருந்தது. நாம் ஒரு லட்சம் டன்னுக்கு அனுமதி கேட்டோம். ஆனால் அவர்கள் 50 ஆயிரம் டன்னுக்கு அனுமதி தந்தார்கள். மறுபடியும் போதாது என்று சொல்லியிருக்கிறோம். இப்போது வறட்சி நிலைமை ஏற்பட்டும், வறட்சியினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலைமைகள் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இருந்தும்கூட, நாம் எப்படியேனும் சமாளிக்கவேண்டியிருக்கிறது. என்றாலும் ஜனவரி இறுதியிலேதான் சமாளிக்கின்ற நிலைமை நமக்கு வருமே தவிர, அதற்கு முந்திய காலம் வரை சமாளிக்கின்ற நிலை வராது. ஏனென்றால், இந்த ஆண்டு குறுவை பயிரிடப்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படவில்லை.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, பல ஆண்டுகளாக பஃபர் ஸ்டாக் நமக்கு ஏற்படுத்துகின்ற நிலைமை பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அரசிடம் இவ்வளவு வரவு இருந்தும், பஃபர் ஸ்டாக் ஏற்படுத்த முடியாமல் போனதற்குரிய காரணம் என்ன என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதைத்தான் நான் முதலிலேயே கோடிட்டுக் காட்டிக்கொண்டு வந்தேன். பஃபர் ஸ்டாக் இருக்க வேண்டுமென்றால், ஒன்று மத்திய அரசினுடைய இருப்பிலிருந்து வேண்டிய அளவுக்கு, அவர்களிடம் இருக்கின்ற நிலைமைகளைப்

பார்த்துக் கொடுக்கின்றபோது, நமக்கு அந்த இருப்பு கூடுதலாக ஆகும். அடுத்து, நாம் பிற மாநிலங்களிலிருந்து வாங்குவதன் மூலம் ஓரளவுக்குக் கூடுதல் ஆகலாம். சென்ற ஆண்டு வறட்சியால் தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டது என்பது மட்டுமல்ல, இந்திய அரசில் உள்ள 22 மாநிலங்களிலே 16 மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாகத்தான் வெளிநாட்டிலிருந்து தானியங்கள் வரவேண்டியதாக இருந்தது. அரிசியைப் பொறுத்தவரையில், கோதுமையைப் பொறுத்தவரையில், அர்ஜென்டைனா, மெக்ஸிகோ, அமெரிக்கா போன்ற இடங்களிலேயிருந்து 800 கோடி ரூபாய் மதிப்பிற்கு இறக்குமதி செய்யும் சூழ்நிலையிருந்தது. அரிசி பிற இடங்களிலும் இல்லையென்று சொல்லி, மத்திய அரசினுடைய உணவு அமைச்சர் அவர்கள் தாய்லாந்து, பர்மா போன்ற இடங்களிலேயிருந்து 15 லட்சம் டன் அரிசிதான் நமக்குக் கிடைக்கக்கூடிய அளவுக்கு வந்தது என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதுதான் 'பஃபர் ஸ்டாக்' ஏற்படாமல் போனதற்குக் காரணம். நான் முதலிலேயே சொன்னபடி, 1982 ஜூனிலேயிருந்து, இந்த ஆண்டு மே மாதம் வரையிலே நமக்கு மத்திய அரசு அப்போது தருகின்ற 40 ஆயிரம் டன் அரிசி, 30 ஆயிரம் டன் அரிசி, 20 ஆயிரம் டன் அரிசிகூட கொடுக்காமல், 'சமாளியுங்கள்' என்று சொல்லிவிட்டதன் காரணமாகத்தான், இங்கே பல்வேறு தீர்மானங்கள் எல்லாம் போட வேண்டிய அவசியமும், நாம் அன்று இங்கே பேசவேண்டிய அவசியமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிலைமைகளை மத்திய அரசுக்குத் தெரிவிக்க உண்ணாவிரதம் இருக்க வேண்டிய அவசியமும் வந்து, அதற்குப் பிறகு போராட்டத்திற்குப் பிறகுதான் படிப்படியாக உயர்ந்து வந்தது என்று நாங்களும் காரணம் சொன்னோம். அப்போது ஓரளவுக்கு சேர்த்திருப்போமானால், ஓரளவுக்குக் கூடுதலாக வைத்திருக்கலாம். ஆனால், நாம் இந்த நவம்பர், டிசம்பர், ஜனவரி வரையிலும் சமாளிக்க வேண்டும். அதனைப் பற்றி போட முடியாததன் காரணமாக, எதிர்பார்க்க முடியாததன் காரணமாக, சம்பா பயிரினுடைய அறுவடையிலே தான் எதிர்பார்க்க முடியும். மத்திய அரசை இன்னும் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். 7 ஆம் தேதிகூட உணவு அமைச்சர்களுடைய மாநாடு டெல்லியிலே நடைபெற இருக்கிறது. அதிலே கலந்துகொண்டு இந்த நிலைமைகளை யெல்லாம் வற்புறுத்தியாக வேண்டும். நமக்கு சாதாரண காலத்திலேயே செப்டம்பர், அக்டோபர் மிகக் கடுமையான மாதங்கள். அதிலும் இது மிக வும் வறட்சிக் காலம். இதற்குப் பிறகும் இந்த ஆண்டு மிகக் கடுமையாகத் தான் இருக்கும். அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரியை நாம் எப்படி யும் சமாளித்துத் தீரவேண்டும். எப்படியும் ஜனவரி முதல் வாரத்திலே அறுவடையாகும் என்றாலும், இந்த ஆண்டு மழை பெய்து, நாம் தண்ணீர்





விட்டு, தஞ்சை, திருச்சி போன்ற இடங்களிலே ஏற்கெனவே கொஞ்சம் காலம் கடந்து ஆரம்பித்ததன் காரணமாக அறுவடைக் காலம் கடந்துதான் இருக்கும். ஆகவே ஜனவரி முதல் வாரத்திலே நடக்கவேண்டிய அறுவடை ஜனவரியிலே 20 தேதிக்கு மேல்தான் நடக்கும். அதுவரையிலே சமாளிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, மத்திய அரசு இருப்பிலிருந்து எங்களுக்குத் தரவேண்டும் என்று கேட்டோம். 76 ஆயிரம் டன்னிலிருந்து 80 ஆயிரம் டன் வரைக்கும் ஒரு மாதத்திற்கு தமிழகம் முழுவதும் இருக்கின்ற நியாய விலைக் கடைகளின் மூலமாக பகிர்ந்தளிக்கின்ற நிலைமைகளிலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். நமக்கு 1,40,000 டன்னிலிருந்து 1,50,000 டன் வரை, உயர்த்தினால் ஓரளவுக்குக் கூடுதலாகத் தரமுடியும் என்று குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டு வருகிறோம். அதன் மூலமாக நல்லதொரு சூழ்நிலை ஏற்படக் கூடும் என்று நான் கருதுகிறேன். அது மட்டுமல்லாமல், இங்கே வறட்சி நிவாரணம் காரணமாக அரிசி அதிகமாக வாங்குவதன் மூலம் கொள்முதல் லெவி விலை கொடுத்து வாங்கி, ரூ. 1.75 காசுக்கும், ரூ. 2-க்கும், ரூ. 2-15 காசுக்கும் நாம் கொடுக்கின்ற வகையிலே, ஒரு லட்சம் டன் அரிசியை லெவி கொள்முதல் மூலமாகப் பெற்று, நியாய விலைக் கடைகள் மூலமாகப் பகிர்ந்தளிப்பதன் மூலம், தமிழக அரசுக்கு ரூ. 9.40,00,000 நஷ்டம் வருகிறது. சப்சிடி தரவேண்டியிருக்கிறது. ஆந்திராவிலே மற்ற இடங்களிலே அரிசி வாங்கிக்கொண்டுவந்து ஒரு லட்சம் டன்னை நியாய விலைக் கடைகள் மூலமாக நாம் பகிர்ந்தளிப்பதன் காரணமாக 4 மாதங்களுக்கு முன்னால் நமக்கு ரூ. 19,4000,000 ஆயிற்று. இப்போது கிட்டத்தட்ட ரூ. 24 கோடியிலிருந்து 25 கோடி வரையில் ஆயிற்று. இந்த வகையிலே மட்டும், இந்த ஆண்டுக்கு கிட்டத்தட்ட ரூ. 90 கோடிக்கு மேல் சப்சிடி கொடுத்து எப்படியேனும் ஓரளவுக்குத் தரவேண்டும் என்ற அளவுக்கு முயற்சி செய்துகொண்டு வருகிறோம். அதன் காரணமாகத்தான், நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கின்ற விஷயத்திற்குப் பிறகு அடுத்தபடி வருகின்ற மசோதாவிலே ரூ. 50 கோடியாக இருந்த, எதிர்பாராத செலவின நிதியை ரூ. 150 கோடிக்கு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையிலே உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறேன். அதற்குக் காரணம் இந்த எதிர்பாராத செலவினம்தான் என்று சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவு கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்ற நிலைமையிலே கூட நாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய நிதியை, திட்ட வளர்ச்சியிலே எதையும் குறைக்காமல், அதிலே பாதிப்பு ஏற்படாமல், வளர்ச்சித் திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள், வெல்பேர் ஸ்கீம்ஸ் போன்றவைகளிலே எதையும் குறைக்காது, நாம் அவைகளையும் நடத்தி வருவதன் காரணமாக, கூடுதலாகச் செலவு செய்யவேண்டிய தன்மைகள் ஏற்பட்டன.

ஊராட்சி நிர்வாகப் பணிகளில் சில பல குறைபாடுகள் நடைபெறுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இவ்வளவு பரந்த இடத்திலே சில பல குறைபாடுகள் அங்கொன்றும் இங்கொன்றும் இருக்கக் கூடும். இருக்காது என்று நான் மறுக்கவில்லை. ஆனால், பொதுப்படையாகப் பார்க்கின்றபோது, ஊராட்சி நிர்வாகப்பணிகள் மிகச் சிறப்பாகத்தான் நடைபெற்றிருக்கின்றன. முடிந்த அளவுக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அண்மையிலே இரண்டாவது குழுவினர் வந்து தமிழகத்தினுடைய நிலைமையைப் பார்த்தார்கள். மேற்கொண்டு செலவிடுவதற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையிலே ஒரு மாதத்திற்குள்ளாகவே இரண்டாவது குழுவினை மத்திய அரசு அனுப்பியது. அந்தக் குழுவினர் பல இடங்களிலே சுற்றிப் பார்த்துவிட்டு வந்து, "ஊராட்சி நிர்வாகப் பணிகளை, தமிழகம் மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றியிருக்கிறது. அது திருப்தி அளிக்கின்ற வகையிலே இருக்கிறது" என்று சொன்னார்கள். மத்திய அரசின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் அவர்கள் நிலைமைகளைக் கண்டறிந்து செலவழிக்கப்பட்ட வகைகள், அதனால் ஏற்பட்ட தன்மைகள் இவைகளை ஆராய்ந்து, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு பொதுப்படையாக ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலைகளிலே ஊராட்சிப் பணிகள் மிகச்சிறப்பாகத் தான் நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கின்றன என்று அவர்கள் சொன்னார்கள். அது மட்டுமல்ல, 5, 6 நாட்களுக்கு முன்னால் வந்த இந்தியாவினுடைய மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. பிரணாப் முகர்ஜி அவர்களும் இந்த நிலைமைகளை ஆராய்ந்ததற்குப் பிறகு, அவர்களும் நிருபர்களிடத்திலே சொல்லும்போது, ஊராட்சி நிர்வாகப் பணிகளை தமிழகம் மிகச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி நான் குறிப்பிட்டுச் சொல்கின்ற காரணத்தினாலேயே மாண்புமிகு உறுப்பினர்கள் சில பல இடங்களிலே சுட்டிக்காட்டிய குறைபாடுகள் அறவே இல்லை என்று நான் சொல்லவரவில்லை. சில பல இடங்களிலே குறைகள் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சி மன்றத்திலே, ஊராட்சி மன்றத்திலே மற்ற இடங்களிலே பொறுப்பு வாய்ந்தவர்கள் எல்லாம் இல்லாத சூழ்நிலை இருந்துகொண்டிருக்கின்றது என்றும், கண்காணிப்பு இன்னும் அதிகமாக இருந்திருக்க வேண்டும் என்றும் எடுத்துக் கூறினார்கள். எந்தெந்தக் காரணத்தினால் நகராட்சித் தேர்தல்கள் தள்ளிப்போடப்பட்டு வந்தன என்பதை அவ்வப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கி வந்திருக்கின்றார்கள். நாம் செலவழிக்கின்ற பணம் உண்மையாகவே அவர்களைப் போய் சேரவேண்டுமென்ற நம்பிக்கையினுடைய அடிப்படையிலேதான் இருக்கிறோம். எங்கே சரியாகச் செலவழிக்கப்படவில்லை, முறைப்படி செல



வழிக்கவில்லை, எங்கே குறைகள் நடைபெறுகின்றன, குற்றங்கள் நடைபெறுகின்றன என்றால், அவைகளைக் கண்காணிப்பதற்கு தகுந்த மேல் அதிகாரிகள் வைத்திருக்கிறோம், கண்காணிப்பாளர்கள் எல்லாம் வைத்திருக்கிறோம். இருந்தாலும்கூட, குறைகளைச் சுட்டிக்காட்டுவதன் மூலமாக ஓரளவுக்குத் திருத்துவதற்கு வழிவகை ஏற்படுகிறது. சட்டமன்ற மேலவையிலேயும், பேரவையிலேயும் இருக்கின்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதி, அந்தந்தத் தொகுதியினுடைய கண்களாகவும், காதுகளாகவும்தான் விளங்குகிறார்கள். அவர்கள் கண்டதையும் கேட்டதையும் பொறுத்து இங்கே பேசுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படிப் பேசுவதன் மூலமாக ஏற்படுகின்ற நன்மைகள் பல இருக்கின்றன. இன்னின்ன இடங்களிலே குற்றங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து திட்டவட்டமாகச் சொல்கின்றபோது, அதற்குப் பலன் ஏற்படும் என்பதனால்தான் நானும் சொல்கிறேன். பொதுப்படையாக எடுத்துச் சொல்வதை வைத்துக்கொண்டு நாங்களும் விசாரிக்க முடியாது. அதிகாரிகளும் அதன் மீது நடவடிக்கை எடுக்கமாட்டார்கள். திட்டவட்டமாக தெளிவாகச் சொல்கின்றபோது, என்ன நடந்தது என்று அந்தந்தத் துறையினரைக் கேட்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதற்கு விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாங்கள் எங்களுடைய கோப்புகளை அனுப்பவும் முடிகிறது. அதிலே அவர்கள் தருகின்ற விளக்கங்கள் எங்களுக்குத் திருப்தி அளிக்கிறதா என்று பார்க்கவும் முடிகிறது. அதைப்பற்றி விளக்கங்கள் தருகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அவையெல்லாம்

(பிற்பகல் 5-10)

எடுத்துச் சொல்கின்றபோது நல்லதொரு நன்மைகள் ஏற்படவும், குற்றம் குறைகள் ஏற்படாமல் இருக்கவும் பயன்படுகிறது. சட்டமன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள் என்ற நிலைமை ஏற்படுகிறபோது, அதை ஏற்று நடத்தும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும், அலுவலர்களும் எச்சரிக்கையோடு, கவனத்தோடு நடந்து வார்கள். எனவே பலன் ஏற்படுகிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்த வகையில் நாம் அங்கும், இங்கும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, அந்தந்த அமைச்சர்களுக்குக் குறிப்பிட்டுக் காட்டும்போது, நல்லதொரு சூழ்நிலை ஏற்படும்.

கிருஷ்ணா ஆற்று குடிநீர் திட்டம் வரும் நிலைமை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நீண்ட பெருங்காலமாக இருந்து வரும் பிரச்சினை இது. அதனுடைய வரலாற்றுக்குள் போகவில்லை. அது பற்றிய அறிக்கை—கிருஷ்ணா ஆற்று நீர் தன்மைகள், அதன்மீது ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்கள், அதில் ஏற்பட்டிருக்கிற நிலைமைகள் எல்லாம்பற்றி அறிக்கையாகக் கொண்டு வந்து, அந்த அவை முன்னால் ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே தெளிவுபட எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. முதல்வருடைய அறிக்கையாக அங்கே படித்து இங்கேயும் படிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய டீடெயில்ஸ்—அளவு, சன்னல், கதவு—எல்லாம் வராது. திட்டத்திற்கு இவ்வளவு செலவழிக்கிறோம் என்றுதான் வரும். கோடிட்டுக் காட்டுகிற அளவுக்குத்தான் சட்டமன்றத்தில் வரும். அதனுடைய டீடெயில்ஸ் கணக்குக் குழுவிலும், மதிப்பீட்டுக் குழுவிலும் பணியாற்றும்போது கிடைக்கும். அப்போது அதனுடைய முழு விவரங்களையும் அறிய முடியும். கணக்குக் குழுவில் முழு விவரங்களும் வைக்கப்படும். அதிலே ஏதாவது ஐயப்பாடு ஏற்படுமானால், அதிகாரிகளும், மற்றவர்களும் தக்க விளக்கங்கள் அளிப்பார்கள். மதிப்பீட்டுக் குழு நேரடியாகச் சென்று பார்த்து எல்லா நுணுக்கங்களையும் அறிய வாய்ப்பு இருக்கிறது. சட்ட மன்றங்களில் மேலெழுந்தவாரியாகத்தான் அறிக்கை வரும். இதற்கான 720 கோடி ரூபாய் திட்டத்திலே 520 கோடி ரூபாயை ஆந்திர அரசு மேற்கொள்ள, 200 கோடி ரூபாயில் ஆந்திர எல்லை வரை கால்வாயைக் கொண்டுபோய் விட நாம் பொறுப்பு ஏற்று, எந்த அளவுக்கு அவர்கள் தண்ணீர் கொள்கிறார்களோ, நாம் எந்த அளவுக்குக் கொள்கிறோமோ அந்த விகிதாச்சார அடிப்படையில் ஒதுக்கிடு செய்ய வேண்டுமென்று முடிவெடுத்து, 200 கோடி ரூபாயை 30, 30 கோடி ரூபாயாக 6 மாதங்களுக்கு ஒரு முறை தர வேண்டுமென்ற அடிப்படையிலே ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆந்திர மாநிலமும், தமிழக மாநிலமும் சேர்ந்து, ஒரு உடன்படிக்கைக்கு வந்தது மகிழ்ச்சிக்குரிய ஒன்று என்று நம்முடைய இன்றைய பிரதமர் மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அதனுடைய துவக்க விழாவில் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். 1976 சனவரி 14 ஆம் தேதி சென்னை கடற்கரையில் வந்து பேசும்போது, அந்த அம்மையார் அவர்கள், 500 கோடி கன அடித் தண்ணீரை மராட்டிய மாநிலமும், 500 கோடி கன அடித் தண்ணீரை கர்நாடக மாநிலமும், 500 கோடி கன அடித் தண்ணீரை ஆந்திர மாநிலமும் சென்னை மாநகரின் குடிநீருக்கு வழங்கும் முயற்சியை இந்திய அரசு மேற்கொண்டு செய்யும் என்று வாக்குறுதி தந்தார்கள். அந்த அடிப்படையிலேதான் இப்போது தகராறுக்கு இடமில்



லாமல் 1,500 கோடி கன அடித் தண்ணீர் தரும் அளவுக்கு ஒப்பந்தம் வந்தது. அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை அவர்களும் பாராட்டினார்கள். அந்த அளவிலேதான் 30 கோடி ரூபாய் தந்தோம். அது வீணாகவில்லை. எந்த அளவிலே பணிகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இந்தப் பணிகளை ஏதேனும் ஒரு அரசு நடத்த வேண்டுமென்று சொல்லும்போது, அதை ஆந்திர அரசு செய்ய வேண்டுமென்று ஒப்பந்தமாகி, அதைக் கண்காணிக்க, அதோடு கூட இருந்து செயல்படுவதற்கான முறைகள் எல்லாம் அதிலே வகுக்கப்பட்டிருக்கின்றன. 30 கோடி ரூபாய்க்கான செலவுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அது வீணாகவில்லை. தொடர்ந்து அந்தப் பணிகள் நடைபெறும்போது, அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலைகளை இங்கே எடுத்துச் சொல்லலாம்.

மொழிப் போராட்டம்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது, மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஓய்வூதியம் தர வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும், அது ஏற்படாமல் இருக்கிறதென்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்த அவையில் ஒரு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறோம். அந்த சட்டத்திலே,

(Section 3 of Act 23 of 1981 Tamil Nadu Payment of Pension to Tamil Scholars and Miscellaneous Provisions Act, 1983.)

"Sanction of pension, grant or scholarship—The Government may sanction a pension of Rs. 150 per mensem or a grant not exceeding Rs. 10,000 or both

(a) to every person who has exhibited conspicuous courage and nobility in his enthusiasm for the Tamil language or in his zeal to perserve the growth of Tamil language or to preserve the Tamil culture

(b) to the dependant of every martyr . . ."

என்று இந்த அவையிலே நாம் சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறோம். உச்ச நீதி மன்றத்திற்குச் சென்று, அது அடிபட்டதற்குக் காரணம், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்கள் அல்லது அதிலே இறந்தவர்கள் என்று குறிப்பிட்டதன் காரணமாக, இந்தி இந்தியாவின் தேசிய மொழி. அதை எதிர்த்துப் போராடுவதா, அதற்கு ஓய்வூதியம் தருவதா என்று நமது தமிழ் நாட்டிலே இருந்து ஒருவர் வழக்கு தொடுத்து, அது உச்ச நீதி மன்றத்திற்குப் போய், தேசிய மொழியை எதிர்ப்பவர்களை போராட்ட வீரர்கள் அல்லது தியாகிகள் என்று கருதக்கூடாது என்று தீர்ப்பளித்து, அதை அடித்து

விட்டது. ஆகவே இதிலே இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்கள் என்று போடாமல் தமிழ் மொழியைக் காப்பவர்கள் என்று சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். இனி நோட்டிபிகேஷன் வருமென்று நான் கருதுகிறேன். அதற்கான விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்படும். அதற்கு என்ன தகுதி, என்ன திறமை என்று விதிமுறைகள் வகுக்கப்பட்ட பிறகு, அந்தத் தகுதி உடையவர்கள் விண்ணப்பித்து, இந்த ஓய்வூதியம் அல்லது மொத்தத் தொகை அல்லது ஸ்கார்லர்சிப் பெற வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, மொழிப் போராட்டத்திலே ஏற்கெனவே பட்டயம் பெற்று, அதற்குரிய தொகையையும் பெற்றுக் கொண்டிருக்கிறவர்கள்கூட மீண்டும் அதற்குரிய விண்ணப்பம் செய்யும் சூழ்நிலை இருக்கிறதா? ஏற்கெனவே தந்தவர்களை, மீண்டும் இப்போது கொடுக்கும் போது, அப்படியே ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஏற்கெனவே கொடுத்தவர்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று கூறித்தான் உச்சநீதி மன்றம் அடித்து விட்டது. ஏற்கெனவே இருக்கிற நிலைமைகள் இல்லை. நாம் இப்போது வகுக்கும் தகுதிகள், தன்மைகள், அதற்காக வைத்திருக்கிற தன்மைகள் எல்லாம் ஏற்கெனவே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு அதற்காக உயிர் இழந்த அல்லது வேறு பல தியாகங்களைச் செய்தவர்களையும் உள்ளடக்கிய முறையில் இருக்கும். அவர்கள் அத்தனை பேரையும் அப்படியே காரணம் காட்டி எடுத்துக்கொள்ள முடியாது. அவர்களை எல்லாம் உள்ளடக்கிய முறையில், அவர்கள் எல்லாம் வருகின்ற முறையில் இதில் விதி முறைகள் இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. நல்லசிவன் அவர்களும், திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் அவர்களும் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். நாளை நடைபெறும் முதலமைச்சர்களுடைய மாநாட்டிலே விற்பனை வரி பற்றி அரசு என்ன முடிவு எடுக்க இருக்கிறதோ அதை இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவேகூட 3 பொருள்களை மத்தியக் அரசு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கொடுத்து ஆயத் தீர்வையின் கீழே கொண்டுவர வேண்டுமென்று சொல்லி, கொண்டு வந்தபோது அதைத் தமிழக அரசு கடுமையாக எதிர்த்திருக்கிறது. ஆனால் நாளை நடைபெறும்



கூட்டத்திலே மத்திய நிதி அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, முக்கியமாக ஆலோசிக்க இருப்பது, வனஸ்பதி, மருந்துகள், சிமெண்ட், பெட்ரோலியம் பொருள்கள், காகிதம், காகித அட்டைகள் ஆகிய இந்தப் பொருள்களுக்கு இருக்கும் விற்பனை வரியை மாற்றி மத்திய அரசின் கூடுதல் வரியாக மாற்ற வேண்டுமென்பதுதான். அதைப் பொறுத்த வரையில், மாநில அரசுகளின் விற்பனை வரியிலிருந்து எக்காரணம் கொண்டும் இவற்றை எடுக்கக்கூடாது என்று வற்புறுத்தும் நிலைமையை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. இதைக் கொடுப்பதன் மூலம் இன்னமும் பொருளாதார நெருக்கடிக்கு மாநில அரசுகள் ஆளாகும். ஏற்கெனவே கொடுத்த 3 பொருள்களுக்கான கணக்கு பார்த்தால், ஒவ்வொரு மாநிலமும் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டத்திற்கு ஆளாகி இருக்கின்றது. அதுமட்டுமல்ல. இதைக் கேட்பதோடு, ஏற்கெனவே எடுத்துக்கொண்டதையும் திருப்பித் தர வேண்டுமென்று வற்புறுத்தும் நிலைமையிலே நாம் இருக்கிறோம். எல்லா மாநிலங்களும் கூட இதிலே ஒத்துத்தான் வருகின்றன. மாநிலங்களை நிர்வகிக்கும் யாருக்கும் இந்தக் கஷ்டங்கள் தெரியும். ஏனெனில் மாநிலத்திற்கு இருக்கும் வருவாய்களில் ஓரளவுக்கு நம்பிக்கையூட்டத் தக்க அளவுக்கு மாநில அரசின் பணிகளை நிறைவேற்றத் துணையாக இருப்பது விற்பனை வரிதான். இதைத்தான் முன்னால் இருந்த நிதி அமைச்சர் அவர்கள் 'காமதேனு' என்று சொன்னார்கள், "கற்பக விருட்சம்' என்று சொன்னார்கள். எதாவது கேட்க வேண்டுமென்றால், இந்த வரியின் மூலமாகத்தான் நாம் கேட்க வேண்டுமே தவிர, வேறு எதன் மூலமும் கேட்க முடியாது. நில வரி மூலமாக அதிகமாக எதிர்பார்க்க முடியாது. கோர்ட் ஸ்டாம்ப் போன்றவைகள்தான் மாநிலத்திற்கு இருக்கும் இதர வருமானங்கள். டிரான்ஸ்போர்ட்டுக்குப் போடும் வரிகள்தான் நமக்கு ஓரளவுக்கு வருமானமாக அமைகிறது. என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ், மற்றவைகள் எல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்குப் போய்விடுவனவாக அமைகின்றன. ஓரளவுக்கு நம்முடைய நிதி ஆதாரங்களைப் பெருக்கவும், நிதி ஆதாரங்களை செறிப்படுத்தவும் காரணமாக இருப்பது விற்பனை வரிதான். மத்திய அரசு கொடுக்கும் மானியம், இன்கம் டாக்ஸ் பங்கு, மற்றவைகள் எல்லாம் வரும். அந்த வகையிலே, இதை எக்காரணம் கொண்டும் விடக்கூடாது என்று இருக்கிறோம். கேரள மாநிலத்தில் காங்கிரஸ் ஆட்சி இருந்தாலும், அவர்களும் இப்படி மாற்றுவதை ஒப்புக் கொள்ளவில்லை என்றுதான் அவர்கள் தெரிவித்ததாக பத்திரிகைகளில் பார்த்தேன். 6, 7 மாநிலங்களில் காங்கிரஸ் மாநிலங்கள் உட்பட இந்தக் கருத்து இருக்கிறது. இதைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சி, மற்ற கட்சி என்று இல்லை. இது ஒரு 'பாலிசி'. விற்பனை வரி இங்கே இருக்க வேண்டுமோ, ஆயத் தீர்வையாக மாற்ற வேண்டுமோ என்று எந்தக்

கட்சியின் 'பாலிசிஸ் & பிரின்சிபிள்ஸ்' ஆர் மாறவில்லை. நடைமுறையில் இருக்கும் தன்மைகள் இவை. இதிலே கட்சி வேறுபாடு கிடையாது. மாநிலத்தை நிர்வகிப்பதில் உள்ள கஷ்டங்களை எல்லோரும் உணர்வார்கள்.

(பிற்பகல் 5-20)

சென்ற ஆண்டுகூட 2 நாட்கள் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் மாநாட்டில் பேசி விட்டுவிட்டார்கள். எல்லா முதலமைச்சர்களும் அப்படி எடுக்கக்கூடாது என்றுதான் சொன்னார்கள். ஆனால் இரண்டாம் நாள் 'விப்' தரப்பட்டது. நாங்கள் அதாவது காங்கிரஸ் அல்லாத 4 பேர்தான் அதை எதிர்த்தோம்.

**திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மெஜாரிட்டி பார்த்து முடிவு செய்வது என்பது ஆபத்தான முடிவு. இதுபற்றி பத்திரிகையில் கூட வந்திருக்கிறது. அப்படியானால் இப்போதும் கூட அவர்கள் 'விப்' முறையைப் பின்பற்றினால் நமக்குக் கஷ்டமாகிவிடும் அல்லவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மெஜாரிட்டி, மைனாரிட்டி இதில் பார்க்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் கொள்கைகள் மாறுபட்டுப் போய்விடும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, இதில் மெஜாரிட்டி மைனாரிட்டி பார்க்கக் கூடாது என்று வற்புறுத்துவோம். அப்படி அவர்கள் பார்த்தார்கள் என்றால், நமக்குக் கஷ்டம்தான் வரும். அப்போது நாம் வேறு வகையிலே பெரு முயற்சிகளைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டியது இருக்கும். இருந்தாலும் மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி சென்னைக்கு வந்திருந்தபோது, என்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் பார்க்க வேண்டும். 'மாநில அரசுகளைக் கலந்துதான் முடிவு செய்வதாக இருக்கிறோம்' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரிபாதியின் பரிந்துரையும் அப்படித்தான் இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில், இதை விட்டுக்கொடுக்கக் கூடாது. காரணம் இப்போது மாநிலத்தைப் பொறுத்தவரையில், செலவினங்கள் அதிகமாக இருக்கின்றன. ஏற்கெனவே அதிகமாக நிதி வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக்கொண்டிருக்கும் நேரத்தில் இந்த நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில்தான் இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

ஓய்வூதியம் பெறுகிறவர்களைப்பற்றி, அதிகாரிகளைப்பற்றியெல்லாம் இங்கே பலரும் எடுத்துப் பேசினார்கள். ஆண்டுக்காண்டு இவர்களுக்கெல்லாம் வசதிகளைச் செய்துகொண்டுதான் வருகிறோம். பல்வேறு நிலைகளில் இருப்பவர்கள் பல்வேறு தன்மைகளில் கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். நிதித் துறை அவைகளையெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. எந்த





அளவுக்குச் செய்ய முடியும் என்பதை நிதி ஆதாரத்திற்கு தகுந்தபடி அரசு ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கும். அதேபோல ஓய்வு பெறுகிறவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கக்கூடிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று பலரும் வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். அதற்காக நாங்கள் ஒரு குழுவை அமைத்திருப்பதும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தக் குழு இரண்டு முறை கூடி, அண்மையிலே கூட சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் சிலபல அரசாங்க ஊழியர்களின் சங்கத் தலைவர்களை கூப்பிட்டு அவர்களுடைய கருத்துக்களை இதுசம்பந்தமாக அறிவிக்கக் கேட்டிருக்கிறேன். விரைவில் அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதில் இரண்டு மூன்று முறைகள் இருக்கின்றன. தேவைப்பட்டால் ஊழியர்களின் சங்கத் தலைவர்களைக் கேட்டறிந்து, திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வந்து, விரைவிலே ஒரு அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அரசு இதைக் கொள்கையளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிறது. என்றாலும் எந்த அளவுக்கு இதனை நடைமுறைப்படுத்துவது, எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதற்கு விளக்கம் தேவைப்படுகிறது. அண்மையில், 15 நாட்களுக்கு முன்பு கூட குழுவைக் கூட்டி ஆராய்ந்திருக்கிறேன். பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வந்தால்தான், இத்திட்டம் நிலையானதாக, நீடித்திருக்கும். அந்த வகையில் செய்ய வேண்டும் என்கிற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிற காரணத்தால் தான், அரசு பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து வருகிறது.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** அனைத்து சங்கங்களையும் அழைத்துப் பேசுகின்றபோது, சிலபல சங்கங்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளாக மேலவை உறுப்பினர்களாக இருக்கின்ற எங்களையும் இனிமேல் பேச்சுவார்த்தை நடக்கும்போது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அழைப்பதற்கு ஏற்பாடு செய்தால், நலமாக இருக்கும். அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை கவனத்திலே வைத்துக் கொள்ளப்படும். அதுபற்றி ஆராயப்படும்.

[1983 அக்டோபர் 31

**திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் :** ஓய்வு பெறும்போது 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்குவது குறித்த கோரிக்கை பல ஆண்டுகளாகத் தேக்க நிலையில் இருக்கிறது. அரசு ஊழியர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிடித்து, பிறகு அவர்களிடமே ஓய்வுபெறும்போது வட்டியுடன் சேர்த்து மொத்த ரூபாயிலே ஒரு குறிப்பிட்ட தொகையாக அளிக்கும் திட்டமாகும். இந்த ஒரு முடிவை அறிவிக்க அரசு தயக்கம் காட்டிக்கொண்டிருக்கிறது. இதனால் சில சங்கங்கள் அரசு இத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதாகப் பத்திரிகைகளில் அறிவித்து குழப்பத்தை உண்டாக்குகின்ற நிலை கூட இருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இதுகுறித்து இந்த டிசம்பர் மாதத்திற்குள்ளேயாவது அறிவிப்பு செய்வார்களா? அப்படி அறிவித்தால், மார்ச் மாதம் நிதியாண்டின் இறுதிக்குள்ளாக ஓய்வுபெறும் அனைவருக்கும் பலன் கிடைக்கும். அந்த வகையில் இதுகுறித்து விரைவில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரைவில் திட்டவட்டமான அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1978 ஆம் ஆண்டிலேயே இந்தத் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாக நிதியமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டது. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும், ஒரு குறிப்பிட்ட தொகையை மாதந்தோறும் செலுத்திக் கொண்டு வருவது என்றும், அப்படிச் செலுத்திக் கொண்டு வருகின்ற தொகைக்கு ஆண்டுக்காண்டு வட்டி போட்டுக் கொடுத்து, அந்த வட்டியையும் கட்டிய தொகையுடன் சேர்த்து ஓய்வுபெறும்போது திருப்பித் தருவது என்கிற திட்டம் அரசால் கொண்டு வரப்பட்டபோது, அதை ஊழியர்களுடைய சங்கங்களும் மற்றவர்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. "அப்படி நாங்கள் அரசுக்கு மாதந்தோறும் செலுத்திய தொகைக்கு வட்டியைக் கொடுத்து எங்களிடமே அரசு திருப்பித் தருவதை விட நாங்கள் வங்கிகளில் போட்டு நாங்களே எடுத்துக்கொள்ளலாமே, நீங்கள் என்ன செய்வது?" என்று சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்தத் தொகைக்கு ஆண்டுக்காண்டு வட்டி போட்டு, கட்டிய தொகையுடன் சேர்த்து, ஓய்வுபெறும்போது தருவது என்கின்ற தன்மை வரும்போது அங்கே பிரச்சினையே இல்லை. ஆனால் அப்படிக் கொடுக்கும்போது அரசின் காண்ட்ரிபியூஷன் இருக்க வேண்டுமென்கின்ற நிலை வருகின்றபோது தான், அந்த காண்ட்ரிபியூஷனை





எந்த அளவில் வைப்பது என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்வதுபோன்று மாதந்தோறும் பிடிக்கின்ற தொகைக்கான வட்டியை ஆண்டுக்காண்டு கொடுத்து, ஓய்வு பெறும்போது இரண்டு தொகையையும் சேர்த்துக் கொடுக்கின்ற திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதாக இருந்தால், நாளைக்கே கூட நடைமுறைக்குக் கொண்டுவந்து விடலாம். 1978 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டம் அத்தகைய திட்டம் தான். ஆனால் இப்போது இருக்கின்ற பிரச்சினை வேறு. அரசின் காண்ட்ரிபியூஷன் என்ன, எப்படிக் கொடுப்பது என்பதுபற்றித் தான் இப்போது பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகள் உட்கார்ந்து இதுகுறித்துப் பேசி முடிவுக்கு வரும்போது, சங்கங்களின் தலைவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைக் கேட்டறிவதற்காக அவர்களையும் அழைத்துப் பேசலாம். அப்போது இந்த அவையிலே இருக்கின்ற ஆசிரியர் சங்கங்களைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களையும் அழைத்துப் பேசுவதில் தவறில்லை. எப்படித்தான் அங்கே பேசி முடிவு செய்யப்பட்டாலும், இங்கேயும் பேசித்தான் ஆக வேண்டும். (சிரிப்பு) ஆகவே அதில் தன்மைகள் ஒன்றும் ஏற்பட்டுவிடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. முத்துசாமி பேசப் போகிறார்களா?

**திரு. செ. முத்துசாமி :** சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின்போது "நான் எல்லாவற்றையும் பரிசீலித்து வைத்திருக்கிறேன். முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றிப் பேச எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், வாய்ப்புக் கிடைத்தால் முதலமைச்சரிடத்தில் பேசி அறிவிக்கிறேன்" என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசப்பட்டதா? அதுகுறித்து இப்போதைய நிலைமை என்ன என்பதை அறிந்துகொள்ள ஆவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒருநாள் பேசினால், காரியம் முடிந்துவிடும் என்பதைப்போல, அன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் இந்த அவைக்கு. அது எவ்வளவு விரைவில் முடிவு செய்யப்படும் என்று கருத்து சொல்ல முடியுமா? அறிவித்து 6 மாதத்திற்கு மேல் ஆகிறது. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விரைவில் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** கேட்பதை, மாண்புமிகு அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு வைத்துக்கொள்ளலாம். இடையிலே பேச வருவது இத்துடன் போதும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே கலந்து பேசுவதிலே சிலபல தன்மைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் "விரைவில் முடிவு எடுக்கப்படுமா ?" என்று கேட்டார். நானும் அதே வார்த்தையைத் தான் அவருக்குச் சொல்கிறேன். இதுகுறித்து விரைவிலே முடிவெடுப்பதாக இருக்கிறேன்.

ஆசிரியர்களுடைய நிலைமைகள், தன்மைகள், அதிகாரிகள், மற்றவர்கள் தன்மைகள் பற்றி எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி குறிப்பிட்டார். மாண்புமிகு கல்வி அமைச்சர் இப்போது அவையில் இருந்திருப்பாரேயானால், நான் அவரை அதற்கான பதிலை 10 நிமிடம் சொல்ல விட்டுவிட்டு, தொடர்ந்து நான் பதில் சொல்லியிருப்பேன். நான் இப்போது அதற்கு விளக்கம் சொல்ல வேண்டிய நிலை, சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பிரச்சினைகள் குறித்து அந்தத் துறையினர் ஆராய்வார்கள். தவிரவும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் வினா எழுப்பியும், விடை பெற்றும், அந்த வகையில் சிக்கல்களைப் போக்குவதற்கான, குறைபாடுகளை போக்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்கான முயற்சிகளை அந்தத் துறையும் செய்யும்.

இங்கே ஆழ் துளைக் கிணறுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் குறிப்பிட்டார். அவசர அவசரமாக ஆழ் துளைக் கிணறுகளைப் போடும்போது சிலபல இடங்களில் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை இருந்தது உண்மை தான். ஆனால் சில மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் இதுபற்றிப் பேசும்போது, எவ்வளவு ஆழ் துளைக் கிணறுகளில் தண்ணீர் வந்தது, எவ்வளவு ஆழ் துளைக் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை போன்ற விவரங்கள் கிடைத்தன. உதாரணத்திற்குச் சொல்கிறேன். கோவை போன்ற மாவட்டங்களைப் பொறுத்தவரையில், 6 சதவிகிதம், 5 சதவிகிதம், 7 சதவிகிதம் என்கிற அளவுக்குத்தான் ஆழ் துளைக் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்று தெரிந்து கொண்டேன். மற்ற மாவட்டங்களிலும் இதுதான் நிலைமை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி, ஆழ் துளைக் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்கின்ற நிலைமை இல்லை. அப்படி ஏற்பட்டால்





கூட, அதையும் சரி செய்து பயன்படுத்த வேண்டுமென்றுதான் கூறியிருக்கிறோம். வறட்சி வரும்போதெல்லாம் கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து ஆழ் துளைக் கிணறுகளை போடுகிறோம். இந்த ஆண்டு கூட வறட்சி கடுமையாக இருந்ததால் 21,538 ஆழ் துளைக் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன: எப்போதும் 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம் ஆனவுடன் ஒரு முறை வறட்சி வருவது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், வழக்கமாக இருக்கிறது. வறட்சி வந்தவுடன் தண்ணீர் தட்டுப்பாடு வந்து விடுகிறது. ஒரு தடவை வறட்சி வந்து தட்டுப்பாடு ஏற்பட்டு, மறுபடியும் மழை வந்தவுடன் இத்துடன் வறட்சி போய்விட்டது என்று நாம் எண்ணிக்கொள்ளத் தேவையில்லை. மறுபடியும் இரண்டு மூன்று வருடங்களுக்குள் வறட்சி வரும். ஆகவே இப்போது பயன்படுத்திய சாதனங்களை வீணாக்காமல், ஆழ் துளைக் கிணறுகளை வீணாக்காமல் நல்லமுறையில் வைத்திருக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கேட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்த 21,538 துளைக் கிணறுகளையும் செம்மையாக, சீராக வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 5-30)

மின்சாரத் தட்டுப்பாடுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். எல்லா இடங்களிலும் தட்டுப்பாடு இல்லை. சில பல இடங்களில் தட்டுப்பாடு இருக்கிறது. விளக்குகள் எரியவில்லை என்னும் நிலைமை தமிழகம் முழுவதும் இல்லை. குறிப்பிட்ட இடங்களில் இருக்கின்றன என்பதுதான் உண்மை. அவைகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதற்குக் காரணம், டிரான்ஸ்பார்மர்கள் 25, 30 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டவைதான் இன்றையதினம் இருக்கின்றன. அவற்றில் சில ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே மாற்றப்பட்டிருக்கின்றன. அவைகளால் தொந்தரவு வர வாய்ப்பில்லை. பழைய டிரான்ஸ்பார்மர்களைப் புதுப்பிக்க வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டியிருக்கின்றன. இதற்கு மின்சாரத் துறை ஏராளமான நிதியை எதிர்பார்க்கிறது. நாங்களும் கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்ரமணியம் அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசு 23 கோடி ரூபாயை அகதிகள் நல்வாழ்வுக்குக் கொடுத்ததாகவும், அதில் 25 லட்சம் ரூபாய்தான் செலவழிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். 23 கோடி ரூபாய் கொடுத்து இருந்தால் அத்தனை தொகையை

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 அக்டோபர் 31

யுமே செலவழிக்கவேண்டிய கட்டாயத்தில்தான் இருக்கிறோம். வேண்டுமா னால் அவர்கள் ஒதுக்கியுள்ள தொகை பற்ற முழு விவரங்களையும் பின்னால் தெளிவு பெறுகிற வகையில் சொல்ல முடியும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு டில்லிக்கு விமானத்தில் செல்ல இருப்பதாக அறிகிறேன். விமானம் எத்தனை மணிக்கு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினருக்கு அதில் என்ன அவ்வளவு கவலை?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தமிழ் நாட்டின் நலனுக்காகத்தான் கேட்கிறேன்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** விமானம் 6½ மணிக்கு மேல் இருக்கிறது. அதனால்தான் நானும் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பேசுகிறேன். ஆக, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னவைகளை யெல்லாம் அந்தந்தத் துறையினர் மூலம் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப் படும், இந்தக் கருத்துக்களுக்கு உரிய மதிப்பளிக்கப்படும் என்று சொல்லி, 'இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கோரிய தொகையை ஒதுக்கித் தர வேண்டுமென்று இந்த அவையை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

## 7. 1975-76, 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கைகள் மீது விவாதம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 1975-76, 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான கூடுதல் செலவிற்கான விவர அறிக்கைகள் மீது விவாதம் அளிக்கும் வழக்கம் இல்லை.

## 8. அரசின் சட்டமுன்வடிவு

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய் விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

---

@ 446-467 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள் ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1983) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளை 1—11—1983 காலை 9-30 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 5-34)

## 9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

185. Notification in G.O. Ms. No. 2133, Education, Science and Technology Department, dated 29th September 1982 regarding the nomination of Members to the Syndicate of the Tamil University by the Pro-Chancellor, Thanjavur [Laid on the Table of the House under section 49(2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982)]

186. Notification issued in G.O. Ms. No. 2567, Education, Science and Technology Department, dated 22nd November 1982 regarding an amendment to the Schedule of Tamil University Act, 1982. [Laid on the Table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act 9 of 1982).]

187. Notification issued in G.O. Ms. No. 2607, Education, Science and Technology Department, dated 15th December 1982 regarding the nomination of Members of the Senate of the Tamil University, Thanjavur by the Pro-Chancellor. [Laid on the Table of the House under section 49(2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982).]

188. Notification issued in G.O. Ms. No. 2734, Education, Science and Technology Department, dated 22nd December 1982 regarding the nomination of Members to the Syndicate of the Tamil University by the Pro-Chancellor, Thanjavur. [Laid on the Table of the House under section 49(2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982).]

189. Notification issued in G.O. Ms. No. 2753, Education, Science and Technology Department, dated 28th December 1982 regarding the nomination of Members to the Senate of the Tamil University by the Pro-Chancellor, Thanjavur. [Laid on the Table of the House under section 49 (2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982).]

190. Notification issued in G.O. Ms. No. 200, Education Science and Technology Department, dated 29th November 1983 regarding constitution of the Syndicate to the Tamil University, Thanjavur. [Laid on the Table of the House under section 49(2) of the Tamil University Act, 1982. (Tamil Nadu Act 9 of 1982).]



191. Notification issued in G.O. Ms. No. 1454, Education, Science and Technology Department, dated 29th July 1983 regarding appointment of Finance Officer to the Tamil University, Thanjavur. [Laid on the Table of the House under section 49(2) of the Tamil University Act, 1982 (Tamil Nadu Act 9 of 1982).]

192. Notification issued in G.O. Ms. No. 31, Education, Science and Technology Department, dated 5th January 1983 regarding extension of time for the Constitution of Senate and Syndicate for the Bharathidasan University. [Laid on the Table of the House under Section 65(2) of the Bharathidasan University Act, 1981. [Tamil Nadu Act 2 of 1982).]

193. Notification issued in G.O. Ms. No. 871, Education, Science and Technology Department, dated 10th May 1983 in regard to the dated from which certain sections of the Bharathidasan University Act shall come into force. [Laid on the table of the House under section 65(2) of the Bharathidasan University Act, 1981. [Tamil Nadu Act 2 of 1982).]

194. Notification issued in G.O. Ms. No. 1241, Education, Science and Technology Department, dated 2nd July 1983 regarding the date from which the Senate, the Syndicate and the Standing Committee on Academic Affairs and such other authorities of the Bharathidasan University, Tiruchirappalli shall commence to exercise their functions. [Laid on the Table of the House under section 65(2) of the Bharathidasan University Act, 1981 (Tamil Nadu Act 2 of 1982).]

195. Notification issued in G.O. Ms. No. 2617, Education, Science and Technology Department, dated 29th November 1982 regarding appointment of Members of the planning Board of the Bharathiyar University, Coimbatore. [Laid on the Table of the House, under section 65(2) of the Bharathiar University Act, 1981. (Tamil Nadu Act 1 of 1982).]

196. Notification issued in G.O. Ms. No. 30, Education, Science and Technology Department, dated 5th January 1983 in regard to the extension of date for constituting the authority of the Bharathiyar University. [Laid on the Table of the House under section 65(2) of the Bharathiyar University Act, 1981 (Tamil Nadu Act 1 of 1982).]

[1983 அக்டோபர் 31

197. Notification issued in G.O. Ms. No. 870, Education Science and Technology Department, dated 10th May 1983 regarding the date from which certain sections of the Bharathiar University Act, 1981 shall come into force. [Laid on the Table of the House under section 65(2) of the Bharathiar University Act, 1981. (Tamil Nadu Act 1 of 1982).]

198. Notification issued in G.O. Ms. No. 1242, Education Science and Technology Department, dated 2nd July 1983 regarding the date from which the Senate, the Syndicate and the Standing Committee on Academic Affairs and such other authorities of the Bharathiar University, Coimbatore shall commence to exercise their functions. (Laid on the Table of the House under section 65(2) of the Bharathiar University Act, 1981. (Tamil Nadu Act 1 of 1982).]

199. Notification issued in G.O. Ms. No. 1961, Labour, dated 16th August 1983 regarding the additions made in the First Schedule the Industrial Disputes Act, 1943 (Central Act XIV of 1943). [Laid on the Table of the House under section 38 (4) of Industrial Disputes Act, 1947. (Central Act XIV of 1947).]

200. Seventh Annual Report of Thanthai Periyar Transport (Corporation Limited (1982) (Tamil). [Laid on the Table of the House Under Section 619(A) of the Companies Act (Central Act 1 of 1956).]

201. Notification issued in G.O. Ms. No. 377, Revenue, dated 9th March 1983 regarding certain amendments to the Tamil Nadu Land Reforms (Payment of Surplus Lands) Rules, 1966 [Laid on the Table of the House Under section 112 (2) of the Tamil Nadu Land Reforms Fixation of (Ceiling on Land Act, 1961). (Tamil Nadu Act 58 of 1961).]

### *B. Reports Notificatons and other Papers.*

*22. The Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1983 (L.A. Bill No. 37 of 1983), as passed by the Assembly.

* Circulated to all M.L.Cs. on 28th October 1983.



### இணைப்பு 1

*(4 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 32-க்கான விடையைக் காண்க.)*

**மேல்நிலைப்பள்ளிகளில், வணிகத்துறை ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு, அரசு நிர்ணயித்துள்ள தகுதிகளும்; நியமனம் செய்வதற்கு பின்பற்றப் படும் முறைகளும் பற்றிய விவரங்கள்.**

மேல்நிலைப்பள்ளிகளில் பொதுக்கல்வி, தொழிற்கல்வி ஆகிய இரு பிரிவுகளிலும் வணிகத்துறை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். பொதுக்கல்விப் பிரிவில், பொதுவாக நிர்ணயிக்கப்பட்டுள்ள வயது வரம்புடன் வணிகவியலில் முதுகலை பட்டமும் (எம்.காம்), ஆசிரியர் பயிற்சிப் பட்டமும் (பி.எட்) பெற்றிருக்க வேண்டும்.

தொழிற்கல்விப் பிரிவில் ஆசிரியராக கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

**வணிகவியல் ஆசிரியர்கள் :** (Commercial Instructors)

(1) "தமிழ்நாடு சார்நிலைப் பள்ளி விதிகளில்" குறிக்கப்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி.

(2) சுருக்கெழுத்து மற்றும் தட்டச்சில் முதுநிலைத் தேர்ச்சி, இத்தகுதி பெற்றவர் இல்லாவிடில் அவ்விரண்டில் ஒன்றில் முதுநிலைத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**செயலகப் பிரிவு உதவியாளர்கள் :** (Secretarial Assistants)

(பி.காம்.; பி.டி./பி.எட்.)

அல்லது

பி.காம். பட்டத்தோடு தொடர்புள்ள பாடத்தில் டி.டி.சி. சான்றிதழ்.

அல்லது

அரசுத் தேர்வு ஆணையரால் வழங்கப்பட்ட வணிகவியல் பட்டயமும் தொடர்புள்ள பாடத்தில் டி.டி.சி. சான்றிதழும்.

பொதுக்கல்விப் பிரிவில் வேலைவாய்ப்பு நிறுவனம் மூலமாக 'பதிவு நாள் முன்னுரிமை வரிசையில்' தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர், தொழிற் பிரிவில், எற்கெனவே உட்படுத்தப்பட்ட (இருமுனைப் பாடத்திட்ட) முழுநேர ஆசிரியர்கள் தவிர, சிலர் பகுதிநேர ஆசிரியர்களாக, அந்தந்த பள்ளித் தலைமை ஆசிரியரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்படுகிறார்கள். தனியார் பள்ளிகளில் தாளாளரால் தெரிந்தெடுக்கப்பட்ட நபருக்கு முதன்மை கல்வி அலுவலர் ஒப்புதல் அளிக்கிறார்.

## இணைப்பு II

(25 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் ஒரு சிலவற்றை உயர்நிலைப் பள்ளிகளாக ஆண்டுதோறும் உயர்த்தி ஆணைகள் வெளியிடப்படுகின்றன. இவைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களை அரசுப் பணிக்கு உட்படுத்த தேர்வாணைக் குழுவின் இசைவு பெற்று உரிய விதிகள் அவர்கள்பால் தளர்த்தப்பட்டு பின் அவர்கள் பணிகள் வரன்முறை செய்யப்பட்டால் ஊதிய உயர்வு மற்றும் ஏனைய சலுகைகள் பெற முடியும். முன்னாள் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்தோர் பல்வேறு கால் கட்டத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுவதற்கு முன்னர் பணியில் அமர்ந்திருப்பதால் அவர்களது பணியினை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட நாள் முதல் அரசு மற்றும் சார்நிலை பணியாளர் தொகுதி பொது விதி 48-ன்கீழ் பின் நோக்கி வரன்முறை செய்யவேண்டும். இவ்வாறு பணி பின்னோக்கி வரன்முறை செய்ய மேற்கூறிய பொது விதி 48 அரசுக்கு அதிகாரம் வழங்குகிறதா என்ற சட்டப் பிரச்சினை எழுந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அட்வகேட் ஜெனரலது கருத்துரையைப் பெற்று பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை ஆய்வு செய்து வருகிறது. இந்த பிரச்சினையில் அரசு முடிவெடுத்தவுடன் மேற்கூறப்பட்ட முன்னாள் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்தி இறுதி ஆணைகள் வெளியிட முடியும்.

## இணைப்பு III

(72 ஆம் பக்கத்தில் இனம் 8-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

L.A. BILL No. 37 OF 1983.)
(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Contingency Fund Act,* 1954.

**BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-fourth Year of the Republic of India as follows:—**

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Contingency Fund (Amendment) Act, 1983.



(2) (*a*) Clause (*a*) of section 2 and sub-section (1) of section 3, shall be deemed to have come into force on the 18th May 1983.

(*b*) Clause (*b*) of section 2 and sub-section (2) of section 3, shall be deemed to have come into force on the 4th July 1983.

2. *Amendment of section 2, Tamil Nadu Act II of 1954.*—In sub-section (1) of section 2 of the Tamil Nadu Contingency Fund Act, 1954 (Tamil Nadu Act II of 1954).

(*a*) for the proviso the following proviso shall be substituted, namely:—

Provided that during the period beginning on the 20th May 1983 and ending on the 3rd July 1983, this sub-section shall have effect, subject to the modification that for the words " fifty crores of rupees ', the words (one hundred crores of rupees)' shall be substituted."

(*b*) after the proviso as so substituted, the following proviso shall be substituted. ".

" Provided further that during the period beginning on the 4th July 1983 and ending on the 31st March 1984, this sub-section shall have effect subject to the modification that for the words " fifty crores of rupees ", the words " one hundred and fifty crores of rupees " shall be substituted.

3. *Repeal.*—(1) The Tamil Nadu Contingency Fund (Amendment), Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 3 of 1983), is hereby repealed.

(2) The Tamil Nadu Contingency Fund (Second Amendment) Ordinance, 1983 (Tamil Nadu Ordinance 6 of 1983) hereby repealed.

I certify that this is a Money Bill.

Fort St. George,
Madras-600 009,
Dated: 28th October 1983.

K. RAJARAM,
*Speaker,*
*Tamil Nadu Legislative Assembly.*

143193

D
Y211,32'N83
N83:211.4-5;1